# உலகை வெற்றிகொள்வதற்கு தயாராகுவோம்



## இலங்கை துறைமுக அதிகாரசபை

ஆண்டறிக்கை 2017

# உலகை வெற்றிகொள்வதற்கு தயாராகுவோம்

40 வருடங்களுக்கு அண்மித்த காலத்தினுள் இலங்கை துறைமுக அதிகாரசபை பிராந்திய மட்டத்தில் முக்கியமான வர்த்தக மற்றும் வணிகக் கேந்திரத்தளமாக அபிவிருத்தியடைந்து முன்னேற்றத்தை அடைந்து கொண்டுள்ளது. மீளாய்வு ஆண்டினுள் எமது சந்தைப்பங்குகள் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் துரித வளர்ச்சி அடைந்துள்ளமையினையிட்டு துறைமுக அதிகாரசபை பெருமிதம் கொள்கிறது.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தின் பணிகள் நிறைவடைய இருக்கையில் திருகோணமலை, காலி, மற்றும் காங்கேசன்துறை ஆகிய மூன்று துறைமுகங்களிலும் புனரமைப்பு பணிகளை துரிதமாக நிறைவு செய்வதற்கு உள்ளதாலும் கடந்த பல வருடங்களில் பாரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக தென்படுகின்றது.

புதிய பல வர்த்தக சந்தர்ப்பங்களையும் வர்த்தக பங்களிப்புக்களையும் எமக்கு கிட்டிய தூரத்தில் வழங்கக் கூடிய சர்வதேச வர்த்தகம் உருவாக்கப்படும் எதிர்பார்ப்புடன் உலகளாவிய சேவைகளை வழங்கும் கேந்திரத்தளமாக்கும். நோக்கு, இலங்கை துறைமுக அதிகார சபையினால் தொடர்ச்சியாக முன்னெடுத்து செல்லப்படுகிறது. புத்தாக்க செயற்திறன், கைத்தொழில் மற்றும் தொழில்நுடபரீதியான நிபுணத்துவம் போன்ற மிகவும் முக்கியமாக கருதப்படும் சிறப்பு சேவைகளை வழங்குவது தொடர்பில் நாம் எமது கவனத்தை தொடர்ச்சியாக செலுத்தி வருகின்றோம்.

ஆண்டுகள் தோறும் எமது அபிவிருத்தி நடவடிக்கைகள் மிகவும் விரிவாகவும் சிறந்த முறையிலும் பேணிச்செல்லப்படுதல் அவசியமாகும். எமது துறைமுகத்தின் சிறந்த அமைவிடம், வளங்கள் போன்று ஆற்றல்கள் மற்றும் தேர்ச்சிகள் எம்மிடம் உண்டென்பதையும் நாம் நம்புகின்றோம். வர்த்தகத்தின் சிறப்புத்தன்மை தொடர்பில் நாம் அனைத்திலும் வலுப்பெற்றுள்ளோமெனவும் எதிர்காலத்திற்கு முகம் கொடுப்பதற்கும் உலகை வெல்வதற்கும் நாம் தயாராகவுள்ளோம் என்பதனையும் நாம் அறிவோம்.

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| தொலைநோக்கு மற்றும் பணிக்கூற்று | 3 |
| நோக்கங்கள் | 4 |
| நிறுவனத்தினூடான நோக்கங்கள் | 5 |
| இலங்கை துறைமுக அதிகாரசபை என்பது | 6 |
| இயக்க முக்கிய விடயங்கள் | 7 |
| நிதிசார் முக்கிய விடயங்கள் | 10 |
| எங்கள் அமைச்சர்கள் | 11 |
| தலைவரின் மீளாய்வு | 12 |
| பணிப்பாளர் சபை | 16 |
| முகாமைக்குழுவும் கணக்காய்வுக் குழுவும் | 21 |
| வர்த்தக அபிவிருத்தி | 23 |
| முக்கிய நிகழ்வுகள் | 25 |
| இயக்க மீளாய்வு | 31 |
| நிதி மீளாய்வு | 76 |
| மனித மூலதனம் | 80 |
| ஒன்றிணைந்த சமூக பொறுப்புக்கள் | 81 |
| ஒன்றிணைந்த நிர்வாக அறிக்கை | 82 |
| துறைமுக புள்ளி விபரங்கள் | 87 |
| நிதி அறிக்கைகள் | 92 |
| பணிப்பாளர் சபையின் அறிக்கை | 93 |
| நிதி அறிக்கை வெளியிடல் தொடர்பான பணிப்பாளர் சபையின் அறிக்கை | 96 |
| கணக்காய்வுக் குழுவின் அறிக்கை | 97 |
| சட்டபூர்வ இணக்கப்பாட்டு அறிக்கை | 98 |
| இயக்க முக்கிய விடயங்கள் | 99 |
| நிதி நிலைமை தொடர்பான அறிக்கை | 100 |
| விபரமான வருமான அறிக்கை | 101 |
| திணிவு மாற்றம் மீதான அறிக்கை | 102 |
| காசுப் பாய்ச்சல் அறிக்கை | 103 |
| பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள் | 104 |
| நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள் | 119 |
| வரைபட மீளாய்வு | 141 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 144 |
| அமைப்பு விதி தொடர்பான தகவல்கள் | 171 |

# தொலைநோக்கு

## “பட்டுப்பாதையின் கடல்சார் சேவை வழங்கலின் தலைசிறந்தவர் எனும் நிலையினை பெறுதல்”

இலங்கை துறைமுகங்களின் எதிர்காலம் தொடர்பில் கவனம் செலுத்தி சவால்கள் மற்றும் சந்தர்ப்பங்களை விரிவுபடுத்தும் சர்வதேச வர்த்தக உருவாக்கத்தை எதிர்பார்த்து இலங்கை துறைமுக அதிகாரசபை அதன் உன்னத கொள்கலன் கேந்திரத்தளம் எனும் கருத்திலிருந்து விசேட உலக சேவை வழங்கலின் கேந்திரத் தளமாக நகர்த்திச் செல்கின்றது. இலங்கையின் ஒட்டுமொத்த பொருளாதாரம் அபிவிருத்தி செய்யப்படுதலிலான தேசிய மற்றும் சர்வதேச சிறந்த அனைத்து துறைகளினது செயற்பாடுகளை மேலும் முன்னெடுத்துச் செல்லும் பொருட்டு சகல தகவலும் உடனுக்குடன் பெற்றுக்கொள்ளும் சிக்கலான வழங்கல் சேவையை வலுப்படுத்துவதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை எதிர்பார்க்கின்றது.

# பணிக்கூற்று

## “நிலைபேறான சூழலினுள் சர்வதேச மட்டத்திலான கடல்சார் சேவைகளை வழங்குதல்”

இலங்கையில் உலக வினியோக கேந்திரத் துறைமுகம் உருவாக்கும் நோக்கில் விசேட கடலக பிரவேசம் கொண்ட ஆழமான கடல் துறைமுகமொன்றை ஏற்படுத்தி வழங்கல் சேவைகளை ஒன்றிணைக்கும் பல்பரிமாண வழங்கல் தொகுதியொன்றினையும் ஏற்படுத்துவதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை எதிர்பார்க்கின்றது.

துறைமுகம் மற்றும் வலயம் எனும் இரு பகுதியினதும் சர்வதேச மட்டத்திலான அபிவிருத்தியினை எதிர்பார்த்து எதிர்கால வளர்ச்சிக்கான சாத்தியத் தன்மை மற்றும் பரப்பெல்லை கொண்ட நகர மட்டுப்படுத்தல்களிலிருந்து விடுபட்ட புதியதொரு துறைமுகமொன்றாக துறைமுகம், கப்பலோட்டம், கைத்தொழில் மற்றும் சேவைகள் வழங்கல் போன்ற துறைகளில் முன்னணியில் உள்ளவர்களுக்கு சேவைகள் வழங்குவதற்கான தளம் அமைப்பதற்கும் முகாமைத்துவம் செய்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

தேசத்துக்கு உன்னத சொத்தாக துறைமுகங்கள் மற்றும் முனையங்களின் வசதிகளில் நிறைவானதும் பொளாதார ரீதியில் செயற்திறனாகவும் சுற்றாடல் நேய துறைமுகமொன்றாக கையாளப்படுவதன் மூலம் எம்மால் சேவைகள் வழங்கப்படும் ஆயிரக்கணக்கான பங்காளர்களுக்கு உன்னத நிலையிலான சேவைகள் வழங்கப்படுதலின் ஊடாக துறைமுக அதிகாரசபை தான் பிரகடனம் செய்திருக்கும் நிலைபேறான தன்மை தொடர்ந்தும் பேணிச் செல்லப்படும்.

## 2020 ல் அடையும் நோக்கு

- தலைசிறந்த கடல்சார் சேவைகள் வழங்கும் மத்திய நிலையம்.
- 200 மில்லியன் தொன் கப்பற்சரக்குகளைக் கையாளும் இலக்கு.
- அமெரிக்க டொலர் 01 பில்லியன் வருமானம் பெறுதல்.
- துறைமுகங்களினுள் அமெரிக்க டொலர் 10 பில்லியனுக்கான முதலீடுகளுக்கு வழி வகுத்தல்.
- தேசிய வருமானத்தின் பிரதான பங்காளியாகுதல்.
- “பசுமை மிகு” சூழல்நேய துறைமுக இயக்குனராகுதல்.

## அடைந்து கொள்ளலிலான மூலோபாயங்கள்

- கொழும்பு துறைமுகத்தின் உட்கட்டமைப்பு மற்றும் சிறப்பு அமைப்புகளினது வசதிகளை அபிவிருத்தி செய்தல்.
- கடல்சார் சிறப்பு மத்திய நிலயமெனும் கொழும்பு துறைமுகத்தின் நிலைப்பாட்டினை உறுதிப்படுத்துதல்.
- துறைமுகம் சார்ந்த துறைகளுக்கான விசேட சந்தைப்படுத்தல் மற்றும் வர்த்தக அபிவிருத்தி வேலைத்திட்டங்களை அறிமுகப்படுத்துதல்.
- மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தை சர்வதேச நிலையிலான சேவைகள் வழங்கும் நிலையமாகவும் கைத்தொழில் மற்றும் கொள்கலன் கையாளல் துறைமுகமாகவும் அபிவிருத்தி செய்தல்.
- கப்பற்சரக்குகள் போன்று துறைமுக பாவனையாளர்களினது ஆபத்தற்ற தன்மையையும் பாதுகாப்பையும் மேம்படுத்துதல்.
- முக்கிய மூலோபாய அமைவிடமாக உலகில் இலங்கை துறைமுக அதிகாரசபையினை பிரபல்யம் பெறும்வாறு அடையாளப்படுத்துதல்.
- திட்டமிடப்பட்ட மீளமைப்பு மற்றும் நிர்வாக நடைமுறைகளை மீள் திட்டமிடுதல்.
- உயர் நிலையிலான நிதி முகாமைத் தொகுதிகளை நடைமுறைப்படுத்துல்.
- சூழலிற்கு விடுவிக்கப்படும் காபன் பரிமாணத்தை குறைத்தல்.
- கொண்டுள்ள வளம் மற்றும் போட்டி மிகுந்த பயன்தகு நிலைமைகளுக்கேற்ப ஏனைய பிராந்திய துறைமுகங்களை அபிவிருத்தி செய்தல்.
- வர்த்தக நடவடிக்கைகளை பன்முகப்படுத்துதல்.
- எண்ணெய் மற்றும் வாயு வசதிகளுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளல்.
- கப்பலோட்டத்தை நோக்கமாகக் கொண்ட செயற்திறன்மிகு சேவைகளை வழங்குதல .
- கூட்டிணைந்த சமூகப் பொறுப்புக்கள் (CSR) தொடர்பில் கூடிய கவனம் செலுத்துதல்.

# நிறுவனத்தினூடான நோக்கங்கள்

- இலங்கையின் வர்த்தக துறைமுகங்களில் மிகவும் புதிய இயக்க வசதிகளை அபிவிருத்தி செய்தலும், இடைவிடாது முன்னெடுத்துச் செல்லலும்.

- பயனான வகையிலும் வினைத்திறனுடனும் துறைமுக சேவைகளை முன்னெடுத்துச் செல்லுதல்.

- ஆகுசெலவு பயனளிக்கக் கூடிய வினைத்திறனுடனும் மற்றும் நம்பிக்கை மிகு சேவைகள் வழங்குவதன் மூலமும் போட்டித்தன்மையூடாக ஏற்றுமதி மற்றும் இறக்குமதியாளர்களுக்கு மிகவும் சிறந்த நற்பயன்களை பெற்றுக்கொடுத்தல்.

- கப்பல்கள், கப்பல் சரக்குகள், துறைமுக பாவனையாளர்கள் மற்றும் துறைமுக உட்கட்டமைப்பு வசதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்.

- துறைமுக வர்த்தக நடவடிக்கைகளுடன் தொடர்புடைய அனைவருக்கும் உற்சாகமூட்டும் சிறந்த சேவை சூழலை உருவாக்குதல்.

- அரசாங்கத்தின் நடைமுறை மற்றும் மூலதன செலவினங்களுக்கு பொது திறைசேரியின் ஒன்றிணைந்த நிதியத்துக்கு பங்களிப்பு வழங்குதல்.

- கப்பல்களை தாமதப்படுத்தாது நடவடிக்கைகளை உடனுக்குடன் மேற்கொண்டு உயர் வினைத்திறன் பேணல்.

- அதிகளவிலான தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் பொருட்டு கடல்சார் நடவடிக்கைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய துணைச் சேவைகளை மேம்படுத்துதல்.

- துறைமுக பாவனையாளர்களுக்கு உயர் சேவைகளை வழங்கி இலங்கையின் வர்த்தக துறைமுகங்களில் இலாபகரமான இயக்கச் செயற்பாட்டு முறையை முன்னெடுத்துச் செல்லுதல். இதனூடாக நம்பிக்கைமிகு வினைத்திறனுடன் கூடிய இயக்குனர் என்ற நற்பெயரை வளர்த்துக் கொள்தல்.

- துறைமுக வர்த்தகம் மற்றும் சுங்கப் பிணை நடவடிக்கைகள், கப்பல்களுக்கு தேவையான சாதனங்கள் உட்பட மீள் ஏற்றுமதி சந்தர்ப்பங்களை மேலும் அதிகரித்துக் கொள்ளும் பொருட்டு கொள்கலன் கையாளுதலுடன் தொடர்புபடும் போட்டிமிகு உயர் சேவைகளை வழங்குதல்.

- கடலை அண்மித்த பிரதேசங்களில் அபிவிருத்திக்கு உந்து சக்தியாக தேவைப்படும் துறைமுக வசதிகளை ஏற்படுத்துவதன் ஊடாக இலங்கையின் பிராந்திய அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

- மனித வலு தேவைப்பாடுகள் மற்றும் ஆளணி மதிப்பிடுதல் உட்பட இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிர்வாக மற்றும் அமைப்பு ரீதியான விடயங்களை விரிவுபடுத்துதல்,வெளிநாட்டு வேலை வாய்ப்புகளில் தேசிய பொருளாதாரத்திற்கு பெற்றுக் கொடுக்கப்படும் பங்களிப்பை கவனத்திற்கொண்டு இலங்கை துறைமுக அதிகாரசபையின் பணியாளர்கள் சம்பளமற்ற விடுமுறையில் வெளிநாட்டு வேலைகளுக்கு செல்வதற்கு மேலும் ஊக்குவித்தல், இலங்கை துறைமுக அதிகாரசபையின் மஹபொல பயிற்சி நிலையம் ஊடாகவும் ஆட்சேர்ப்பு செயற்பாட்டின் தேவைப்பாட்டுத் தரங்களுக்கு ஏற்பவாறும் ஊழியர்களை பயிற்றுவித்தல்.

- நீரில் மேற்கொள்ளப்படும் சேவைகள் எண்ணெய் பாய்ச்சும் நடவடிக்கைகள், நன்னீர் வழங்குதல் மற்றும் கொள்கலன் புதுப்பித்தல் போன்ற துறைமுக செயற்பாடுகளுடன் தொடர்புடைய பணிகளை வழங்குவதன் ஊடாக பன்முகப்படுத்துதல்.

- வினைத்திறன் மிகு வரி மீதான திருத்தங்கள், மிகவும் சிறந்த முதலீட்டு முகாமைத்துவம் மற்றும் மிகவும் உறுதியான ஆகு செலவு கட்டுப்பாடு.

இலங்கை துறைமுக அதிகாரசபை 1979 இன் 51 ஆம் இலக்க இலங்கை துறைமுக அதிகாரசபை சட்டத்தின் ஏற்பாடுகளின் மீது 1979.08.01 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டு பின்னர் 1984 இன் இல. 07 மற்றும் 35 ஆம் சட்டங்களின் ஊடாக திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கை துறைமுக அதிகாரசபை சட்டத்தின் 6 (1) பிரிவில் அதன் நோக்கங்கள் மற்றம் செயற்பாடுகள் பின்வருமாறு வரைவிலக்கணம் அளிக்கப்பட்டுள்ளன.

- ♦ கப்பல் சுமை நடவடிக்கைகள், கப்பல்களில் ஏற்றல் இறக்கல் மற்றும் மீள் ஏற்றல், பயணிகள் தரையிறக்கல், குதங்களிடுதல், வாப்பு நடவடிக்கைகள், கலங்களுக்குத் தேவையான நீர், எரிபொருள் மற்றும் மின்சாரம் வழங்கல், பெற்றோலிய எண்ணெய் உற்பத்திகள், உராய்வு நீக்கிகள், கலங்களுக்கும் கலங்களில் இருந்து வத்தைகளுக்கும் களஞ்சியங்களுக்கும் இடையில் போக்குவரத்து செய்தல், கலங்களின் வழிகாட்டிப் பணிகள், நங்கூரமிடப்படுதல், நீர் மூழ்குதல் மற்றும் நீருக்கடியிலான கப்பல் பழுதுபார்த்தல் தொடர்பில் திறன்மிகு தொடர்ச்சியான சேவை மற்றும் அதற்கான துணை சேவைகளை வழங்கல்.

- ♦ திறன்மிகு நிலையான ஒத்துப்பார்த்தல் மற்றும் பாதுகாப்பு சேவை வழங்கல்.

- ♦ துறைமுக எல்லைகளினுள்ளும் துறைமுகங்களினது உட்புகு வழிகளிலும் கப்பலோட்டம் ஒழுங்குபடுத்தல் மற்றும் நிர்வாகம்.

- ♦ துறைமுக நிறுவுதல்களைப் பராமரித்தல் மற்றும் அவைகளின் பாவனைகளை மேம்படுத்தல் குறிப்பிட்ட துறைமுகங்களினுள் மேம்படுத்தலும் விருத்தி செய்தலும்

- ♦ ஏதாவது விசேட துறைமுகமொன்றினுள் சுங்க திணைக்களப் பணிகள் தவிர்ந்த ஏனைய சகல நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்தலும் முறைப்படுத்தலும்.

- ♦ விசேட துறைமுகங்களினுள்ளும் அதன் வெளியேயும் கப்பலோட்ட நடவடிக்கைகள் தொடர்பில் கலங்களுக்கு வழிகாட்டலும் பாதுகாப்புக்குத் தேவையான வெளிச்சங்கள் மற்றும் வேறு தேவைப்பாடுகளை இலங்கை கடற்கரையில் மற்றும் அதற்கப்பால் நிறுவுதலும் பராமரித்தலும்.

- ♦ துறைமுக அதிகாரசபை சட்டத்தின் மீது ஒப்படைக்கப்படும் வேறோதாவது அலுவல்களை நிறைவேற்றுதல்.

- ♦ சொத்துக்கள் மீள் முதலீடு செய்யப்படுவதற்கும் புதிய முதலீடுகள் ஏற்படுத்தப்படுவதற்கும் போதுமான பொது சேமிப்பு நிதியமொன்றை ஏற்படுத்தி,பராமரித்து செல்லப்படுவதற்காகவும்,அதிகாரசபையின் வருமானத்திற்கு கொடுக்கப்படுவதற்கான தகுந்த கட்டணம் செலுத்தப்படுவதற்கும்,போதுமான வருமானத்துக்கு குறையாத வருமானம் அதிகாரசபைக்கு கிடைக்கும் வண்ணம் அதிகாரசபையின் பணிகளை நடாத்திச் செல்லல். மேற்கூறப்பட்டுள்ளவாறு அதிகாரசபையினால் வழங்கப்படும் சேவை தொடர்பிலான கட்டணங்களை சம்பந்தப்பட்ட சட்டத்திற்கேற்றவாறு அறவிட்டுக்கொள்ளுதல்.

- ♦ சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக குறிப்பிட்ட துறைமுகங்கள் மற்றும் ஒவ்வொரு துறைமுகமும் நிதி அடிப்படையில் தன்நிறைவான திட்டமொன்றை முகாமைத்துவம் செய்வதற்கு முயற்சித்தல்

இலங்கை துறைமுக அதிகாரசபை சட்டத்தின் 5 (1) பிரிவின் பிரகாரம் கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்படும் 09 பணிப்பாளர்கள் துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளர் சபையில் உள்ளடங்கப்பட்டிருப்பர்.

தலைவர், பிரதான நிறைவேற்றுனராக இருப்பதுடன் இலங்கை துறைமுக அதிகாரசபையின் முழு நிர்வாகத்திற்கும் பொறுப்பாக இருப்பார்.

**கப்பல்களின் வருகை (சகல துறைமுகங்களினதும்)**

| விபரம் | 2016 | 2017 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| கொழும்பு துறைமுகம் | 4,405 | 4,329 | -1.7 |
| திருகோணமலை துறைமுகம் | 216 | 233 | 7.9 |
| காலி துறைமுகம் | 96 | 87 | -9.4 |
| காங்கேசன்துறை, மயிலிட்டி, பருத்தித்துறை, காரைநகர் | 25 | 63 | 152.0 |
| மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகம் | 281 | 230 | -18.1 |
| **மொத்தம்** | **5,023** | **4,942** | **-1.6** |

**கொள்கலன் கையாளல் (இருபது சம அலகுகள்) கொழும்பு துறைமுகம்**

| விபரம் | 2016 | 2017 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| **இலங்கை துறைமுக அதிகாரசபை (SLPA)** | | | |
| இறக்குமதி | 255,557 | 208,948 | -18.2 |
| ஏற்றுமதி | 227,552 | 179,334 | -21.2 |
| மாற்றியேற்றல் | 1,607,792 | 1,609,114 | 0.1 |
| மீள் அடுக்குதல் | 9,216 | 13,306 | 44.4 |
| **மொத்தம்** | **2,100,117** | **2,010,702** | **-4.3** |
| **சவுத் ஏசியா கேட்வே டர்மினல்ஸ் (SAGT)** | | | |
| இறக்குமதி | 152,194 | 179,321 | 17.8 |
| ஏற்றுமதி | 165,513 | 196,623 | 18.8 |
| மாற்றியேற்றல் | 1,294,631 | 1,406,265 | 8.6 |
| மீள் அடுக்குதல் | 19,869 | 27,626 | 39.0 |
| **மொத்தம்** | **1,632,207** | **1,809,835** | **19.3** |
| **கொழும்பு சர்வதேச கொள்கலன் முனையம் (CICT)** | | | |
| இறக்குமதி | 244,217 | 300,903 | 23.2 |
| ஏற்றுமதி | 254,817 | 318,422 | 25.0 |
| மாற்றியேற்றல் | 1,452,838 | 1,726,203 | 18.8 |
| மீள் அடுக்குதல் | 50,727 | 43,003 | -15.2 |
| **மொத்தம்** | **2,002,599** | **2,388,531** | **19.3** |
| **கொழும்பு துறைமுகம்** | | | |
| இறக்குமதி | 651,968 | 689,172 | 5.7 |
| ஏற்றுமதி | 647,882 | 694,379 | 7.2 |
| மாற்றியேற்றல் | 4,355,261 | 4,741,582 | 8.9 |
| மீள் அடுக்குதல் | 79,812 | 83,935 | 5.2 |
| **மொத்தம்** | **5,734,923** | **6,209,068** | **8.3** |

**கப்பற்சரக்குகள் கையாளல் (சகல துறைமுகங்களினதும்)**

| விபரம் | 2016 | 2017 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| மொத்த கப்பற்சரக்கு கையாளல் பரிமாணம் (மெ.தொ.மி) | 86.5 | 93.9 | 8.6 |

**கொழும்பு துறைமுகத்தில் இறக்கப்பட்ட கப்பற்சரக்குகள்- இலங்கை துறைமுக அதிகாரசபை (ஆயிரம் தொன்களில்)**

| விபரம் | 2016 | 2017 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| கொள்கலனிலிடப்பட்டவை | 14,516 | 14,167 | -2.4 |
| பிரித்த மொத்தம் | 863 | 814 | -5.7 |
| உலர் மொத்தம் | 2,572 | 2,501 | -2.8 |
| திரவ மொத்தம் | 4,654 | 5,759 | 23.7 |
| **மொத்தம்** | **22,605** | **23,241** | **2.8** |

**கொழும்பு துறைமுகத்தில் ஏற்றப்பட்ட கப்பற்சரக்குகள்- இலங்கை துறைமுக அதிகாரசபை (ஆயிரம் தொன்களில்)**

| விபரம் | 2016 | 2017 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| கொள்கலனிலிடப்பட்டவை | 12,459 | 11,625 | -6.7 |
| பிரித்த மொத்தம் | 16 | 29 | 81.3 |
| உலர் மொத்தம் | 0 | 0 | - |
| திரவ மொத்தம் | 92 | 106 | 15.2 |
| **மொத்தம்** | **12,567** | **11,760** | **-6.4** |

**கொழும்பு துறைமுகத்தில் கையாளப்பட்ட மொத்த கப்பற்சரக்குகள் இலங்கை துறைமுக அதிகாரசபை (ஆயிரம் தொன்களில்)**

| விபரம் | 2016 | 2017 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| கொள்கலனிலிடப்பட்டவை | 26,975 | 25,792 | -4.4 |
| பிரித்த மொத்தம் | 879 | 843 | -4.1 |
| உலர் மொத்தம் | 2,572 | 2,501 | -2.8 |
| திரவ மொத்தம் | 4,746 | 5,865 | 23.6 |
| **மொத்தம்** | **35,172** | **35,001** | **-0.5** |

**திருகோணமலை துறைமுகத்தில் கையாளப்பட்ட கப்பற்சரக்குகள் (ஆயிரம் தொன்களில்)**

| விபரம் | 2016 | 2017 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| இறக்கப்பட்டது | 2,825 | 3,119 | 10.4 |
| ஏற்றப்பட்டது | 689 | 778 | 12.9 |
| **மொத்தம்** | **3,514** | **3,897** | **10.9** |

**காலி துறைமுகத்தில் கையாளப்பட்ட கப்பற்சரக்குகள் (ஆயிரம் தொன்களில்)**

| விபரம் | 2016 | 2017 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| இறக்கப்பட்டது | 771 | 712 | -7.7 |
| ஏற்றப்பட்டது | 0 | 0 | 0 |
| **மொத்தம்** | **771** | **712** | **-7.7** |

**காங்கேசன்துறை , மயிலிட்டி, பருத்தித்துறை மற்றும் காரைநகர் துறைமுகங்களில் கையாளப்பட்ட கப்பற்சரக்குகள் (ஆயிரம் தொன்களில்)**

| விபரம் | 2016 | 2017 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| இறக்கப்பட்டது | 27 | 23 | -14.8 |
| ஏற்றப்பட்டது | 0 | 0 | 0 |
| **மொத்தம்** | **27** | **23** | **-14.8** |

**மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தில் கையாளப்பட்ட கப்பற்சரக்குகள் (ஆயிரம் தொன்களில்)**

| விபரம் | 2016 | 2017 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| இறக்கப்பட்டது | 220 | 156 | -29.1 |
| ஏற்றப்பட்டது | 135 | 57 | -57.8 |
| **மொத்தம்** | **355** | **213** | **-40.0** |

**மொத்த ஊழியர் தொகை**

| விபரம் | 2016 | 2017 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| கொழும்பு துறைமுகம் | 8,892 | 8,625 | -3.0 |
| திருகோணமலை துறைமுகம் | 402 | 401 | -0.2 |
| காலி துறைமுகம் | 348 | 351 | 0.9 |
| **மொத்தம்** | **9,642** | **9,377** | **-2.7** |

**சகல துறைமுகங்களும்**

(ரூபா மில்லியன்)

| விபரம் | 2017 | 2016 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| **வருமானம் மற்றும் செலவினம்** | | | |
| மொத்த வருமானம் | 45,609 | 44,080 | 3.5 |
| வெளிநாட்டு கடன் மீதான வட்டி மற்றும் அந்நிய செலாவணி கிடைக்கப்பெறுதல்/(நட்டத்துக்கு) முன்னரான மொத்த செலவினம் | (28,099) | (28,704) | 2.1 |
| **வெளிநாட்டு கடன் மீதான வட்டி மற்றும் அந்நிய செலாவணி கிடைக்கப்பெறுதல்/(நட்டத்துக்கு) முன்னரான (இலாப/(நட்டம்)** | **17,510** | **15,376** | **13.9** |
| வெளிநாட்டுக் கடன் மீதான வட்டி | (2,082) | (4,302) | 51.6 |
| அந்நிய செலாவணி கிடைக்கப்பெறுதல்/(நட்டம்) | (2,206) | (10,038) | 78.0 |
| **வரிக்கு முன்னராக மற்றும் அந்நிய செலாவணி கிடைக்கப்பெறுதல்/(நட்டம்) பின்னரான இலாப /(நட்டம்)** | **13,222** | **1,036** | **1,176.6** |
| **வரிகள்** | | | |
| வருமான வரி | - | - | - |
| கருதும் பங்கிலாப வரி | - | - | - |
| மாறுபடும் வரி | 102.0 | - | 100 |
| சமூக பொறுப்பு சார்ந்த கட்டணம் | - | - | - |
| **வரி ஏற்பாடுகளின் பின்னரான தூய இலாப/(நட்டம்)** | **13,324** | **1,036** | **1,186.5** |
| **ஐந்தொகை** | | | |
| நடைமுறை சாராத சொத்துக்கள் | 388,452 | 314,052 | 23.7 |
| நடைமுறை சொத்துக்கள் | 144,978 | 35,762 | 305.4 |
| நடைமுறை பொறுப்புக்கள் | 119,212 | 28,069 | (324.7) |
| திணிவு மற்றும் ஏனைய மூலதனம் | 7,591 | 7,591 | 0.0 |
| ஒதுக்கீடும் ஏற்பாடுகளும் | 302,655 | 70,428 | 329.7 |
| நடைமுறை சாராத பொறுப்புக்கள் | 103,972 | 243,726 | 57.3 |
| **விகிதம்** | | | |
| வருமானத்திற்கான இயக்க இலாபம் | 36.2 | 32.5 | |
| வருடாந்த வருமான வளர்ச்சி | 3.5 | 8.0 | |
| மூலதனமிடலின் மீதான இலாபம் | 5.1 | 18.4 | |

**மஹிந்த சமரசிங்ஹ**
**கௌரவ துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர்**

**நிசாந்த முத்துஹெட்டிகம**
**கௌரவ துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை பிரதி அமைச்சர்**

துறைமுக இயக்கம் மற்றும் நிதிசார்ந்த வருமானங்களினால் மட்டுமல்லாது, சர்வதேச கடற்துறையில் குறிப்பாக அடையப்பெற்ற பல சாதனைகளுடன் இலங்கை துறைமுக அதிகாரசபையின் 2017 ஆம் ஆண்டு அறிக்கையினைத் முன்வைப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

துறைமுக ஒப்பீட்டின் முக்கியத்துவத்தை உயர்த்தும் எமது நோக்கு ஆண்டில் வெற்றியளித்துள்ளது. கொழும்பு துறைமுகம் தெற்காசிய வலயத்தில் சிறந்த இணைப்புத் துறைமுகம் என்ற நிலையைத் தக்க வைத்துள்ள அதேநேரம் 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கடல்வழி ஆய்வில் (Drewey Maritime Reserch) உலகக் கொள்கலன் இணைப்புச் சுட்டெண்ணின்படி 18 ஆவது நிலையிலிருந்து 13 ஆவது நிலைக்கு முன்னேறி உள்ளது.

கொழும்பு துறைமுகமானது 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2017 ஆண்டில் 6.2 மில்லியன் இருபது சம அலகுகளைக் கையாண்டு கொள்கலன் கையாளலில் 8.3% வளர்ச்சியுடன் உலக கொள்கலன் துறைமுகங்களின் கொள்கலன் கையாளல் தர வரிசையில் 23 ஆவது நிலையிலுள்ளது. உலகளாவிய ரீதியில் முதல் 30 இடங்களில் உள்ள கொள்கலன் கையாளும் துறைமுகங்களில் முக்கிய ஆசிய வலயத் துறைமுகங்களில் ஒன்றான கிலாங் துறைமுகம் 9% எதிர்மறை வளர்ச்சியினைப் பதிவுசெய்த அதேவேளை கொழும்பு துறைமுகம் அதிக வளர்ச்சி வீதத்தினைப் பதிவுசெய்த 5 ஆவது துறைமுகமாக மாறி இருப்பதை இங்கு விசேடமாக குறிப்பிடுதல் வேண்டும்.

இது அடுத்த மூன்று வருடங்களுக்குள் முதல் 20 இடங்களில் உள்ள உலகக் கொள்கலன் கையாளும் துறைமுகங்களினுள் கொழும்பு துறைமுகத்தினைக் கொண்டு வருவதற்கு முன்னேற்றப்பட வேண்டுமெனும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் நோக்கை உண்மையாக்கும் வெற்றிகர அடையாளமாக குறிப்பிட முடியும்.

**துறைமுக இயக்கம் மற்றும் முகாமைத்துவம்**

மீளாய்வாண்டில் இயக்க நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க விரிவாக்கமும் அதிகரிப்பும் ஏற்பட்டு ஆண்டினுள் அனைத்து துறைமுகங்களிலும் கையாளப்பட்ட மொத்த தொன் அளவு 8.5% னால் அதிகரித்தது. கொழும்பு மற்றும் திருகோணமலை துறைமுகங்களினது கையாளல் பரிமாணங்கள் முறையே 8.7%, 10.9% னால் அதிகரித்தன.

ஜய கொள்கலன் முனையம் மற்றும் ஐக்கிய கொள்கலன் முனையம் போன்றவை இலங்கை துறைமுக அதிகாரசபையின் சுமார் 40% வருமானத்திற்கு முக்கிய பங்கினை வகித்துள்ளது. கொள்கலன் கையாளல் பரிமாணத்தை பொறுத்தவரையில் சீ.ஐ.சீ.ரீ, 2.3 மில்லியன் இருபது சம அலகுகளை கையாண்டுள்ள அதேவேளை எஸ்.ஏ.ஜீ.ரீயும் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு உரிய இறைமைக் கட்டணத்தை வழங்கி பெரும்பங்காற்றி இலங்கை துறைமுக அதிகாரசபையின் வருமானத்திற்கும் விசேட பங்களிப்பைச் செய்துள்ளது.

கொழும்பு துறைமுகத்தில் உள்நாட்டு மற்றும் மீள் ஏற்றுமதி கையாளல்கள் முறையே 6.4% மற்றும் 8.9% ஆக அதிகரித்துள்ளன. 2016 ஆண்டிலிருந்து ஜய கொள்கலன் முனையத்தின் பாரம்தூக்கிகள், கலங்கள் மற்றும் நங்கூரமிடலின் வினைத்திறனிலும் அதிகரிப்பு காணப்படுகின்றது.

சந்தைப்படுத்தல் மற்றும் வியாபார முன்னேற்ற உத்திகள் அமுல்படுத்தப்பட்டதன் விளைவாக 2017 ஆண்டில் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு கப்பல் சேவை கம்பனிகளுடன் நான்கு புதிய முனைய சேவை ஒப்பந்தங்களை ஏற்படுத்த முடிந்துள்ளது. அதன்மூலம் நான்கு பிரதான கப்பல் சேவைகள் மற்றும் மூன்று ஊட்ட சேவைகள் ஜய கொள்கலன் முனையம் நோக்கி கவரப்பட முடிந்தது.

2017 ஆண்டில் ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வந்த கப்பல்களின் மொத்த எண்ணிக்கையை 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் -18.1% வீழ்ச்சியும் சரக்கு கையாளல் பரிமாணத்தில் -39.9% வீழச்சியம் ஏற்பட்டுள்ளது. 2016 ஆண்டுடன் ஒப்பிடும்போது றோ றோ மற்றும் மீள் ஏற்றுமதி கையாளல்களின் முறையே -40.7%

மற்றும் -56.0% வீழ்ச்சி பதிவாகியிருந்த போதிலும் 2017 ஆண்டில் உள்நாட்டு கப்பற்சரக்கு கையாளல் பரிமாணம் 30.7% னால் அதிகரித்துள்ளது. 2017 ஆம் ஆண்டில் காலி துறைமுகத்தில் கப்பல்களின் வருகை மற்றும் கப்பற்சரக்கு கையாளல்களின் எதிர்மறை வளர்ச்சி முறையே -9.4% மற்றும் -7.8% பதிவாகியுள்ளது.

2016 ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017 ஆண்டில் திருகோணமலை துறைமுகத்தில் கப்பல்களின் வருகை மற்றும் கப்பற்சரக்குகளின் கையாளல் முறையே 10.4%, 7.9% வளர்ச்சியானது உற்சாகமூட்டக்கூடிய விடயமொன்றாக இருக்கின்றது. தொடர்ச்சியான பல வருட இழப்புக்களின் பின்னர் அஷ்ரப் துறைமேடையின் வர்த்தக பரிமாணம் அதிகரிப்பின் காரணமாக 2017 ஆண்டில் இரண்டாவது தடவையும் திருகோணமலை துறைமுகத்தில் பெரும் இலாபம் கிடைக்கப்பெற்றுள்ளது.

இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் சைனா மேர்சன்ட் போட் ஹோல்டிங்ஸ் தனியார் கம்பனிக்கிடையில் ஹம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பான சலுகை ரீதியான ஒப்பந்தத்தின் நிறைவேற்றம் காரணமாக, இலங்கை துறைமுக அதிகாரசபை 9 பில்லியன் வருடாந்த கடன்தொகை மீள்செலுத்துதலிலிருந்து விடுபட்டுள்ளது. இதனால் பாரியளவிலான அபிவிருத்திச் செய்திட்டங்களை இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு பாரமேற்க முடிந்துள்ளது. ஓர் நீண்டகால முகாமைத்துவ உத்தியாக ஹம்பாந்தோட்டை துறைமுகம் அரச-தனியார் பங்குடைமையின் கீழ் நிர்வகிக்கப்படுவதற்கு ஓர் புதிய முகாமைத்துவக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

**நிதியியல் செயலாக்கம்**

2016 ஆண்டில் விசேட வெற்றியீட்டலாக அந்நிய செலாவணி தளம்பல்கள் மற்றும் வரி செலுத்தப்படுதலின் பின்னர் 2017 ஆண்டில் 13.2 பில்லியன் இலாபம் நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. 2017 ஆண்டில் இலங்கை துறைமுக அதிகாரசபை 45.6 பில்லியன் வருமானத்தை பெற்றுள்ளது. இது 2016 ஆண்டுடன் ஒப்பிடுகையில் 3.5% வளர்ச்சியாகும். 2017.07.25 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மீது ஹம்பாந்தோட்டை துறைமுக கட்டுமானத்திற்காக பெறப்பட்ட கடன் தொகையின் தவணைகள் (மூலதனம் மற்றும் வட்டி) செலுத்துவதை பொதுத் திறைசேரி பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது. இதனால் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு சாதகமான நன்மைகள் கிடைக்கப்பெறுவதோடு வருடாந்த பாரிய அந்நியச் செலாவணி இழப்புச்சுமையிலிருந்தும் விடுபட முடிந்துள்ளது.

2017 ஆண்டில் திருகோணமலை மற்றும் காலி துறைமுகங்களில் இலாபம் பதிவு செய்யப்பட்டுள்ளது. சிறந்த சேவைகள், உலகத்தரம் வாய்ந்த வசதிகள் வழங்கப்படுவதன் மூலம் அதன் வாடிக்கையாளர்கள் மற்றும் இலாபம் அதிகரிக்கப்படுவதில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

**மனிதவள அபிவிருத்தி**

இலங்கை துறைமுக அதிகாரசபையின் பயிற்சி பெற்ற மனித வளம் துறைமுக இயக்க நடவடிக்கைகளின் வெற்றியானது பிரதான பாகமாகுமென்பதனை இங்கு குறிப்பிடுதல் வேண்டும். துறைமுக ஆளணியினரைப் பயிற்றுவித்தல் மற்றும் அவர்களின் திறன்களை உயர்த்தி விசேட சேவைகள் வழங்குவதன் மூலம் துறைமுக கையாளல்களுக்கான விசேட முதலீடு செய்யப்படுகின்றது. தாபிக்கப்பட்டுள்ள மனிதவள தகவல் தொகுதி (HRIS) நிறுவனத்தின் குறிக்கோளினை அடைந்து கொள்வதற்கு சிறப்பான வழியில் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் கடல்சார் துறையில் மாணவர்களினது அறிவினை பரந்தாக்குவதற்கு மஹபொல துறைமுக மற்றும் கடல்சார் கல்லூரி வசதிகளை வழங்குகின்றது. நீண்ட வருடங்களுக்குப் பின்பும் துறைமுகத் துறையின் அபிவிருத்திக்கு அமரர் மேன்மைதகு லலித் அதுலத்முதலி அவர்கள் ஆற்றிய சேவை மறுக்கமுடியாததொன்றாகும்.

மேலும் முன்னோக்கிப் பயணித்து அனைத்துத் துறைமுக ஊழியர்களுக்கும் சிறந்த வசதிகளை வழங்குவதற்கு நவீன தொழில்நுட்பம் உபயோகிக்கப்படுகின்றது. அதன்மூலம் ஊழியர்களின் வருகை, விடுமுறை, பயிற்சிகள், ஆவணப்படுத்தல் போன்ற

நடவடிக்கைகளுக்கு இலத்திரனியல் தொழில்நுட்பத்தின் E-Technology பயன்படுத்தலானது, மனிதவள முகாமைத்துவ முறைமையினை மேம்படுத்தப் பங்களிக்கிறது.

நிறுவனக் குறிக்கோளினை அடைந்து கொள்ளல் மற்றும் உற்பத்தித்திறனை அதிகரித்தல் போன்றவற்றினையும் ஊழியர்கள் ஊக்குவித்தலினையும் முக்கிய குறிக்கோளாகக் கொண்டு மஹாபொல துறைமுக மற்றும் கடல்சார் கல்லூரியினால் ஊழியர்களுக்கு பல நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

**எதிர்கால அபிவிருத்திக்கான உத்திகள்**

இலங்கை துறைமுக அதிகாரசபையின் வினைத்திறனை உயர்த்துவதற்கும் துறைமுகத்தினைப் பாவிப்பவர்களுக்கு தரமான சேவைகளை வழங்கவுமென புத்தாக்கமான பல நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நவீன தொழில்நுட்பத்துடன் ஒன்றிணைந்து உயர் நிலைக்கு கொண்டு வருதலை இலங்கை துறைமுக அதிகார சபை ஏற்கனவே ஆரம்பித்துள்ளதுடன் அது பிரதானமாக தகவல் தொழில்நுட்ப ஆரம்பங்களில் இதுவும் ஒன்றாகும். தகவல் தொழில்நுட்பத்தை உயர் நிலைக்கு கொண்டு வருவதன் மூலம் இலத்திரனியலில் கொடுப்பனவுகளை செய்யவும், B2C மற்றும் B2B பரிமாற்றங்கள், இலத்திரனியல் பட்டியலிடல், இலத்திரனியல் ஆவணங்களின் பரிமாற்றங்கள் போன்றவை இலங்கை துறைமுக அதிகார சபையினால் வழங்கப்பட முடிவதோடு இதன் மூலம் துறைமுகத்தை பயன்படுத்தும் அனைவருக்கும் இலங்கை துறைமுக அதிகார சபையினால் வழங்கப்படும் அனைத்து சேவைகளையும் மிகவும் உன்னதமாக வளர்ச்சி அடையவைத்து இலங்கை துறைமுக அதிகார சபை மற்றும் அதன் பங்காளர்களுக்குமிடையில் சிறந்த தொடர்பு ஏற்படுத்துவதனை உறுதி செய்யப்படும்.

2016 ஆண்டில் இலங்கை துறைமுக அதிகாரசபையால் முன்வைக்கப்பட்ட இன்னொரு முக்கியமான செய்திட்டம் ஒரக்கல் (ORACLE) நிதி மற்றும் கொள்முதல் முகாமைத்துவ முறைமையின் இலத்திரனியல் வர்த்தக பிரிவறையினை தரமுயர்த்துதல் ஆகும். இது நிதியியல் நடவடிக்கைகளுக்கு பூச்சிய அடிப்படையிலான வரவு செலவுத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த முறைமை காலி மற்றும் திருகோணமலை துறைமுகங்களுக்கும் தற்போது விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

வாடிக்கையாளர்களை கூடிய வகையில் கவர்ந்து கொள்வதற்கு விருத்தி செய்யப்பட்ட இலங்கை துறைமுக அதிகாரசபையின் உத்தியோகபூர்வ இணையத்தளம் உச்ச மட்டத்தில் செயற்திறனாக செயற்பட்டு வருகின்றது. பல்வேறு முக்கிய தொகுதிகளுக்கான நடைமுறை ஈடுபடுத்துதல்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

அனைத்துத் துறைமுக நடவடிக்கைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு பாதுகாப்பு முறைமையினை மேம்படுத்துவதற்கான திட்டமிடல்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. துறைமுக நுழைவு மற்றும் வாகனங்களின் நடமாட்டத்தினை மேம்படுத்துவது, வானொலி அலைவரிசைகளை அடையாளம் காணும் (RFID) கருவியின் தொழில்நுட்ப பாவனையை பயன்படுத்தி தற்போது உள்ள பாதுகாப்பு மற்றும் அனுமதி பத்திரங்களை வழங்கும் தொகுதிகளை மேம்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அனைத்து பண்டகசாலைகள் தன்னியக்க முறையில் செயற்படுத்துவதற்காக நவீன களஞ்சியசாலை முகாமைத்துவ தொகுதியொன்று அறிமுகப்படுத்தி நடைமுறைபடுத்துவதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் வாடிக்கையாளர்களுக்கு அனைத்து நடவடிக்கைகளையும் இலத்திரனியல் முறையில் மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

**எதிர்கால அபிவிருத்தித்திட்டங்கள்**

அனைத்துத் துறைமுகங்களையும் அபிவிருத்தி செய்யும் மற்றும் அவற்றையோர் பேண்தகு இலாப நிலையங்களாக மாற்றும் நோக்குடன் மூன்று வருடங்களுக்கான குறுகிய அபிவிருத்தித் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இலங்கை துறைமுக அதிகாரசபையின் துரித நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொழும்பு துறைமுகத்தினுள் மேற்கட்டுமானம் மற்றும்

உட்கட்டுமான (Superstructure and infrastructure) அமைவுகளை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

கொழும்பு துறைமுகத்தினை உபயோகிப்பவர்களுக்கு சிறந்த சேவைகளை வழங்கும் நோக்குடன் முன்னர் அமுல்படுத்தப்பட்ட பல அபிவிருத்தி செய்திட்டங்கள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன.

- கிழக்கு கொள்கலன் முனையம் (ECT) நிர்மாணித்தல், ஜய கொள்கலன் முனையத்தின் V ஆம் கட்டத்தை நீடித்தல், ஜய கொள்கலன் முனைய உபகரணங்களை மேம்படுத்துதல், பன்நாட்டு கப்பற்சரக்குகளை ஒன்றுதிரட்டுதல் மற்றும் கொள்கலன்களுக்கான புதிய சேவைகள் வழங்கும் நிலையங்களை நிறுவுதல் போன்ற பணிகள் இடம்பெற்று வருகின்றன.
- மரபுரீதியான கப்பற்சரக்குகளை கையாள்வதற்கு ஐக்கிய கொள்கலன் முனையம், இளவரசர் விஜய மேடை, வழிகாட்டிப் பாலம், பண்டாரநாயக்க, துறைமேடை, போன்றவற்றின் மேம்பாட்டுப் பணிகளும் இடம்பெற்று வருகின்றன.
- பயணிகள் முனையம் (Cruise Terminal) அபிவிருத்தி செய்தல், பல் மாதிரி இடப்பெயர்வு நிலையம் அமைத்தல் மற்றும் கடல்சார் மத்திய நிலைய கட்டடத்தின் நிர்மாணம் போன்றவை நடைபெற்று வருகின்றன.

ஏனைய துறைமுகங்களான காலி , திருகோணமலை, ஒலுவில் மற்றும் காங்கேசன்துறை போன்ற துறைமுகங்களும் மேம்படுத்தப்படவுள்ளன. இந்த மேம்படுத்துதல்கள் இலங்கை துறைமுக அதிகாரசபையின் துரித வளர்ச்சிக்கும் ஏனைய போட்டித் துறைமுகங்களிடையிலான அதன் வளர்ச்சிக்கும் உதவும். இலங்கையிலுள்ள துறைமுகங்களினதும் துறைமுக செயற்படுத்துனராக மட்டுமல்லாது வடிவமைப்பவராக, நிர்வாகியாக, ஒழுங்குபடுத்துபவராக, செயற்படுத்துபவராக இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நிறைவேற்றப்படும் முக்கிய பங்கினை மதிப்பீடு செய்வதற்கு இந்த சாதனைகள் முக்கியமானவையாகும்.

**முடிவுரை**

உலக கடல்சார் துறையின் போட்டித்தன்மைக்கு முகம் கொடுக்கும் வகையில் இலங்கை துறைமுக அதிகார சபை உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதோடு அதன் மூலம் இலங்கை துறைமுக அதிகார சபையின் மேற்பார்வையின் கீழ் தொடர்ச்சியாக வசதிகள் வழங்கப்பட்டு இலாபத் தன்மை மற்றும் உருவாக்கம் உயர் மட்டத்தில் பேணிச்செல்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சாதகமான வளர்ச்சிக் குறிகாட்டிகளினால் ஊக்கம் பெற்று இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு உயர்ந்த செயற்பாட்டினையும் தரமான சேவையினையும் இனிவரும் வருடங்களில் வழங்கக்கூடியதாக இருக்கும் என மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிராந்திய கடல்சார் துறையில் இலங்கையை சிறந்த எதிர்காலத்திற்கு இட்டுச்செல்லும் இலக்கினை அடைந்து கொள்ள எம்மீது நம்பிக்கை வைத்து உண்மையுடன் கைகோர்த்து தேவையான வழிகாட்டல்கள் மற்றும் உதவியினை வழங்கிய மேன்மைமிகு துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர், மேன்மைமிகு பிரதி அமைச்சர், அமைச்சின் செயலாளர், முகாமைத்துவம், பணிப்பாளர் சபை, இலங்கை துறைமுக அதிகாரசபையினதும், எஸ்.ஏ.ஜீ.ரீ, சீ.ஐ.சீ.ரீ யை சேர்ந்த பதவியணியினர் மற்றும் பணியாளர்கள் எமது வாடிக்கையாளர்களுக்கும், உள்நாட்டு இறக்குமதி ஏற்றுமதிகளின் சர்வதேச கடல்சார் தொழில்களில் ஈடுபட்டிருக்கும் அனைத்து பங்குதாரர்களுக்கும் நான் இந்தச் சந்தர்ப்பத்தினை நன்றி கூறப் பயன்படுத்திக் கொள்கிறேன்.



**கலாநிதி பராக்கிரம திசாநாயக்க**
**தலைவர்**

## கலாநிதி பராக்கிரம திசாநாயக்க
## தலைவர்

கலாநிதி பராக்கிரம திசாநாயக்க, ஓர் கடற்பொருளியலாளராவார். 2017 ஜுன் 1, ஆம் திகதியிலிருந்து இலங்கை துறைமுக அதிகாரசபையின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் 2002 ஜனவரி தொடக்கம் 2004 வரை இலங்கை துறைமுக அதிகாரசபையின் தலைவராகக் கடமையாற்றியிருந்தார். இவரது காலத்தில் இங்கிலாந்தின் டன் அண்ட் பிறைட்சீப் கம்பனியினால் (Dun & Bradstreet (UK) தரப்படுத்தப்பட்டுள்ளவாறு இலங்கையிலுள்ள அரச மற்றும் தனியார் கம்பனிகளில் மிகவும் இலாபகரமான நிறுவனமாக இலங்கை துறைமுக அதிகாரசபையினை பதிவுசெய்துள்ளது.

1911 இல் தாபிக்கப்பட்ட, 1913 இல் அரச பட்டயம் வழங்கப்பட்ட ஐக்கிய இராச்சிய பட்டயக் கப்பல்தரகர்கள் நிறுவகத்தின் முதலாவது பிரித்தானியரற்ற சர்வதேசத் தலைவராக இவர் அண்மையில் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பதவியினைப் பொறுப்பேற்க முன்னர், இவர் ஏட்கன் ஸ்பென்ஸ் கம்பனி, துறைமுகங்கள் மற்றும் சேவை வழங்கல்களின் தலைவர்/நிறைவேற்று அதிகாரியாகவும் ஏட்கன் ஸ்பென்ஸ் பி.எல்.சி (Aitken Spence PLC) கம்பனியின் பிரதான சபைப் பணிப்பாளராகவும் கடமையாற்றினார். துறைமுக முகாமைத்துவ நடவடிக்கைகளை வெளிநாட்டில் முதலில் தொடங்கிய இலங்கைக் கம்பனியும் வெளிநாட்டுத் துறைமுகங்களில் அரச தனியார் பங்குடமையினைக் கொண்டுள்ள முதலாவது இலங்கைக் கம்பனியுமான ஏட்கன் ஸ்பென்ஸ் போட்ஸ் இன்நெஷனல் கம்பனியில் (Aitken Spence Ports International) தலைமைத்துவத்தினை வகித்தார்.

துறை சம்பந்தமாக இவர் வகித்த தலைமைப்பதவிகளுள், இலங்கை சேவை வழங்கல் மற்றும் போக்குவரத்து பட்டயக் கல்வி நிறுவனத்தின் தலைவர், இலங்கை பட்டயக் கப்பல்தரகர்கள் நிறுவகத்தின் தலைவர், இலங்கை போக்குவரத்துச் சபை ஆலோசனைக்குழுவின் தலைவர், இலங்கை வர்த்தக சபையின் துறைமுக, விமானப் போக்குவரத்து, சேவை வழங்கல் பிரிவின் தலைவர் போன்றவையும் அடங்கும்.

அவற்றோடு இவர் பொது மற்றும் வணிக முகாமைத்துவத்தில் பல கல்வித் தகைமைகளையும் பெற்றுள்ளார். இவர் கப்பற்றுறையின் அதியுயர் தகைமையான இங்கிலாந்தின் கப்பற்றுறை தொடர்பான (FICS) UK, இங்கிலாந்தின் சேவை வழங்கல்/ போக்குவரத்து (FCILT( UK) வியாபாரத்தில் (FCIM(UK) போன்ற தகைமைகளைப் பெற்று நோர்வே கப்பற்றுறை கல்வியகத்திலும் (ஒஸ்லோ) பட்டம் பெற்றுள்ளார்.

இவர் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தின் முன்னாள் வணிக மாணவரும் ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவருமாவார். ஹார்வட் வர்த்தகக் கல்லூரி, பொஸ்டன் (ஐக்கிய அமெரிக்கா), நொராட் மற்றும் ஜயிக்கா போன்றவற்றின் அங்கத்தவரும் ஆவார்.

## திரு பி ஜி தசநாயக்க
## உப தலைவர்

திரு. தசநாயக்க இலங்கை துறைமுக அதிகாரசபையின் உப தலைவராகக் கடமையாற்றும் அதேவேளை சீ.ஐ.சீ.ரீ, எஸ்.ஏ.ஜீ.ரீ மற்றும் ஜய கொள்கலன் முனைய தனியார் கம்பனியின் பணிப்பாளர் சபை உறுப்பினராவும் பதவி வகிக்கிறார்.

இவர் தோட்டத்துறையில் அனுபவமுள்ளவர் என்பதுடன் இலங்கை அரசாங்க பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் மற்றும் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபை போன்ற பல அரசாங்க தோட்ட நிறுவகங்களில் உயர் பதவிகளை வகித்தார். மேலும், தோட்டத்துறை அமைச்சின் தலைவராகக் கடமையாற்றியதன் மூலம் இவரது அறிவினையும் அனுபவத்தினையும் பரப்புவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. அதன் பின்னர், கால்நடை மற்றும் விவசாயக் கம்பனியின் தலைவராக அமர்த்தப்பட்டார். இதன் போது அக்கம்பனியின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் அவராற்றிய சேவை அனைவராலும் பாராட்டப்பட்டது.

பின்னர், திரு. தசநாயக்க தேசியக் கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார். ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் மற்றும் அரச அச்சகக் கூட்டுத்தாபனத்தினதும் தலைவராகச் செயற்பட்டார், இவை இவரது அறிவினை மாறுபட்ட அனுபவமாக மாற்றியது.

பின்னர், இவர் சுயாதீனத் தொலைக்காட்சிச் சேவையில் தொழிற்படு பணிப்பாளராக இணைந்தார், தேசிய பயிலுனர் தொழில்பயிற்சி அதிகாரசபையின் உபதலைவராகவும் பணியாற்றினார். அவரின் சிறப்புமிக்க தொழில்களிலிருந்து பெற்ற அறிவும் அனுபவமும் நிறுவனத்தின் மேம்பாட்டிற்குப் பெரிதும் பங்களிப்புச் செய்தது. அவரது பதவிக்காலத்தில், வேறுபட்ட துறைகளிலிலும் நிறுவனம் பங்குகொள்ளக் கூடியதாக இருந்ததுடன் இதனால் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் இது முக்கிய பங்களிப்பாக அமைந்தது.

## திரு. எச் டீ ஏ எஸ் ப்ரேமசந்திர
## முகாமைத்துவப் பணிப்பாளர்

திரு. எச் டீ ஏ எஸ் ப்ரேமசந்திர, வணிக முகாமைத்துவப் பட்டதாரியாவார், பெல்ஜியம் அன்ட்வேப் (Antwerp) பல்கலைக்கழகத்தில் துறைமுக முகாமைத்துவம் மற்றும் நிர்வாகத்தில் தனது முதுமாணிப்பட்டத்தின் சிறப்பு முதல் வகுப்பிலும் இவர் சித்தியடைந்துள்ளார். 1978 ஒக்டோபரில் முகாமைத்துவ உதவியாளராக இணைந்த இவர், 2001 ஆம் ஆண்டு ஜனவரியில் மேலதிக முகாமைத்துவப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். 2004 ஆம் ஆண்டு 25 வருட சேவையை நிறைவு செய்யும் வரை இவர் இப்பதவியினை வகித்தார்.

1991 ஆம் ஆண்டு தொடக்கம் 1992 ஆம் ஆண்டு வரை முனைய ஒருங்கிணைப்பாளராக புஜைறா துறைமுகத்தில் (Fujairah) பணியாற்றியதுடன் 1999 ஆம் ஆண்டு தொடக்கம் 2000 ஆம் ஆண்டு வரை மலேசியாவின் மேற்குத் துறைமுகத்தில் (West-port) தொழில்நுட்ப ஆலோசகராகவும் கொள்கலன் முனைய திணைக்களத்தின் தலைவராகவும் பதவி வகித்தார்.

உலகில் மூன்றாவது பெரிய கப்பல் சேவையான சி.எம்.ஏ- சி.ஜி.எம் எஸ்.ஏ (CMA CGM SA) சேவையின் பிராந்திய முகாமையாளராகத் தொழில்புரிய இலங்கை துறைமுக அதிகாரசபையை விட்டு விடுமுறையில் சென்றார். 2004 ஒகஸ்ட் மாதத்தில் திரு ப்ரேமசந்திர அக்கம்பனியில் தொழில்புரிய இலங்கை துறைமுக அதிகாரசபையை விட்டு விலகினார்.

2015 டிசம்பர் 1, இல் மீண்டும் இலங்கை துறைமுக அதிகாரசபையில் முகாமைத்துவப் பணிப்பாளராக இணைய முன்னர் மும்பாய் மற்றும் கோலாலம்பூரிலுள்ள சி.எம்.ஏ-சி.ஜீ.எம் டேர்மினல் லிங்ஸ் மற்றும் சி.எம்.ஏ டேர்மினல்ஸ் போன்றவற்றில் பணியாற்றினார். இக்காலப்பகுதியில் இவர் துறைமுகங்களின் கூட்டமைப்பில் பணியாற்றி சி.எம்.ஏ-சி.ஜீ.எம் முனையங்களில் முதலீடு செய்வது தொடர்பில் சி.எம்.ஏ-சி.ஜீ.எம் கம்பனிக்கு ஒத்துழைப்பு வழங்கி முற்றாகத் தானியங்கி வசதியுடன் கூடிய கொள்கலன் முனையங்களை வடிவமைத்தல் மற்றும் மேம்படுத்தல், சி.எம்.ஏ-சி.ஜீ.எம் உலகளாவிய ரீதியில் மத்தியகிழக்கு, ஆபிரிக்கா, ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பா போன்ற பிராந்தியங்களின் துறைமுங்களின் செயற்பாட்டினை மேம்படுத்துவதற்கான வழிகாட்டலை வழங்குதல் போன்ற செயற்பாடுகளைப் புரிந்தார்.

## திரு. எச் ஏ விமலசூரிய
## நிறைவேற்றுப் பணிப்பாளர்

பொலன்னறுவை மத்திய கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியினைத் தொடங்கிய திரு விமலசூரிய ஹொரண வித்யார்த்த கல்லூரியில் தனது உயர்தரக் கல்வியைப் பெற்றுக் கொண்டார், அங்கிருந்து தனது பல்கழைக்கழக நுழைவினையும் பெற்றுக் கொண்டார். இவர் தனது கலைமாணிப்பட்டத்தினைக் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பெற்றுள்ளதோடு சட்டமாணிப்பட்டத்தின் 1வது மற்றும் 2வது கட்டங்களையும் பூர்த்தி செய்துள்ளார். அவற்றோடு, ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகத்தில் ஊடகவியல் டிப்ளோமாவினைப் பூர்த்தி செய்தும் உள்ளார். திரு விமலசூரிய இலங்கை வான்படையின் தொண்டர் படையில்

விமானப்படை வீரராகவும் சிறைச்சாலைகள் திணைக்கள தலைமையகத்தில் நலன்புரி அலுவலராகவும் சேவை ஆற்றியுள்ளார். இவர் அரசாங்க சேவையில் இருந்தபோது இடர் முகாமைத்துவம் மற்றும் தோட்ட அமைச்சுக்களின் அமைச்சரவை அலுவலராகவும் கடமையாற்றினார். திரு விமலசூரிய தேயிலை, தெங்கு, இறப்பர் கட்டுப்பாட்டுச் சபைகளின் தலைவராகவும் இருந்ததுடன் திறன் மேம்பாட்டு நிதியத்தின் தலைவராகவும் பணியாற்றியுள்ளதுடன் இந்நிறுவனங்களின் வளர்ச்சிக்கு இவராற்றிய சேவைகள் அளப்பரியன. இவரது பரந்த அறிவு மற்றும் அனுபவத்தினை அடிப்படையாகக் கொண்டு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் தொழிற்படு பணிப்பாளராகவும் கப்பல் கூட்டுத்தாபனம், தெங்கு பயிர்ச்செய்கை சபை, தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை ஆகியவற்றின் தலைவராகவும் கடமையாற்றினார். தற்போது திரு விமலரசூரிய இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிறைவேற்றுப் பணிப்பாளராக இருப்பதுடன் அதன் முன்னேற்றத்திற்குப் பெரும்பங்காற்றுகிறார். இவரது இடையுறாத வேலைகளுக்கு மத்தியிலும் இவர் நேரத்தினைத் திட்டமிட்டு ஊடகவியல் சம்பந்தமாக மூன்று நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

## திருமதி ஜி எஸ் எம் சார்ள்ஸ்
## பணிப்பாளர்

இலங்கை நிர்வாகச் சேவை அதிகாரியான திருமதி சார்ள்ஸ் தற்போது இலங்கைச் சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாகக் கடமையாற்றுகிறார்.

1983 இல் கலைமாணிப்பட்டத்தில் முதல் வகுப்பில் சித்தியடைந்த இவர் தொடர்ந்து முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமா, விஞ்ஞான முதுமாணிப்பட்டம் மற்றும் வணிக முகாமைத்துவத்தில் முதுமாணிப்பட்டத்தினையும் பெற்றுள்ளார்.

1992 இல் இலங்கை நிர்வாக சேவையில் இணைந்த இவர் வவுனியா மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் அரசாங்க அதிபராகவும் கடமைபுரிந்தார்.

வவுனியாவில் இவர் அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் நாட்டின் வறுமை ஒழிப்புத்திட்டத்தில் இந்த மாவட்டம் உயர் மட்டத்தினை அடைந்திருந்தது. (2.3%)

திருமதி சார்ள்ஸ் உலகளாவிய அனர்த்த நிலைமை தலைமைத்துவ வலையமைப்பின் அங்கத்தவராகவும் இருந்தார்.

இவர் மாவட்ட அதிகாரியாகவும் பேரிடர் முகாமையாளராகவும் கடமை புரிந்தார், வடக்கில் இறுதிக்கட்ட உள்நாட்டு போரின் போதும் அதன் பின்னரும் உள்நாட்டில் இடம்பெயர்வுகளுக்குள்ளான மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யவென மனிதாபிமான ஒருங்கிணைப்பாளராகவும் கடமையாற்றினார்.

இவர் போரின் பின்னர் ஆதரவற்ற மற்றும் பிரிந்த சிறுவர்களை யுனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் குடும்பங்களைக் கண்டுபிடித்து ஒருங்கிணைக்கும் செயற்பாட்டினை உருவாக்கினார், இதன் காரணமாகப் பல குடும்பங்கள் வெற்றிகரமாக ஒருங்கிணைக்கப்பட்டன.

இவர் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் துறைகளை முன்னேற்றுவதற்கு செயற்பட்டுள்ளதோடு கண்காணித்தும் வழிகாட்டியும் வந்தார். மட்டக்களப்பு மாவட்டத்தில் பெண்கள் முயற்சியாண்மையினை முன்னேற்றும் குறிக்கோளுடன் பெண்கள் சுய-அபிவிருத்தி மையங்களையும் உருவாக்கினார்.

இவர் மட்டக்களப்பு மாவட்டத்தில் நகர அழகுபடுத்தும் செயற்திட்டங்கள், கோட்டையை அழகுபடுத்தும் செயற்திட்டங்கள், வேறுபட்ட ஏனைய அபிவிருத்தி செயற்திட்டங்களையும் ஏற்படுத்தியதோடு மட்டக்களப்பு மாவட்டத்தில் இயற்கை அனர்த்தத்தினால் ஏற்படும் விளைவுகளைத் தடுப்பதற்கான செயற்பாடுகளிலும் ஈடுபட்டிருந்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுற்றுலாத்துறை அபிவிருத்தி செயற்பாடுகளிலும் திருமதி சார்ள்ஸ் ஈடுபட்டிருந்தார்.

முகாமைத்துவத்திலுள்ள பெண்கள் நிறுவகத்தின் இலங்கை முழுவதற்குமான வருடாந்த விருது வழங்கும் விழாவில் 2012/2013 ஆம் ஆண்டிற்கான ஊக்கமான பெண் என்ற விருதினையும் இவர் பெற்றுக் கொண்டார்.

**திரு. எச் ஜீ சுமணசிங்க**
**பணிப்பாளர்**

திரு சுமணசிங்க கொழும்புப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ நிதியியல் பீடத்தில் வணிகமாணிப் பட்டத்தினையும் அவுஸ்திரேலிய பிலின்டர்ஸ் பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ முதுமாணிப்பட்டத்தினையும் பெற்றுள்ளார்.

இவர் 2015 இல் பொதுத் திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் பகுதியின் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டிருந்தார். 2015 இலிருந்து திரு சுமணசிங்க இலங்கை துறைமுக அதிகாரசபையின் திறைசேரிப் பிரதிநிதியாகவும் நியமிக்கப்பட்டிருந்தார். பொதுத் திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் பகுதியின் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட முன்னர் இவர் நிதி அமைச்சின் பணிப்பாளர் நாயகமாக (மனிதவள அபிவிருத்தி) கடமையாற்றினார்.

இதற்கு முன்னர், திரு சுமணசிங்க ஏற்றுமதி மற்றும் இறக்குமதிப் பிரிவின் ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டாளர் நாயகமாக பணிபுரிந்தார். அதற்கு முன்னர், இவர் பொதுத் திறைசேரியில் வேறுபட்ட பதவிகளையும் வகித்தார். பொது நிதியியல் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகமாகவும் செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களப் பணிப்பாளராகவும் வெளியக வளங்கள் திணைக்களம் மற்றும் நிதியியல் அமைச்சின் உதவிப் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

**திரு. ஜகத் பீ விஜேவீர**
**பணிப்பாளர்**

திரு. ஜகத் பீ. விஜேயவீர அவர்கள் 2017 ஆம் ஆண்டில் பணிப்பாளரொருவராக நியமிக்கப்பட்டார் தற்போது இவர் மீன்பிடி மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக கடமையாற்றுகிறார்.

இவர் களனிப் பல்கலைக்கழகத்தில் நுண்கலை சிறப்பு பட்டமொன்றை பெற்றுள்ளதோடு பின்னர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் பொருளியல் மற்றும் சர்வதேச தொடர்புகள் தொடரபிலான இரு முதுமாணிப் பட்டங்களையும் பெற்றுள்ளார்.

இவர் 2006 முதல் 2010 வரை பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளராக கடமை புரிந்துள்ளதோடு ஆட்பதிவு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாகவும் கடமை புரிந்துள்ளார். இவர் 1987 ஆம் ஆண்டு முதல் இலங்கை நிருவாக சேவையின் உத்தியோகத்தராக கடமை புரிந்து வருகின்றார்.

**திரு. நிலான் விக்கிரமசிங்க**
**பணிப்பாளர்**

திரு. விக்கிரமசிங்க சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் அரங்கில் 30 வருட நிலையான அனுபவத்தினைக் கொண்டுள்ளார். 1999 இல் லயன் ரோயல் சுற்றுலாத்துறையின் ''கூடியது குறைவில்'' (பெருமளவு நன்மை சிறிய செலவில்) எனும் தற்கால விதிமுறைகளுக்கமைய உருவாக்கினார். இந்த நிறுவனம் விருதுகளைப் பெற்று பிரெஞ்சு மற்றும் யப்பானிய வட்டத்தில் பெருமளவு அங்கீகாரத்தை பெற்றுள்ளது. இவர் உருவாக்கியுள்ள லயன் ரோயல் ரிசோட்ஸ் அண்ட் ஸ்பாஸ் விடுதியானது விடுமுறைக்கான சிறப்பான இடமாக உள்ளது.

இலங்கை சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்கு அவராற்றிய சேவையினைக் கருத்திற்கொண்டு தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் கௌரவிக்கப்பட்டார். திறன் மேம்பாட்டு மற்றும் தொழிற் பயிற்சிகள் அமைச்சின் விருந்தோம்பல் மற்றும் சுற்றுலாத்துறைப் பிரிவிற்கு பொறுப்பான பணிப்பாளர்கள் சபை உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டார். அவரது பதவிக்காலத்தில் 2016

இல் வெனிசுலா பொலிவேரியன் குடியரசின், மார்கரிடா தீவில் இடம்பெற்ற அணிசேரா இயக்க மாநாட்டில் சிறப்புப் பிரதிநிதியாகவும் கலந்துகொண்டார்.

திரு. விக்கிரமசிங்க அவர்களின் சேவைகள் தற்போது இலங்கை துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளர்கள் சபை அங்கத்தவர், ஜய கொள்கலன் முனையத்தின் பணிப்பாளர்கள் சபை அங்கத்தவர், ஹம்பாந்தோட்டை இன்டநெஷனல் போட் சேர்விஸ் கம்பனியின் (HIPS) பணிப்பாளர்கள் சபை அங்கத்தவர், ஹம்பாந்தோட்டை இன்டநெஷனல் போட் குரூப் கம்பனியின் (HIPG) பணிப்பாளர்கள் சபை அங்கத்தவர், மாகம்புர துறைமுக முகாமைத்தவ கம்பனி யின் முகாமைத்துவப் பணிப்பாளர் என்றவாறு விரிவடைந்துள்ளது.

## திரு. சுரங்க பீ ஹிதல்லஆராச்சி
## பணிப்பாளர்

திரு. சுரங்க பீ. ஹிதெல்லாராச்சி அவர்கள் இலங்கை நிருவாக மற்றும் அபிவிருத்திப் பிரிவுகளில் நிறைவேற்றுப் பணிகளில் ஈடுபட்டிருந்ததில் பெற்ற அனுபவத்துடன் 2002 ஆண்டு முதல் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த சமரசிங்ஹ அவர்களின் கீழ் சேவையாற்றியுள்ளதோடு இவர் தொழில் மற்றும் வெளிநாட்டு தொழில்வாய்ப்புகள், இடர் முகாமைத்துவம் மற்றும் மனித உரிமைகள, பெருந்தோட்டக் கைத்தொழில், நிதி, தொழிற்திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி, துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சு உட்பட அரச நிறுவனங்களின் இணைப்புச் செயலாளர், ஊடகச் செயலாளர, அந்தரங்கச் செயலாளர, தலைவர் மற்றும் பணிப்பாளர் போன்ற பதவிகளில் சேவையாற்றியுள்ளார்.

திரு. சுரங்க அவர்கள் 2011 முதல் 2012 வரை பெருந்தோட்டத் கைத்தொழில் அமைச்சின் ''துருசவிய'' நிதியத்தின் தலைவராக சேவையாற்றியுள்ளதோடு அக்காலப் பகுதியில் சிறிய இறப்பர் தோட்ட உரிமையாளர்களுக்கு இலங்கையில் முதன் முறையாக கடன் வழங்கும் முறையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு இவரால் முடிந்ததோடு இறப்பரின் விலை மற்றும் உற்பத்தியின் தரத்தை அதிகரிப்பதற்கு பகுதிகளாக இறப்பர் பதனிடும் நிலையங்கள் நிறுவப்பட்டன. இவர் தேசிய பெருந்தோட்ட முகாமைத்தவ நிறுவனத்தின தலைவராகவும் (NIPM) வர்த்தக முகாமைத்துவம் தொடர்பான தேசிய கல்லூரியின் (NSBM) பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

## திருமதி எஸ் ஏ எஸ் கே. ஜயசேகர
## பணிப்பாளர் சபையின் செயலாளர்

**முகாமைத்துவக் குழு**

கலாநிதி பராக்ரம திசாநாயக்க
**தலைவர்**

திரு. பீ.ஜீ. தசநாயக்க
**உப தலைவர்**

திரு. எச்.டி.ஏ.எஸ். ப்ரேமச்சந்திர
**முகாமைத்துவப் பணிப்பாளர்**

திரு. எச்.ஏ. விமலசூரிய
**நிறைவேற்றுப் பணிப்பாளர்**

திரு. ஏ.டீ.ரி. குணசேகர
**மேலதிக முகாமைத்துவப் பணிப்பாளர்**

திருமதி. சிராணி வன்னியாரச்சி
**பணிப்பாளர் (நிதி)**

திரு. டி.யு.டப்ளியு.டி. சொய்ஸா
**பணிப்பாளர் (சேவை வழங்கல்)**

திரு. பீ.ஏ.ஏ. ஹேவாகீகன
**பணிப்பாளர் (தென் துறைமுக அபிவிருத்தி)**

திரு. டி.ஏ.ஜே.ஐ. பேரேரா
**பணிப்பாளர் (துறைமுக இயக்கம்)**

கலாநிதி திரு. டி.பீ.எஸ். லொக்குகே
**பணிப்பாளர் (தகவல் முறைமை)**

மேஜர் ஜெனரல் நிஸ்ஸங்க விஜேசிங்ஹ
**பணிப்பாளர் (பாதுகாப்பு)**

திருமதி டி.ஜி.ஐ.சி. லோக்குஹேவகே
**பணிப்பாளர் (தொழில்நுட்பம்)**

திரு. எல். பிரேமசிறி டி.சில்வா
**பிரதான உள்ளக கணக்காய்வாளர்**

டாக்டர் திருமதி.டி. ராஜகாந்தன்
**பிரதான மருத்துவ அலுவலர்**

திரு. ஏ.ஏ.எஸ்.ஆர். அபேசிறிவர்தன
**பிரதான பொறியியலாளர் (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி)**

திரு. உபுல் ஜயதிஸ்ஸ
**பிரதான முகாமையாளர் (சந்தைப்படுத்தல் மற்றும் வர்த்தக அபிவிருத்தி )**

திரு. ஆர்.எம்.ஏ.எஸ். ரத்னாயக்க
**பிரதான முகாமையாளர் (நிர்வாகம்)**

திரு. எச்.ஏ.என்.எஸ். பர்னாந்து
**பிரதான பொறியியலாளர் (மின்சாரம் - I)**

திரு. டப்ளியு.எம்.டி.பி. விஜேகோன்
**பிரதான பொறியியலாளர் (மின்சாரம் - II)**

திரு. எச்.எம்.யு. பி. கலகொட
**பிரதான முகாமையாளர் (தகவல் முறைமை)**

திரு. டப்ளியு.என். ஜயதிஸ்ஸ
**பிரதான முகாமையாளர் (நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுகள்)**

திரு. பீ. ரணதுங்க
**பிரதான முகாமையாளர் (மஹபொல துறைமுகம் மற்றும் கடல்சார் கல்லூரி)**

திரு. ஐ.கே. ஞானதிலக்க
**பிரதான முகாமையாளர் (கொள்கலன் இயக்கம்)**

செல்வி காந்தி குணவர்த்தன
**பிரதான நிதி முகாமையாளர்**

திரு. ஜீ.வி.ரி. நாணாயக்கார
**பிரதான பொறியியலாளர் (கடலகம்)**

திருமதி அபர்னா திலகரத்ன
**பிரதான சட்ட அலுவலர்**

கெப்டன் ஏ. ஹேவாவிதாரன
**ஹாபர் மாஸ்டர்**

எயார் கொமடோர்.டி.சீ. ப்ரேமரத்ன
**பிரதான பாதுகாப்பு முகாமையாளர்**

திரு. எச்.எம்.பிரபாத் ஜயந்த
**பிரதான முகாமையாளர் (சேவை வழங்கல்)**

திரு. ஜே.ஏ. சந்திரரத்ன
**பிரதான பொறியியலாளர் (இயந்திர வேலைகள்)**

திரு. எம்.எஸ் ஏ. பத்திரகே
**பிரதான பொறியியலாளர் (இயந்திர பொறி)**

திரு. பி.ஏ.ஆர்.டி. பதிராஜ
**பிரதான முகாமையாளர்(வழங்கல் மற்றும் பொருள் முகாமைத்துவம்)**

திரு. நளின் அபோன்சு
**பிரதான முகாமையாளர் (தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள்)**

திரு. டி.ஜி.ஆர்.எம்.பத்திவில
**பிரதான பொறியியலாளர் (சிவில்)**

திரு. நிர்மால் டி. பொன்சேக்கா
**பிரதான மனிதவள முகாமையாளர்**

**கணக்காய்வுக் குழு**

திரு. எச்.ஜீ. சுமனசிங்ஹ
**தலைவர்**

திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ்
**அங்கத்தவர்**

திரு. நிலான் விக்ரமசிங்ஹ
**அங்கத்தவர்**

திரு. கே.பீ.ஜீ. ஹேமரத்ன
**அங்கத்தவர்**

திருமதி சிராணி வன்னியாரச்சி
**அங்கத்தவர்**

திரு. ஏ.டி.ரீ.குணசேகர
**அங்கத்தவர்**

திரு டி. ஏ.ஜே.ஐ. பெரேரா
**அங்கத்தவர்**

திரு. எல். பிரேமசிறி டி சில்வா
**செயலாளர்**

**2017 ஆம் ஆண்டில் சிரேஷ்ட முகாமைத்துவத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்**

**பதவி விலகல் மற்றும் ஓய்வு பெறுதல்**

மேலதிக முகாமைப்பணிப்பாளர் **திரு. ஜே.கே.பீ. குருகுலசூரிய** இலங்கை துறைமுக அதிகார சபையிலிருந்து பதவி விலகியுள்ளார்.

பிரதான முகாமையாளர் (சிவில்) **திரு. பி.எம்.எஸ். சோமரத்ன** இலங்கை துறைமுக அதிகார சபையிலிருந்து பதவி விலகியுள்ளார்.

பணிப்பாளர் (மனித வளம்) **திரு. எல்.எச்.ஆர். சேபால** இலங்கை துறைமுக அதிகார சபையிலிருந்து பதவி விலகியுள்ளார்.

பிரதான பொறியியலாளர் (இயந்திர உபகரண வேலைகள்) **திரு. ஜீ.எச்.டி. தர்மரத்ன** இலங்கை துறைமுக அதிகார சபையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

பிரதான பொறியியலாளர்(இயந்திர பொறிகள்) **திரு. ஈ.ஏ.ரி. எதிரிசூரிய** இலங்கை துறைமுக அதிகார சபையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

பிரதான முகாமையாளர்(வழங்கல் மற்றும் பொருள் முகாமைத்துவம்) **திரு. விஜித அபேசுந்தர** இலங்கை துறைமுக அதிகார சபையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

**நியமனங்கள்**

**திரு. ஏ.டீ.ரி. குணசேகர** மேலதிக முகாமைத்துவப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

**திருமதி. டீ.ஜீ.ஐ.சீ. லொகுஹேவகே** பணிப்பாளராக (தொழில்நுட்பம்) நியமிக்கப்பட்டார்.

**மேஜர் ஜெனரல் நிஸ்ஸங்க விஜேசிங்ஹ** பணிப்பாளராக (பாதுகாப்பு) நியமிக்கப்பட்டுள்ளார்.

**திரு. பீ. ரணதுங்க** பிரதான முகாமையாளராக (மஹபொல துறைமுகம் மற்றும் கடல்சார் கல்லூரி) நியமிக்கப்பட்டுள்ளார்.

**திரு. ஜே.ஏ. சந்திரரத்ன** பிரதான பொறியியலாளராக (இயந்திர உபகரண வேலைகள்) நியமிக்கப்பட்டுள்ளார்.

**திரு. எம்.எஸ்.ஏ. பத்திரகே** பிரதான பொறியியலாளாராக (இயந்திரபொறி) நியமிக்கப்பட்டுள்ளார்.

**திரு. பி.ஏ.ஆர்.டி. பதிராஜ** பிரதான முகாமையாளராக (வழங்கல் மற்றும் பொருள் முகாமைத்துவம்) நியமிக்கப்பட்டுள்ளார்.

**திரு. நளின் அபோன்சு** பிரதான முகாமையாராக(தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள்) நியமிக்கப்பட்டார்.

**திரு. டி.ஜீ.ஆர்.எம். பத்திவில** பிரதான பொறியியலாளராக (சிவில்) நியமிக்கப்பட்டுள்ளார்.

**திரு. நிர்மால் டி பொன்சேக்கா** பிரதான மனிதவள முகாமையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

உலகின் ஏனைய துறைமுகங்களுடன் ஒப்பிடும் போது 2017 ஆம் ஆண்டில் கொழும்பு துறைமுகம் முன்னேற்றகரமான தோற்றப்பாட்டினை கட்டியெழுப்பி அதன் கொள்கலன் கையாளல் பரிமாண வளரச்சி விகிதத்தினை 8.3% னால் அதிகரிக்கச் செய்துள்ளது. ஒன்றிணைவுகள், பொறுப்பேற்றல்கள் மற்றும் கூட்டுசேரல்கள் காரணமாக 2017 ஆம் ஆண்டு கப்பல் தொழில் துறையில் பல ஸ்திரமற்ற தன்மைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டன.அவற்றின் விளைவாக மீள் ஏற்றுமதி கேந்திர துறைமுகம் ஒன்றான கெலான் துறைமுகத்தில் ( Port of Kelang ) மறை எண் வளர்ச்சி பதிவாகி இருந்த்து. ஆயினும் இந்த நிலைமைக்கு மத்தியில் கடல்சார் துறையில் அதிகரித்து வரும் கிராக்கிகளுக்கு ஏற்ப வழங்குதல்களை ஏற்படுத்தும் பொருட்டு இலங்கை துறைமுக அதிகார சபை சர்வதேச தரத்திலான பாரிய பல வசதிகளை நிர்மாணித்து அதன் மூலம் கொழும்பு துறைமுகம் வலயத்தின் பாரிய மீள் ஏற்றுமதி கொள்கலன் கையாளும் கேந்திர துறைமுகமாக மாறியுள்ளது.

2017 ஆம் ஆண்டில் முன்னணி கப்பல் சேவைகளுடன் இலங்கை துறைமுக அதிகாரசபை கையாளல்களை தொடர்வதற்கு நான்கு முனைய சேவை ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

2017 ஆண்டில் புதிய கொள்கலன் கப்பல் கம்பனியான பெண்டியுளம் எக்ஸ்பிரஸ் லைன் கம்பனியும் பொது ஊட்டக் கப்பல் கம்பனியான மிலாஹா கம்பனியும் கொழும்பு துறைமுகத்தில் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் முகாமை செய்யப்படும் ஜய கொள்கலன் முனையத்தினால் கவரப்பட்டன.

இலங்கை துறைமுகம், உலக கப்பற்றுறை வளர்ச்சிக்கு ஈடுகொடுப்பதில் துறைமுகத் துறை எதிர்நோக்கும் நடைமுறைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் ''மூன்று வருட அபிவிருத்தித் திட்டத்தினைத்'' தயாரிக்கும் செயன்முறையில் ஈடுபட்டுள்ளது.

இலங்கை துறைமுக அதிகாரசபையினால் முகாமை செய்யப்படும் துறைமுகங்கள் பின்வரும் பெறுபேறுகளைத் தந்துள்ளன:

- மீள் ஏற்றுமதி கொள்கலன் கையாளல் பரிமாணம் 0.1% னால் அதிகரித்துள்ளது.
- உள்நாட்டுக் கொள்கலன் கையாளல் பரிமாணம் 19.6% னால் வீழ்ச்சியடைந்துள்ளது.
- இலங்கை துறைமுக அதிகாரசபையினால் முகாமை செய்யப்படும் துறைமுகங்களின் கையாளல் பரிமாணம் 4.3% னால் வீழ்ச்சியடைந்துள்ளது. (இது 2016 ஆம் ஆண்டின் எதிர்மறை வீழ்ச்சியான -6.3% யோடு ஒப்பிடுகையில் முன்னேற்றகரமான அதிகரிப்பென கூற முடியும)

ஏனைய கப்பல்களை விடக் கூடிய ஆழம்/நீளம்/அகம் கொண்ட பாரிய அளவிலான கப்பல்களின் வருகை, கொழும்பு இன்டநெஷனல் கென்டேனர் ரேமினல்ஸ் கம்பனியின் பிரதான கப்பல் பாதைகளை இழத்தல், ஊட்ட கொள்கலன் கையாளல் பரிமாணங்கள் குறைவடைதல், கப்பல்களின் கையாளல்களை உடனடியாக நிறைவு செய்யுமாறு ஏனைய கப்பல்களினால் செய்யப்படும் தொந்தரவுகள், சவுத் ஏசியா கேற்வே ரேமினல் நிறுவனத்துடன் (SAGT) ஒப்பிடுகையில் ஜய கொள்கலன் முனையம் கூடிய ஆழம் இல்லாதிருத்தல், புதிய ஒன்றியங்களை ஏற்படுத்துதல், கிழக்கு கொள்கலன் முனையம் தொடர்பில் வைத்திருந்த எதிர்பார்ப்பு நிறைவேறாமை மற்றும் ஏனைய தனியார் முனைய இயக்குனர்களினால் வழங்கப்படும் போட்டி மிகு கழிவுக்கட்டணங்கள் போன்ற காரணிகளினால் இலங்கை துறைமுக அதிகார சபை அதன் பரிமாணங்களை இழந்துள்ளன.

**அனைத்துத் துறைமுகங்களிலும் பின்வரும் பெறுபேறுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன:**

- வருகை தந்த கப்பல்களின் எண்ணிக்கை 1.6% னால் வீழ்ச்சியடைந்துள்ளது.
- கையாளப்பட்ட மொத்த தொன் அளவு 8.6% னால் அதிகரித்துள்ளது.

**கொழும்பு துறைமுகம் பின்வரும் பெறுபேறுகளைப் பதிவுசெய்துள்ளது:**

- கொழும்பு துறைமுகத்திற்கு வருகை தரும் கப்பல்களின் எண்ணிக்கை 1.7% னால் வீழ்ச்சியடைந்துள்ளது.
- கொழும்பு துறைமுகத்தில் கையாளப்பட்ட மொத்த தொன் அளவு 8.7% னால் அதிகரித்துள்ளது.
- கொழும்பு துறைமுக கொள்கலன் கையாளலின் மொத்த வளர்ச்சி 8.3% னால் அதிகரித்துள்ளது.
- உள்நாட்டுக் கொள்கலன் கையாளல் பரிமாணம் 6.4% னால் அதிகரித்துள்ளது.
- மீள் ஏற்றுமதி கொள்கலன் கையாளல் பரிமாணம் 8.8% னால் அதிகரித்துள்ளது.

**ஹம்பாந்தோட்டை துறைமுகம் பின்வரும் பெறுபேறுகளைப் பதிவுசெய்துள்ளது:**

- ஹம்பாந்தோட்டை துறைமுகதிற்கு வருகை தந்த கப்பல்களின் எண்ணிக்கை 18.1% னால் வீழ்ச்சியடைந்துள்ளது.
- கையாளப்பட்ட றோ-றோ கலங்களின் மொத்த எண்ணிக்கை 217 ஆகும். இது 18.7% னால் வீழ்ச்சியடைந்துள்ளது.
- கையாண்ட மொத்த வாகனங்களின் எண்ணிக்கை 107,285 அலகுகள் ஆகும். இது 40.9% னால் வீழ்ச்சியடைந்துள்ளது.
- உள்நாட்டு வாகனங்களின் மொத்த எண்ணிக்கை 41,188 அலகுகள் ஆகும். இது 30.7% னால் அதிகரித்துள்ளது.
- மீள் ஏற்றுமதி வாகனங்களின் எண்ணிக்கை 66,097 அலகுகள் ஆகும். இது 56% னால் வீழ்ச்சியடைந்துள்ளது.
- சந்தைப் பங்குகள் – (மீள் ஏற்றுமதி 62% உள்நாடு 38%)

**திருகோணமலை துறைமுகம் பின்வரும் பெறுபேறுகளைப் பதிவுசெய்துள்ளது:**

- வருகை தந்த கப்பல்களின் எண்ணிக்கை 7.9% னால் அதிகரித்துள்ளது.
- கையாளப்பட்ட மொத்த தொன் அளவு 10.9% னால் அதிகரித்துள்ளது.

**காலி துறைமுகம் பின்வரும் பெறுபேறுகளைப் பதிவுசெய்துள்ளது:**

- வருகை தந்த கப்பல்களின் எண்ணிக்கை 9.4% னால் வீழ்ச்சியடைந்துள்ளது.
- கையாளப்பட்ட மொத்த தொன் அளவு 7.8% னால் வீழ்ச்சியடைந்துள்ளது.

| | |
|---|---|
| 1505 | போர்த்துக்கேயரினால் கடற்படைத்தளமாக / துறைமுகமாக உபயோகித்த ஆரம்பிக்கப்பட்டதுடன் மேற்கு உலகில் கொழும்பு பற்றித் தெரிந்து கொள்ளக் கிடைத்தமை |
| 1875 | 7 ஆம் எட்வெட் மன்னரினால் டிசெம்பர் 09 ஆம் திகதி தென்மேற்கு அலைதாங்கிக்கான அடிக்கல் நாட்டப்படல் |
| 1882 | கொழும்பு துறைமுகத்தின் நிர்வாகப் பணிக்காக "ஹாபர் போர்ட்" என்னும் பெயரில் சபையொன்று நிறுவப்படல் |
| 1885 | 1285 மீட்டர் நீளமான தென்மேற்கு அலைதாங்கியின் வேலைகள் பூர்த்தியாகக்கப்படல் |
| 1898 | 335 மீட்டர் நீளமான வடகிழக்கு அலைதாங்கியின் வேலைகள் பூர்த்தியாக்கப்படல் |
| 1899 | உலர் துறைமேடையின் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்படல் |
| 1906 | 814 மீட்டர் நீளமான "ஐலன்ட்" அலைதாங்கியின் வேலைகள் பூர்த்தியாக்கப்படல் |
| 1906 | உலர் துறைமேடையின் நிர்மாணப்பணிகள் பூர்த்தியாக்கப்படல் |
| 1909 | உலர் துறைமேடைக்கான 250 மீட்டர் நீளமான வழிகாட்டிப் பாலத்தின் வேலைகள் பூர்த்தியாக்கப்படல் (ஆழமான நீரில் அமைந்த முதல் கரையோர நங்கூரத்தளம் இதுவாகும்.) |
| 1912 | தற்போது ஜய கொள்கலன் முனையம் அமைந்திருக்கும் பிரதேசத்தில் நிலக்கரி இறக்கும் 18 துறைமேடைகளின் வேலைகள் பூர்த்தியாக்கப்படல் |
| 1912 | தென்மேற்கு அலைதாங்கியின் பகுதி 550 மீற்றர் வரை நீடிக்கப்படல் |
| 1913 | துறைமுக அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு பணிகளுக்காக துறைமுக ஆணைக்குழு அமைக்கப்படல் |
| 1922 | பெற்றோலிய எண்ணெய் வழங்குவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டு பூர்த்தி செய்யப்படல் |
| 1950 | 9 முதல் 11 மீட்டர் ஆழத்துடன் கூடிய 15 கரையோர நங்கூரத்தளங்கள் 7.5 மீட்டர் ஆழமான நீரில் 02 நங்கூரத்தளங்கள், 55,800 சதுர மீற்றர் கொண்ட அண்மித்த களஞ்சியங்கள் மூலம் மேலும் குத வசதிகள் ஏற்படுத்தப்படுவதற்கான வசதிகள் வழங்கப்படுவதற்கான நிர்மாணப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்படல் |
| 1954 | தென்மேற்கு அலைதாங்கியின் கரையோர நங்கூரத்தளத்தின் வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டு 02 ஆம் எலிசபெத் இராணியினால் அங்குரார்ப்பணம் செய்து வைப்பப்பட்டதனால் அது "எலிசபெத் இராணி இறங்குதுறை" எனப் பெயரிடப்பட்டது. அதில் நங்கூரமிடப்பட்ட முதல் கலம் இங்கிலாந்து அரசுக்குரிய "கோதிக்" எனும் கப்பலாகும். |
| 1956 | 17 கரையோர நங்கூரத்தளங்கள், அண்மித்த களஞ்சியங்கள் மற்றும் குதங்கள் நிர்மாணிக்கப்படல் |
| 1958 | கொழும்புத் துறைமுகத்தின் கப்பற்சரக்கு கையாளும் நடவடிக்கைகள் அரசமயமாக்கப்பட்டு துறைமுக கப்பற்சரக்கு கூட்டுச்சபை ஸ்தாபிக்கப்படல் |

| | |
|---|---|
| 1964 | காலி துறைமுகத்தில் கப்பற்சரக்கு கையாளும் நடவடிக்கைகள் அரசமயமாக்கப்படல் |
| 1967 | துறைமுக ஒத்துப்பார்த்தல் மற்றும் பாதுகாப்பு சேவைக் கூட்டுத்தாபனம் நிறுவப்படல் |
| 1967 | திருகோணமலை துறைமுகத்தில் கப்பற்சரக்கு கையாளும் நடவடிக்கைகள் அரசமயமாக்கப்படல் |
| 1979 | துறைமுக ஆணைக்குழு துறைமுக கப்பற்சரக்கு கூட்டுச்சபை மற்றும் துறைமுக ஒத்துப்பார்த்தலும் பாதுகாப்புக்குமான சேவைகள் கூட்டுத்தாபனம் போன்றவற்றினை ஒன்றிணைத்து இலங்கை இலங்கை துறைமுக அதிகாரசபை நிறுவப்படல் |
| 1980 | ஜப்பான் நாட்டின் உதவியுடன் கொழும்பு துறைமுகத்திற்கான பாரிய திட்டமொன்று தயாரிக்கப்படல் |
| 1980 | எலிசபெத் இராணி இறங்குதுறையின் புதிய முனையம் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படல் |
| 1982 | முதலாவது "கென்ட்ரி" பாரம்தூக்கியான "டன்கோ 80" சேவையில் ஈடுபடுத்தப்படல் |
| 1982 | ஜப்பானிய வ/ப "பென்றாஓசன் வக்கச்சிக்கு" ஒன்றிணைந்த கம்பனியுடன் புதிய கொள்கலன் முனையமொன்றை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தமொன்று கைச்சாத்திடல் |
| 1983 | சகல அங்கங்களுடன் கூடிய கொளகலன் முனையத்தின் 1 ஆம் கட்ட நிர்மாணப் பணிகள் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படல் |
| 1984 | சகல அங்கங்களுடன் கூடிய கொள்கலன் முனையத்தின் ii ஆம் கட்ட நிர்மாணப் பணிகள் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படல் |
| 1984 | ஹிற்றாச்சி வகையின் 04 றான்ஸ்பர் பாரம்தூக்கிகள் எலிசபெத் இராணி கொள்கலன் முனையத்தில் சேவையில் ஈடுபடுத்தப்படல் |
| 1985 | ஜய கொள்கலன் முனையத்தின் 01 ஆம் கட்ட வேலைகள் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படல் |
| 1987 | இலங்கை துறைமுக அதிகார சபையின் மஹபொல பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்படுதல். |
| 1987 | ஜய கொள்கலன் முனையத்தின் II ஆம் கட்ட வேலைகள் ஆரம்பித்து வைக்கப்படல் |
| 1988 | கப்பல்களைக் கட்டிவைப்பதற்கு கரைக்கு அப்பால் அமைந்துள்ள ஒருமுனை மிதவை நங்கூரத்தளத்தை அமைத்து சேவையில் ஈடுபடுத்தப்படல் |
| 1994 | புதிய துறைமுக உட்புகு பாதையின் வேலைகள் பூர்த்தி செய்யப்படல். |
| 1995 | ஜய கொள்கலன் முனையத்தின் III ஆம் கட்ட பணிகள் ஆரம்பித்து வைக்கப்படல். |
| 1996 | ஜய கொள்கலன் முனையத்தின் IV ஆம் கட்ட பணிகள் ஆரம்பித்து வைக்கப்படல். |
| 1998 | ஐக்கிய கொள்கலன் முனையத்தின் வேலைகள் ஆரம்பித்து வைக்கப்படல். |

| | |
|---|---|
| 1998 | இணைந்த துறைமுகங்கள் (அபிலயேற்றட் போட்ஸ்) சம்மேளனம் நிறுவப்படல் |
| 1999 | கிழக்கு கடற்கரையின் ஒலுவில் வெளிச்ச வீட்டை சேவையில் ஈடுபடுத்துதல் அத்தோடு ஒலுவில் கடல்சார் பயிற்சி நிலையத்தையும் திறந்து வைத்தல் |
| 1999 | இராணி இறங்குதுறையில் சவுத் ஏசியா கேட்வே டேர்மினலின் (எஸ்.ஏ.ஜீ.ரீ) அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பித்து வைக்கப்படல் |
| 1999 | திருகோணமலை துறைமுகத்தில் கரையோர நங்கூரத்தளங்களை நிர்மாணிக்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்படல் |
| 2000 | கொழும்பு தென் துறைமுகத்தின் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்படல் |
| 2000 | காலி துறைமுகத்தில் புதிய நங்கூரத்தளம் நிர்மாணிக்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்படல் |
| 2000 | பேலியகொடை கொள்கலன் கப்பற்சரக்கு நிலையம் ஆரம்பித்து வைக்கப்படல். |
| 2000 | காலி துறைமுகம் பிராந்திய துறைமுகமாக அபிவிருத்தி செய்யப்படும் குறிப்பிட்ட திட்டத்தின் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்படுதல் |
| 2000 | வட பாலத்தின் 11 ஆம் கட்ட அபிவிருத்திப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்படல் |
| 2000 | ஒரே இடத்திலான ஆவணமாக்கல் நிலையம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படல் |
| 2001 | காலி துறைமுகத்தின் புதிய துறைமேடை திறந்து வைக்கப்படல் |
| 2003 | ஒலுவில் துறைமுக உட்புகு பாதையின் நிர்மாணப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்படல் |
| 2003 | குறைகொள்கலன் (எல்.சி.எல்) மற்றும் பிரித்த மொத்த கப்பற் சரக்குகளுக்கான சேவைகள் வழங்கும் நிலையம் ஆரம்பித்து வைக்கப்படல் |
| 2003 | இலங்கை துறைமுக அதிகாரசபையின் கடலக நூதனசாலை திறந்து வைக்கப்படல் |
| 2003 | சிவில் நிர்மாணப் பணிகள் பூர்த்தியாக்கப்பட்டதன் பின்னர் ஐக்கிய கொள்கலன் முனையம் திறந்து வைத்தல் |
| 2004 | ஐக்கிய கொள்கலன் முனையத்தின் கொள்கலன் கையாளும் பணிகள் வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தல் |
| 2004 | இலங்கை துறைமுக அதிகாரசபையின் வெள்ளிவிழா கொண்டாடப்பட்டது. |
| 2004 | பாரிய அளவிலான சேவைப் பிரிவான ஜய கொள்கலன் முனையம் தேசிய உற்பத்தித் திறனுக்கான விருதை பெற்றுக்கொள்ளல் |
| 2004 | கொழும்பு துறைமுகத்தினால் 02 மில்லியன் கொள்கலன் கையாளப்படுதல் |
| 2005 | ஒலுவில் துறைமுகம் மற்றும் வீடமைப்புத் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்படல் |
| 2005 | தேசிய உற்பத்தித் திறன் தொடர்பான செயலகத்தினால் மத்திய தர சேவை பிரிவிற்கான திறன் சான்றிதழ் இலங்கை துறைமுக அதிகாரசபையின் மஹபொல பயிற்சி நிலையத்துக்கு வழங்கப்படல் |

| | |
|---|---|
| 2006 | கொழும்பு துறைமுகத்தில் கொள்கலன் பாதுகாப்பு மற்றும் மெகா போர்ட் உபகரணங்கள் அறிமுகம் செய்து வைக்கப்படல் |
| 2006 | கொழும்பு தென் துறைமுக நிர்மாணம் தொடர்பிலான உத்தேச கொழும்புத் துறைமுக விரிவாக்கல் செய்திட்டத்தின் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடல் |
| 2006 | ஹம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தித் திட்டத்தின் (முதலாம் கட்டம்) விபரமான வடிவமைப்பு வேலைகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடல். |
| 2007 | ஹம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தித் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பித்து வைத்தல் மற்றும் நிதி ஒப்பந்தம் கைச்சாத்திடல். |
| 2008 | ஒலுவில் துறைமுக திட்டத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படுதல் |
| 2008 | கொழும்புத் துறைமுக விரிவாக்கல் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படுதல். |
| 2008 | ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் கப்பல்களுக்கு எண்ணெய் வழங்கும் வசதிகள் ஏற்படுத்துதல் மற்றும் எண்ணெய்த் தாங்கித் தொகுதிகளின் நிர்மாண நடவடிக்கைகள் தொடர்பான உடன்பாடு கைச்சாத்திடல் |
| 2009 | ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் கப்பல்களுக்கு எண்ணெய் வழங்கும் வசதிகள்,எண்ணெய்த் தாங்கித் தொகுதி மற்றும் நிர்வாக கட்டட நிர்மாணப் பணிகளுக்கான அடிக்கல் நாட்டுதல் |
| 2009 | ஜய கொள்கலன் முனைய முகாமைத்துவத் தொகுதி “NAVIS” வரை தரமுயர்த்துதல் |
| 2010 | 2010.08.15 ஆம் திகதி ஹம்பாந்தோட்டை மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுக நீர்த்தடாகத்துக்கு கடல் நீர் பரப்பும் வைபவம் |
| 2010 | 2010.11.18 ஆம் திகதி ஹம்பாந்தோட்டை மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகம் வைபவரீதியாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படல் |
| 2010 | ஜய கொள்கலன் முனையத்தில் 02 மில்லியன் கொள்கலன் கையாளப்படுதல் |
| 2010 | கொழும்பு துறைமுகத்தில் 04 மில்லியன் கொள்கலன் கையாளப்படுதல். |
| 2011 | 06 புதிய கென்ட்ரி பாரம்தூக்கிகளும் 30 றான்ஸ்பர் பாரமுயர்த்திகளும் துறைமுகத்துக்கு கிடைக்கப்பெறுதல். |
| 2011 | இலங்கை துறைமுக அதிகாரசபையின் கொழும்பு எண்ணெய் முனையத்தின் கொள்ளளவு அதிகரிக்கப்படுதல். |
| 2011 | 50 முனைய டிரக்டர்கள் துறைமுகத்துக்கு கிடைக்கப்பெறல் |
| 2011 | கொழும்பு துறைமுக விரிவாக்கல் திட்டத்தின் கீழ் தென் கொள்கலன் முனைய ஒப்பந்தம் கைச்சாத்திடல் |
| 2011 | ஹம்பாந்தோட்டை மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தில் புதிய வர்த்தகங்கள் ஆரம்பிக்கப்படுவதனைக் குறிக்கும் நிலம் தோண்டும் வைபவம் |
| 2011 | தென் கொள்கலன் முனையத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படுவதனைக் குறிக்கும் நிலம் தோண்டும் வைபவம். |

| | |
|---|---|
| 2012 | ஹம்பாந்தோட்டை மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தில் ரோ ரோ கப்பல்களின் கையாளல் ஆரம்பிக்கப்படல். |
| 2012 | கொழும்பு துறைமுக புளுமெண்டல் எண்ணெய் களஞ்சியத்தில் பழுதடைந்திருந்த எண்ணெய்க் குழாய் வழி மீள் மாற்றம் செய்யப்படல். |
| 2013 | 6.8 கி. மீட்டர் கொண்ட பாரிய அலைதாங்கி மற்றும் தெற்கு கொள்கலன் முனையத்துடனான கொழும்பு துறைமுகம் விரிவாக்கும் செய்திட்டம் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படல். |
| 2013 | ஒலுவில் துறைமுகம் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படல். |
| 2013 | கொள்கலன் முனையத் தொகுதியின் இறக்குமதி செய்யப்படும் நிறைவான கொள்கலன்களை ஏற்றும் மொடியூல் நடைமுறைப்படுத்தப்படல். |
| 2013 | ஹம்பாந்தோட்டை மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தில் நிர்வாகக் கட்டடம் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படல். |
| 2014 | ஹம்பாந்தோட்டை மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தின் கப்பல்களுக்கான எண்ணெய் வழங்கும் வசதிகள் மற்றும் எண்ணெய்த் தாங்கித் தொகுதி வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தல் |
| 2014 | கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தி செய்திட்டத்தின் நிர்மாணப் பணிகளை ஆரம்பித்து வைத்தல் |
| 2015 | கிழக்கு கொள்கலன் முனையம் வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தல் |
| 2015 | தர முகாமைத்துவ முறைமை தொடர்பிலான ISO 9001 – 2008 தரச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளல். |
| 2015 | மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தின் கட்டம் II இன் நீர்த்தடாகத்துக்கு கடல் நீர் நிரப்பும் வைபவம் |
| 2015 | கொழும்பு துறைமுகத்தில் இருபது சம அலகு கொள்கலன் 05 மில்லியன் கையாளல். |
| 2016 | கொள்கலன் கப்பற்சரக்கு நிலையத்தை(CFS 1) மீள் நிறுவுதல் (2016.08.10) |
| 2016 | இயந்திர உபகரண பொறியியல் பகுதியினால் ஜய கொள்கலன் முனையத்தில் உயரத்தில் குறைந்த புதிய டிரேலர் ஒன்றை நிர்மாணித்தல் (2016.08.31) |
| 2016 | பாரிய கொள்கலன் கப்பலான MSC Maya கொழும்பு துறைமுகத்தின் கொழும்பு சர்வதேச கொள்கலன் முனையத்துக்கு (CICT) வருகை தரல் (2016.09.16) |
| **2017** | **பூரணமாக மீள் நிர்மாணிக்கப்பட்ட கொள்கலன் கப்பற்சரக்கு நிலையத்தின் (CFS 1) கையாளல் பணிகள் ஆரம்பிக்கப்படுதல். (2017.05.31)** |
| **2017** | **ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் துறைமுக கையாளல் தொடர்பில் சீனா மற்றும் இலங்கை அரசாங்கத்திற்கிடையில் சலுகைக்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்படுதல். (2017.07.29)** |

**2017** இணைந்த துறைமுகங்களின் சர்வதேச வலையமைப்பு தொடர்பிலான 19 ஆவது (International Network of Affiliated Ports (INAP) Conference (2017-11-07,08) மாநாடு இலங்கையில் ஆரம்பிக்கப்படுதல்.

**2017** ஹம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பான பங்காளர்களின் உடன்படிக்கை (Shareholders Agreement) மற்றும் காணி குத்தகைக்கு வழங்கும் உடன்படிக்கை. (Land Lease Agreement) (2017/12/08)

**2017** இலங்கை துறைமுக அதிகார சபை மற்றும் சைனா மேர்சன்ட் ஹோல்டிங்ஸ் கம்பனிக்கிடையில் ஹம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பான சலுகை உடன்படிக்கையின் கீழ் முதலாவது கொடுப்பனவு மேற்கொள்ளப்படுதல். (2017.12.09)

**2017** கொழும்பு துறைமுகத்தில் 6 மில்லியன் இருபது சம அலகு கொள்கலன் கையாளப்படுதல். (2017.12.20)



# இயக்க மீளாய்வு
# ஆண்டறிக்கை 2017

## பகுதிகளின் செயலாற்றுகை

### இயக்க சேவைகள்

### இயக்க பகுதி

ஜய கொள்கலன் முனையத்தினால் அடையப்பெற்ற கொள்கலன் அளவினை மேலும் விரிவாக்குவதற்கும் 2017 ஆண்டில் அடையப்பெற்ற வினைத்திறன் மட்டத்தினை மேம்படுத்துவதற்கும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் இயக்கப் பகுதியினால் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- சர்வதேச கப்பல் சேவைகளினால் எதிர்பார்க்கப்படும் தரமான சேவைகளை எவ்வாறு வழங்குவது என்பது தொடர்பாகவும் போட்டியான வியாபாரச் சூழ்நிலையில் எவ்வாறு வெற்றியடைவது என்பது தொடர்பிலும் பணியாளர்களுக்கான விழிப்புணர்வுச் செயலமர்வுகள் தொடர்ச்சியாக நடாத்தப்பட்டன. இந்தச் செயலமர்வுகளினால் 2017 மற்றும் இனிவரும் வருடங்களிலும் ஜய கொள்கலன் முனையத்திற்கு முகங்கொடுக்க வேண்டியேற்படும். சவால்களை வெற்றி கொள்வது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

- 2017 ஆண்டில் செயற்திறன் மற்றும் வினைத்திறனான முனைய செயற்பாடுகளுக்கு குழு உணர்வுடன் செயற்படும் ஊழியர்களாக ஆக்கும் நோக்கில் உதவி அலகு கண்காணிப்பாளர்கள், அலுவலக சாரதிகள்,முனைய உதவியாளர்கள் மற்றும் இறப்பர் ரயர்கள் பொருத்தப்பட்ட கென்ட்ரி இயக்குபவர்கள் போன்றோர்களுக்கான விழிப்பூட்டும் நிகழ்ச்சி திட்டங்கள் ஜய கொள்கலன் முனையத்தினால் நடாத்தப்பட்டன.

- நேர விரயத்தைத் தடுப்பதற்கு அதிகாரிகளினது நேரடி கண்காணிப்பின் கீழ் உபகரண பரிமாற்றமானது முனையம்/துறைமேடை/மேடைகளில் மாத்திரம் நடைபெறுகின்றமை மற்றும் கொள்கலன் இயக்க உபகரணங்களை கையாள்பவர்களினால் அவை நடாத்தப்படுகின்றன என்பதனை உறுதிப்படுத்துவதற்கான செயற்பாடு தொடரப்பட்டுள்ளது. குறித்த செயற்பாடு தொடர்ச்சியாக கண்காணிக்கப்படுவதோடு பயனான தன்மை மற்றும் கொள்கலன் பரிமாணத்தை உயர்த்துவதற்கும் இந்த வருடத்தினுள் இது நடைமுறைப்படுத்தப்படும்.

- முனையங்களுக்கிடையிலான பரிமாற்ற (ITT) பரிமாணத்தை மட்டுப்படுத்துவதற்கும் மீள் ஏற்றுமதிகள் மற்றும் உள்நாட்டுக் கப்பற்சரக்குகளுக்கு மேடையை உச்சமட்டத்தில் பயன்படுத்துவதற்கும் மேடையை ஒரு அலகாக கருதி செயற்திறனான மற்றும் பயன்மிக்க மேடைமுகாமைத்துவம் மேற்கொள்ளப்பட்டதன் மூலம் 2017 ஆம் ஆண்டின் முதல் காலாண்டினுள் மேடை திட்டமிடல் தொடர்பில் பாரிய மாற்றம் முனையத்தில் மேற்கொள்ளப்பட்டு தேவைப்படும் சந்தர்ப்பங்களில் மேடை பாரம்தூக்கிகள் ஈடுபடுத்துதலில் முனைய நடவடிக்கைளில் துரிதத் தன்மை தேவையான மட்டத்திற்கு பேணிச் செல்லப்பட்டுள்ளது.

- முனையத்தின் மேடைப்பிரதேசம்,பாதைகள் வழிகள் உள்ளடங்கலாக மேடையின் அடுக்கும் பிரதேசங்களை (வெற்று/பூரண கொள்கலன்) புனர்நிர்மாணம் செய்ததன் மூலம் பிறைமூவர் வண்டிகள்/இறப்பர் ரயர்கள் பொருத்தப்பட்ட கென்ட்ரி பாரம்தூக்கிகளின் இயக்கங்களை மிகவும் சிறந்த முறையில் செய்யமுடிந்ததோடு 2017 ஆண்டின் இரண்டாம் காலாண்டிலிருந்து முனைய செயற்திறன் உயர்த்தப்பட்டுள்ளது.

- பிரதான கப்பல் சேவைகளுக்கான பாரந்தூக்கிகளின் உற்பத்தித் திறன், 2017 ஆண்டில் 27.20 ஆகவும் இது 2016 ஆண்டில் 26.31 ஆகவும் காணப்பட்டது. இது 3.4%னால் வருடாவருடம் அதிகரிக்கிறது. ஊட்ட சேவைகள் (ஒரு மணித்தியாலத்திற்கான கொள்கலன் இடப்பெயர்வு) 2017 ஆண்டில் 24.28 ஆகவும்

2016 இல் 22.21 ஆகவும் பதியப்பட்டுள்ளது இது 9.3% வளர்ச்சியினை வருடாவருடம் பதிவுசெய்துள்ளது.

- வேறுபட்ட துறைகளின் முக்கிய கப்பல் சேவைகளிலிருந்து (MSC, EMC, ZIM, HHM, KMT) வினைத்திறனான தொடர்பினைப் பாதுகாத்துக் கொள்ளும் நோக்குடன் மேலதிக வருமானத்தினை ஈட்டுவதற்கு 2017 ஆண்டில் வெற்று கொள்கலன் குழாம் இயக்குனர்கள் அறிமுகம் செய்யப்பட்டனர்.

- பெண் பாரந்தூக்கி இயக்குனர்கள் பகல் நேரத்தில் துறைமுக முனைய மேடையில் இறப்பர் டயர்கள் பொருத்தப்பட்ட கென்ட்ரிகளை இயக்கும் வேலையில் ஈடுபடுத்தப்பட்டனர். அவர்களது திறமை மற்றும் சேவையின் தரத்தினை மேம்படுத்துவதற்கான பயிற்சிகள், விழிப்புணர்வுச் செயலமர்வுகள் வெற்றிகரமாக நடாத்தப்பட்டன.

- மரபு ரீதியான முனையங்களில் தரை இறக்கப்பட்ட மொத்த சரக்குக் பரிமாணம் 2016 ஆண்டில் 8,089,000 தொன்னில் இருந்து 2017 இல் 9,074,000 தொன்னாக அதிகரித்துள்ளது. இது வருடாவருட 11% அதிகரிப்பாகும்.

- திரவநிலை மொத்த சரக்கு ஏற்றுதல்கள் 2016 ஆண்டில் 92,000 தொன்னில் இருந்து 2017 ஆண்டில் இது 106,000 ஆக அதிகரித்துள்ளது. இது வருடாவருடம் 15.2 வீதமாக அதிகரித்துள்ளது. மொத்த தொகைபிரிப்பு சரக்குகளின் ஏற்றுதல்கள் 2016 ஆண்டில் 16,000 தொன்னில் இருந்து 2017 ஆண்டில் 29,000 தொன்னாகவும் அதிகரித்ததுள்ளது. இது வருடாவருட 81.3% அதிகரிப்பாகும்.

## சேவை வழங்கல் பகுதி

துறைமுகத்திற்கு வரும் குறை கொள்கலன் (LCL) நிறை கொள்கலன், (FCL), தொகைபிரிப்பு பொதிகள் மற்றும் மோட்டார் வாகனங்கள் உள்ளடங்கலாக துறைமுகத்திற்கு கொண்டு வரப்படும் அனைத்து கப்பற்சரக்குகளின் வினியோகம் மற்றும் வாடிக்கையாளர்களுக்கான கப்பற்சரக்குகள் தொடர்புபட்ட சேவைகளை வழங்குதல் சேவை வழங்கல் பகுதியின் முக்கியமான தொழிற்பாடாகும்

2017 ஆண்டிலும் 24 மணி பூராகவும் சேவைகள் வழங்குதலின் மூலம் பூரண கொள்கலன்களின் 191,966 இருபது சம அலகுகள் பாவனையாளர் சேவை நிலையம் ஊடாக வினியோகிக்கப்பட்டதன் மூலம் ரூபா 23,411.84 மில்லியன் வருமானம் பெறப்பட்டுள்ளது. வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் சேவைகளை விரிவுபடுத்துவதற்கும் ஆவண நடவடிக்கைகளுக்கு செல்லும் காலத்தை குறைப்பதற்கும் கப்பற்சரக்கு முகாமைத்துவ தொகுதி வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நிறை கொள்கலன்கள் 27,740 இருபது சம அலகுகளும் மீள்ஏற்றுமதி கொள்கலன்கள் 740 இருபது சம அலகுகளும் கையாளப்பட்டுள்ளன. இதில் 8,164 இருபது சம அலகுகள் பொதுவான/ஆபத்தான கப்பற்சரக்குகள் ஆகும். தரைஇறக்கல் கையாளல்களின் பேலியகொட கொள்கலன் சரக்கு நிலையத்தில் தனியார் பொதிகளும் கையாளப்பட்டுள்ளன. உள்நாட்டு, மீள் ஏற்றுமதி, பன்னாட்டு கப்பற்சரக்கு ஒன்று திரட்டல் மற்றும் விசேட கப்பற்சரக்குகளுக்கு துறைமுக களஞ்சியசாலைகளில் இடவசதிகள் வழங்கப்பட்டன. குறை கொள்கலன் தரைஇறக்கல் மற்றும் ஏற்றும் கட்டணங்கள் மூலம் முறையே 205.1 மற்றும் 2,440.5 மில்லியன் ரூபா ஈட்டப்பட்டுள்ளது. பன்னாட்டு கப்பற்சரக்குகளுக்கான ஒன்றுதிரட்டல் மூலம் 173.82 மில்லியன் ரூபாவும் ஈட்டப்பட்டுள்ளது. மேலும், வெற்றுக் கொள்கலன் தாமதக் கட்டணம் மற்றும், கொள்கலனின் நிலைமாற்றத்திற்கான கட்டணம் மூலம் 13 மில்லியன் ரூபா வருமானமும் பெறப்பட்டுள்ளது.

கப்பற் சரக்கு நிலையம் ( CFS -V ) புனரமைக்கப்பட்டதன் மூலம் பிணைமுறி பண்டகசாலை மற்றும் துறைமுக வர்த்தக கப்பற்சரக்குகளுக்கான பண்டகசாலை வசதிகள் அதிகரிக்கப்பட்டு இணைப்பு வர்த்தகத்தின் கேள்விகளும் அதிகரித்தன. இதன்மூலம் 77.35 மில்லியன் ரூபா மொத்த வருமானம் பெறப்பட்டுள்ளது.

கைவிடப்பட்ட சரக்குகளை அகற்றுவதற்காக நடாத்தப்பட்ட பொது விலைக்கோரல் மற்றும் ஏல விற்பனை மூலம் மொத்தமாக 131.69 மில்லியன் ரூபா வருமானமும் ஒன்றுசேர்க்கப்பட்டுள்ளது. அதேநேரம் இலங்கை துறைமுக முகாமைத்துவ கம்பனி மூலம் கழிவு இரும்பு, அகற்றப்பட்ட எண்ணெய், பாவிக்கப்பட்ட டயர்கள் போன்றவற்றின் விற்பனை மூலம் மேலதிகமாக 8.7 மில்லியன் ரூபா வருமானமும் பெறப்பட்டுள்ளது.

கடந்த வருடத்தில் சரக்கு அகற்றிச் செல்லல் முகவர்களுக்கு 243 புதிய அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டதுடன் 1046 அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிக்கப்பட்டதன் மூலம் ஒட்டு மொத்தமாக 1289 அனுமதிப்பத்திரங்கள் தொடர்பில் 25.33 மில்லியன் ரூபா வருமானம் பெறப்பட்டுள்ளது. A மற்றும் B வகையின் வாப்பு இலிகிதர்களுக்கு அடையாள அட்டை வழங்கல், புதுப்பித்தல் மூலம் 8.67 மில்லியன் ரூபா மொத்த வருமானமும் பெறப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட மொத்த A அட்டைகளின் எண்ணிக்கை 2631 ஆகவும் B அட்டைகளின் எண்ணிக்கை 302 ஆகவும் பதியப்பட்டுள்ளது.

2017 இல் சேவை வழங்கல்பகுதியினால் வழங்கப்பட்ட சேவைகளிலிருந்து ஈட்டப்பட்டுள்ள மொத்த வருமானம் 5,691.37 மில்லியன் ரூபா ஆகும்.

2017 இல் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சின் மூலம் கொள்கலன் பெறுபவர்களின் வாடகையினை நீக்கக்கோரி 59 விண்ணப்பங்கள் முன்வைக்கப்பட்டு அவற்றில் 22 விண்ணப்பங்கள் பரிந்துரை செய்யப்பட்டதுடன் 16 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன மிகுதியானவற்றிற்கு துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சினால் தீர்வுகள் வழங்கப்பட வேண்டியுள்ளன.

குறை கொள்கலன் ஏற்றுதல்களை வினியோகிப்பதன் ஆவணங்கள் இலத்திரனியல் முறையில் வினியோகிப்பதற்கான வசதிகள் விரிவுபடுத்தப்பட்டு 2017 ஆம் ஆண்டினுள் கப்பற்சரக்குகள் நேரடியாக வினியோகிக்கப்பட்டுள்ளன. 2018 இல் இது முழுமையாக அமுல்படுத்தப்படும்.

**2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள மேம்படுத்துதல்கள் மற்றும் அபிவிருத்திகள்**

- மிகுந்த உற்பத்திதிறன், செயற்திறன் வாய்ந்த சேவைகளை வழங்கும் நோக்குடன் பண்டாரநாயக்க துறைமேடையின் I, II, III மற்றும் IV பண்டசாலைகள் சேவை வழங்கல் பகுதியின் கீழ் கொண்டுவரப்பட்டன.

- சிறந்த செலவு குறைந்த செயற்திறனான வாகனக் கொள்கலன் மீள் அடுக்கும் செயற்பாட்டிற்கு சமர்ஹில் வாகன முனையம், ஐக்கிய கொள்கலன் முனையத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

- இலங்கை துறைமுக அதிகாரசபை வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையினை வழங்கும் நோக்குடன் வாடிக்கையாளர் முறைப்பாடுகள் மற்றும் குறைகள் தொடர்பில் செயற்படுவதற்கு கனல் முனையில் வாடிக்கையாளர் சேவை நிலையம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

- தகவல் முறைமைப் பகுதி மற்றும் வ/ப எக்செஸ் கம்பனி குழுவுடன் இணைந்து குறை கொள்கலன் கையாளலுக்கான நெவிஸ் தொகுதி ஒன்றினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- சரக்குகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்த பண்டாரநாயக்க துறைமேடை பண்டசாலையில் அவதானிப்பு கமரா முறைமை பொருத்தப்பட்டு வருகின்றது.

- முழு பண்டசாலையினதும் கட்டுமான நிறைவின் பின்னர் கப்பற் சரக்கு நிலையம்-I இன் களஞ்சிய முகாமைத்துவ முறைமை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

- ஐக்கிய கொள்கலன் முனையத்திற்கு அருகாமையில் முழுமையான வசதிகளைக் கொண்ட சேவை வழங்கல் நிலையமொன்றினை நிர்மாணிப்பதற்கான ஆரம்ப பணிகளை மேற்கொள்ளுதல்.

## வழிகாட்டல் சேவைகள் பகுதி

மீளாவிற்குட்படும் வருடத்தில் கொழும்பு துறைமுகத்திற்கு வருகை தந்த அனைத்து வகையான கலங்களுக்கும் கிழமையில் ஒவ்வொரு நாளும் 24 மணி பூராகவும் வழிகாட்டல் சேவைகள் வழங்கப்பட்டன. அவை பின்வருமாறு,

| கப்பலின் வகைகள் | கப்பல்களின் எண்ணிக்கை | நோக்கம் | கப்பல்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| கொள்கலன | 3,683 | கப்.எண்.வழ | 44 |
| மரபு ரீதியான | 56 | பழுது பார்த்தல | 58 |
| உலர்ந்த மொத்தம | 157 | பயணிகள் | 44 |
| திரவ மொத்தம | 210 | ஏனைய சேவைகள் | 8 |
| ரோல் ஒன் ரோல் ஒப | 67 | | |
| ஏனைய சரக்குகள | 02 | | |
| **மொத்தம்** | | | **4,329** |

### இழுவைக் கல அதிபர் பிரிவு ( CMT)

மீளாவிற்குட்படும் ஆண்டினுள் பிரதான இழுவைக் கல அதிபர் பிரிவானது வினைத்திறனான மற்றும் தொடர்ச்சியான இழுவைக்கல சேவைகளை வழங்கி திருப்திகரமாக செயற்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக பின்வரும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன:

- கப்பல்களை நகர்தி நங்கூரமிடுவதற்கு இயக்க இழுவைக் கலங்களை வழங்குதல்.

- வகைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப கலங்களின் தட்டு (Deck) பழுதுபார்த்தல், இழுவைக்கலங்களின் பராமரிப்பு வேலைகளை முன்னெடுத்துச் செல்லல்.

- கப்பல்களை கட்டி வைக்கப் பயன்படுத்தப்பட்டு அகற்றப்படும் கயிறுகளில் இழுவைக் கலங்களுக்கான கயிறு விரிப்புக்களையும் வடங்களையும் உற்பத்தி செய்தல் மற்றும் இழுவைக் கலங்களுக்கும் வேறு பிரிவுகளுக்கும் கன்வஸ் விரிப்புகள் செய்தல்.

தினசரி கப்பல் நகர்வுகளுக்காகத் தேவையானளவு நங்கூரமிடல் இழுவைகலங்கள் வழங்கப்பட்டு அவசர சந்தர்ப்பங்களுக்கு ஒரு இழுவைக்கலம் காத்திருப்பு சேவையில் வைக்கப்பட்டிருந்தது.

### இழுவைக்கலங்களின் உதவியோடு கையாளப்பட்ட கப்பல்களின் மொத்த எண்ணிக்கை

நங்கூரமிடல் கலங்களினால் செய்யப்பட்ட மொத்த நகர்வுகளின் எண்ணிக்கை 18,684 ஆகும். அவற்றின் விபரங்கள் வருமாறு:

| இழுவைக் கலத்தின் பெயர் | கையாளல்களின் எண்ணிக்கை |
|---|---|
| MT ராஜா | 484 |
| MT நந்தமித்ரா (55 BP) | 3,217 |
| MT சுரனிமல(65 BP) | 2,983 |
| MT கோட்டைம்பர (65 BP) | 2,194 |
| MT விஜயபாகு | 1,700 |
| MT பரண – II | 43 |
| MT அய்ராவண | 931 |
| MT வருண | 1,382 |
| MT இராவண | 2,893 |
| MT பண்டுகாபய | 2,857 |
| **மொத்தம்** | **18,684** |

**வருமான விபரங்கள் – இழுவைக் கல சேவைகள் (கொழும்பு துறைமுகம்)**

| வருடம் | மில்லியன் ரூபா |
|---|---|
| 2016 உண்மையான | 863 |
| 2017 திருத்தப்பட்ட | 1,332 |
| 2018 முன்மொழியப்பட்டுள்ள | 1,236 |

**தலைமைப் பொறியியல் அதிகாரியின் பிரிவு**

2017 ஆண்டில் அனைத்து இழுவைக்கலங்கள், நங்கூரமிடல் கலங்களின் இயக்கம் மற்றும் பழுதுபார்ப்புத் தேவைகளுக்கு போதுமானளவு வேலையாட்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

கலங்களை இழுத்துச் செல்வதற்கும் வழிகாட்டல் மற்றும் இயக்கங்களை மேற்கொள்வதற்கும் தேவையான கலங்களை அன்றாடம் ஈடுபடுத்தியதோடு அதற்கு மேலதிகமாக இப்பிரிவின் பணியாளர்களினால் வழமையான பணிகளும் நிறைவேற்றப்பட்டன.

**துறைமுகத் தீயணைப்புப் படை**

2017 வருடத்தில் துறைமுகத் தீயணைப்புப் படையினால் வினைத்திறனான சேவைகள் வழங்கப்பட்டு தீ தொடர்பான உள்நாட்டு பாதுகாப்பு நியமங்கள் பேணப்பட்டு தீ அணைத்தல் மற்றும் வேறு அவசர சந்தர்ப்பங்களின் பாதிப்பான தாக்கங்கள் குறைத்துக் கொள்ளப்படுதலிலான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. மீளாய்வுக்குட்படும் ஆண்டினுள் துறைமுக தீயணைப்பு பிரிவினால் பின்வரும் சேவைகளும் வழங்கப்பட்டன.

துறைமுகத் தீயணைப்புப் படையினால் மீளாய்வுக்குட்படும் வருடத்தில் வழங்கப்பட்ட சேவைகளின் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| தீ தொடர்பான அழைப்புகளுக்கு பதிலளித்தல் | 30 |
| கடற்படை ஒத்திகைச் சோதனை அழைப்பு | 02 |
| அவசர அழைப்புக்கள் | 23 |
| எண்ணெய்க் தாங்கிகளுக்கான காத்திருப்புக் கடமை | 191 |

| | |
|---|---|
| எரிவாயுத் தாங்கிகளுக்கான காத்திருப்புக் கடமை | 44 |
| கப்பல்களின் வெப்ப வேலைகளுக்கான காத்திருப்புக் கடமை | 837 |
| ஆபத்தான கப்பற்சரக்குகள் கையாளலுக்கான காத்திருப்புக் கடமை | 01 |
| துறைமேடை/களஞ்சியசாலைகள் போன்றவற்றை கழுவுவதற்கான நீர்விநியோகம் | 26 |
| நீர் இறைத்தல் | 02 |
| எண்ணெய் மாசடைதலைக் கட்டுப்படுத்தும் பணிகள் | 14 |
| எண்ணெய்க் கப்பல்களுக்கான பரீட்சிப்பு விஜயங்கள் | 690 |
| தீ அணைப்பதற்கு இழுவைக் கலங்களுக்கு நீர் பௌசர்களை வழங்கல் | 126 |
| அவசர சந்தர்ப்பங்களின் போது ஆட்களை வெளியேற்றும் ஒத்திகைகள் | 12 |

**தீப் பாதுகாப்பு நடவடிக்கைகள்**

- அனைத்து கட்டடங்கள், பாரந்தூக்கிகள், கலங்கள், பிறைமூவர் வண்டிகள் போன்றவற்றின் மீதான தீப்பாதுகாப்பு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.
- கொழும்பு மற்றும் காலி துறைமுகங்களில் நிறுவப்பட்டுள்ள தீ உபகரணங்கள் வருடத்திற்கு இருமுறையும் வெளிச்சவீடுகள் மற்றும் சுற்றுலா விடுதிகளில் நிறுவப்பட்டுள்ள தீ உபகரணங்கள் வருடத்துக்கு ஒரு முறையும் பரிசோதிக்கப்பட்டன.
- மொத்தமாக 3,206 தீ அணைப்புக்கருவிகளும் கடந்த வருடத்தில் பரிசோதிக்கப்பட்டன.
- டொக்யாட் தீ அலகுடன் இணைந்து கொழும்பு டொக்யாட்டில் கூட்டுத் தீ ஒத்திகை நடாத்தப்பட்டது.
- கொழும்பு தீயணைப்புப் படையுடன் இணைந்து எண்ணெய் களஞ்சியசாலையில் கூட்டுத் தீ ஒத்திகை நடாத்தப்பட்டது.
- கடல் மாசடைவு தடுப்பதற்கான தேசிய திட்டம் (NOS COP) முன்னெடுக்கப்பட்டு துறைமுக எண்ணெய் சிதறலின் மாதிரி ஏற்படுத்தப்பட்டு கடல் மாசடைவின் கூட்டு ஒத்திகை மேற்கொள்ளப்பட்டது..
- எஸ்.ஏ.ஜீ.ரீ ஊழியர்களுடன் இணைந்து கூட்டுத் தீ பயிற்சி மேற்கொள்ளப்பட்டது.
- காஸ் தாங்கி கப்பல் ஆளணியுடன் இணைந்து காஸ் தாங்கி கப்பல்களில் கூட்டுத் தீ பயிற்சி வழங்கப்பட்டது.

2017 ஆண்டில் துறைமுக தீயணைப்புப் படையினால் ஈட்டப்பட்ட வருமானங்களின் விபரம் பின்வருமாறு:

| **விடயம்** | **அமெரிக்க டொலர்** | **ரூபா** |
|---|---|---|
| தீ அழைப்புக்கள் | 59,424 | 3,861,500 |
| எண்ணெய்த் தாங்கி கப்பல்களுக்கான காத்திருப்புக் கடமை | 249,597 | |

| விடயம் | அமெரிக்க டொலர் | ரூபா |
|---|---|---|
| எரிவாயுத் தாங்கி கப்பல்களுக்கான காத்திருப்புக் கடமை | 61,780 | |
| அதிகூடிய வெப்ப வேலைகளுக்கான கட்டணம் | 50,613 | |
| ஆபத்தான கப்பற்சரக்குகளுக்கான காத்திருப்புக் கடமை | 38,440 | 126,000 |
| பரீட்சிப்பு விஜயங்களுக்கான அறவீடுகள் | 8,240 | |
| எண்ணெய் மாசடைதல் கட்டுப்பாட்டிற்கான அறவீடுகள் | 4,680 | 694,500 |
| அவசர நிலைமைகள் | 1,440 | 20,000 |
| மொத்த வருமானம் | **474,214** | **4,702,000** |

### துறைமுக காப்புப் பிரிவு (Harbour Safety Section)

துறைமுகத்தில் கையாளப்படும் அனைத்து வகையான ஆபத்தான கப்பல் சரக்குகளைக் கண்காணிப்பதுடன் அதனைப் பாதுகாப்பாகக் கையாள்வதற்கான நடைமுறைகள் எப்போதும் செயற்பாட்டிலுள்ளதென்பதனை இப் பிரிவு உறுதிப்படுத்துகிறது.

துறைமுக தீயணைப்புப் படையின் உதவியுடன் சில இரசாயன பொருட்களின் சிதறல்கள், தீச் சம்பவங்கள் போன்றன கட்டுப்படுத்தப்பட்டன. ஆபத்தான சரக்குகள் உள்ளடங்கலாக பண்டசாலைகளினதும் கொள்கலன் பரீட்சிப்புப் பணிகள் பரிசோதித்தல் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டன.

வெப்ப வேலைக்கான அனுமதி வழங்கப் படுவதற்கு முன்னர் களப் பரிசோதிப்பு நடாத்தப்பட்டும், அதிகாரமளிக்கப்படாத வெப்ப வேலை சம்பவங்கள் கண்டுபிடிக்கப்பட்டும் நிறுத்தப்பட்டன. கடல் மாசடைதல் தொடர்பான பரிசோதிப்புக்களும் நடாத்தப்பட்டன. தனிநபர் மற்றும் கடல் சூழல் சம்பந்தமான அவசர நிலைமைகள் விசாரணை செய்யப்பட்டு பகுப்பாய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன.

- 2017 ஆண்டில் கொழும்பு துறைமுகத்தில் 347,016.913 மெ.தொன் ஆபத்தான சரக்குகள் கையாளப்பட்டுள்ளன.

- 34,448 ஆபத்தான மீள் ஏற்றுமதி சரக்குக் கொள்கலன்கள் கையாளப்பட்டுள்ளன.

- இயக்கப் பகுதியின் வேலையாட்களுக்கு நடாத்தப்பட்ட பயிற்சி வேலைத்திட்டங்கள் மூலம் துறைமுகத்தினுள் ஆபத்தான சரக்குகளைக் கையாளல், களஞ்சியப்படுத்தல், போக்குவரத்து செய்தல் போன்றவற்றின் பாதுகாப்பு நடைமுறைகளும் அறிமுகப்படுத்தப்பட்டன.

- உயர் வெடிக்கும் தன்மையுள்ள (GPIE) 14,750 மெ.தொன் மற்றும் வெடிக்கும் தன்மையுள்ள 9,604.546 மெ.தொன் மூலகங்களும் (GP IAE/IIE) கையாளப்பட்டுள்ளன.

- ஜய கொள்கலன் முனையத்தினது ஊழியர்களினதும் கப்பலோட்ட பகுதியின் கலங்களை கட்டிவைக்கும் கடமையில் பணிபுரியும் ஊழியர்களினதும் தனி நபர் பாதுகாப்பு தொடர்பில் துறைமுக உதவி தடுப்பு பரிசோதகர்களினது உதவியோடு மேற்பார்வை செய்யப்பட்டு தனி நபர்பாதுகாப்பு உபகரணங்களின் பாவனை தொடர்பிலான அறிவூட்டலும் மேம்படுத்தப்பட்டது.

கொழும்பு துறைமுகத்துக்கு வருகை தந்த 314 வேறுபட்ட வகையான எண்ணெய் தாங்கி கப்பல்கள் பின்வருமாறு விடுவிக்கப்பட்டன.:

| சரக்கின் வகை | அளவு (மெ.தொன்) |
|---|---|
| திரவநிலை பெற்றோலிய எரிவாயு | 384,912.179 |
| காஸ் எண்ணைய்/ஜெட்களுக்கான A I கெசோலின்/மண்ணெண்ணெய் | 3,159,572.857 |
| மசகு எண்ணெய் | 1,594,813.000 |
| எரிபொருள் | 955,500.236 |
| உராய்வு நீக்கி எண்ணெய் | 24,203.387 |

**கரையோர வெளிச்ச வீட்டுப் பிரிவு**

சர்வதேச கப்பல் பாதைகள் ஊடாக விரிந்து காணப்படும் மேற்கு மற்றும் தெற்கு கரையோரம் நெடுகே அமைக்கப்பட்டுள்ள வெளிச்ச வீடுகள் முறையாக பராமரித்து செல்லப்பட்டன.

**பிரவேச கால்வாய்களின் வெளிச்ச மிதப்பிகள்**

வெளிச்ச மிதப்பிகள் முறையாகப் பரிசோதிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டன.

**வருமானம் - வெளிச்சக் கட்டணம்– (அனைத்து துறைமுகங்களினதும்)**

| | 2015<br>உண்மையான<br>ரூபா. மில் | 2016<br>உண்மையான<br>ரூபா. மில் | 2017<br>வரவு செ.தி<br>(திருத்தப்பட்ட)<br>ரூபா. மில் |
|---|---|---|---|
| வெளிச்சக் கட்டண வருமாணம | 779 | 1,009 | 1,416 |

**துறைமுக படகுப் பிரிவு**

கொழும்பு துறைமுகத்திற்கு வரும் கலங்களை பாதுகாப்பாக நங்கூரமிடல், நங்கூரத்திலிருந்து விடுவித்தல் போன்றவற்றிற்கு உதவுவதை இலகுபடுத்துவதற்கு வழிகாட்டி கலங்களுக்கான நங்கூரமிடும் குழுக்களை வழங்குதல், தீவின் அலைதாங்கி,தென் மேற்கு அலைதாங்கி போன்றவற்றிற்கு வேலையாட்கள் குழுக்களை அனுப்புதல், துறைமுக நீரினை சுத்தமாக வைத்திருத்தல், ஜிறாப் பாரம்தூக்கி மூலம் பாரமான நிறைகளை தூக்குதல் போன்ற பணிகளைச் செய்வது துறைமுக கலப்பிரிவின் பணிகளாகும். அத்தோடு வழிகாட்டி மற்றும் நங்கூர கலங்களினது பராமரிப்புகளும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன.

**நீரியல் அளவீட்டுப் பிரிவு**

இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நிர்வகிக்கப்படும் அனைத்து துறைமுகங்களினதும் நீரியல் ஆய்வுகள் போன்று துறைமுகத்தின் சம்பந்தப்பட்ட பகுதிகளினால் விடுக்கப்படும் வேண்டுகோள்களுக்கு ஏற்ப நடைபெற்ற அனைத்து காணிகளின் அளவீட்டுப்பணிகள் நில அளவையாளர்களினால் பின்வருமாறு நிறைவேற்றப்பட்டன.

**கொழும்பு துறைமுகம்**

- உட்பிரவேச கால்வாயின் ஆழம் அளவிடுதல்.

- தென் துறைமுக ஆழம் அளவிடுதல்.
- பிரதான உட்பிரவேச கால்வாயின் ஆழம் அளவிடுதல்.
- உள்ளக துறைமுகத்தின் தடாகம் மற்றும் நங்கூரத்தளங்களினது ஆழம் அளவிடுதல்.
- உட்பிரவேச கால்வாயின் மிதப்பிகளின் அமைவிடம் தொடர்பான அளவீட்டுப்பணிகள்.
- கொழும்பு துறைமுக வரைபடத்தின் மீளாய்வு வேலைகள்.
- பாதை விரிவாக்கல் செய்திட்டத்தின் துறைமுக உள்ளகப் பாதைகளை அளவிடல் மற்றும் மட்டமாக்கல் வேலைகள்.
- குத்தகை ஒப்பந்தத்திற்குத் தேவையான அளவிடல் மற்றும் திட்டமிடல் வேலைகள்.

**காலி துறைமுகம்**

- ஓத ஏற்ற இறக்க காலநிலை தரவு நிலையம் அமைத்தல்.
- ‘‘பிம்சவிய’’ மற்றும் அதோடு சம்பந்தப்பட்ட குழுக் கூட்டங்களில் பங்குகொள்ளல்.
- உல்லாச படகுத்தள பிரதேசத்தின் ஆழம் அளவிடுதல்.
- குத்தகை ஒப்பந்தத்திற்குத் தேவையான அளவிடல் மற்றும் திட்டமிடல் வேலைகள்.

**திருகோணமலை துறைமுகம்**

- குத்தகைத் திட்டம் தயாரிப்பு தொடர்பான அளவீடுகள்.
- ஏற்ற இறக்க ஆய்வுத் தரவு நிலையத்தினைக் கண்காணித்தல் மற்றும் பேணிப்பாதுகாத்தல்.
- பர்மா முகாம் சுற்றியுள்ள பிரதேசத்தின் ஆழ ஆய்வுகள் மற்றும் இடத்தின் உயரம் அளவிடுதல்.
- அத்துமீறப்பட்ட காணிகளின் அவசர அளவீடு.
- உத்தேச புகையிரதப் பாதையின் குறுக்கு அமைவு, மட்டமாக்கல் மற்றும் விபரமான ஆய்வுகள்.
- அஷ்ரப் துறைமேடையின் மட்டமாக்கல் வேலைகள்.

**ஹம்பாந்தோட்டை துறைமுகம்**

- உட்பிரவேச கால்வாயின் அமைவிடம் தொடர்பான அளவீட்டுப்பணிகள்.
- முதலீட்டாளர்களுக்கான குத்தகைத் திட்டத் தயாரிப்பு தொடர்பான அளவீடுகள்.
- கட்டம் 11 இன் கீழ் மீள்குடியேற்றுதல்- நில அளவையியல் திணைக்களத்தின் மேற்பார்வையில் செய்யப்படும் அளவீட்டு வேலைகள்.
- செய்திட்டப் பொறியியலாளர்களினால் விபரிக்கப்பட்டிருக்கும் ஏனைய சம்பந்தப்பட்ட அளவீட்டுப்பணிகள்.

**காங்கேசன்துறை துறைமுகம்**

- துறைமுக இயக்கத்திற்கான காணிகளை அடையாளம் காணுதல்.
- புதிய துறைமேடையின் நீரியல் அளவீடுகள் மற்றும் மட்டமாக்கல் வேலைகள்.

**கடல் மைல் பிரிவு**

கப்பல்களுக்கான பொருட்களை வழங்குவோர், லான்ச் இயக்குபவர்கள், கடலக அளவையாளர்கள், சிறிய மற்றும் பாரிய அளவிலான வேலைத்தளங்கள், பழுதுபார்த்தல் வேலைகள், எண்ணெய் மற்றும் எண்ணெய் தோய்ந்த கழிவகற்றும் சேவைகளுக்கான வருடாந்த அனுமதிப் பத்திரம் வழங்கல் மற்றும் பதிவு செய்தல் போன்ற வேலைகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன.

| அனுமதிப்பத்திரத்தின் பெயர் | வழங்கப்பட்ட எண்ணிக்கை | வருமானம |
|---|---|---|
| கப்பல்களை பழுதுபார்க்கும் அனுமதிப்பத்திரம் | 145 | 12,781,742.93 |
| கப்பல் கட்டும் தள (DockYard) அனுமதிப்பத்திரம் | 69 | 2,872,888.61 |
| அளவீட்டு அனுமதிப்பத்திரம் | 48 | 3,343,764.36 |
| கப்பல்களுக்கான பொருட்கள் | 97 | 8,370,122.74 |
| படகு அனுமதிப்பத்திரம் | 48 | 4,380,187.64 |
| எஸ்.ஏ.ஜீ.ரீ மற்றும் ஏனைய அனுமதிப்பத்திரம | 10 | 446,056.08 |
| மொத்தம் | **417** | **32,194,762.36** |

## அபிவிருத்தி செய்திட்டங்கள்

## திட்டமிடல் மற்றும் அபிவிருத்திப் பகுதி

**கிழக்கு கொள்கலன் முனையம் (ECT) – கட்டம் 01**

**கொழும்பு துறைமுக விரிவாக்கல் செய்திட்டம்**

**கருத்திட்டம் தொடர்பான விபரங்கள்**

கிழக்கு கொள்கலன் முனையம் 2.4 இருபது சம அலகு வருடாந்த பரிமானம் மற்றும் – 18 மீட்டர் ஆழத்துடையதும் 1200 மீட்டர் நீளமான துறைமேடை சுவரையும் கொண்டுள்ள தொற்கு துறைமுகத்தின் ஆழத்தில் கூடிய முனையம் கிழக்கு கொள்கலன் முனையம் ஆகும். அபிவிருத்தி செய்து கையாள்வதற்கு நிர்மாணித்து, இயக்கம் மேற்கொண்டு, ஒப்படைக்கும் (BOT) சலுகை ரீதியின் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு இலங்கை துறைமுக அதிகார சபை எதிர்பார்க்கின்றது.ஏற்கனவே கிழக்கு கொள்கலன் முனைய துறைமேடையில் 440 மீட்டர் மற்றும் அதனை அண்டிய முனையப்பிரதேசம் தொடர்புபடும் வசதிகளோடு இலங்கை துறைமுக அதிகார சபையினால் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.செய்திட்டத்தின் சேவையான பெறுகையின் பணிகளுக்கு இலங்கை துறைமுக அதிகார சபையின் ஆலோசகராக ஆசிய அபிவிருத்தி வங்கி நியமிக்கப்பட்டுள்ளது. .

**தற்போதைய முன்னேற்றம்**

“அபிப்பிராயம் தெரிவித்தல்” (Expression of Interest) பகிரங்கப்படுத்தப்படுதலோடு செய்திட்டத்தின் பூர்வாங்க தகைமைத் தெரிவு செயற்பாடு 2016 யூன் 06 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2016 செப்டெம்பர் 20 ஆம் திகதி நிறைவு செய்யப்பட்டது.அபிப்பிராயம் தெரிவித்தலின் மதீப்பீடு ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியோடு நிறைவு செய்யப்பட்டு தீர்மானத்துக்காக முன்வைக்கப்பட்டுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியினால் தயாரிக்கப்பட்ட சலுகை உடன் படிக்கையின் முதலாவது வரைவு இலங்கை துறைமுக அதிகார சபையினால் மீளய்வு செய்யப்பட்டு அது தொடர்பிலான கருத்துரைத்தல்கள் தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**காலி துறைமுக அபிவிருத்தி செய்திட்டம் கட்டம் - 01**

**செய்திட்டம் தொடர்பான விபரங்கள்**

வடிவமைப்பு பணிகளை மேற்கொள்வதற்கு ஒரியன்டல் கன்சல்டன் கம்பனியுடனான (OCC) புதியதாக்கப்பட்டுள்ள உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. அலைதாங்கியை நிர்மாணிக்கும்

பணிகள் எஞ்சியுள்ள JICA நிதி பயன்பாட்டில் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதோடு கட்டம் II இல் அரச -- தனியார் கூட்டுரிமையின் மீது (PPP) பல்பணி நங்கூரத்தளமொன்று நிறுவப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. செய்திட்டம் தொடர்பில் அங்கீகரிக்கப்பட்டுள்ள கடன் தொகை ஜப்பான் யென் 14,495 மில்லியன் ஆகும். செய்திட்டத்திற்கு யுனேஸ்கோவின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது.

**தற்போதைய முன்னேற்றம்**

தற்போது எஞ்சியுள்ள நிதியைப் பயன்படுத்தி செய்திட்டத்தின் ஒரு பகுதியை நடைமுறைப்படுத்துதன் மூலம் குறித்த முதலீட்டினால் எதிர்பார்க்கப்படும் இடைக்கால பெறுபேறுகளை பெற முடியாதிருக்கும் என்பது இலங்கை அரசின் கருத்தாகும்.எனவே வெளிநாட்டு வள திணைக்களம் மற்றும் Jick நிறுவனம் மேற்குறித்த கடன் தொகையை முடிவுறுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

**திருகோணமலை துறைமுக அபிவிருத்தி செய்திட்டம்**

**செய்திட்டம் தொடர்பான விபரங்கள்**

திருகோணமலை எண்ணக்கரு வடிவில் அமைந்த பிரதான திட்டம் குறுகிய கால மற்றும் நீண்ட கால செய்திட்டப் பிரேரணைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது. ‘‘பிரேரணைகளுக்கான அழைப்பு’’ மூலம் தெரிவு செய்ய்யப்பட்டு பரிந்துரைக்கப்பட்ட ஒசன் பிக் மற்றும் டிமோ கம்பனியின் முதலீட்டுப் பிரேரணைகள் ‘‘பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவை குழுவில் ‘‘முன்வைக்கப்பட்டு மீன் வளர்ப்புக்கான பிரேரணை‘‘ செயலாளர்களின் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை துறைமுகத்தில் இருந்து நிலக்கரி மற்றும் கிலிங்கர் புகையிரதம் மூலம் போக்குவரத்து செய்வது பிரதான செய்திட்டம் ஒன்றாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இலங்கை துறைமுக அதிகார சபை, திருகோணமலை மாவட்ட செயலாளர் மற்றும் புகையிரத திணைக்களமும் ஒன்றிணைந்து நிர்மாணிக்கப்பட வேண்டிய புகையிரத பாதையை அடையாளம் காணுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புகையிரத திணைக்களத்தினால் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இது முடிவடைந்ததன் பின்னர் எதிர்கால உட்பிரவேச பாதை மற்றும் மீள் குடியேற்றும் திட்டம் இலங்கை துறைமுக அதிகார சபையினால் தயாரிக்கப்படும்.

திருகோணமலை துறைமுகத்தில் புதிய களஞ்சியசாலை ஒன்றின் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு அண்மையில் உடைத்து அகற்றப்பட்ட கொழும்பு துறைமுகத்தின் கொள்கலன் கப்பற்சரக்கு நிலையம் – 02 இன் கூரை அமைப்பு மற்றும் தூண்கள் உகந்த முறையில் மாற்றியமைத்து மீண்டும் அவற்றை பயன் படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. திருகோணமலை துறைமுகத்தின் களஞ்சியசாலை – இல :02 மற்றும் – 03 அமைந்துள்ள அதே இடத்திலேயே புதிய களஞ்சியசாலை அமைக்கப்படுவதுடன் நிலக்கரி, கிலிங்கர் மற்றும் பொதுவான கப்பற்சரக்குகள் களஞ்சியப்படுத்துவதற்கு இது பயன்படுத்தப்படும். அத்திவாரத்தின் நிர்மாணம் முடிவடைந்துள்ளது.

திருகோணமலை துறைமுக உட்பிரவேச கால்வாயின் இடது மற்றும் தெ ற்கு பக்கத்தில் நீரில் அமிழ்த்தப்பட்டுள்ள சங்கிலி பயன்பாட்டில் கட்டிவைக்கப்பட்டிருக்கும் சூரிய சக்தியினால் செயற்படும் தன்னிச்சையாக எரியும் மின்குமிழ்கள் கொண்ட 14 வரிசை மிதப்பிகள் பொருத்தப்படுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளன.மேலும் குறித்த செய்திட்டத்தின் கீழ் வெளிச்ச வீடுகள் மீள் செயற்படுத்தப்பட உள்ளன.மதிப்பிடப்பட்டுள்ள செய்திட்டத்தின் ஆகு செலவு ஜப்பான் யென் 01 பில்லியன் ஆகும்.செய்திட்டப்பணிகள் இடம் பெற்று வருகின்றன.

**காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி**

**செய்திட்ட விபரங்களும் தற்போதைய நிலைமையும்**

காங்கேசன் துறைமுகத்தில் கையாளல்களை ஆரம்பிப்பதற்கு கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் உடன்பாட்டின் மீது இலங்கை துறைமுக அதிகார சபையிடம் 50 ஏக்கர் நிலப்பிரதேசம் பொறுப்பளிக்கப்படுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது .ஆரம்பத்தில் வயில் தொகுதி ஒன்றும் களஞ்சிய சாலைவசதிகளுடன் துறைமுக இயக்கங்களை பாதுகாப்பாக மேற்கொள்வதற்கு 15 ஏக்கர் நிலப்பிரதேசம் ஒதுக்கப்படுவதற்கும் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது.

இந்த பிரதேசத்துகான நிலப்படம் யாழ்ப்பாண நிலஅளவை திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளதுடன் எல்லை வேலி அமைத்தலையும் வாயில் தொகுதி மற்றும் களஞ்சியசாலையை நிர்மணிப்பதை ஆரம்பம் செய்வதற்கு நில வரைபடத்தை பெற்ருக் கொள்வதற்கு இலங்கை துறைமுக அதிகார சபை எதிர்பார்த்துள்ளது.

**தேசிய துறைமுகப் பெருந்திட்டம்**

**செய்திட்ட விபரங்களும் தற்போதைய நிலைமையும்**

தேசிய துறைமுகப் பெருந்திட்டத்தினை தயாரிப்பதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி அமெரிக்க டொலர் 1.5 மில்லியன் தொகை தொழில்நுட்ப உதவியை நன்கொடையாக இலங்கை துறைமுக அதிகார சபைக்கு வழங்கியுள்ளது. அதன்படி ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆலோசனை நிறுவனமான ஆவுடீளு நிறுவனம் தேசிய துறைமுக பெருந்திட்டத்தை தயாரித்து வருகின்றது. செய்திட்டம் 2016 நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு 2019 மே மாதம் 15 ஆம் திகதி இது நிறைவு செய்யப்படவேண்டியுள்ளது.

## தெற்கு துறைமுக அபிவிருத்திப் பகுதி

2017 ஆம் ஆண்டில் ஹம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி கட்டம் II கீழ் மேற்கொள்ளப்பட்ட பிரதான சிவில் நிர்மாணப்பணிகள் தெற்கு துறைமுக அபிவிருத்தி பகுதியினால் நிறைவு செய்யப்பட்டன.

மீளாய்வு ஆண்டினுள் அநேக இயக்க உபகரணங்கள் தற்போது வரை வினியோகிக்கப்பட்டுள்ளதுடன் எஞ்சிய உபகரணங்களின் இறக்குமதி செய்தல்கள் 2018 ஆண்டின் 2 ஆம் காலாண்டு வரை நடைபெறும்.அதன்படி செய்திட்டம் நிறைவு செய்யும் திகதி 2018 மே 15 ஆம் திகதி ஆகும்.

அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ஆலோசனைகளுக்கமைய அரச -- தனியார் கூட்டுரிமை அடிப்படையில் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் இயக்கங்களை மேற்கொள்வதற்கு சீன கம்பனி ஒன்றினால் (வ/ப சைனா மேர்சன்ட் போர்ட் ஹேல்டிங்ஸ் கம்பனி) முன்வைக்கப்பட்ட பிரேரணையை இலங்கை துறைமுக அதிகார சபை ஏற்றுக் கொண்டுள்ளது. அதன்படி இலங்கை துறைமுக அதிகார சபை/இலங்கை அரசாங்கம் மற்றும் வ/ப சைனாமேர்சன்ட் போர்ட் ஹோல்டிங்ஸ் கம்பனி / HIPG/HIPS க்கிடையில் 2017 யூலை 29 ஆம் திகதி சலுகை உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## ஒப்பந்தம் மற்றும் வடிவமைப்புப் பகுதி

இலங்கை துறைமுக அதிகார சபையினால் மேற்கொள்ளப்படும் சிவில் பொறியியல் செய்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதும் துறைமுகம் சம்பந்தப்பட்ட அமைப்புகளை திட்டமிடுவதும் ஒப்பந்தம் மற்றும் வடிவமைப்புப் பகுதியின் பொறுப்பாகும். துறைமேடைச்சுவர்கள், பாலங்கள், கட்டடங்கள் மற்றும் இலங்கை துறைமுக அதிகார

சபையின் பிரதான வர்த்தக நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்கான பாதைகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளின் அமைவுகளை திட்டமிடுவதும் இதற்குரியதாகும்.மேலும் அனைத்து பிராந்திய துறைமுகங்கள் அடங்கலாக இலங்கை துறைமுக அதிகார சபையின் அனைத்து பகுதிகளினதும் சகல பராமரிப்பு மற்றும அபிவிருத்தி தேவைப்பாடுகளின் திட்டமிடல்கள் ஒப்பந்த மற்றும் வடிவமைப்பு பகுதியினால் மேற்கொள்ளப்படுகின்றன விலைகோரல் சம்பந்தப்பட்ட பணிகள, ஆலோசனைச்சேவைகள் நிர்மாண மேற்பார்வை,தரக்கட்டுப்பாடு, ஒப்பந்த முகாமைத்துவமும் செய்திட்ட முகாமைத்துவம் மற்றும் நடைமுறைப்படுத்துதலும் இதனுள் அடங்கும்.

மேற்குறிப்பிடப்பட்ட பணிகளுக்கு மேலதிகமாக் கொழும்பு துறைமுகத்தில் சிறிய கட்டுமானப்பணிகளை அதன் நேரடி தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்பட்டு மேற்கொள்வதும் இப்பகுதியின் பொறுப்பாகும்.

2017 ஆம் ஆண்டினுள் இப் பகுதியினால் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் பின்வருமாறு சாராம்சம் செய்து வழங்கப்படுகின்றன.

**கொழும்பு துறைமுகத்தின் உள்ளக துறைமுகப் பாதை விரிவுபடுத்தல்**

தெற்குத் துறைமுகத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் முடிவடைதலோடு துறைமுகத்தில் ஏற்படும் நெருக்கடி நிலையினை சமாளிப்பதற்கு இங்குரு கடைச் சந்தியிலிருந்து வாயில் இல – 1 வரையிலான நான்கு நிரல்களையுடைய பாதையை ஆறு நிரல்களாக விரிவுபடுத்தப்பட வேண்டும். பாதை விரிவாக்கலுடன் சேர்த்து கோட்டைப் பகுதியிலுள்ள இரு பாலங்கள் மற்றும் துறைமுக உட்பிரவேச பாதையிலுள்ள புளுமெண்டல் வீதிக்குச் செல்லும் பாலமும் விரிவுபடுத்தப்பட வேண்டும்.

ஆறு நிரல்களாக பாதை விரிவுபடுத்தப்படுவதன் விளைவாக கட்டடங்கள், அலுவலகங்கள், வேலைத்தளங்கள், ஏனைய வசதிகள் போன்றவை இடித்து அகற்றி வேறு இடங்களில் நிறுவுவது அவசியமாகும். உள்ளக துறைமுக வீதிகளை விரிவாக்கும் பணிகள் 2013 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், கட்டடங்கள் உடைத்து அகற்றப்படும் பணிகள் முற்றாக முடிவடைந்த பிரதேசங்களில் நிர்மாணப்பணிகள் கட்டங்களாக மேற்கொள்ளப்படுகின்றன.

**செய்திட்டத்தின் முன்னேற்றம்**

உள்ளக துறைமுக பாதையின் விரிவாக்கல் நடவடிக்கைகள் கட்டங்கட்டமாக இடம்பெற்றுள்ளன. 2017ஆண்டில் ரூபா 54.4 மில்லியன் வேலைகள் (நிதி சார் முன்னேற்றம்) பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. டிசம்பர் 2017 வரையில் இச் செய்திட்டத்திற்கான மொத்த நிதிசார் முன்னேற்றம் ரூபா 756.97 மில்லியனாகும்.

சங்கிலி. 1 + 700 மீற்றர் 2 +060 மீற்றர் பாதை விரிவாக்கக் கட்டுமான வேலைகள் நடைபெற்று வருவதுடன் வருட முடிவில் இதன் முன்னேற்றம் 68 % ஆகும். பாதையின் சங்கிலி .3+340 இருந்து 4+020 சங்கிலி விலைக்கோரல்கள் விளம்பரப்படுத்தப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது.மேற்கொண்டு சங்கிலி. 0+540 இருந்து 0+840 மீற்றர் பாதை விரிவாக்கல், திட்டமிடல் மற்றும் வடிவமைத்தல் கட்டத்திலுள்ளதுடன் 2018 ஆண்டில் இது அமுல்படுத்தப்படும்.

**துறைமுக உடபிரவேச பாதையை விரிவாக்குதல்**

துறைமுக உட்பிரவேச பாதையை 4 நிரல்களில் இருந்து 6 நிரல்களாக விரிவாக்கப்படுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. பாதை பரம்பலில் மோசமான மண் படிவம் உள்ளதால் பாதை விரிவாக்கும் பணிகள் ஆரம்பிப்பதற்கு முன் மண் விருத்தி செய்வது அவசியமாகும்.மண் பரீட்சிப்புப்பணிகள் 2017 ஆண்டில் நிறைவடைந்துள்ளன. அதன்படி மண் விருத்தி மற்றும் பாதை விரிவாக்கும் பணிகளுக்கு மத்திய பொறியியல் உசாத்துணை

பணியகத்திலிருந்து (CECB) பிரேரணையொன்று பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. பாதையின் நிர்மாணப்பணிகள் மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்திற்கு வழங்கப்பட்டு நிர்மாணப்பணிகள் இடம் பெற்று வருகின்றன.

**செய்திட்டத்தின் முன்னேற்றம்**

மண் விருத்திக்கான பூர்வாங்க திட்டம் மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்தினால் முன்வைக்கப்பட்டுள்ளதோடு திட்டமிடல்கள்/நிர்மாணங்களை நிறைவு செய்வதற்கு துறைமுக உட்பிரவேச பாதைக்கு மேலால் செல்லும் அதிவேக பாதை செய்திட்டத்தில் பாதை செல்லும் முறை தொடர்பிலான இறுதி பாதை அடையாளத்தை மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்துக்கு வழங்குமாறு வேண்டப்பட்டுள்ளது. தேவையான தகவல்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டியுள்ளதோடு உத்தேச துறைமுக உட்பிரவேச பாதைக்கு மேலால் செல்லும் அதிவேக பாதை செய்திட்டத்தோடு இது மேற்கொள்ளப்படவுள்ளது.

**கொழும்பு துறைமுகத்திலுள்ள முனையங்கள் / பாலங்களை புனருத்தாரணம் செய்தல்**

**வழிகாட்டிப்பாலம் மற்றும் பண்டாரநாயக்க துறைமேடையில் கல் பதித்து தார் இடுதல்**

தற்போதுள்ள வழிகாட்டிப்பாலம் மற்றும் பண்டாரநாயக்க துறைமேடையின் (BQ) முனையப் பிரதேசம் பாரிய குழிகளினால் முற்றாக கீழிறங்கியுள்ளதால் அதன் மேற்தளத்தை சீர் படுத்துவதும் அபிவிருத்தி செய்வதும் அவசியமென அடையாளம் காணப்பட்டுள்ளது.

**செய்திட்டத்தின் முன்னேற்றம்**

வழிகாட்டிப் பாலத்தில் கல் பதித்து தார்போடும் வேலைகள் 2016 ஆண்டில் 51 மில்லியன் ரூபா செலவில் முடிவடைந்துள்ளன. பண்டாரநாயக்க துறைமேடையில் கல்பதித்து தார்போடும் கட்டம் – I இன் வேலைகள் 2017 ஆண்டில் 25.71 மில்லியன் ரூபா மொத்த ஆகுசெலவில் நிறைவு செய்யப்பட்டுள்ளன. பண்டாரநாயக்க துறைமேடையின் – கட்டம் II இன் கல்பதித்து தார்போடும் வேலைகள் இடம்பெற்று வருவதோடு 2017 ஆண்டில் பணிகளின் 95% முடிடைந்துள்ளன.

**ஜய கொள்கலன் முனையத்தின் 3 ஆம் மேடையின் புனருத்தாரணம் (R மற்றும் S நிரல்கள்)**

அநேகமான கொள்கலன் சேமிக்கும் இடங்கள், பாதைகள் உள்ளே விரிந்து சென்று குழிகள் உள்ள பிரதேசங்களாகியுள்ளதால் தற்போதிருக்கும் கொள்கலன் சேமிக்கும் மேடை உள்ளடங்கலாக ஜய கொள்கலன் -03 இல் உள்ள பாதைகளை புனருத்தாரணம் செய்வது அவசியமாகும். முனையத்தில் அன்றாடம் நடைபெறும் கொள்கலன் இயக்க செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படாதவாறு புனருத்தாரணப் பணிகள் கட்டங்களாக மேற்கொள்ளப்படுகின்றன.

**செய்திட்டத்தின் முன்னேற்றம்**

- கட்டம் I - ஜய கொள்கலன் முனையத்தின் 3 ஆம் மேடையின் புனருத்தாரணம் – R மற்றும் S நிரல்கள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. 2017 வரையான கொடுப்பனவுகள் 38.04 மில்லியன் ரூபா ஆகும்.

- கட்டம் II - ஜய கொள்கலன் முனையத்தின் 3 ஆம் மேடையின் புனருத்தாரணம் – ஆ மற்றும் N நிரல்களின் புனருத்தாரணம் ஒப்படைக்கப்பட்டு கட்டுமான வேலைகள் இடம் பெற்று வருகின்றன.

**விஜய குமார துறைமேடையில் கல்பதித்து தார்போடும் வேலைகள்**

விஜய குமார துறைமேடையின் முழுப்பிரதேசமும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மேற்தளத் தயாரிப்பு மற்றும் புயல் நீர் வடிகாலமைப்பு முறைமை மேம்படுத்தப்பட வேண்டும். துறைமுகச் செயற்பாடுகளில் ஏற்படும் தாக்கத்தை குறைப்பதற்கு இரண்டு கட்டங்களில் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

**செய்திட்டத்தின் முன்னேற்றம்**

கட்டம் II இன் ஒப்பந்தம் 2017 ஜனவரியில் 37.6 மில்லியன் ருபா தொகைக்கு வழங்கப்பட்டுள்ளதோடு 4500 சதுர மீற்றர் பிரதேச வேலைகள் குறிப்பிடத்தக்க அளவில் நிறைவு செய்யப்பட்டுள்ளன. கட்டம் – II க்கான திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு வேலைகள் நடைபெற்று வருவதோடு 2018 ஆண்டில் இது பூர்த்தி செய்யப்படும்.

**கப்பற் சரக்கு கொள்கலன் நிலையம் -01 இன் ( CFS – 01) புனருத்தாரணம்**

2013 மே மாதத்தில் ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாகப் பாதிக்கப்பட்ட கப்பற்சரக்கு கொள்கலன் நிலையம் ஐ இன் புனருத்தாரணம் 2016 ஜனவரியில் ஆரம்பிக்கப்பட்டு 2 கட்டங்களால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. 2016.08.01 இல் கப்பற்சரக்கு கொள்கலன் நிலையத்தின் முதல் பாகத்தின் நிர்மாணப்பணிகள் நிறைவு செய்யப்பட்டன.

இது 600 சதுர மீட்டர் நிலப்பரப்பில் இருமாடி அலுவலகக் கட்டடத்தினையும், இரு பக்கங்களில் 2.5 மீட்டர் அரங்கு கொண்டதும் 1800 சதுர மீட்டர் நிலப்பிரதேச கப்பற்சரக்கு கொள்கலன் நிலையம் மற்றும் சேவை வழங்கல் பணிகளுக்கான மின்மாற்றி ஒன்றையும் கொண்டமைந்துள்ளது.

**செய்திட்டத்தின் முன்னேற்றம்**

கப்பற்சரக்கு கொள்கலன் நிலையத்தின் இரண்டாவது பாகத்தின் கட்டுமான வேலைகள் 2016 ஆகஸ்ட் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு 2017 மே மாதத்தில் முழுமையாக நிறைவு செய்யப்பட்டு 2017.06.02 இல் சேவை வழங்கல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. 45மீட்டர் x 60 மீட்டர் பகுதியினையும் (நிலப்பரப்பு 2250 சதுர மீட்டர்) மற்றும் ஆபத்தான கப்பற்சரக்கு கையாளல்களுக்கு 45 மீட்டர் x 22.5மீட்டர் (நிலப்பரப்பு 1012.5 சதுர மீட்டர்) பகுதியினையும் இது உள்ளடக்கியுள்ளது.

**திருகோணமலை துறைமுகத்திலுள்ள அஷ்ரப் துறைமேடையின் புனருத்தாரணம்**

முனையத்தின் செயற்பாடுகள், மேடைச் சுவர் அருகாமையில் மேடை கீழிறங்கியுள்ளதன் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளதால் அஷ்ரப் துறைமேடையை அபிவிருத்தி செய்வதும் மேற்தளத்தை புதிதாக தயார் செய்வதும் அவசியமென அடையாளம் காணப்பட்டுள்ளது.

**செய்திட்ட முன்னேற்றம்**

வடிவமைப்புக்கள், பொருட் கணிப்பீட்டுப் பத்திரங்கள் (BOQS), வரையறை கொண்ட (Specifications) விலைக்கோரல், ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு 2017 நவம்பரில் விலைக்கோரல் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 2018 ஆண்டில் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

**காலி துறைமுகத்தின் க்லோசன்பேர்க் துறைமேடையின் புனருத்தாரணம்**

மேடை கீழிறங்கியுள்ளதன் காரணமாக இயக்கப்பணிகள் தடைப்பட்டுள்ளதனால் காலி துறைமுகத்தில் இருக்கும் துறைமேடையை அபிவிருத்தி செய்வதும் புதிதாக மேற்தளம் தயாரிப்பதும் அவசியமென அடையாளம் காணப்பட்டுள்ளது.

**செய்திட்டத்தின் முன்னேற்றம்**

வடிவமைப்புக்கள், பொருட் கணிப்பீட்டுப் பத்திரங்கள் (BOQS) வரையறை கொண்ட (Specifications) விலைக்கோரல் ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு விளம்பரப்படுத்தப்பட்டுள்ளதோடு முகாமைத்துவ அங்கீகாரம் எதிர்பார்க்கப்படுகின்றது. பணிகள் 2018 ஆண்டின் முற்பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

**ஒலுவிலில் கரையோரப் பாதுகாப்பு வேலைகள்**

**ஒலுவில் சற்றுலா விடுதி அமைந்துள்ள பிரதேசத்தில் அவசர கரையோரப் பாதுகாப்பு**

வடகிழக்கு பருவமழைக் காலத்தில் கடலரிப்பின் காரணமாக இலங்கை துறைமுக அதிகாரசபையின் சுற்றலா விடுதிப் பகுதி அமைந்துள்ள பிரதேசம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதோடு, நீர் கோபுரம், தடுப்புச் சுவர், கழிவக தாங்கிகள், மற்றும் பாரிய குழாய்கள் போன்றவற்றைப் பாதித்து விடுதிக்கு அண்மையில் கடலரிப்பு ஏற்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

அவசர கரையோரப் பாதுகாப்பு பணிகள் இரண்டு கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கட்டம் I - 150 மீட்டர் நீளத்திற்கு வளைவு சுவர் நிர்மாணம் (சுற்றலா விடுதி அமைந்துள்ள பிரதேசம்) 2016 ஆண்டில் பணிகள் நிறைவு செய்யப்பட்டன.

**செய்திட்டத்தின் முன்னேற்றம்**

கட்டம் II – 160 மீட்டர் நீளத்திற்கான (சுற்றுலா விடுதிப்பகுதியிலிருந்து அலுவலர்களின் குடியிருப்பு வரை) வளைவு கட்டுமானம்

இச் செய்திட்டத்தின் 160 மீட்டர் வளைவு சுவரின் நிர்மாணம் 2016 நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டு அனைத்து வேலைகளும் 2017 ஆண்டில் நிறைவுசெய்யப்பட்டுள்ளன.

**ஒலுவில் கரையோரப்பகுதியில் மண்துணிக்கைகளின் நகர்வு தொடர்பான விரிவான ஆய்வு**

ஒலுவில் துறைமுகத்துக்கு அப்பால் அமைந்துள்ள வடக்கு எல்லையில் தற்போது ஏற்பட்டு வரும் கடலரிப்பினால் தெற்கு எல்லையின் தெற்கு அலைதாங்கி நெடுகே பாரியளவில் மணல் குவிதல், உட்பிரவேச கால்வாயினுள்ளும் சுற்றுப்புறத்திலும் சேற்றுப்படிவுகளை அகற்றுதல் போன்ற சிக்கல்களுக்கான திர்வுகளாக மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகள் தீர்மானிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான பணிகளின் பூர்வாங்கமாக ஒலுவில் கடற்கரை சமீபமாக மண்துணிக்கைகள் நகர்ந்து செல்லும் முறை மற்றும் எதிர்காரலத்தில் ஏற்படக்கூடிய மாற்றங்களை தீர்மானிப்பதற்கும் தீர்வுகளாக மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளை தயாரிப்பதற்கான விரிவான பொறியியல் ஆய்வை மேற்கொள்வதற்கும் முன்மொழியப்பட்டுள்ளது.

ஒலுவில் துறைமுக அபிவிருத்தி செய்திட்டத்திற்கு நிதி வழங்கும் முகவர் நிறுவனமான டென்மார்க்கின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு (டனிடா) இத்திட்டத்திற்கான நிதியினை வழங்குவதற்கு உடன்பட்டுள்ளது. ஆலோசனை சேவையின் வெற்றிகர ஆலோசகரான வ.ஃ.ப டனிஸ் ஹய்ரொலிக் நிறுவனத்திடம் ஆய்வை மேற்கொள்வதற்கு துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சின் செயலாளர் வழங்கியுள்ளார்.

**செய்திட்டத்தின் முன்னேற்றம்**

2017 ஏப்ரல் மாதம் வ/ப டனிஸ் ஹய்ரொலிக் நிறுவனம் இந்த ஆய்வின் இறுதி நகல் அறிக்கையை சிக்கல்களை தீர்ப்பதற்கான பரிந்துரைகளுடன் முன்வைத்து. ஆகுசெலவு பிரேரணைகள் மற்றும் பரிந்துரைகளுடனான இறுதி அறிக்கையும் 2017 யூன் மாதம் முன்வைக்கப்பட்டது. இறுதியில் ஆய்வு காலத்தை நீடித்து குறைந்த செலவிலான மாற்று வழிகளை பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

## பொறியியல்

### மின்சாரம் மற்றும் இலத்திரனியல் பொறியியல் பகுதி

இலங்கை துறைமுக அதிகாரசபையின் கீழுள்ள சகல துறைமுகங்களினதும் மின்சாரம் மற்றும் தொடர்பாடல் பொறியியல் போன்ற துறைகளின் அனைத்து வசதிகளையும் ஏற்படுத்துதல் மற்றும் சகல பொறியியல் செய்திட்டங்களின் திட்டமிடுதல் முகாமைத்துவம், நடைமுறைப்படுத்தல் மற்றும் அனைத்து செய்திட்ட வசதிகளை பராமரித்தல் ஆகியன மின்சாரம் மற்றும் இலத்திரனியல் பகுதியின் பொறுப்பாகவுள்ளது

உலகில் ஏனைய சர்வதேச கேந்திர நிலையிலான துறைமுகங்களுக்கு சமனான முறையில் துறைமுக நடவடிக்கைகள் மற்றும் தொடர்புபடும் சேவைகளில் 95% நிறைவேற்றும் பணியில் மின்சாரம் மற்றும் தொடர்பாடல் துறைகளின் அனைத்து முக்கிய சேவைளையும் பேணிச் செல்வதில் பிரதான பொறியியலாளர் இருவர் மற்றும் பிரதி பிரதான பொறியியலாளர்கள் இருவரின் கீழ் தகைமை பெற்ற தொழில்சார் மின்சார/தொடர்பாடல் பொறியியலாளர்களைக் கொண்ட குழு 24 மணித்தியாலம் பூராகவும் சேவையில் ஈடுபட்டுள்ளது.

உத்தேச கிழக்கு கொள்கலன் முனையத்தின் திட்டமிடுதல் மற்றும் நிர்மாணங்களுக்கு மின் பொறியியலாளர்கள் அவர்களின் அறிவு மற்றும் அனுபவம் ஆகியவற்றில் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர்.

**மின்வலு பொறியியல் துறையில் பின்வரும் நடத்தை உள்ளடங்கும்**

- இலங்கை மின்சார சபையிலிருந்து பெறப்படும் 11 கி.வோட் மின்சாரத்தை வினியோகித்தல், நிறுவப்பட்டுள்ள மொத்த கொள்ளளவு 18 மெகா வொட் ஆகும்.
- 11 கி.வொட் கொள்ளளவு கொண்ட உப நிலையங்களை நிறுவுதல், பணிகளை ஆரம்பித்தல், பராமரித்தல், தரத்தை உயர்த்துதல்.
- குறை விசை கொண்ட அனைத்து மின்சார நிறுவுதல்களின் மின்சார உதிரிகளினது பாதுகாப்பு மற்றும் பராமரிப்புகள்.
- சேறுவாரி மற்றும் இழுவைக் கலங்களினதும் ஏனைய மிதக்கும் கலங்களினதும் மின்சார உபகரணங்களின் பராமரிப்புகள்
- கொள்கலன் கையாளல் பாரம்தூக்கிகளினது (கப்பலிலிருந்து கரையில் பொருத்தப்பட்டுள்ள முனைய பாரம் தூக்கிகள்) மின்சார உபகரணங்களைப் பராமரித்தல்
- மொத்தத் தொகை கப்பற்சரக்குகளை கையாளும் பாரம்தூக்கிகளைப் பராமரித்தல்
- கொள்கலன் பாரம்தூக்கிகளினது மின்சார மோட்டார்கள் (AC &; DC) மற்றும் ஏனைய உபகரணங்களை திருத்துதல்.
- மொத்தக் கொள்ளளவு கி.வொட்.15.5 மின் உற்பத்தி உபகரணத்தை பராமரித்தல்
- 11 கி.வொட் கொண்ட நிலத்திற்குக் கீழான மின்சாரக் கம்பி வலையமைப்பை நிறுவுதல், பராமரிப்பு மற்றும் அதன் பிழைகளை சீர் செய்தல்.
- குளிரூட்டல் தொகுதியின் திட்டமிடுதல், நிறுவுதல், பராமரித்தல்.

**இலத்திரனியல் மற்றும் தொடர்பாடல் பொறியியல் துறையில் பின்வரும் நடவடிக்கைகள் உள்ளடங்கும்**

- ஏர்கு வானொலி அலைவரிசை வலையமைப்பின் திட்டமிடல் மற்றும் பராமரிப்புகள் (கடல் அலைவரிசை).
- கொள்கலன் முனையத்தில் 2.4 கிகா வோட் WI-FI தரவு தொடர்பாடல் வலையமைப்பின் திட்டமிடல் மற்றும் பராமரித்தல்.
- கொள்கலன் முனையத்தில் வானொலி அலைவரிசைகளை அடையாளம் காணும் தொகுதியை (RFID) பராமரித்தல்.
- ஒளி நார் (Optical Fibre) வலையமைப்பு மற்றும் தரவு வலையமைப்பு செயற்பாட்டு நிலையத்தின் திட்டமிடல் மற்றும் பராமரிப்புகள்.
- 2000 தொலைபேசி வழிகளைக் கொண்ட துறைமுக தொலைபேசி PBK தொகுதியின் திட்டமிடல் மற்றும் பராமரிப்புகள்.
- ராடார், எதிரொலி மாணி (Echo Sounder), செய்மதியூடான தொடர்பாடல் சாதனம், இடம் காணும் திசை காட்டும் முறைமை (DGPS) அடிப்படையிலான அளவீட்டுத் தொகுதி உள்ளடங்கலான கப்பலோட்டத் தொகுதிகளின் பராமரிப்புகள்.
- CCTV தொகுதிகளின் திட்டமிடல் மற்றும் பராமரிப்புகள்.
- நடைமுறையில் இருக்கும் ஒளியியல் பைபர் வலையமைப்பை விரிவாக்கல்.

அதியுயர் அலைவரிசை (VHF) கொண்ட டுப்லெக்ஸ் (Duplex) கண்காணிப்பு காணொளிக்கு இடமளிக்கப்படுவதற்காக குரல் தொடர்பாடல் வசதிகளை (Voice Communication) அதிகரித்தல்.

## கடலக பொறியியல் பகுதி

இலங்கை துறைமுக அதிகாரசபையின் அனைத்து மிதக்கும் கலங்களின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்க்கும் பணிகள், கடலக பொறியியல் பகுதியின் பிரதான பணிகளாக இருப்பதோடு இயக்கம் மற்றும் சிவில் பொறியியல், பராமரிப்பு கடலக மற்றும் பாதுகாப்பு பகுதிகளின் பணிகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு போதுமானளவு இழுவைக் கலங்கள் உள்ளதனை உறுதிப்படுத்துவதும் ஏனைய பொறுப்புக்களில் அடங்கும். வெளியில் பொருத்தப்படும் மோட்டர் இயந்திரங்களினது பராமரிப்பும் இதன் பொறுப்பாகும்.

கப்பற்சரக்கு கையாளல்களை மேற்கொள்வதற்கு இயக்கப் பகுதிக்கு உதவுவதும் இப்பிரிவின் போறுப்பாகும். இலங்கை துறைமுக அதிகாரசபையின் சமையலறையின் கேஸ் அடுப்புக்கள், சோறு சமைக்கும் அடுப்புக்கள், அலுமினிய சமையற் பாத்திரங்களையும் ஏனைய உபகரணங்களையும் பராமரித்தலும் இப்பிரிவின் பணிகளாகும். இலங்கை துறைமுக அதிகாரசபையின் சறுக்கு வழிகளின் பராமரிப்பு பணிகளும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. உருக்கு அமைவுகளினது பழுதுபார்ப்புப் பிரிவில் தேர்ச்சி பெற்ற ஊழியர்களின் குறைபாடு காரணமாக கடலகப் பகுதியினால் தமது அமைப்பு மற்றும் தண்டுப் பாகங்களின் பழுதுபார்ப்புப் பணிகளும் முகாமைத்துவம் செய்யப்படுகின்றன.

கடலகப் பகுதி இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளதுடன் ஆண்டினுள் இப்பிரிவுகளினால் அடையப்பெற்ற வெற்றிகள் பின்வருமாறு

### கடலகப் பிரிவு I

### மீளமைக்கும் பொறியியல் பிரிவு

துறைமுகத்தின் அனைத்து நங்கூரமிடல் பணிகளிலான இழுவைக் கலங்கள், ‘‘மேக’’ தீயணைப்புக் கலத்தினதும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் சகல சேறுவாரி கலங்களினதும் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு கடலக 01 பிரிவின் கீழுள்ள மீளமைக்கும் பொறியியல் பிரிவு பொறுப்பாகவுள்ளது. கொழும்பு துறைமுகத்தின் 05 நங்கூரமிடல் பணிகளிலான கலங்கள், திருகோணமலை துறைமுகத்தின் 02 நங்கூரமிடலின் கலங்கள், காலி, காங்கேசன்துறை ஹம்பாந்தோட்டை துறைமுகங்களில் தலா 01 நங்கூரமிடல் பணிகளிலான கலங்கள் சம்பந்தப்பட்ட இயக்கங்களுக்கான தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டதோடு இந்த மிதவைக் கலங்களுக்கான லொயிட் பதிவேடு வகையீட்டுச் சோதனை தேவைப்பாடுகளுக்கேற்ப இயந்திர உபகரணங்களின் பழுதுபார்ப்புகளும் மேற்கொள்ளப்பட்டன.

உள்துறைமுகம் தோண்டும் பணிகள் மற்றும் பாதுகாப்புப் பகுதியின் அதிவேக படகுகளின் வெளியே பொருத்தப்படும் இயந்திரங்களின் தேவைப்பாட்டுப் பணிகளுக்கு இப்பிரிவினால் பாரிய ஒத்துழைப்பு வழங்கப்படுகின்றது.

வகைப்படுத்தும் குழுவின் உதவியோடு தடாக ஆய்வுக்குப் பதிலாக நீர் ஆய்வுகள் மற்றும் இழுவைக் கலங்கள் உலர் தடாகத்திற்கு எடுக்கப்படுவது உள்ளடங்கலான பிரதான பழுதுபார்ப்புப் பணிகளும் மற்றும் அவர்களின் இயந்திரங்களுக்கு தேவையான அனைத்து பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ‘‘மேக’’ தீயணைக்கும் கலம் மிகவும் வெற்றிகரமாக பராமரிக்கப்பட்டு துறைமுகத்தினுள் மற்றும் வெளியில் ஏற்படக் கூடிய எந்தவொரு தீப்பிடிப்பு சந்தர்ப்பத்திலும் பயன்படுத்துவதற்கு 24 மணித்தியாலம் பூராகவும் தயார் நிலையில் வைக்கப்பட்டது.

### பொறியியல் துறைமுக கலப் பிரிவு

வழிகாட்டி கலங்கள், நங்கூரமிடல் பணிகளிலான கலங்கள் மற்றும் ஏனைய பொதுவான தேவைப்பாடுகளுக்கு பயன்படுத்தப்படும் கலங்கள் போன்றவற்றின் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புகள் இப்பிரிவின் பிரதான பொறுப்பாகும். இதுவரையிலான வகையீட்டுக் குழுவின் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்து கடலகப் பகுதியின் இயக்க தேவைப்பாடுகளை நிறைவேற்றக் கூடியதாகவும் இருந்தன.

### கடலகப் பிரிவு II

### கப்பல் நிர்மாணப் பிரிவு

மேலும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் மிதவைக் கலங்களினது சகல மரத்திலான மற்றும் பைபர் கிலாஸிலான பழுதுபார்த்தல்களுக்கு பிரதானமாக இப்பிரிவு பொறுப்பாகவுள்ளது. மேலும், இலங்கை துறைமுக அதிகாரபையின் நங்கூரக்கலங்களினது மரத்தினாலான மோதல் தடுப்புகளினதும் தண்டுப் பாகங்களினதும் பழுதுபார்ப்புகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன. GRP படகுகளினது மரத்திலான தண்டுப்பகுதி கொண்ட சறுக்கு வழிக் கலங்ளிகனதும் பழுதுபார்ப்பு பணிகளையும் இப்பிரிவு மேற்கொண்டது. கடலகப் பகுதியினால் பயன்படுத்தப்படும் நங்கூரக் கலங்களின் மரத்திலான தளபாடங்களின் பழுதுபார்ப்புகள், அடைப்புப் பலகை (Paneling) வேலைகள், மோதல் தடுப்புகளின் பழுதுபார்ப்புப் பணிகளும் இப்பிரிவினால் நிறைவேற்றப்பட்டன.

ஆண்டினுள் 600 தொன் பாரத்தை தாங்கக் கூடிய சறுக்கு வழி மற்றும் ஏனைய வழிகளுக்கு எடுப்பதையும் சறுக்கு வழியில் இருந்து கலங்களை மீண்டும் கடலுக்கு விடுவிக்கும் பணிகளுக்கும் மேற்கொள்ளப்பட்டன. நங்கூரமிடல் கலங்கள் மற்றும் இழுவைக் கலங்களினது பிரதான பழுதுபார்ப்புப் பணிகள் ஆண்டு பூராகவும் மேற்கொள்ளப்பட்டன.

**கப்பற்சரக்கு கலப் பிரிவு**

இயக்க பகுதியினால் பயன்படுத்தப்படும் இழுத்துச் செல்லப்படும் கலங்கள், நங்கூரமிடலின் கலங்கள், தண்ணீர் வத்தைகள், தட்டு வத்தைகளினது பராமரிப்பு மற்றும் உருக்கு பழுதுபார்ப்புகள் மற்றும் அக்கலங்களின் துருப்படிவு நீக்கி துப்புரவு செய்து மை பூசுவதும் கப்பற்சரக்கு கலப்பிரிவின் பொறுப்பாகும்.

இவ்வாண்டினுள் காலி, திருகோணமலை துறைமுகங்கள், இலங்கை கடற்படை, கொழும்பு டொக்யாட் மற்றும் ஏனைய வெளி தரப்பினர்களுக்கும் மற்றும் இயக்கம், கப்பலோட்டம். பாதுகாப்பு, பொறியியல் பகுதிகளுக்கு தேவைப்படும் உருக்குக் கயிறு சிலிங்கைகள் (Steel Wire Rope Slings) சிலிங்கைகள், பல்வேறு அளவிலான திரைச்சீலைகள் , கென்வஸ் மூடு சீலைகள், டென்ட் சீலைகள் 125 பல்வேறு வகையிலானவை இப்பிரிவினால் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்பட்டன.

கடலகப் பொறியியல் பகுதியினால் அவ்வாறான சேவைகளை எதிர்பார்க்கும் துறைமுகங்கள் போன்று ஏனைய அனைத்து பகுதிகளுக்கும் தேவையான அவ்வாறான சேவைகள் வெற்றிகரமாக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.இருக்கும் வரையறைகொண்ட வளங்களையும் அனைத்து பணியாளர்களினது உயர் அர்ப்பணிப்பினாலும் துறைமுக கப்பற்சரக்கு இயக்கங்களில் ஈடுபடும் எமது பாவனையாளர்களுக்கு இப் பகுதியினால் சிறப்பான சேவைகள் வழங்கப்படுகின்றன.

## இயந்திர உபகரண பொறியியல் பகுதி

இலங்கை துறைமுக அதிகாரசபையின் கப்பற்சரக்குகளின் கையாளல்களுக்கு உபகரணங்களை முறையாக பராமரிப்பதும் அது தொடர்பாக திட்டமிடுவதும், கொள்கலன்களினதும் மரபுரீதியான கப்பற்சரக்குகளினதும் கையாளல்களுக்கு இடையூறு ஏற்படாத வண்ணம் இந்த உபகரணங்களை பெற்றுக்கொடுப்பது இயந்திர உபகரணப் பொறியியல் பகுதியின் பிரதான பொறுப்பாகும்.

2017 ஆண்டில் இந்த உபகரணங்களின் திடீர் அல்லது எதிர்பாராத தடங்கல்களுக்கு ஈடுகொடுப்பதற்கான அவசர தீர்வு வழங்கும் திட்டமிடப்பட்ட சீர்செய்யும் பராமரிப்பு வேலைத்திட்டம் இப்பகுதியினால் நடைமுறைப்படுத்தப்பட்டு இலங்கை துறைமுக அதிகாரசபையின் கையாளல் உபகரணங்கள் வெற்றிகரமாக பேணிச்செல்லப்பட்டன. கப்பலிலிருந்து கரை வரையிலான கொள்கலன் பாரம்தூக்கிகள் (STS), பீலியின் மீது நகரும் கென்ட்ரி பாரம்தூக்கிகள் (RMG), இறப்பர் டயர் பொருத்தப்பட்ட பாரம்தூக்கிகள் (RTG) ,பிறைம்மூவர் வண்டிகள், முனைய ட்ரக் வண்டிகள், ஜய கொள்கலன் ∴ ஐக்கிய கொள்கலன் முனையங்களின் சகல கொள்கலன் உபகரணங்களில் 90% மேற்பட்ட தொகை வழங்கப்படுவதற்காக பராமரித்துச் செல்லப்பட்டதனால் 2017 ஆம் ஆண்டில் கொள்கலன் கையாளல் செயற்பாட்டில் உயர் செயலாற்றுகை பெறப்பட்டுள்ளது.

இயக்கம் மற்றும் சேவைகள் வழங்கல் பகுதிகளில் கொள்கலன் உயரத்துக்கு உயர்த்தும் இயந்திரம் (Top Lifters), போர்க்லிப்ட் ட்ரக் வண்டிகள், டிரேலர் வண்டிகள் மற்றும் நடமாடும் பாரம்தூக்கி உட்பட அனைத்து உபகரணங்களும், சிவில் பொறியியல் பகுதியின் அனைத்து நிர்மான உபகரணங்களும் இயந்திரப் பொறியியல் பகுதியினால் வெற்றிகரமாக பாரமரித்து செல்லப்பட்டன. இயந்திரப் பகுதியின் பொறுப்புக்களினுள் இலங்கை துறைமுக அதிகாரசபையின் வாகனத் தொகுதியின் (பேரூந்து, லொறி, வேன், டபள்கெப், மோட்டார் கார், முச்சக்கர வண்டிகள், மற்றும் மோட்டார் சைக்கிள்கள்) மற்றும் ஷங்டின் லொக்கேமோட்டிவ் என்ஜின்களைப் பராமரித்தலும் அடங்கும்.

இரண்டு இயக்குனர்களினால் குத்தகை தவணை அடிப்படையில் பாரமரித்து, கையாளல் மேற்கொள்ளப்படுகின்ற "சமர்ஹில்" பகுதியில் அமைந்துள்ள எண்ணெய்க் களஞ்சியத்தொகுதியும் இயந்திரப் உபகரண மேற்பார்வையில் வெற்றிகரமாக பராமரித்துச் செல்லப்பட்டது.

தீ ஏற்பட்டதன் காரணமாக செயலிழந்திருந்த 90 தொன் பாரம் தூக்கக்கூடிய நடமாடும் பாரம்தூக்கி, இயந்திர பொறியியல் பகுதியினால் நவீனமாக்கப்பட்டு இதன் மூலம் 20 மில்லியன் ரூபா தொகைக்கு மேல் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு மீதப்படுத்தப்பட முடிந்துள்ளது.

## இயந்திர உபகரண வேலை பொறியியல் பகுதி

இலங்கை துறைமுக அதிகாரசபையின் அனைத்து உருக்குப் பாகங்களின் பொருத்தும் பணிகளுக்கு இயந்திர உபகரண வேலை பொறியியல் பகுதி பொறுப்பாகவுள்ளது. ஜய கொள்கலன் மற்றும் ஐக்கிய கொள்கலன் முனையங்களில் கொள்கலன்களைக் கையாளும் பாரம்தூக்கிகள், கொள்கலன்களைக் கொண்டு செல்லும் சிறிய ட்ரேலர்களுக்குரிய சகல அடிச்சட்டப் பாகங்களினதும் பழுதுபார்ப்புகள், நங்கூர பணிகளிலான கலங்கள், வழிகாட்டி, சேறுவாரி மற்றும் இழுவைக் கலங்களுக்குரிய அனைத்து உருக்கு சார்ந்த பழுதுபார்ப்புப் பணிகள், இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஏனைய உருக்கு அமைவுகளினதும் பழுதுபார்ப்பு பணிகளின் முக்கிய செயற்பாட்டுப் பகுதியாக இது விளங்குகின்றது. கடலகக் கலங்கள் மற்றும் கப்பல் சரக்குகளைக் கையாளும் உபகரணங்களுக்கு தேவையான புதிய உதிரிப்பாகங்களை இயந்திர ரீதியாக உற்பத்தி செய்வதிலும் சீர்படுத்தும் பணியிலும் இப்பகுதி ஈடுபட்டுள்ளது. மேலும் சங்கிலிகள் மற்றும் கொழுக்கிகளின் பரீட்சிப்புகள், கையாளல் தேவைப்பாடுகளுக்காக க்ரெப் போன்ற உபகரணங்களினது பராமரிப்புகள் தொடர்பிலும் இப்பகுதி பொறுப்பாக இருக்கின்றது.

கட்டடங்களின் புதிய உருக்கு அமைப்புகள், களஞ்சியசாலைகள் மற்றும் ஏனைய அமைப்புகளினது புதிய நிர்மாணங்களையும் பழைய உருக்கு அமைப்புக்களையும் கட்டடங்களையும் அகற்றுதல் இப்பிரிவின் பொறுப்பாகும்.

இவ்வாண்டினுள் இப்பகுதியினால் பின்வரும் பணிகள் நிறைவு செய்யப்பட்டன.

- கிழக்கு கொள்கலன் முனைய உட்புகு வாயிலின் இரும்பு கட்டுருவாக்க வேலைகளின் 90% மும் கிழக்கு கொள்கலன் முனைய வெளிவாயில் வேலையின் 10% மும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.
- கிழக்கு முனையத்தில் எரிபொருள் நிரப்பும் நிலையம் நிர்மாணித்தல்.
- கப்பற்சரக்கு நிலையம் -1 நிர்மாணப்பணிகளை மேற்கொள்ளல்.
- காலி துறைமுகத்தில் மேடைத் தராசு ( றுநபைா டீசனைபந) நிர்மாணித்தல்.
- J-09, J-15, மற்றும் J-18 ஆகிய கென்ட்ரி பாரம்தூக்கிகளின் றொலி பீலிப்பாதையின் பழுதுபார்த்தல்.
- J-01, J-02, J-03, J-11 மற்றும் J-16 ஆகிய பாரம்தூக்கிகளின் ஏணி வரிசைகள் பழுதுபார்த்தல்.
- ஜனாதிபதி செயலகத்தை சுற்றி பாதுகாப்பு வேலி அமைத்தல்.
- கொச்சிக்கடையில் அமைந்துள்ள களஞ்சியசாலையை உடைத்து அகற்றுதல்.
- பண்டாரநாயக்க துறைமேடையின் கொள்கலன் சேவை வழங்கலுக்கான சரிவுப்பாதை மேடையை (Ramp & Platform) சீர் செய்தல் மற்றும் நிறுவுதல்.

- திருகோணமலை துறைமுகத்திற்கான களஞ்சியசாலை ஒன்றை அமைத்தல் தூண்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

- தேசிய மற்றும் சர்வதேச பிரதிநிதிகளுக்கு தலைவரினால் நினைவுப்பரிசாக வழங்குவதற்கு 35 துறைமுக (Coxwain Wheels இலட்சனைகள் செய்தல்).

மேற்குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்கு மேலதிகமாக இலங்கை கடற்படைக்கு நங்கூரங்களை கட்டி வைக்கும் சங்கிலிகளின் பரீட்சிப்பு மற்றும் கல்வனைஸ் வேலைகள், பிறைம்மூவர் வண்டிகளுக்கு தேய்ந்துபோன உதிரிப்பாகங்களை இயந்திரசாலை ஊடாக தயாரித்தல், புஸ் வார்த்தல், நீர்ப்பம்பிகளை பொருத்துதல்,பழுதுபார்த்தல் மற்றும் பட்டறைவேலைகள் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பல்வேறு பகுதிகளுக்காக இப்பிரிவின் 07 வேலைத்தளங்களில் மேற்கொள்ளப்பட்டன.

## சிவில் பொறியியல் பகுதி

துறைமுகத்தின் அனைத்து துறைமுக உட்கட்டமைப்பு வசதிகளையும்இ பதவியனியினரின் உத்தியோகபூர்வ சேவை இல்லங்களையும் பராமரித்தல் இப்பகுதியின் முக்கிய பணியாகும். 2017 ஆம் ஆண்டிலும் இவ்விலக்கை அடைந்துகொள்தல் முக்கியமாக மூலதனங்களை வழங்குதல் சிவில் பொறியியல் பகுதியினால் நடைபெற்றன .இதன் பிரதான இலக்குகளின் பணிகளுக்கு மேலதிகமாக பகுதியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த சில அபிவிருத்திப் பணிகளும் இக்காலப் பகுதியினுள் வெற்றிகரமாக் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

### துறைமுக உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பதவியணியினர்களின் உத்தியோகபூர்வ இல்லங்களை பராமரித்தல்

சுவர்களுக்கு மை பூசுதல்இ அன்றாட பழுதுபார்ப்புகள்இ சீர் செய்தல்களிலான் சிறு மாற்றங்களை மேற்கொள்ளலஇ வரிப்புகளை மாற்றுதல் போன்ற பணிகள் அடங்கலாக அலுவலகக் கட்டடங்கள். அமைவுகள் சிறப்பான முறையில் இப்பகுதியின் பராமரிப்பு பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன. மேற்குறிப்பிட்டுள்ள விடயங்களுக்கு மேலதிகமாக கட்டடங்கள் மற்றும் உத்தியோகபூர்வ இல்லங்கள் முறையாக பேணிச் செல்லப்புபடவதற்கு தேவையான மர வேலைகள் குறித்த பிரிவினாலும் மேற்கொள்ளப்பட்டன. 2017 ஆண்டில் இப்பிரிவினால் கொழும்பு மற்றும் ஏனைய துறைமுகங்களின் கப்பலோட்டத் துறையின் அமைவுகள் மற்றும் அனைத்து வெளிச்ச வீடுகளும் பராமரிக்கப்பட்டு தோண்டும் பிரிவினால் துறைமுக ஆழுமும் பேணிச் செல்லப்பட்டன. அனைத்து தரங்களுக்கும் உரிய பதவி அணியினரின் உத்தியோகபூர்வ இல்லங்களும் துறைமுகத்துக்கு வெளியே அமைந்துள்ள சுற்றுலா விடுதிகளினதும் பராமரிப்பு பணிகள் வீட்டுப் பிரிவினாலும் மேற்கொள்ளப்பட்டன. மோசமான காலநிலைகள், ஏனைய இயற்கை சுற்றாடல் மாற்றங்களினால் ஏற்பட்ட பல்வேறு தடைகளையும் கருதாது ஏற்றுக் கொள்ளக் கூடிய அளவில் பாதைகளை பேணிச் செல்வதற்கு பாதைகள் மற்றும் புகையிரத பாதைப் பிரிவினால் உயர் நிலையிலான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஜய கொள்கலன் முனையத்தின் பாராமரிப்பு பிரிவினால ஜய கொள்கலன் முனையத்தின் பாராமரிப்புகளும் மேற்கொள்ளப்பட்டன. ஏனைய பொதுவான துப்பரவு செய்யும் பணிகளுடன் திண்மக் கழிவு முகாமைத்துவம் பொதுசுகாதார பரிசோதகர் பிரிவினால் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வேறாக்கப்பட்டஇ திண்மக்கழிவு முகாமைத்துவ திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் பிரதான பணிகளும் அவர்களினால் நிறைவேற்றப்பட்டன. களஞ்சியசாலைகளை பராமரித்தல் மற்றும் ஏனைய அவசர தேவைப்பாடுகள் பிரதான வேலைப்பரீட்சிப்பு பிரிவினால் மேற்கொள்ளப்படபட்டன. குறிப்பாக ஒவ்வொரு பிரிவினாலும் மேற்கொள்ளப்பட்ட விசேட பணிகள் தவிர்ந்த பாாமரிப்பு மற்றும் மேம்பாட்டு பணிகள் நடைமுறைப்படுத்துதலின் இரு சந்தர்ப்பங்களிலும் அனைத்து பிரிவினாலும் இதற்கான ஒத்துழைப்பும் வழங்கப்பட்டன.

### அபிவிருத்தி வேலைகள்

புதிய அபிவிருத்தப் பணிகள் பொதுவாக அபிவிருத்திப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டாலும் பின்வரும் பணிகள் நிறைவேற்றப்படுதலின போது அனைத்து பிரிவுகளினாலும் கூட்டாக ஒத்துழைப்பு வழங்கின.

- கொள்கலன் கப்பற்சரக்கு நிலையம் - 01 ஐ முற்றாக மீள நிர்மாணித்தல் (சிவில் வேலைகள்) மற்றும் கிழக்கு கொள்கலன் முனையத்தின் கட்டடங்கள் ∴ அமைவுகளை நிர்மாணித்தல்.

- காங்கேசன்துறை மற்றும் திருகோணமலை துறைமுகங்களில் பல்வேறு கட்டுமானப்பணிகள்.

- வெளி செய்திட்டங்களுக்கு தேவையான மீள் நிறுவும் பணிகள்.

## மனிதவள அபிவிருத்தி

### மனிதவளப் பகுதி

மனிதவள பகுதி அனைத்துப் பகுதிகளுக்கும் ஏனைய துறைமுகங்கள் உள்ளடங்கலாக ஆட்களை நியமிப்பதன் மூலம் நிறுவனக் குறிக்கோளினை அடைய முக்கிய பங்குவகிக்கிறது. முகாமைத்துவம் மற்றும் ஊழியர்கள் ஆகிய இரு பிரிவினரும் திருப்திப்படும் வகையில் மனித வள நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் இது நிறைவேற்றப்படுகின்றது.

2017 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் மொத்த வேலையாட்களின் தொகை 9651 ஆகும். இது நிரந்தர, ஒப்பந்த மற்றும் ஏனைய வகையினர் பின்வருமாறு:

| | |
|---|---|
| நிறைவேற்று | 591 |
| நிறைவேற்று அல்லாத | 5,379 |
| தொழில்நுட்பம் | 1,824 |
| தொழில்நுட்பம் அல்லாத | 1,857 |
| **மொத்தம்** | **9,651** |

எனினும், 2017 ஆண்டின் ஆரம்பத்திலிருந்த மொத்த ஊழியர்த் தொகை 9,651 ஆகும். ஆண்டு இறுதியில் இது 9,377 ஆக குறைவடைந்தது. ஒவ்வோர் துறைமுகத்தினதும் ஊழியர்த் தொகையின் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| கொழும்பு துறைமுகம் | 8,625 |
| காலி துறைமுகம் | 351 |
| திருகோணமலை துறைமுகம் | 401 |
| மொத்தம் | **9,377** |

#### 2017 ஆண்டில் துறைமுகத்தினுள் வழங்கப்பட்ட உள்ளகப் பதவியுயர்வுகள்

மனிதவளத்திட்டத்திற்கு அமைய ஆட்சேர்ப்பு நடைமுறையின் மீது தகைமைகளைக் கொண்ட அபேட்சகர்கள் மூலம் உள்ளக வெற்றிடங்கள் நிரப்பப்பட்டன. ஆயினும் தகைமைகளையுடைய விண்ணப்பதாரிகள் நிறுவனத்தினுள் இல்லாத சந்தர்ப்பங்களில் வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

#### 2017 ஆண்டில் வெளிவாரியாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஊழியர்கள் தொடர்பான விபரங்கள்

2017 ஆண்டில் நிரந்தரமாகவும் ஒப்பந்த அடிப்படையிலும் 125 ஊழியர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டனர். கீழ்வரும் அட்டவணையில் விபரமாக காண்பிக்கப்படுகின்றது.

| ஊழியர்களின் வகை | நிரந்தர | ஒப்பந்த | மொத்தம் |
|---|---|---|---|
| நிறைவேற்று | 19 | 4 | 23 |
| நிறைவேற்று அல்லாத | 50 | 7 | 57 |
| தொழில்நுட்பம் | 40 | 1 | 41 |
| தொழிநுட்பம் அல்லாத | 04 | 0 | 4 |
| **மொத்தம்** | **113** | **12** | **125** |

**வெளியேறிய ஊழியர்களின் விபரங்கள்**

2017 ஆண்டில் வெளியேறிய ஊழியர்களின் மொத்தத் தொகை 399 ஆகும். அதன் விபரங்கள் வருமாறு:

| வெளியேறியதற்கான காரணம் | ஊழியர்களின் எண்ணிக்கை |
|---|---|
| ஓய்வூபெறுதல் | 332 |
| இறப்பு | 24 |
| பதவி நீக்கம் | 07 |
| புதவி விலகல் | 20 |
| சேவையை விட்டுச் செல்லல் | 08 |
| வைத்தியகாரணங்களின் மீது ஓய்வு பெறுதல | 02 |
| சேவை முடிவுறுத்தல் | 06 |
| **மொத்தம்** | **399** |

**திடீர் விபத்துக்கள் மற்றும் நட்டஈடு வழங்குதல்**

இலங்கை துறைமுக அதிகார சபையின் ஊழியர்கள் மற்றும் 9 வெளி நபர்கள் உள்ளடங்கலாக மீளாய்வுக்குட்படும் ஆண்டில் ஏற்பட்ட திடீர் விபத்துக்களின் மொத்த எண்ணிக்கை 78 ஆகும். வெளி நபர்கள் இருவர் மரணமடைந்துள்ளதுடன் ஒரு நபருக்கு மாத்திரம் நட்ட ஈடு உரித்தாகும்.

**பணிக்கொடை வழங்குதல்**

இயற்கைக் காரணங்களின் மீது மரணமடைந்த ஊழியர்களில் தங்கி வாழ்வோருக்கு கொடுப்பனவுகளாக ரூபா 529,000/= செலுத்தப்பட்டுள்ளதோடு 2017 ஆண்டில் மேலும் ரூபா 60,000/= செலுத்தப்பட வேண்டியுள்ளது.

**விழிப்புணர்வு மற்றும் ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள்**

மஹபொல துறைமுக மற்றும் கடல்சார் கல்லூரியினால் நான்கு விழிப்புணர்வு ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. நிறுவனத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதும் ஊழியர்களின் புத்தூக்கம் மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிப்பதும் குறித்த நிகழ்ச்சித்திட்டங்களின் நோக்கமாகும்.

**தங்க நாணயங்கள் வழங்கல்**

| நிறை | நாணயங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 01 பவுண் | 24 |
| 01 ¼ பவுண் | 43 |
| 01 ½ பவுண் | 09 |

### வேறு பகுதிகளுக்கு இடமாற்றம் செய்தல் மற்றும் ஏனைய முறைப்பாடுகள்

இடமாற்றங்கள் மற்றும் ஏனைய முறைப்பாடுகள தொடர்பிலான குழுவினால் 2017 ஆண்டில் ஆறு அமர்வுகள் நடாத்தப்பட்டன. ஊழியர்களின் நிபந்தனைகள் மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையில் இடமாற்றங்களை மேற்கொள்வதற்கும் முறைப்பாடுகளை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன.

### ஒழுக்காற்று நடவடிக்கைகள்

ஒழுக்கமான ஆளணியினரை பேணிச்செல்வதற்காக, 2017 ஆண்டில் மனிதவள பகுதியினால் 194 ஒழுக்காற்று விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுகள் பகுதி

நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுகள் பகுதி இலங்கை துறைமுக அதிகாரசபை ஊழியர்களுக்கு சிறந்த வாழ்க்கை தரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்காக வசதிகளையும் வாய்ப்புக்களையும் அளிக்கும் நோக்குடன் செயற்படுகிறது.

### பகுதியின் நிர்வாகம்

நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுப் பகுதி இரு பிரிவுகளாகச் செயற்படுகிறது.

- ♦ பிரதான அலுவலகம்
- ♦ மத்திய சமையலறைப் பிரிவு

நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுப்பகுதியினால் செயற்படுத்தப்படும் நலன்புரி செயற்பாடுகள் வருமாறு:

### பணியாளர்களுக்கான இலவச உணவு வழங்கல்

சுழற்சி முறையில் வேலை செய்யும் வேலையாட்களுக்கு இலங்கை துறைமுக அதிகாரசபை மதிய உணவு/இரவு உணவு மற்றும் தேநீர்/தீன்பண்டங்களையும் அலுவலக ஊழியர்களுக்கு மதிய உணவினையும் இலவசமாக வழங்குகிறது. 2017 இல் 657,343,932/= ரூபா மதிய உணவு/இரவு உணவு மற்றும் தேநீர;/தீன்பண்டங்களிற்காக செலவிடப்பட்டுள்ளது. இலவச உணவினைப் பெற்றுக்கொள்ளாத ஊழியர்களுக்காக ஒரு உணவு வேளைக்கு பதிலாக 100/= ரூபா வழங்கப்படுகிறது.

### ஊழியர்கள் சுகாதாரக் காப்புறுதித் திட்டம்

காப்புறுதியானது செப்டெம்பர் 1 ஆம் திகதி தொடக்கம் அடுத்த வருடத்தில் ஆகஸ்ட் 31 வரையான காலப்பகுதியாகும். அதன்படி, 2016/2017 ஆண்டிற்கான காப்புறுதி வருடம் ஆகஸ்ட் 31 இல் நிறைவுபெற்றது. இது MBSL காப்புறுதிக் கம்பனியினால் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், 2017/2018 ஆண்டிற்கான காப்புறுதி தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் (NITF) மேற்கொள்ளப்படுகின்றது. அதன்படி 2017/2018 ஆண்டிற்கான NITF காப்புறுதி திட்டத்தின் கீழ் பின்வரும் மாற்றங்கள் செய்யப்பட்டன.

01. மருத்துவமனை அனுமதிக்கான காப்புறுதி 100,000/- ரூபா இலிருந்து 200,000/- ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

02. ஒரு நிகழ்விற்காக மட்டும் மருத்துவமனை அனுமதிப்பிற்கான உச்ச காப்புறுதித் தொகை 75,000/- ரூபா இலிருந்து 150,000/- ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

**புலமைப்பரிசில் திட்டம்**

இலங்கை துறைமுக அதிகாரசபை ஊழியர்களின் பிள்ளைகளுக்காக புலமைப்பரிசில் திட்டமானது க.பொ.த (உ/த) மற்றும் பல்கலைக்கழகக் கல்வி என இரு கட்டங்களாக செயற்படுத்தப்படுகிறது. க.பொ.த (உ/த) புலமைப்பரிசில் பெறுவோருக்கு மாதம் 750/- ரூபா படி 24 மாதங்களுக்கு வழங்கப்படும். இப் புலமைப்பரிசிலானது இலங்கை துறைமுக அதிகாரசபையினால் வருடாந்தம் 9,000/- படி 2 வருடத்திற்கு வழங்கப்படும். அவ்வாறே, 2014/2015 ஆண்டுகளில் சாதாரண தரப் பெறுபேறுகளின் அடிப்படையில் 4,626,000/- ரூபா 514 பேருக்கு வழங்கப்பட்டது.

இலங்கை துறைமுக அதிகாரசபை ஊழியர்களின் பிள்ளைகளுக்கு மஹபொல புலமைப்பரிசில் அல்லது பல்கலைக்கழக நிதியுதவி, கிடைக்கப்பெறாத போது பல்கலைக்கழக கல்விக்கு புலமைப்பரிசில் வழங்கப்படுகிறது. இந்த புலமைப்பரிசிலானது 3 - 5 வருடங்களுக்கு வழங்கப்படுவதுடன் வருடத்திற்கு 10 மாதங்களுக்கு கற்கைநெறியின் காலப்பகுதிக்கு ஏற்றவகையில் வழங்கப்படும். வருடாந்தம் 25,000/- ரூபா 3 வருட, 4 வருட, 5 வருட முழுநேரக் கற்கைகளுக்காக வழங்கப்படுகிறது. அதன்படி, 3 வருட பொது பட்டப்படிப்பிற்கு 75,000/- ரூபாவும் 4 வருட அடிப்படைப் பட்டப்படிப்பிற்கு 100,000/- ரூபாவும் 5 வருட மருத்துவ பட்டப்படிப்பிற்கு 125,000/- ரூபாவும் வழங்கப்படும்.

2011/2012, 2012/2013, 2013/2014 மற்றும் 2014 மற்றும் 2015 கற்கைநெறி ஆண்டுகளில் 334 மாணவர்களுக்கு ரூபா 8,350,000/- நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. 2015/2016, ஆண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதுடன் புலமைப்பரிசில் நிதியுதவி பெற 60 மாணவர்கள் தகுதிபெற்றுள்ளனர்.

**ஆயுர்வேத மருத்துவ நிலையம்**

2016 ஆம் ஆண்டு சனவரி 08 ஆம் திகதி தாபிக்கப்பட்ட ஆயுர்வேத மருத்துவ நிலையம் வெற்றிகரமாக செயற்பட்டுவருகிறது. பதிவுசெய்யப்பட்ட நோயாளிகளுக்கு எண்ணிக்கை 1,885. 2017 இல் 8614 நோயாளிகளிற்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. ஆயுர்வேத மருத்துவத்துடன் அக்குபஞ்சர் மருத்துவமும் வழங்கப்படுகிறது. 2017 இல் 400,000/- ரூபா முதலீட்டுச் செலவாக ஆயுர்வேத மருத்துவத்திற்காக ஒதுக்கப்பட்டதுடன் 2,000,000/- ரூபா நிதி ஒதுக்கப்பட்டது.

**வீடமைப்புக் கடன் திட்டம்**

புதிய வீட்டினைக் கட்டுவதற்கு, புதிதாக ஒரு பகுதியை இணைப்பதற்கு அல்லது வீட்டைக் கட்ட காணி வாங்குவதற்கு வீட்டுக்கடன் திட்டத்தின் கீழ் இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிரந்தர ஊழியர்களுக்கு அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியில் 500,000/- ரூபா வரையான வீட்டுக்கடனினைப் பெற்றுக்கொள்ளலாம். இச் செயற்திட்டத்திற்காக வருடாந்தம் 50 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வீட்டுக் கடன்களுக்காக 6% சலுகை வட்டி அறவிடப்படும். 2017 இல் 5 விண்ணப்பங்கள் பெறப்பட்டதுடன் மொத்தமாக 1,500,000/- ரூபா அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியிற்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

**நலன்புரி நடவடிக்கைகளுக்கான பேருந்துகள்**

இப்பிரிவானது யாத்திரை, சுற்றுலா, இலங்கை துறைமுக அதிகாரசபை ஊழியர்களின் குடும்பத்தினரின் மரணச்சடங்கு மற்றும் அவர்களது குடும்பத்தினரின் மரணச்சடங்கு போன்றவற்றில் கலந்துகொள்வதற்காக 05 பேருந்துகள் ஒதுக்கப்பட்டுள்ளன. உள்ளகப் போக்குவரத்திற்காக 3 பேருந்துகள் ஒதுக்கப்பட்டுள்ளன. 2017 இல் சென்ற மொத்தப் பயணங்களின் எண்ணிக்கை 791 ஆகும்.

**சிறுவர் பராமரிப்பு நிலையம் மற்றும் முன்பள்ளி**

2 ½ முதல் தொடக்கம் 05 வயது வரையான பிள்ளைகளை பராமரிப்பதற்கான வசதிகளை வழங்குகிறது. ஜனவரி முதல் செப்டெம்பர் 30 வரையான காலப்பகுதிக்கு சிறுவர்கள்

அனுமதிக்கப்படுவதுடன் மாதாந்தம் ஒரு பிள்ளைக்கு ரூபா 1,300/= கட்டணமாக அறவிடப்படுகிறது.

ஜனவரி தொடக்கம் டிசம்பர் 2017 வரையான காலப்பகுதிக்கு பெறப்பட்ட மொத்தத் தொகை 679,900/- ரூபாவாகும்.

**நூலக வசதிகள்**

இலங்கை துறைமுக அதிகாரசபையானது அதன் ஊழியர்களின் வாசிக்கும் ஆர்வத்தினை அதிகரிக்கவும் அவர்களது திறனினை அதிகரிக்க நடைமுறை அறிவினைப் பெற்றுக்கொள்ள ஊழியர்களினால் பராமரிக்கப்படும் நூலகங்களிற்கு நிதியுதவியினை வழங்குகிறது. இதற்காக 2017 இல் 200,000/- ரூபா அங்கீகரிக்கப்பட்டது, இந்நிதியானது அதிகளவான அங்கத்துவ அடிப்படையில் செயற்பாட்டிலுள்ள 20 நூலகங்களிற்குப் பகிரப்பட்டதுடன் ஓர் நூலகத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி 10,900/- ரூபாவாகும்.

**விஷேட விடுமுறைக்கான கொடுப்பனவுகள்**

ஊழியரொருவர் அவரது விடுமுறைகள் அனைத்தையும் உபயோகித்த பின்னர், சுகவீனம் அல்லது விபத்துக் காரணமாக மருத்துவப் பரிந்துரையின் அடிப்படையில் அவர் வேலைக்குத் தகுதியானவராகும் வரை, 180 நாட்கள் சம்பளத்துடனான விடுமுறைக்கு உரித்துடையவராவார். பிரதான வைத்திய அதிகாரியின் பரிந்துரையின் பெயரில் சம்பளத்துடனான விடுமுறை, சம்பளமின்றி விடுமுறை தீர்மானிக்கப்படும். சனவரி தொடக்கம் டிசம்பர் வரை 92 விண்ணப்பங்கள் பெறப்பட்டதுடன் 181 நாட்கள் அனுமதியளிக்கப்பட்ட சம்பளமின்றிய விடுமுறை 3845 நாட்கள் அனுமதியளிக்கப்பட்ட சம்பளத்துடனான விடுமுறை மற்றும் 7 நாட்கள் சம்பளமின்றிய விடுமுறைகளுக்கு அனுமதியளிக்கப்பட்டது.

**கடலக நூதனசலை**

கடல் நூதனசலையானது வார நாட்களில், ஞாயிறு மற்றும் போயா விடுமுறை தினங்களில் மு.ப 8.00 தொடக்கம் பி.ப 5.00 மணிவரை திறந்திருக்கும். 2017 இல் நூதனசாலைக்கு வருகை தந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 52,318 ஆகும்.

துறைமுகத்தின் வரலாற்றினை எடுத்துக்கூறும் பொருட்கள், பல்வேறுபட்ட பிரதிகள், கடற்பயணம் தொடர்பாகத் துறைமுகத்தில் பாவிக்கப்பட்ட பொருட்கள் மற்றும் வடிவங்கள் நூதனசலையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அதன் கல்விப் பெறுமதி காரணமாக பல பாடசாலை மாணவர்கள், தொலைதூரத்திலிருந்தும் பார்வையிட வருகின்றனர். சிறுபிள்ளைகள், முதியோர் இல்லங்களில் உள்ள வயது முதிர்ந்தோரும் அடிக்கடி வருகை தருவர்.

**ஊழியர்களுக்கான வெகுமதிகள்**

இலங்கை துறைமுக அதிகாரசபையில் 30 வருட சேவைக்காலத்தை பூர்த்தி செய்த அனைத்து ஊழியர்களுக்கும் பெறுமதிமிக்க நினைவுப்பரிசில்கள் வழங்கப்படும். 2014 இலிருந்து, பரிசு வழங்கும் நடைமுறையில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. அதன்படி, மனிதவள பகுதி வழங்கும் தகவலுக்கேற்ப 30 வருடங்களைப் பூர்த்தி செய்த அனைத்து ஊழியர்களுக்கும் பெறுமதிமிக்க நினைவுப்பரிசில்கள் வழங்கும் பொறுப்பானது நலன்புரி மற்றும் கைத்தொழிற் உறவுப் பகுதிக்கு கையளிக்கப்பட்டுள்ளது. அதன்படி, 2017 இல் இப்பரிசிலுக்குத் தகுதிபெற்றிருந்த ஊழியர்களின் எண்ணிக்கை 342 ஆகும்.

**நலன்புரி சிற்றுண்டிச்சாலை**

அதிகாரசபையின் ஊழியர்கள் மற்றும் துறைமுகத்தினைப் பாவிக்கும் ஏனைய நபர்களுக்காக துறைமுகத்தினுள் பதின்மூன்று சிற்றுண்டிச்சாலைகள் தொழிற்பட்டு வருகின்றன. வருடாந்த விலைகோரல்கள் மூலம் சிற்றுண்டிச்சாலைகளைப் பராமரிப்பதற்கான குத்தகைப் பெறுநர்கள் தெரிவு செய்யப்படுவர். 2017 இல் இதன்மூலம் பெறப்பட்ட மொத்த வருமானம் ரூபா 5,498,418/-.

**கதிர்காமத்திலுள்ள சுற்றுலா விடுதி இல. 11**

கதிர்காமத்திலுள்ள சுற்றுலா விடுதியானது இல. 11 ஆனது 06.10.2017 திகதி கொண்ட தலைவரின் சுற்றுநிரூப இல: 29/2017 மூலம் நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுப் பகுதிக்கு கையளிக்கப்பட்டது. 06.10.2017 தொடக்கம் 31.12.2017 வரை இலங்கை துறைமுக அதிகாரசபையின் 321 ஊழியர்களுக்கு தங்குமிட வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

## மருத்துவப் பகுதி

மருத்துவ பகுதியானது ஒருநாளில் 24 மணித்தியாலங்களும் வாரத்தில் 7 நாட்களும் தொழிற்படும்.

ஆறு வைத்தியர்கள், ஒரு பல்வைத்தியர் மற்றும் துணை மருத்துவ பணியாளர் குழுவொன்றினால் வெளிநோயாளர் பிரிவின் சேவைகளுக்கு உதவி வழங்குவதோடு வெளிநோயாளர் சிகிச்சை பல் சிகிச்சை, கதிர்ப்படம், நுஊபு வசதிகள், ஆய்வுகூடம், 24 மணித்தியால மருந்தகம் மற்றும் நோயாளர் காவு வண்டி சேவைகள் போன்ற தொழிற்பாடுகள் நடைபெறுகின்றன. விபத்து மற்றும் அவசர சேவைகள் உடனடியாக வழங்கப்படும்.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் பகுதி வரியாக டெங்கு ஒழிப்பு குழுவின் அங்கத்தவரொருவர் மற்றும் பகுதித் தலைவர்களின் கண்காணிப்பின் கீழ் ஒவ்வொரு பகுதிக்கும் தொடர்புடைய டெங்கு கட்டுப்பாட்டுக் குழுவினால் வாரம்தோறும் துறைமுக வளவுக்குள் டெங்கு நுழம்பு பரவும் பிரதேசங்களை பரீட்சிக்கப்படுகின்றன. ஒவ்வொரு பகுதியினாலும் மாதாந்த அறிக்கையொன்று துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரின் செயலாளருக்கு இலங்கை துறைமுக அதிகாரசபையின் தலைவரூடாக அனுப்பப்படுகின்றது.

ஏற்படுகின்ற சிக்கல்கள் பற்றி கலந்துரையாடுவதற்கு மற்றும் அதற்கான சரியான செயற்பாடுகளை எடுப்பதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை டெங்கு ஒழுப்பு குழு மாதாந்த கூட்டங்களை நடாத்துகிறது.

வாழ்க்கை (பாங்கு) முறை காரணமாக ஏற்படும் நோயின் தன்மைகள் விசேடமாக நீரிழிவு நோய் தடுப்பு தொடர்பில் கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்கள், பகுதிகள் மற்றும் பிரிவுகள் மட்டத்தில் நடாத்தப்பட்டன.

வைத்திய பகுதியின் வளங்கள் பாவனை மிகவும் உயர் நிலையில் இடம்பெற்றுது.

## மஹாபொல துறைமுக மற்றும் கடல்சார் கல்வி கலாசாலை (MPMA)

துறைமுக ஊழியர்கள், துறைமுகத்தினைப் பாவிப்போர் மற்றும் ஏனைய துறைமுக கடல்சார் துறையில் உள்ளவர்களுக்கு பயிற்சிகளை வழங்குதல் மஹபொல துறைமுக மற்றும் கடல்சார் கல்வி கலாசாலை முக்கிய குறிக்கோளாகும். தெரிவுசெய்யப்பட்ட குழுக்களின் அறிவு, திறன், மனப்பான்மையினை மேம்படுத்தும் நோக்குடன் விரிவுரைகள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் நடை முறைபயிற்சி செயற்திட்டங்கள் வடிவமைத்தலையே இந்நிறுவகத்தின் வருடாந்த பயிற்சி நாட்காட்டி கவனத்தில் கொள்கிறது. 2017 இல் உற்பத்தித்திறன் மேம்பாடு, குழு வேலைகள், தொழிநுட்பத்திறன்களை மேம்படுத்தல், வாடிக்கையாளர் சேவைகள், தர மேம்பாடு போன்ற பல செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

சான்றிதழைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வாடிக்கையாளர் சார்பான கற்கைநெறிகள் மூலம் துறைமுக ஊழியர்கள் தமது தகைமை மட்டத்தினைத் தரமுயர்த்தவும் துறைமுக செயற்பாடுகள் குறித்து சிறப்பான தகைமைகளைப் பெறவும் மஹபொல துறைமுக மற்றும் கடல்சார் கல்வி கலாசாலை வழிவகை மேற்கொள்கின்றது.

2017இல் மஹபொல துறைமுக மற்றும் கடல்சார் கல்வி கலாசாலை 3,305 பரீட்சார்த்திகளுக்கு பயிற்சிகளை வழங்கியதுடன் அவை 342,756 மனித மணித்தியாலங்களையும் பூர்த்தி செய்திருந்தன. மஹபொல துறைமுக மற்றும் கடல்சார் கல்வி கலாசாலை ஆனது 158 பல்கலைக்கழக மாணவர்கள், தொழிநுட்பக் கல்லூரி மற்றும் ஏனைய தொழிற்கல்லூரி மாணவர்களுக்கும் தொழிற்பயிற்சிகளை வழங்கியது.

2017 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மொத்த பயிற்சிகளின் எண்ணிக்கை

| **கற்கைகள்** | **பயிற்சிபெற்ற மொத்த பரீட்சார்த்திகள் எண்ணிக்கை** | **முனித மணித்தியாலங்கள்** |
|---|---|---|
| உபகரணங்களைகையாளுதல் | 1,252 | 18,953 |
| கப்பற்சரக்கு கையாளுதல் | 36 | 864 |
| முகாமைத்துவம் | 1,839 | 236,322 |
| தகவல் முறைமை | 463 | 48,093 |
| தொழிநுட்பம் (மின்/கைத்தொழில் பட்டறை) | 575 | 34,652 |
| தீயணைப்பு பாதுகாப்பு, தொழில்சார் சுகாதாரம | 993 | 16,651 |
| கடலகம் மற்றும் மாலுமி | 685 | 18,880 |
| தேசியகைத்தொழில் பயிற்சி அதிகாரியின் பயிலுனர்கள் தொழில் பயிற்சி அதிகாரபை மற்றும் தொழிநுட்பக் கல்லூரி | 101 | 171,080 |
| பல்கலைக்கழக பட்டப்படிப்பை மேற்கொள்வோர் | 57 | 95,760 |
| **மொத்தம் (சேவை நிலைய பயிற்சிஅற்ற)** | **3,305** | **196,596** |
| **மொத்தம் (சேவை நிலைய பயிற்சியுடன்)** | **4,349** | **342,756** |

**புதிய திட்டத்தின் அடிப்படையில் இலங்கை துறைமுக அதிகாரசபை ஊழியர்களின் பதவியுயர்வுக்கான தகைமைகளை பெற்றுக்கொடுத்தல் தொடர்பான ஏற்பாடுகள்**

உரிய கல்வித்தகைமைகள் இல்லாததன் காரணமாக சில துறைமுக ஊழியர்களின் தொழிலானது முன்னோக்கிச் செல்லாமல் பதவியுயர்வுகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இந்நிலைமையினை தவிர்த்து இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு பொருத்தமான வகையில் இவர்களுக்கான தகைமைகளை பூர்த்திசெய்துகொள்வதற்கு மகாபொல துறைமுக மற்றும் கடல்சார் கல்வி கலாசாலை அமைவு ரீதியான நிகழ்ச்சிகள் வடிவமைத்துள்ளன.

மேலும், 2017 இல் நிறைவேற்று அலுவலர்களின் நன்மைக்காக துறைமுக செயற்பாடுகள் முகாமைத்துவ டிப்ளோமா, துறைமுக பாதுகாப்பு முகாமைத்துவ டிப்ளோமா, கணக்கீடு மற்றும் கணக்காய்வு டிப்ளோமா மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா போன்றன நடாத்தப்பட்டன. இலங்கை துறைமுக அதிகாரசபையின் கடலக சுழியோடிகளினதும் பெண் பாரம் தூக்கிகள் செயற்படுத்துனர்களினதும் தேர்ச்சிகளை மேம்படுத்துவதற்கு புதிய நிகழ்ச்சித்திட்மொன்றும் தயாரிக்கப்பட்டன.

**ஒட்டுமொத்த துறைமுக உற்பத்தித்திறனினை மேம்படுத்தல்**

ஒட்டுமொத்த துறைமுக மற்றும் கடல்சார் கலாசாலை உற்பத்தித்திறனினை மேம்படுத்த துறைமுக நடவடிக்கைகளின் வேறுபட்ட தொழில்களில் மகாபொல துறைமுகங்கள் மற்றும் கடல் கல்வி நிறுவகம் திறன் மேம்பாட்டுப் பயிற்சி செயலமர்வுகள் நடாத்தப்படுகின்றன

- ♦ துறைமுக நிதி மற்றும் கணக்கீடு
- ♦ கணக்காய்வு
- ♦ கொள்முதல் மற்றும் களஞ்சிய முகாமைத்துவம்

- இலிகிதர் திறன் விருத்தி மற்றும் நிர்வாகம்
- எழுதுவினைஞர்கள் திறன் மேம்பாடு மற்றும் நிர்வாகம்
- மனிதவள முகாமைத்துவம்
- நன்னோக்கிலான எண்ணப்பாடுகள்
- சுகாதார மற்றும் பாதுகாப்பு விடயங்கள்
- மூலோபாய துறைமுக முகாமைத்துவம்
- மேற்பார்வையாளர்கள், தொழிநுட்ப வல்லுநர்களுக்கான பொறியியல் படம் வரைதல்
- மோட்டார் கட்டுப்பாட்டுச் சுற்று
- மின்சாரவியலாளருக்கான இலத்திரனியல்
- ஓட்டுதல் பயிற்சிநெறி
- கணனிப் பயிற்சிகள்
- உபகரணங்கள் சார்ந்த பயிற்சிகள்

2017 இல் 145 செயற்திட்டங்கள் 4,349 பங்குபற்றுனர்களுக்கு நடாத்தப்பட்டது. கொள்கலன் முனையங்களிலுள்ள ஆட்கள் மற்றும் உபகரணங்களின் பாதுகாப்பினை மேம்படுத்த 933 தனிப்பட்ட டிரக் சாரதிகளுக்க்கு விழிப்புணர்வு செயலமர்வுகள் நடாத்தப்பட்டன. இச் செயற்திட்டம் டிரக் சுழற்சி நேரத்தினைக் குறைத்ததுடன் கொள்கலன் நடவடிக்கைகளில் பாதுகாப்பினை மேம்படுத்தியது.

**உள்நாட்டு மற்றும் சர்வதேச கப்லோட்ட துறைக்கு பங்களிப்பு வழங்குதல்**

மகாபொல துறைமுக மற்றும் கடல்சார் கலாசாலை கடல் பயிற்சிச் செயற்திட்டங்களை வழங்குவதன் மூலம் உலகக் கப்லோட்டத் துறைக்குப் பெரும்பங்காற்றுகிறது. ஆயிரத்திற்கும் மேற்பட்ட இலங்கை இளைஞர்கள் இப்பயிற்சிகளைப் பெற்றதுடன் சர்வதேச கப்பலோட்டத் துறையில் வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொள்கின்றனர், இவற்றில் அதிகமானோர் வேலையற்றோர் மற்றும் உரிமை பெறப்படாதவர்களாவர். 2017 இல் இவ்வாறான 33 செயற்திட்டங்கள் 1,685 பேருக்கு நடாத்தப்பட்டுள்ளன.

**ISO 9001: 2008 சான்றிதழ்**

கப்பலோட்டிகளுக்கான சர்வதேச கடல்சார் அமைப்பு (IMO)/கப்பலொன்றில் வேலை செய்வதற்கு தேவைப்படும் பயிற்சிச் சான்றிதழ் – (Standard Training Certificate for Watch Keeping (STCW)) போன்ற பயிற்சிப் பாடநெறி நடாத்துவதிலான முக்கிய தரக்கட்டுப்பாட்டிற்கான ISO 9001-2008 சான்றிதழ் இலங்கையின் பிரதான கல்வி நிறுவனமான மஹபொல துறைமுக மற்றும் கடல்சார் கலாசாலைக்கு வழங்கப்பட்டுள்ளது. 2017 ஆண்டினுள் மூன்று முகாமைத்துவ மீளாய்வுகளும் நான்கு உள்ளக கணக்காய்வுகளும் நடாத்தப்பட்டுள்ளன.

**நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்துதல்**

மஹபொல துறைமுக மற்றும் கடல்சார் கலாசாலை அதன் செயற்பாடுகளின் போது நவீன தொழிநுட்பத்தை அறிமுகப்படுத்தலின் மூலம் அதன் பயிற்சிப் பாடநெறிகளின் தரத்தினை மேம்படுத்தியுள்ளது. நிறுவப்பட்டுள்ள மெகாரொனிக் விஞ்ஞானகூடத்தின் பயன்பாட்டில் 33 அபேட்சகர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். துறைமுகத்தில் கென்ட்ரி மற்றும் ட்ரான்பர் பாரம்தூக்கி இயக்குபவர்கள் 53 பேர் பயிற்றுவிக்கப்படுவதற்கு கொள்கலன் தாங்கியின் பயிற்சி மாதிரி பயன்படுத்தப்படுகின்றது. கென்ட்ரி பாரம்தூக்கி பயிலுனர் இயக்குபவர்களாக 12 பெண்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

**பயன்படுத்தப்படக்கூடிய ஊழியர் படையணி**

எதிர்கால தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் புதிதாக அபிவிருத்தி செய்யப்படும் துறைமுகங்களின் வேலைகளுக்கு திறன் கொண்ட ஆளணி குழாமொன்றை பேணிச் செல்லும் செயற்பாட்டிலும் மஹபொல பயிற்சி நிலையம் ஈடுபட்டுள்ளது. இந்த நோக்கில் 2017 ஆண்டினுள் துறைமுக இயந்திர இயக்குபவர்கள் 262 பேர் பயிற்றுவிக்கப்பட்டனர்.

**மொழிகள் மற்றும் தகவல் தொழில்நுட்பத்திறனை மேம்படுத்துதல்**

உலகளாவிய வர்த்தகங்களின் போது வாடிக்கையாளர்கள் திருப்திப்படுத்துவது முக்கிய விடயமென்பதால் பாவனையாளர்கள் மிகவும் திருப்தி கொள்வதற்கு ஊழியர்களின் மொழித்தேர்ச்சி அதிகரிக்கப்படுவதற்கும், அவர்களுக்கு தகவல் தொழில்நுட்ப அறிவாற்றலை வழங்குவது தொடர்பிலும் இலங்கை துறைமுக அதிகாரசபை கவனம் செலுத்துகின்றது. மஹபொல பயிற்சி நிலையம் இப்பொறுப்பை ஏற்றுள்ளதோடு அதற்கான 2017 ஆண்டில் பல்வேறு தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சித் திட்டங்களில் 463 ஊழியர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். மேலும் தெரிவு செய்யப்பட்ட 192 அபேட்சகர்களுக்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழியிலான நிகழ்ச்சித் திட்டங்களும் நடாத்தப்பட்டுள்ளன.

**கைத்தொழில் ஒத்துழைப்பு வழங்கல்**

அரச பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்ப கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கற்கை பாடநெறிகளை பூர்த்தி செய்து தொழில்நுட்ப பயிற்சி பெற்றுக்கொடுக்கப்படுவதிலான ஒத்துழைப்பு வழங்கும் செயற்பாட்டில் இலங்கை துறைமுக அதிகாரசபை ஈடுபட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டினுள் பல்வேறு பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பினை மேற்கொண்ட 57 பேருக்கும் மற்றும் துறைசார்ந்த 101 மாணவர்களுக்கும் அவர்களின் பயிற்சிகளை நிறைவு செய்து கொள்வதற்கான சந்தரப்பங்களையும் இலங்கை துறைமுக அதிகாரசபை வழங்கியுள்ளது.

**மஹபொல துறைமுக மற்றும் கடல்சார் கலாசாலை சேவைகளை வழங்கும் கடல்சார் நிறுவனங்கள்**

மஹபொல துறைமுக மற்றும் கடல்சார் கலாசாலை பின்வரும் நிறுவனங்ளுக்கு சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ளது.

- இலங்கைக் கடற்படை
- தொழில்நுட்ப கற்கைகளுக்கான லங்கா நிறுவனம் (தனியார்) லிமிடட்
- சினெக் (Cinec)
- Marecantile Seamen Training Institute Ltd
- UNK Global maritime Institute
- வணிகக் கப்பற்துறை சார்ந்த செயலகம்
- சமுத்திர பல்கலைக்கழகம்

**ஈட்டப்பட்ட வருமானம்**

2017 சனவரி தொடக்கம் டிசம்பர் வரையான காலப்பகுதியில் வெளியாட்களுக்கு கட்டணம் செலுத்தப்பட்ட செயற்திட்டங்களின் மூலம் துறைமுக அதிகாரசபையானது 25,693,560/- ரூபா வருமானத்தினைப் பெற்றுக்கொண்டது. இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஒட்டுமொத்த செயற்பாடுகளை மேம்படுத்தவென வேறுபட்ட பிரிவுகளுக்கு வழங்கப்பட்ட பயிற்சியின் மூலம் 22,529,440/- ரூபா வருமானம் ஈட்டப்பட்டது. இதனால், 2017 ஆம் ஆண்டில் ஈட்டப்பட்ட மஹபொல துறைமுக மற்றும் கடல்சார் கலாசாலை பெற்ற மொத்த வருமானம் 48,223,000/- ரூபாவாகும்.

மஹபொல துறைமுக மற்றும் கடல்சார் கலாசாலையினால் 2017 இல் நடாத்தப்பட்ட இந்தக் கற்கைகளுக்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகை 11,807,856/- ரூபாவாகும்.

**வெளிநாட்டு பயிற்சி மற்றும் புலமைப் பரிசில் சந்தர்ப்பங்கள்**

மீளாய்வாண்டினுள் அதிகாரசபையின் சிரேஷ்ட மற்றும் மத்திய முகாமைத்துவ பதவி வகிக்கும் 102 அதிகாரிகளுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டு அவர்கள் பயிற்சிப் பாடநெறிகளை பின்பற்றுவதற்கும் இலங்கைக்கு வெளியே சர்வதேச அமைப்புக்களினால் நடாத்தப்பட்ட மாநாடுகள் மற்றும் விரிவுரைகளில் கலந்து கொள்வதற்கான சந்தர்ப்பங்களும் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக விளையாட்டுப் போட்டிகளை பிரதிநிதிப்படுத்தும் வகையில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் 50 ஊழியர்கள் வெளிநாடுகளுக்கு சென்றனர்.

## துணைச் சேவைகள்

## தகவல் முறைமைப் பகுதி

கடல்சார் தொழிலில் ஈடுபட்டிருக்கும் நிறுவனமொன்றின் முன்னேற்றத்துக்கான பிரதான சக்தியாகவும் தூண்டுகையாகவும் தகவல் முறைமைப் பகுதி விளங்குகின்றது. எனவே துறைமுகத்தின் கையாளல்களை மேம்படுத்துவதற்கு தகுதியான தகவல் முறைமை தொகுதியும் இலங்கையின் பூகோள அமைவிடமும் ஒன்றுசேர்வதன் மூலம் வலயத்தின் ஏனைய துறைமுகங்களை விட முன்னோக்கி இருப்பதற்கான ஆற்றலை கொழும்பு துறைமுகம் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

புத்தாக்கங்களுக்கான இலத்திரனியல் நுட்பங்களையும் மூலோபாய தகவல் முறைமைகளையும் ஈடுபடுத்துவதன் மூலம் உற்பத்தித்திறனை உயர்த்துவதிலும் பாவனையாளர்களுக்கு தொடர்ச்சியான சேவைகளை வழங்குவதிலும் தகவல் முறைமைப் பகுதி அவர்களது பலத்தையும் போட்டித்தன்மையையும் பயன்படுத்தியுள்ளது. 2017 ஆண்டில் தகவல் முறைமைப் பகுதியினால் மேற்கொள்ளப்பட்டுள்ள பிரதான செய்திட்டங்கள் பின்வருமாறு.

### கப்பற் சரக்கு முகாமைத்துவ தொகுதி

கப்பற்சரக்கு முகாமைத்துவத் தொகுதியூடாக பிரதானமாக இறக்குமதி மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கான சேவைக் கட்டளைகளை தயாரித்தல், கப்பற்சரக்கு பட்டியல்களை ஆவணப்படுத்துதல், இலத்திரனியல் ஊடாக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவதன் மூலம் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பாவனையாளர்களுக்கு செயற்திறனான சேவைகள் வழங்கப்படுகின்றன. SAGT மற்றும் CICT முனையங்களின் நிறை கொள்கலன் (FCL) இறக்குமதியாளர்களுக்கு சேவைக் கட்டளைகளை தயார் செய்வதில் உதவுவதும் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளும் வசதிகளை இலத்திரனியல் தொகுதியின் மூலம் வழங்குவதும் இடம்பெறுகின்றன.

இதற்கு மேலதிகமாக 2018 ஆண்டில் துறைமுக களஞ்சியங்களின் குறை கொள்கலன்களை வினியோகிக்கும் சேவைகள் கப்பற்சரக்கு முகாமைத்துவ தொகுதியின் மூலம் விரிவுபடுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. கோட்டுக் குறியீடுகள் மற்றும் கையில் கொண்டு செல்லக் கூடிய தொலையியக்கி மூலம் நவீன களஞ்சிய முகாமைத்துவ தொகுதியுடன் இலங்கை துறைமுக அதிகாரசபையின் அனைத்து களஞ்சியசாலைகளையும் தன்னியக்க முறையில் செயற்படுத்துவதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இதனூடாக பாவனையாளர்களுக்கு இலத்திரனியல் கொடுப்பனவுகள், இலத்திரனியல் சரக்கு அகற்றுதல்கள், அங்கீகாரங்கள் மற்றும் அனுமதிகள் போன்ற ஏனைய முன்னேற்றகரமான இலத்திரனியல் பாகங்களை உபயோகிக்க கூடியதாக இருக்கும்.

மேற்கூறப்பட்ட செயலாக்க ஆய்வு பூர்த்தி செய்யப்பட்டதுடன் மற்றும் அதிகமான அபிவிருத்திகள் 2017 இல் இலங்கை துறைமுக அதிகாரசபை தேவைப்பாடுகளுக்கு ஏற்ற வகையில் பூர்த்தி செய்யப்பட்டது. 2018 இல் இம்முறைமை அமுலாக்கப்பட உள்ளது.

### பணிகளின் ஆகு செலவுகளை கணிக்கும் தொகுதி

பொறியியல் வேலைத்தளங்களில் நடைபெறும் ஒவ்வொரு வேலைக்கும் செலவாகும் நிதித் தொகையை அடையாளம் கண்டு மேற்பார்வை செய்து பேணிச் செல்வதற்காக குறித்த தொகுதி வடிவமைக்கப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டில் மின் பொறியியல் ஐந்தாவது பிரிவின் இத்தொகுதி முன்னோடித்திட்டமாக அமுல் படுத்தப்படுகிறது. இத்தொகுதி வெற்றிகரமாக பயன்படுத்தப்படுவதுடன் சிவில் மற்றும் பொறியியல் பகுதிகளின் ஒத்துழைப்புடன் மேம்படுத்துவதற்கான ஆரம்ப கலந்துரையாடல் நடைபெற்றது.

**சமையலறை இருப்புக் கட்டுப்பாடு மற்றும் முகாமைத்துவ முறைமை**

மத்திய சமையலறைக்கான சமையலறை இருப்புக் கட்டுப்பாடு மற்றும் முகாமைத்துவ முறைமையானது தினசரி இருப்பு மீதிகளை, இருப்புக்களின் மீழ்கொள்வனவை, சமையலறையுடன் தொடர்புடைய அனைத்து தகவல்களை கண்காணிக்கவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

2017 இல் இத் தொகுதி அமுல் படுத்தப்பட்டதுடன் இது வரை வெற்றிகரமாக செயல் படுகிறது. பாவனைகளின் தேவைகளின் அடிப்படையில் பல கொள்வனவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கொள்வனவு செய்யும் மாதிரிகளை ஒன்றிணைப்பதற்கும் திட்டத்தை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**ORACLE E- வணிகத் தொகுதி**

இலங்கை துறைமுக அதிகாரசபை ஆரம்பத்தில் கொழும்புத் துறைமுகத்தில் நிதி மற்றும் சரக்குக் கட்டுப்பாட்டு முகாமைத்துவ முறைமைக்காக ERP solution, Oracle E-Business Suit நடைமுறைப்படுத்தப்பட்டது. தற்போது இது காலி மற்றும் திருகோணமலைத் துறைமுகத்திற்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

E-Business suite இன் ORACLE நிதி மற்றும் பெறுகைக்கான முகாமைத்துவ தொகுதியினை முறைப்படுத்துவது 2016 ஆம் ஆண்டில் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் அரம்பிக்கப்பட்ட முக்கிய கருத்திட்டங்களில் ஒன்றாகும்.

இக் கணனி சூழல் தொகுதி பிழைகளின்றி தொழிற்பட்டு வருவதோடு அதன் மூலம் நன்மைகளைப் பெற்றுக்கொள்ள நவீன வன்பொருளுடன் கூடிய புதிய தொகுதி ஒன்றிற்கு மாற்ற வேண்டியுள்ளது. அதன் காரணமாக, டிசம்பர் 2017 இல் விலைக் கேள்வி ஆவணங்கள் (System Requirement Specification) தயாரிக்கப்பட்டு கேள்வி விலை விதிமுறை வழங்கல் பகுதிக்கு சமர்ப்பிக்கப்படும்.

**பாதுகாப்புக் கட்டுப்பாடு மற்றும் கணனி மயப்படுத்தப்பட்ட அனுமதி பத்திரங்கள் வழங்கும் தொகுதி**

நடைமுறையிலுள்ள பாதுகாப்புக் கட்டுப்பாடு மற்றும் கணனி மயப்பத்தப்பட்ட அனுமதி பத்திரம் வழங்கல் தொதியான 16 வருடங்களுக்கு முன் அமுல்படுத்தப்பட்டதுடன் வானொலி அலைளை அடையாளம் கணுதல் தொழில்நுட்பம் (RFID) போன்ற நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தொகுதியை முறைப்படுத்துவதற்கு தகவல் முறைமை பகுதி தீர்மானித்துள்ளது. விரிவான ஆய்வின் பின் நடைமுறையிலுள்ள தொகுதியின் எல்லைகள் மற்றும் நவீன வானொலி அலைகளை அடையாளம் காணும் அடிப்படையில் மேம்படுத்துவத்தில் தொகுதிக்கு உதவ வேண்டியவை இனம் காணப்பட்டது. மேலும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பாவனையாளர்களுக்கு கூடிய வசதிகளை வழங்குவதற்கு இணையத்தளத்தோடு தொடர்பு படக்கூடிய மென் பொருளொன்றின் தேவைப்பாடும் உணரப்பட்டது. 2017 இல் இதற்கான பிரேரணையொன்றிற்கு விலைகோரல் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டது. அதற்கேற்ப அதன் அபிவிருத்தி ஆரம்பிக்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டில் இத்தொகுதி அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டது.

**கொள்கலன் முன்னைய முகாமைத்துவ தொகுதி மற்றும் இடர் மீள்வு தளத்தை மேம்படுத்துதல்**

இந்த தொகுதியூடாக முனைய முகாமைத்துவ தொகுதி மற்றும் இடர் நேர் மீள்வு தளம் அதிநவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி அதன் செயற்திறனை அதிகரித்தல், கொள்களன் கையாளல்களை மிகவும் துரிதமாக்குதல், துறைமுக பாவனையாளர்களுக்கு இணையத்தளத்தை அடிப்படையாகக் கொண்ட அசைவானவற்றின் பயன்பாடு, வாயில் தானியங்கி முறை, முனைய தானியங்கி முறை, விசேட முன்னெடுப்புக்கள், பிரதான பயணிக்கப்படும் வழிகள், இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஒட்டுமொத்த கொள்கலன் முகமைத்துவ இயக்கங்களின் உச்சபெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வதற்கு உருவாக்க, புலனாய்வுப் பிரிவு தகவல்களைக் கொண்ட பகுப்பாய்வின் உபகரணங்கள் தன்னிச்சையான வாகன தொகுதி முகாமைத்துவ மாற்றீடுகள் மேற்கொண்டு பொருட்களை வலையமைப்பினுள்

சேர்த்தல் (IOT) பதிப்பு எழுத்துக்களை அடையாளம்காணும் உபகரணங்கள் (OCR) வானொலி அலைவரிசைகளை அடையாளம் காணும் உபகரணங்கள் (RFID) இடங்களை கண்டு பிடிக்கும் தொகுதி (PDS) மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் வர்த்தக உன்னதத்தை உயர்த்துவதற்கான உலக நிலைப்படுத்தலின் தொகுதியை (GPS) அடிப்படையாகக் கொண்ட ஈடுபடுத்தல்கள் அறிமுகம் செய்தலும் நடைபெறும். இந்த உத்தேசித்த முன்னேற்றம் செயன்முறையுடன் துறைமுக பாவனையாளர்கள் இலங்கை துறைமுகத்துடன் மேலும் இலகுவாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு இலங்கை சுங்கத்திற்கு மற்றும் வேறு முனையங்களுக்கு உயர் கணனி இலத்திரனியல் முறையிலான வசதிகளை ஏற்படுத்துவதற்கு இலங்கை துறைமுக அதிகாரபை ஆற்றல் பெறுகின்றது.

**மெய்நிகர் சேர்வர் வன்பொருளை அமுல்படுத்தல்**

பேரழிவு மீட்பு (டி.ஆர்) மற்றும் காப்பு சேவைகள் உயர்ந்தளவில் கிடைக்கக்கூடிய நிலையைப் பேணுவதற்காக, ஐ.எஸ் பிரிவானது இலங்கை துறைமுக அதிகாரசபைக்காக மெய்நிகர் சேவையக வன்பொருள் சூழலை அமுல்படுத்தியுள்ளது.

இந்த செயற்றிட்டத்துடன்,

- ♦ உயர் கொள்வனவுகளைக் கொண்ட இரண்டு சேர்வர்கள் மற்றும் வெவ்வேறான இரண்டு களஞ்சியங்களுடன் இருபது சேர்வர்கள் அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையிலான வன்பொருள் சூழலொன்றை செயற்படுத்துதல்.
- ♦ வெவ்வேறான களஞ்சியங்களை மற்றும் உயர்கொள்ள்ளவுகளை கொண்ட இடர்நேர் மீளடைவு(Disaster Recovery) தன்னியக்க முறையை செயற்படுத்துதல்.
- ♦ ஒவ்வொரு பகுதிக்கும் மூன்றாம் தரப்பின் களஞ்சியமும்(Backup Recovery) தீர்வும் பொருத்துதல்.

2017ஆம் ஆண்டின் அரையாண்டு காலப்பகுதியில் திட்டமிட்டபடி நிறைவேற்றப்பட்டது.

**இலங்கை துறைமுக அதிகாரசபையின் வலைத்தளம் மற்றும் அன்டிரொயிட் மொபைல் பயன்பாடுகள் (Android & Mobile Applications)**

இலங்கை துறைமுக அதிகாரசபையின் உத்தியோகபூர்வ இணையத்தளம் (www.slpa.lk) உடன் கூடிய பாதுகாப்புடன் இலங்கை துறைமுக அதிகாரசபை பற்றிய முக்கியமான வர்த்தக தகவல்களை வழங்குவதற்காக புதிய அன்டிரொயிட் மொபைல் பயன்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

I-Phone, I -Pad, I-Pad touch, அல்லது Mac கணனிகளுக்கான ICloud மொபைல் பயன்பாடுகள் என்பன விரைவில் அறிமுகப்படுத்தப்படும்.

சமூக ஊடக-ஒருங்கிணைந்த மற்றும் மொபைல்-தயார்ப்பதிப்புக்கள் கொண்ட மஹபொல துறைமுக மற்றும் கடல் சார் கலாசாலையின் ஒரு புதிய இணையத்தளம் ஆரம்பிக்கப்பட்டது.

தகவல்கள் அறியும் முறையொன்று (Search Engine) பயன்பாட்டின் போது இலங்கை துறைமுக அதிகாரசபையின் இணையத்தளத்தை பயன்படுத்துபவர்களின் தொகையை அதிகரிப்பதற்குரிய தகவல் அறியும் பொறிமுறையொன்று (Search Engine Optimzation) இதற்கு உள்ளடங்குகின்றது.

**CCTV அவதானிப்பு தொகுதி (துறைமுக கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை தொகுதி)**

துறைமுகத்தின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும் இவற்றை செயற்திறனாகவும் துல்லியமாகவும் அவதானிக்கும் பொருட்டு 2017 ஆண்டில் கமெரா தொகுதியொன்று செயற்படுத்தப்பட்டுள்ளது. துறைமுகத்தின் பாதுகாப்பையும் காப்புப் பிரிவுகளின்

உறுதிப்பாட்டையும் துறைமுக நடவடிக்கைகளை மிகவும் நன்றாக கவனிப்பதற்கும் CCTV அவதானிப்பு தொகுதியொன்று பொருத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

துறைமுகத்தினுள் பூர்வாங்க ஆய்வு மேற்கொள்ளப்பட்டு முதல் கட்டத்தில் கொழும்பு துறைமுகத்திலிருக்கும் அனைத்து வாசல்களும் அவதானிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. தொகுதி தேவைப்பாட்டின் இயந்திர வகைகளின் தீர்மானம் நிறைவு செய்யப்பட்டு விலைகோரல் ஆவணத்தை தயாரிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**ஈ-ஆவணங்கள் (இலத்திரனியல் ஆவண முகாமைத்துவ அமைப்பு முறை)**

ஆவணங்கள் முகாமைத்துவம் மற்றும் தீர்வுகள், ஆவணங்களின் முகாமைத்தும் மற்றும் பகிர்தலைத் திறமையாகவும் துல்லியமாகவும் மேம்படுத்துவதற்குரிய இலக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. மேலும், இலங்கை துறைமுக அதிகாரசபைக்கென (இலத்திரனியல் ஆவண முகாமைத்துவ அமைப்பு முறை மற்றும் வேலைவாய்ப்பு முகாமைத்துவ முறைமைகளை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. முழு துறைமுகத்திற்குமான ஓ.சி.ஆர் (கட்புல தர அங்கீகாரங்கள்) வசதி கொண்ட இலத்திரனியல் ஆவண முகாமைத்துவ அமைப்பு முறை, ஆவணங்களின் நம்பகத்தன்மை, பாதுகாப்பு, பகிர்தல், மற்றும் அறிவுத்தர நிலையுடைய நிறுவனத்தைக் கட்டியெழுப்புதல் ஆகியவற்றை மேம்படுத்துவதில் உதவி செய்கின்றது.

முந்தைய ஆண்டில் பல பிரிவுகளுடன் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆரம்ப கற்கை, பின்னர் தற்போதைய ஆவண முகாமைத்துவப் பொருட்ளை ஆய்வுசெய்த பின்னர் கேள்வி கோரல் ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு 2017 மார்கழியில் கேள்வி கோரல் நடைமுறைக்கு வழங்குவதற்காகச் சமர்ப்பிக்கப்பட்டது.

**புதிய இணையப்படுத்திய சம்பளம் மற்றும் மனிதவள முகாமைத்துவம்**

புதிய மனிதவள முகாமைத்துவ முறைமை அபிவிருத்தியானது மனிதவள பிரிவு மற்றும் நிதிப்பிரிவு ஆகியவற்றின் உதவியுடன் சம்பள செயற்பாடுகளையும் மனிதவளத்தையும் ஒருங்கிணைப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டது. இந்த இணையமானது எளிமையான அணுகுமுறை, கிடைக்கக்கூடிய தன்மை, பயனாளிகளுடனான நட்புரீதியான இடைத்தாக்கங்கள், பாதுகாப்பு மற்றும் கண்காணிப்புக்கள், இலக்கு ஊக்க ஊதியம் மற்றும் ஊக்குவிப்புக் கணிப்புக்களினை உள்ளடக்குதல், சம்பளச் செயற்பாடுகளின் தன்னியக்க செயற்பாட்டிற்காக மேலதிக வலுவான இயந்திரங்கள், ஈ-வரவுப்பதிவுகள், ஈ-விடுகைப்பதிவுகள் என்பவற்றிற்கு வசதியளித்துள்ளது.

**தற்போதிருக்கும் தொகுதிகளை பராமரித்தல்.**

ஈடுபடுத்தும் தொகுதிகள் செயற்படுத்தப்பட்டதன் பின்னர் அதன் மென்பொருள் மற்றும் துணை வன்பொருள்களை பராமரித்து செல்வது தகவல் முறைமை பகுதியின் பிரதான பொறுப்பாகும். எந்தவொரு தகவல் தொகுதியும் நிறுவப்படும் முழு முயற்சியில் சுமார் 60% தொகுதிகளின் பராமரிப்புடன் சம்பந்தப்பட்டிருக்கின்றது. இது தொகுதிகளின் அபிவிருத்தி சுற்றின் நீண்ட செயற்பாட்டுக் கட்டமாக கருதப்படுகின்றது. தொகுதிகளை ஆரம்பிப்பதும் பேணிச் செல்வதும் தகவல் முறைமை பகுதியின் பொறுப்பாக இருப்பதனால் தகவல் முறைமை பகுதிக்கு பொறுப்பளிக்கப்படும் பராமரிப்பு நடவடிக்கைகளின் அளவும் விசேட கவனத்துக்கு உட்படுத்தப்பட வேண்டிய விடயமொன்றாகும்.

மென் பொருள் மற்றும் வன்பொருள் உரிய காலத்தில் பராமரித்து செல்வதில் தகவல் முறைமை பகுதி மேற்கொள்ளும் துரித செயற்பாடுகள் தகவல் தொகுதி இடையூறுகளின்றி தொடர்ச்சியாக செயற்படுவதனை உறுதிப்படுத்த இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு துணை புரிகின்றது. மீளாய்வு ஆண்டில் சேர்வர் வன்பொருள் உள்ளடங்கலாக இருக்கும் தொகுதிகளின் அனைத்து பராமரிப்பு பணிகளையும் இப்பகுதியானது பொறுப்பேற்றது.

## சட்டப் பகுதி

இலங்கை துறைமுக அதிகாரசபையின் மிக முக்கியமான பகுதிகளில் ஒன்றாக சட்டப்பகுதி காணப்படுகின்றது. நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு ஏனைய

பிரிவுகளுடன் இணைந்து செயற்படும் சிறப்புத்துறையை செயற்படுத்துவதுடன் இலங்கை துறைமுக அதிகாரசபையின் செயற்பாடுகள் அனைத்து சட்டங்களுக்கும் விதிமுறைகளுக்கும் இணங்கி நடப்பதை உறுதிப்படுத்துகின்றன. சட்டப்பிரிவு சட்ட ஆலோசனை மற்றும் அறிவுரைகளை வழங்குகின்றன. மேலும், ஏனைய பிரிவுகளால் உருவாக்கப்பட்ட விதிகள், ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைகளை மீளாய்வு செய்தல் ஆகியவற்றை வழங்குகின்றது. மேலும், சட்டப்பிரிவு, ஒப்பந்தம், உடன்படிக்கை, பிணைமுறி பத்திரம், மற்றும் உறுதிகள் (இடமாற்றங்கள், குத்தகைகள், அறிவிப்புக்கள், மற்றும் அடமானங்கள் போன்றவை) தொடர்பான பிற விடயங்களுக்கான வரைபுகள், நிறைவேற்றுதல் ஆகியவற்றை மேற்கொள்ளும்.

சட்டப்பகுதியின் கடமைகளாக குழுப்பத்திரங்கள், அமைச்சரவைக் குறிப்பாணைக் கடிதங்கள், குறிப்புக்கள், மற்றும் சீரான நிர்வாக முடிவை எடுப்பது ஆகியவை அடங்கும். மேலும், சட்டப்பிரிவு இலங்கை துறைமுக அதிகாரசபையின் அனைத்து வழக்குகளையும் ஏற்றுக்கொள்வதற்குக் கூடுதலாக குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக திணைக்களங்கள், பணிப்பாளர்கள், திணைக்களத்தலைவர்கள் மற்றும் ஏனைய பிரிவினரின் சபைக்கு சட்டபூர்வமான அபிப்பிராயத்தை வெளிப்படுத்தி வருகின்றது. சட்டமா அதிபர் திணைக்களத்தின் உதவியுடன் மற்றும் அதிகாரபூர்வமற்ற பட்டியலில் இருந்து ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. மேலும் சட்டப்பிரிவு சட்ட விழிப்புணர்வு மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஊழியர்களின் நோக்குநிலை ஆகியவற்றில் மற்றைய பிரிவுகளுடன் ஒருங்கிணைப்பதன் மூலம் நடைபெறுகின்றது.

மேலும், சட்டப்பிரிவு இலங்கை துறைமுக அதிகாரசபை சட்டத்தின் சம்பந்தப்பட்ட விதிமுறைகளின் கீழ் வெளியிடப்படவேண்டிய கட்டளைகள் மற்றும் ஒழுங்குவிதிகள் தயாரிப்பதன்மூலம் முகாமைத்துவத்திற்கு உதவுவதோடு, இலங்கை துறைமுக அதிகாரசபை இன் வர்த்தகத்திற்குத் தேவையான நிலங்களை கொள்வனவு செய்வதற்கும் உதவுகின்றது. மேலும் சட்டப்பிரிவு, அரச காணிச்சட்டம் (பறிமுதல், மீட்பு), அரச விவகார சட்டம் (பறிமுதல், மீட்பு) ஆகியவற்றிற்கேற்ப அமுல்படுத்துகின்றது. சட்டப்பிரிவானது, செயற்றிட்டம் தொடர்பான விடயங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு பங்களிப்பு வழங்கியுள்ளதுடன் முகாமைத்துவம் மற்றும் வரிச்சலுகையால் நியமிக்கப்பட்ட பல்வேறு குழுமங்களின் உறுப்பினர்களாக இப்பிரிவிற்கு இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் பணியாற்றுகின்றனர்.

சட்டப்பிரிவு 300 இற்கும் மேற்பட்ட தொகையிலான கருத்துக்களை அந்தந்த பிரிவு மற்றும் பகுதிகளுக்கு வழங்குகின்றது. சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்தும் தனியார் சட்ட நிறுவனங்களிலிருந்தும் தேவையான போது சட்டத்தரணிகளின் ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்படும்.

31.12.2017 ஆம் திகதிக்கு, 17 மீயுயர் நீதிமன்ற வழக்குகள், 15 மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குகள், 08 உயர் நீதிமன்ற வழக்குகள், 05 மாவட்ட நீதிமன்ற வழக்குகள், 05 தொழில் நியாய சபை விண்ணப்பங்கள், 164 மனித உரிமை விண்ணப்பங்கள், 98 இணக்க சபை விண்ணப்பங்கள் (தொழில் திணைக்களம்), 04 கைத்தொழில் பிணக்குகள் தீர்ப்பு, 02 வணிக பிணக்கு தீர்ப்பு, 01 பணியாள்கள் இழப்பீடு விண்ணப்பம், 13 நீதவான் நீதிமன்ற வழக்குகள், 02 சுங்க விசாரணைகள் ஆகியவை முடிவுறாத நிலையில் உள்ளன.

## வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவப் பகுதி

இலங்கையின் அனைத்து வர்த்தக துறைமுகங்களினுடைய செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பிற்காக இலங்கைத் துறைமுக அதிகாரசபையினால் தேவைப்படும் எரிபொருள், இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்கள், உதிரிப்பாகங்கள் மற்றும் ஏனைய பொருட்களின் கொள்வனவு (உள்நாடு மற்றும் வெளிநாடு) ஆகியவற்றை இப்பிரிவு உள்ளடக்கியுள்ளது.

**மீளாய்வுக்குட்பட்ட ஆண்டின் போது அனுமதியளிக்கப்பட்ட விலைமனுக்கோரல்களின் எண்ணிக்கை**

| விபரம் | கேள்வி மனுக்கோரல் சபை கூட்டங்களின் எண்ணிக்கை | கேள்வி மனுக்கோரல் சபை அங்கீகாரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| திணைக்கள பெறுகைக்கான குழு (20 மில்லியன் தொடக்கம் 100 மில்லியன் ரூபா வரை) | 13 | 106 |
| பெறுகைக்கான குழு யு (250,000/- ரூபா முதல் 20மில்லியன் வரை) | 49 | 2,240 |
| பெறுகைக்கான குழு டீ (அங்கீகார எல்லை (ரூபா 250,000/- க்கு குறைந்தது | 51 | 4,337 |

வெளிநாட்டு கொள்வனவுகளின் (ஆகுசெலவு மற்றும் கப்பற் கட்டணப்பெறுமதி) இல் 2017 ஆம் ஆண்டின் மொத்த செலவினம்

| | | |
|---|---|---|
| மூலதனமற்ற பொருட்கள் | ரூபா | 291,533,098.26 |
| மூலதனப் பொருட்கள் | ரூபா | 52,627,120.33 |

| | |
|---|---|
| திறக்கப்பட்ட கடன் கடிதங்கள் (DA மற்றும் DP அடங்கலாக) | 86 |
| மின்னஞ்சல் திறக்கப்பட்ட நிதிபரிமாற்றக் கட்டணங்களின் எண்ணிக்கை | 46 |

**2017 இல் வாப்பு பிரிவினால் அகற்றிச் செல்லப்பட்ட பொருட்களின் விபரம்**

| | |
|---|---|
| கப்பற் சரக்குகள் | 72 |
| விமான சரக்குகள் | 61 |
| தபால் பொதி | 05 |

**31.12.2017 இலுள்ள இருப்புக்களின் மொத்தப் பெறுமதி ரூபா – 2,443,641,800.00**

**பிரதான களஞ்சியங்களும் மொத்த இருப்பு கட்டுப்பாடும்**

2016 இன்போது களஞ்சியத்திற்குப் பெறப்பட்ட பொருட்களின் பெறுமதி (மூலதனமற்ற பொருட்கள்) - **ரூபா 1,829,712,236.50**

2016 இன்போது களஞ்சியத்திற்குப் பெறப்பட்ட பொருட்களின் பெறுமதி (மூலதனப் பொருட்கள்) - **ரூபா 381,504,676.00**

பயனாளிகள் பகுதியில் வெளியிடப்பட்ட பொருட்களின் பெறுமதி (மூலதனமற்ற பொருட்கள்)- **ரூபா 1,864,907,514.76**

## பாதுகாப்புப் பகுதி

பாதுகாப்புப் பகுதியின் பிரதான பொறுப்பு இலங்கை துறைமுக அதிகாரசபையால் நிர்வகிக்கப்படும் சகல துறைமுகங்களின் சொத்து மற்றும் மனித வளங்களைப் பாதுகாப்பதோடு சகல துறைமுகப் பயனாளிகளுக்கும் கப்பற்சரக்கு கையாள்தல் சேவை சார்ந்த கப்பல்களுக்கான பாதுகாப்பை வழங்குவதாகும். பாதுகாப்புப் பிரிவு இந்த இலக்குகளை அடைய 24 மணிநேர திறமையான மற்றும் விரிவான சேவையை நடாத்திச் செல்கின்றது.

நாளாந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை செயற்திறனோடு பேணிச்செல்வதுடன் ஏனைய பகுதிகளுடன் இணைந்து துறைமுக அதிகாரசபையின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளை வெற்றிகரமாக்கும் நோக்கோடு ஊழியர் நலன்புரி மற்றும் அபிவிருத்தி மூலம் ஏற்படுத்திக் கொண்ட ஊழியர் புத்தாக்கத்தினோடு பாதுகாப்பு பகுதி 2017 ஆம் ஆண்டில் காட்டிய முன்னேற்றம் கீழ்வருமாறு.

**துறைமுக நுழைவு அனுமதிப்பத்திரம் வழங்குதல்**

துறைமுகப் பாவனையர்களுக்காக அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதன் மூலம் பெறப்பட்ட வருமானம் (அனைத்து வரிகள் உட்பட)

ஆட்கள் மற்றும் வாகனங்களுக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கியதன் மூலம் பெறப்பட்டுள்ள வருமானம் - **ரூபா 391,334,340.11**

தொலைந்த அனுமதிப்பத்திரங்களுக்கு புதிதாக அனுமதிப்பத்திரங்கள் பெறுதலின் தண்டப் பணமாக ஈட்டப்பட்ட வருமானம் - **ரூபா 102,091.89**

எஸ்.ஏ.ஜீ.ரீ, வ/ப கொழும்பு டொக்யாட் மற்றும் சீ.ஐ.சீ.ரீ கம்பனிகளுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டதனால் பெறப்பட்ட வருமானம் - **ரூபா 33,750,953.37**

வருடாந்த அனுமதிப்பத்திரங்களுடன் ரவைகளின் உறைகள் மற்றும் தோள்பட்டிகள் வழங்குதலில் கிடைக்கப்பெற்ற வருமானம் - **ரூபா 48,400.00**

துறைமுகத்தில் மீன்பிடிப்பதற்காக நபர்களுக்கும் வாகனங்களுக்கும் அனுமதி வழங்கியதன் மூலம் பெறப்பட்ட வருமானம - **ரூபா 84,489.84**

2016 க்கு முன்னர் வழங்கிய RPU அனுமதிப்பத்திரங்களின் நிலுவைத் தொகையை உறுதிப்படுத்தியதன் மூலம் பெறப்பட்ட வருமானம் - **ரூபா 1,196,340.00**

புதிய வாகனங்களுக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குவதன் மூலமும் அமைச்சின் அனுமதியுடன் வாகனங்களை மாற்றுவதன் மூலமும் பெற்ற வருமானம்- **ரூபா 107,625,000.00**

அனுமதிகளை வழங்குவதன் மூலம் பெறப்பட்ட மொத்த வருமானம்- **ரூபா 534,141,615.21**

2017 ஆம் ஆண்டில் அனுமதிப்பத்திரங்களை வழங்குவதன் மூலம் பெறப்பட்ட வருமானத்திற்குக் கூடுதலாக நபர்கள் மற்றும் வாகனங்களுக்கான சேவைகளுக்கு முறையே 19639 மற்றும் 4538 இலவச அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளது.

**அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் தொடர்பான புதிய நிகழ்ச்சித்திட்டங்கள்**

- ♦ 05 வருடங்களுக்கான அனுமதிப்பத்திரங்களுக்குப் பதிலாக வருடாந்த புதுப்பித்தல் அடிப்படையில் அனுமதிப்பத்திரங்கள் 2018ம் ஆண்டிலிருந்து அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதற்கு உயர் முகாமைத்துவத்தின் அனுமதியுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, தங்கள் RPU அனுமதிகளைப் புதுப்பிக்காதவர்கள் வளாகத்தினுள் நுழைய மறுக்கப்படுகின்றார்கள்.

- ♦ 2017 இலிருந்து “Biometric” அட்டைகளில்அச்சிடப்பட்ட அனுமதிகளுக்குப்பதிலாக “Media Tag” அட்டைகளில் அச்சிடப்பட்ட அனுமதிப்பத்திரங்களுக்கு பதிலாக இலவச அனுமதிபத்திரங்களை வழங்குவதற்காக ஒப்புதல் பெற்ற 24 நிறுவனங்களுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் இலவச அனுமதி வழங்குவதற்கான செலவு குறைக்கப்பட்டுள்ளது.

மேலும் 128 தனியார் அனுமதிபத்திரங்கள்கள், 53 வாகன அனுமதிபத்திரங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளதோடு முறையே 152 மற்றும் 51 ஒத்திவைப்புக்கள் அகற்றப்பட்டுள்ளன.

**மோட்டார் போக்குவரத்துக் கட்டுப்பாடு**

- துறைமுக வளாகத்தினுள் நடைபெறுகின்ற அபிவிருத்தி நடவடிக்க்களுக்கு ஏற்ப நெடுஞ்சாலைகளில் உள்ள போக்குவரத்து மிகவும் திறமையான மோட்டார் போக்குவரத்துக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் மூலம் வாகன நெரிசல் குறைக்கப்பட்டுள்ளது.

- 2017ல் 69 வாகன விபத்துக்கள் மோட்டார் போக்குவரத்துக் கட்டுப்பாட்டுப்பகுதிக்கு அறிவிக்கப்பட்டன. அதன் மூலம் அபராதமாக விதிக்கப்பட்ட ரூபா 302,878.40 இலங்கைத் துறைமுக அதிகாரசபைக்கு வருமானமாகப் பெறப்பட்டது.

- போக்குவரத்து விதிகளை மீறியதற்காக 114 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. அபராதமாக இருந்து பெறப்பட்ட தொகை ரூபா 234,000.00

- துறைமுகத்தினுள் 181 வழக்குகள் பதிவாகியுள்ளதோடு அதில் துறைமுக 79 ஊழியர்களாலும் 102 வெளிநபர்களாலும் ஏற்பட்டது.

**புதிய தொழினுட்பத்தை அறிமுகப்படுத்தல்**

துறைமுக பிரேவேச அனுமதிப்பத்திரங்களுக்கு (Radio Frequency Indentification) தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதற்கும் “CCTV” “SCANNERS” “DRONE” ஊடாக துறைமுக பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்கு புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதற்கு செயல்முறையொன்றினை தயாரித்தல் தொடர்பாக உரிய பகுதிகளுடன் ஒன்றிணைந்து ஆரம்ப நடவடிக்கைகளை 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதோடு 2018 ஆம் ஆண்டில் இந்நிகழ்ச்சிகள் அமுல்படுத்தப்படவுள்ளது.

**விசாரணை நடவடிக்கைகள்**

பாதுகாப்பு விசாரணை பிரிவினால் விசாரணைகள் நடாத்தப்பட்ட பல்வேறு பகுதிகளினதும் ஊழியர்களாலும் வெளிநபர்களாலும் மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கைகள் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| களவு | - | 15 |
| மதுபானம் தொடர்பான சம்பவங்கள் | - | 29 |
| இலஞ்ச குற்றங்கள் | - | 02 |
| அனுமதிப்பத்திர விதிமுறைகளை மீறல் | - | 06 |
| ஏனைய ஒழுக்காற்றுக்கள் | - | 76 |
| **மொத்தம்** | **-** | **128** |

**பயிற்சி மற்றும் அபிவிருத்தி**

பாதுகாப்புப் பயிற்சிப் பாடசாலை 09 பயிற்சி பட்டறைகளை 27 அமர்வுகள் மூலம் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் சேவைகளை திறம்பட மேம்படுத்துவதற்கும், பாதுகாப்பு ஊழியர்களின் செயற்திறனையும் சேவையின் தரத்தினையும் மேம்படுத்துவதற்கும் அவர்களின் எதிரகாலப் பதவிகளுக்கு தேவையான அறிவை பெற்றுக்கொடுப்பதற்கு 9 பயிற்சி பட்டறைகளும் 27 அமர்வுகளும் பாதுகாப்பு பயிற்சி பாடசாலை மூலம் நடாத்தியுள்ளது. இதன் மூலம் பாதுகாப்பு ஊழியர்கள் 946 பேருக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

அனைத்து துறைமுகங்களின் பங்குபற்றுலுடன் பாதுகாப்பு அதிகாரிகள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். மேலும், பயிற்சி மற்றும் அபிவிருத்தியை வெற்றிகரமாக நடாத்துவதற்கு பாதுகாப்பு பகுதிக்கு முடிந்துள்ளது.

2017ல் பாதுகாப்புப்பிரிவின் வெற்றியானது அனைத்து பாதுகாப்பு ஊழியர்களின் நலன்களை மேம்படுத்துவதன்மூலம் உயர்பாதுகாப்பு அளிக்கப்படும்.

## தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதி (CPRD)

முகாமைத்துவம் மற்றும் ஊழியர்களுக்கிடையிலும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அமைப்புகளோடும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் தோற்றப்பாட்டினை உயர்த்துவதற்கான மிகவும் சிறந்த தொடர்பாடலை ஏற்படுத்தும் நோக்குடன் 2004 ஆண்டில் தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதி ஏற்படுத்தப்பட்டது. எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் துறைமுக செய்திட்டங்களுக்கு உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியாக விரிவான பிரச்சாரம் செய்யப்படுவதற்கான சகல நடவடிக்கைகளையும் இப்பகுதி மேற்கொண்டுள்ளது.

முகாமைத்துவம் மற்றும் ஊழியர்களுக்கிடையிலான தொடர்பாடலை விருத்தி செய்யும் பிரதான நோக்கத்தினை நிறைவேற்றுவதில் தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதி மாதாந்தம் ''தீர்த்த'' பத்திரிகையை பிரசுரித்து இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஊழியர்களுக்கிடையே இலவசமாக வினியோகிக்கும் செயற்பாட்டை வெற்றிகரமாக மேற்கொள்கின்றது. விளையாட்டு, நுண்கலை மற்றும் கருத்தாடல் போன்ற சமூக முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு துறைகளில் திறன்களைக் கொண்ட ஊழியர்களை இதன் மூலம் இனம் கண்டுகொள்ள முடியும். செயற்திறன் மற்றும் உற்பத்தித்திறன் ஆகியவற்றை விருத்தி செய்வதில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் சட்ட விதிமுறைகள் மற்றும் காலத்திற்கேற்ப மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஊழியர்கள் அறிந்துகொள்வதற்கான தளமாகவும் இது அமைகின்றது.

நிறுவனத்தின் தேவைப்பாடுகளுக்கு பதிப்பு மற்றும் இலத்திரனியல் தரவு அறிக்கைகளைக் கொண்ட ஆவண காப்பகமொன்றும் நூலக வசதிகளும் தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதியினால் பராமரித்து செல்லப்படுகின்றன. இலங்கை துறைமுக அதிகாரசபையுடன் தொடர்புபடும் உள்நாட்டு பத்திரிகைகள் மற்றும் ஏனைய அநேகமான சிங்களம், தமிழ், ஆங்கில சஞ்சிகைகளில் பிரசுரிக்கப்படும் பிரசுரிக்கப்பட்ட அனைத்து கணனித் தரவுகளையும் பதிப்பு பிரதிகளையும் இப்பகுதி ஒன்றுசேர்த்து வைத்துள்ளது. எதிர்கால தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்து காலத்துக்குக் காலம் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு தேவைப்படும் காணொளி விவரணத் திரைப்படம் தயாரிப்பதற்கு துறைமுக அதிகாரசபையின் கடந்த மற்றும் நிகழ்கால முக்கிய சந்தர்ப்பங்கள் இலத்திரனியல் கூடத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ளது. புகைப்படங்களினது கைநூலைக் கொண்ட கணனிமயப்படுத்தப்பட்டுள்ள நூலகமும் இப்பிரிவில் உள்ளது.

2017 ஆம் ஆண்டில் ஒன்றிணைந்த துறைமுகங்கள் தொடர்பான சர்வதேச வலையமைப்பின் ஊடாக கடல்சார் ஒத்துழைப்பு மற்றும் பொருளாதார அபிவிருத்தி என்ற கருப்பொருளில் கடல் பிராந்தியத்திலுள்ள 08 நாடுகளின் பங்களிப்புடன் 2017 நவம்பர் 07 ஆம் திகதி முதல் 08 ஆந் திகதி வரை கொழும்பு கிங்ஸ்பெரி ஹோட்டலில் நடாத்தப்பட்ட ஒன்றிணைந்த துறைமுகங்கள் தொடர்பான சர்வதேச வலையமைப்பின் 19 ஆவது மகாநாட்டுக்கு இலங்கை துறைமுக அதிகாரசபை அனுசரணை வழங்கியது. இம்மாநாடு நடைபெற்ற காலத்தில் மாநாட்டின் நடவடிக்கைகளை வெற்றியடையச் செய்வதற்கு ஒருமித்த முயற்சியில் தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதி முக்கிய பங்களிப்பினை நிறைவேற்றியது. அதற்கேற்ப, தொடக்க விழாவின் போது நேரடி ஒலிபரப்பு, விளம்பரப்படுத்துவதற்காகவும் பத்திரிகை மற்றும் இலத்திரனியல் ஊடக நிறுவனங்களை தொடர்புபடுத்துதல் மற்றும் அனைத்து புகைப்படங்கள், ஒலிப்பதிவு நடவடிக்கைகள் அனைத்திற்கும் இப்பகுதியினால் அனுசரணை வழங்கப்பட்டது.

இலங்கை துறைமுக அதிகாரசபை முகாமைத்துவத்தின் ஆலோனையின் கீழ் இலங்கை கண்காட்சி மற்றும் மாநாட்டு மையத்தில் - கொழும்பு (எஸ்.எல்.இ.சி.சி) இரண்டாவது இலங்கை சர்வதேச விமானப்படை, கப்பல் மற்றும் தளபாடங்கள் கண்காட்சியில் செப்டம்பர் 15 முதல் 17 வரை தொடர்பு மற்றும் தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதி ஊடாக தனது பங்களிப்பை உறுதிப்படுத்தியது. தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதி மூலம் இலங்கை துறைமுக அதிகாரசபைக்காக புகைப்படக் கட்டுரைகளின் வரிசை, வர்த்தக கண்காட்சியைப் பார்வையிட்ட பொதுமக்களை ஒப்புக் கொள்வதற்காக மற்றும் கடல்வழி அபிவிருத்தி திட்டங்களின் வீடியோ ஆவணங்களும் உள்ளடங்கியிருந்தது. கண்காட்சி பார்வையிட்ட மக்களுக்கு பிரசுரங்கள் வழங்கப்பட்டன.

முகாமைத்துவத்தின் அறிவுறுத்தல்களுக்கமைய, தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதி ஊழியர்கள் 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை கொழும்பில் இடம்பெற்ற தேங்காய், ரப்பர், தேயிலை வர்த்தக கண்காட்சி – 2017 இல் பங்குபற்றியிருந்தனர். அத்துடன், இது முழுநேரமாக இடம்பெற்றதுடன், பிராந்தியத்தில் பிரதான கடல்சார் மையமாக மாற்றுவதற்காக, வீடியோ ஆவணப்படங்கள் மற்றும் பிரசுரங்கள் ஆகியவை பிரதானமாக மாணவர்களுக்கும், மற்றும் கண்காட்சி பார்வையிட்ட கடல் ஆர்வலர்களுக்கும் வழங்கப்பட்டன.

தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதி, அதிகாரசபையின் செயல்பாடுகள் மற்றும் நிகழ்வுகளை ஒழுங்கமைப்பதில் ஒரு முக்கிய பங்கைக் கொண்டிருந்தது. பல்வேறு நிகழ்வுகள் வடிவமைத்து ஒழுங்கமைப்பதற்காக பத்திரிகைப் பிற்சேர்க்கைகள் வெளியிடப்பட்டன.

இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் மூலம் ஆண்டு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட அனைத்து முக்கிய நிகழ்வுகளுக்கும் பொதுமக்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இலங்கை துறைமுக அதிகாரசபையின் தொடர்பாடல் மற்றும் பகுதி பற்றி பத்திரிகை மற்றும் இலத்திரனியல் ஊடகவியலாளர்களால் வெளியிடப்பட்ட மோசமான அறிக்கையை திறம்பட கையாளுகின்றது. இலங்கை துறைமுக அதிகாரசபையின் தொடர்பு மற்றும் பொதுசன உறவுகள் பகுதி என்பது பல்வேறு பத்திரிகைகளில் பிரசுரிக்கவும், வெளிப்படுத்தவும் அனைத்து ஊடகவியலாளர்களிடமிருந்தும் வீடியோ மற்றும் அச்சுத் தகவல் மற்றும் பத்திரிகை வெளியீடுகளை வெளியிடுவதற்கும் அதன் ஒப்புமை, உற்பத்தித் திறனையும் அதிகரிப்பதற்கும் அங்கீகரிக்கப்படதாக உள்ளது.

இலங்கை துறைமுக அதிகாரசபையால் தகவல் தொடர்பாடல் மற்றும் பொது உறவுப் பகுதியினருக்கு வழங்கப்பட்ட பணிகள், நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள், மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களைச் செய்வதற்கு, தேசிய மற்றும் இதர அங்கீகாரம் பெற்ற தொலைக்காட்சி , வானொலி மற்றும் பத்திரிகை நிறுவனங்கள் இலங்கையின் எதிர்கால சமூக-பொருளாதார அபிவிருத்திக்கு ஆதரவளிக்கும், ஹம்பாந்தோட்டை துறைமுகத்தைப் பற்றி நன்கு அறிந்த மக்களைப் பற்றி பல அம்சங்களையும், ஆவணப்படங்களையும் மற்றும் போட்டிகளையும் ஒளிபரப்பவும் வெளியிடுவதற்கும் வெற்றிகரமாக செயற்பட்டுவருகின்றன. தகவல் தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதி, இந்த பாரிய திட்டம் தொடர்பாக பிராந்திய ஊடகவியலாளர்களுக்கு பல வேலைப்பட்டறைகளை ஒருங்கிணைத்திருந்ததுடன், குறித்த செய்திட்டத்தின் விளைவாக எமது தாய்நாட்டிற்கு ஏற்படப் போகும் சுபீட்சம் வெளிக்காண்பிக்கப்பட்டுள்ளது.

## வளவுப் பிரிவு

இலங்கைத் துறைமுக அதிகாரசபைக்கு சொந்தமான அனைத்து அசையும் மற்றும் அசையாச்சொத்துக்களையும் நிர்வகிப்பது வளவுப்பிரிவின் பிரதான பொறுப்பாகும்.. இப்பிரிவு நில அளவைத் திட்டங்களை அளத்தல், மதிப்பீட்டு அறிக்கைகளைச் சேகரித்தல், சபை அனுமதிகளைப் பெறல், குத்தகை ஒப்பந்தங்கள் கைச்சாத்திடல், குத்தகை வசூலிப்பு மற்றும் நிலம் மற்றும் வளாகத்தின் மற்ற எல்லா நடவடிக்கைகளையும் பூர்த்தி செய்தல் ஆகியவற்றை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

பின்வரும் அட்டவணையில் இலங்கையிலிலுள்ள இலங்கைத் துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமான 10,047 ஏக்கர் நிலங்கள் காட்டப்பட்டுள்ளன.

| **துறைமுகம்** | **நிலம் (ஏக்கர்)** |
|---|---|
| கொழும்பு | 966 |
| காலி | 94 |
| திருகோணமலை | 5,571 |
| ஒலுவில் | 168 |
| அம்பாந்தோட்டை | 2,935 |
| காங்கேசன்துறை | 300 |
| எனையவை | 13 |
| **மொத்தம்** | **10,047** |

மொத்த நிலப்பரப்பான 10,047 ஏக்கரில் 77 வளாகங்கள் கொழும்புத் துறைமுகத்தினைச் சூழவும், 04 காலித் துறைமுகத்தினைச் சூழவும், 04 திருகோணமலைத் துறைமுகத்தினைச்

சூழவும், 03 ஒலுவில் துறைமுகத்தினைச் சூழவும், வெளி நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன.

2017 இல் இலங்கைத் துறைமுக அதிகாரசபை குத்தகையாக ரூபா 1.5 பில்லியன் ரூபா அண்ணளவாக பெற்று அதிகாரச பையின் வருவாயை அதிகரிப்பத்றகு பங்களிப்பு வழங்கியுள்ளது.

2017ல் வளவுப் பிரிவு கைச்சாத்திடப்பட்ட 04 புதிய குத்தகை ஒப்பந்தங்கள் உள்ளன. இலங்கைத் துறைமுக அதிகாரசபை வளாகங்களுக்காக, வளவுப் பிரிவானது கொழும்பு மாநகரசபை மற்றும் நகரசபைகளுக்கு ரூபா 47 மில்லியனைச் செலுத்தியுள்ளது. 2017.09.20 அன்றைய புதிய வீடமைப்புச் சுற்றறிக்கை இலக்கம் 26/2017 ன்படி இலங்கைத் துறைமுக அதிகாரசபை ஊழியர்களுக்கு விடுதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

## உள்ளக கணக்காய்வு மற்றும் நிதி பகுதி

**நிருவாகம் (துறைமுக கணக்காய்வு)**

வருடாந்த கணக்காய்வு வேலைத்திட்டத்தின் ஊடாக உள்ளக கணக்காய்வு பகுதியின் பணிகள் வரிசைப்படுத்தப்பட்டு கணக்காய்வுக் குழு கூட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டு பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. கணக்காய்வுக் குழு பணிப்பாளர் சபைக்கு அவர்களின் நம்பிக்கையான பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் ஒத்துழைப்பை வழங்குகின்றது. கணக்காய்வுக் குழு ஊடாக இலங்கை துறைமுக அதிகாரசபையினுள் பயனான மற்றும் விபரமான உள்ளக கட்டுப்பாட்டு தொகுதியொன்று நடைமுறைப்படுத்துவதை பணிப்பாளர் சபை உறுதிப்படுத்தி உள்ளது. முக்கிய பூர்வாங்க உள்ளக கட்டுப்பாட்டு செயற்பாட்டு முறையாக உள்ளக திட்டம் மற்றும் தற்போதுள்ள கணக்காய்வு வேலைத்திட்டம் மீளாய்வு செய்யப்பட்டு அதிகாரசபையின் நிர்வாகத்தை இன்னும் மேம்படுத்தும் நோக்கில் மேலும் சில முக்கிய நடவடிக்கைகளை குழு நடைமுறைப்படுத்தியுள்ளது.

இலங்கை துறைமுக அதிகாரசபையினது வருமானம்/செலவின துறைகளின் உள்ளக பரீட்சிப்புகள் மற்றும் பொதுவான கணக்காய்வுப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

**உள்ளக பரிசோதனைகள்**
**வருகை**

தொழிலாளர் மற்றும் தொழிலாளரல்லாத ஊழியர்கள் சேவை நிலையத்தில் பிரசன்னமாகி இருப்பது தொடர்பில் திடீர் பரிசோதனைகள், அவசர சுற்றிவளைப்புக் குழுவினால் இரவு/ பகல் வேலைமுறைகளில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன. கடமை நேரத்தில் அனுமதியின்றி சேவை நிலையத்தை விட்டுச் சென்ற ஊழியர்கள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன. இதன் விளைவாக ஊழியர்கள் தமது சேவை நிலையங்களில் தங்கியிருத்தலானது இதன் சிறப்பான முறைக்குட்படுத்தப்பட்டுள்ளது.

**நிதி**

பணம் மற்றும் சிறு பண இருப்பு தொடர்பில் அவ்வப்போது திடீர் பரிசோனைகள் மேற்கொள்ளப்பட்டு மற்றும் முரண்பாடுகள் தொடர்பில் அறிவிக்கப்பட்டன.

**வருமான கணக்காய்வு**

விசேடபணியாக துறைமுகத்தின் வருமானம் கிடைக்கப்பெறுதல்கள் தொடர்பான கணக்காய்வுகள், கணக்காய்வு வேலைத்திட்டத்திற்கேற்ப மேற்கொள்ளப்பட்டு அதனூடாக துறைமுக கட்டணங்கள் குறைவாக செலுத்தப்பட்டவையும் கண்டறியப்பட்டன.

கடன்பட்டோர் கணக்குகள், பிணக்கிற்குரிய சிட்டைகள் மற்றும் நிராகரிக்கப்பட்ட காசோலைகள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டதோடு அவைகளின் வித்தியாசங்கள்

அறிக்கையிடப்பட்டன. தரையிறக்கல் மற்றும் விநியோகப் பிரிவுகள் அன்றாடம் பரீட்சிக்கப்பட்டன.

**செலவினக் கணக்காய்வு**

மூலதன மற்றும் மீண்டு வரும் செலவினங்களும் களஞ்சிய கொடுப்பனவு வவுச்சர்கள் தொடர்பிலும் அடிக்கடி பரீட்சிப்புக்கள் மேலதிகமாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய முறைகேடுகளும் வெளிப்படுத்தப்பட்டன. வாகன ஓட்டக் குறிப்புப் படிவங்களும் வாகன அனுமதி வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களும் பரீட்சிக்கப்பட்டு குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டன. சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் தயாரித்தல் தொடர்பில் தொடர்ச்சியாக கவனிக்கப்பட்டு கண்டறியப்பட்ட வித்தியாசங்கள் சுட்டிக்காட்டப்பட்டன.

**களஞ்சியங்கள் தொடர்பான பௌதீக உறுதிப்பாடுகளைப் பரீட்சித்தல்**

கொழும்பு துறைமுகத்தின் களஞ்சியங்களில் பௌதீகரீதியான உறுதிப்பாடுகளின் பரீட்சித்தல்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டதோடு ஏனைய துறைமுகங்களினது வருடாந்த இருப்பு பரீட்சித்தல்களின் போது ஒத்தாசைகளும் வழங்கப்பட்டன.

பிரதான களஞ்சியங்களின் தொடர்ச்சியான உறுதிப்பாடுகள் பரீட்சிக்கப்படுகையில் களஞ்சியங்களில் இருக்கும் நிரந்தரமாக தேவைப்படாத பொருட்களின் இருப்பு அடையாளம் காணப்பட்டதுடன் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்காக வழங்கல் பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**விசாரணைகள்**

தலைவரின் வேண்டுகோளுக்கு இணங்க, விசேட விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

**இறுதி கணக்குகள்**

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாட்டினை கவனத்திற் கொண்டு அதிகாரசபையின் இறுதிக் கணக்குகளை பரீட்சிப்பதும் இப்பகுதியின் பொறுப்பாகும்.

**முன் கணக்காய்வு**

மீளாய்வாண்டினுள் வைப்புக்களை மீள்செலுத்துதல் மற்றும் துறைமுக கட்டணங்களை கைவிடுதல் தொடர்பில் முன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

**கணக்காய்வுக் குழு**

கணக்காய்வுக் குழுவில் பணிப்பாளர் சபையில் உள்ள பொதுத்திறைசேரியின் பிரதிநிதி மற்றும் பணிப்பாளர் சபையின் பணிப்பாளர்கள் இருவர் இரு பணிப்பாளர் சபையின் உறுப்பினர்கள் அடங்கியுள்ளனர். தொடர்ச்சியான கூட்டங்கள் நடைபெறுவதை உறுதி செய்வதற்காக, கணக்காய்வுக் குழுவின் தலைவராக பொதுத்திறைசேரி பிரதிநிதியை நியமிக்க பணிப்பாளர் சபை முடிவு செய்யப்பட்டது.

கணக்காய்வு குழுவினால் உள்ளக நிருவாக கொள்கைகள் மற்றும் செயற்பாடுகளை மீளாய்வு செய்வதுடன் அக்கொள்கைகளினதும் செயற்பாடுகளினதும் செயற்திறனை தீர்மானித்து உள்ளக கணக்காய்வு அறிக்கை மற்றும் அரசாங்க கணக்காய்வு அறிக்கை மிளாய்வு செய்வதோடு அவர்களின் பரிந்துரைகள் பணிப்பாளர் சபை ஊடாக அமுல் படுத்துவதற்கு பகுதித் தலைவர்களினால் அப்பரிந்துரைகளுக்கேற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

இதன் மூலம் பணிப்பாளர் சபையின் வழிகாட்டல் மீது நிதி மற்றும் செயற்பாட்டு அவதானங்களை அடையாளங்காண்பதற்குரிய செயன்முறை மற்றும் பொறிமுறைகள் அதிகாரசபையிடம் இருப்பதாகவும் இவ்வாறான அவதானங்களை சிறப்பாக திட்டமிடப்பட்டசெயற்பாட்டு திட்டமொன்றின் ஊடாக முகாமைத்துவப் படுத்தி தீர்ப்பதற்கு உறுதி செய்யப்படுகிறது.

ஊழியர்களின் மற்றும் பிற பங்குதாரர்களின் நன்மைக்காக வளங்களின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்காகவும் செயற்திறனை அதிகரிப்பதற்கும் நிதி மற்றும் செயல்திட்ட நடவடிக்கைகள் மற்றும் இது தொடர்பான தற்போதுள்ள அமைப்பு மற்றும் நடைமுறைகளை வலுப்படுத்துவதற்காக பணிப்பாளர் சபைக்கு அறிவிப்பது கணக்காய்வுக்கழுவின் பொறுப்பாகும்.

## ஏனைய துறைமுகங்கள்

## திருகோணமலை துறைமுகம்

**கப்பல் கையாளல்கள்**

**கப்பலில்லிருந்து கப்பலுக்கான (Ship To Ship) கையாளல்கள்**

திருகோணமலை துறைமுகத்தில் கப்பலிலிருந்து கப்பலுக்காக (Ship To Ship) கையாளல்கள் 2015 ஏப்ரல் மாதத்தில் இருந்து செயற்படுத்தப்பட்டன

**கலங்கள்**

திருகோணமலை துறைமுகத்திலுள்ள கலங்கள் பின்வருமாறு

- இழுவைக் கலங்கள் 02. -TTA துறைமேடையில் நங்கூரமிடப்பட்டிருக்கும் இயக்கங்களில் ஈடுபடும்.
- சறுக்கு வழி கலங்கள் 04. -இயக்கங்களில் ஈடுபடும் - 02 இயக்கங்களில் ஈடுபடாத – 02.
- டனக் இழுவைக் கலம் -01 -இயக்கங்களில் ஈடுபடும் TTA துறைமேடையில் நங்கூரமிடப்பட்டிருக்கும்.

## காலி துறைமுகம்

| கப்பல் வகை | கப்பல்களின் எண்ணிக்கை |
|---|---|
| கிளின்கர் | 76 |
| ஜிப்சம் | 04 |
| இரும்புத்தாது (Slag) | 01 |
| பயணிகள் கப்பல் (துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்ட) | 04 |
| பயணிகள் கப்பல் ( வெளியே நங்கூரமிடப்பட்ட) | 02 |
| ஏனையவை | 65 |
| நங்கூரமிடுதல் | 76 |
| துறைமுக எல்லைகளுக்கு அப்பாலான கப்பல்கள் | 8,062 |
| உல்லாசப் படகுகள் | 68 |



# நிதி மீளாய்வு

# ஆண்டறிக்கை 2017

**வருமானம் (சகல துறைமுகங்களினதும்)**

(துறைமுக நடவடிக்கைகள் வெவ்வேறாக) வருமானம் (ரூபா.மில்)

| விபரம் | 2017 | 2016 | விபரம் | 2017 | 2016 |
|---|---|---|---|---|---|
| துறைமுக செயற்பாடுகளிலிருந்து வருமானம் | 36,914 | 36,799 | கப்பலோட்டம் | 8,503 | 7,963 |
| ஏனைய வருமானம் | 8,694 | 7,281 | கப்பற் சரக்கு ஏற்றுதல்/ இறக்குதல் | 17,487 | 18,520 |
| | | | வாப்பு கையாளல் | 5,419 | 5,066 |
| | | | துறைமுக வசதிகள் | 4,235 | 4,021 |
| | | | ஏனைய சேவை இயக்கங்கள் | 1,270 | 1,230 |
| **மொத்த வருமானம்** | **45,609** | **44,080** | **உப மொத்தம்** | **36,914** | **36,799** |

**இயக்க மற்றும் ஏனைய செலவினங்கள் (சகல துறைமுகங்களினதும்)**

ரூபா மில்லியன்

| விபரம் | 2017 | 2016 | (அதிகரித்தல்)/ குறைதல் | % |
|---|---|---|---|---|
| சொத்துக்களை பராமரித்தல் | 1,325 | 1,424 | 99 | 7 |
| எரிபொருள், மின்சாரம் மற்றும் நீர் | 2,149 | 2,076 | (73) | (3) |
| வெளிநாட்டு கடன் மீதான வட்டி | 2,082 | 4,302 | 2,220 | 52 |
| மேலதிக நேரம் | 3,807 | 3,772 | (35) | (1) |
| தேய்மானம் (தவணை முறையில் நிதி செலுத்துதல்) | 5,572 | 5,995 | 423 | 7 |
| சம்பளங்கள் வேதனங்கள் மற்றும் கொடுப்பனவுகள் | 12,582 | 11,952 | (629) | (5) |
| ஏனையவை | 2,664 | 3,483 | 818 | 23 |
| **செலவினம்** | **30,181** | **33,006** | **2,825** | **9** |
| வெளிநாட்டு நாணய மாற்று / (நட்டம்)/ இலாபம் | 2,206 | 10,038 | 7,833 | 78 |
| **வெளிநாட்டு நாணய மாற்று இழப்பு அடங்கலான மொத்தச் செலவினம்** | **32,387** | **43,044** | **10,657** | **25** |

## கொழும்பு துறைமுகம்

2017 ஆம் ஆண்டில் கொழும்பு துறைமுகத்தில் 14,136 மில்லியன் ரூபா வரிக்கு முன்னரான இலாபம் பதிவாகியுள்ளது. 2017 ஆம் ஆண்டின் மொத்த வருமானம் ரூபா 41,325 மில்லியனுடன் 2016 ல் இது ரூபா 39,913 மில்லியனுடன் ஒப்பிடும் போது இது ரூபா 1,412 மில்லியனால் அதிகரிப்பாகும். 2017 ஆம் ஆண்டில் வரிக்கு முன்னரான மொத்த செலவினம் ரூபா 27,189 மில்லியனாக இருந்தது (அந்நிய செலாவணி நட்டம் அடங்கலாக ரூபா 2,161 மில்லியன்), அதேசமயம் 2016 ல செலவானது ரூபா 28,666 மில்லியன (அந்நிய செலாவணி நட்டம் ரூபா 3,533 மில்லியன்) ஆகும். இது 5% குறைவடைதலாகும்.




## காலி துறைமுகம்

2017 ஆம் ஆண்டில் காலி துறைமுகம் ரூபா 628 மில்லியன் வரிக்கு முன்னரான இலாபத்தை பதிவு செய்துள்ளது. 2017 இல் மொத்த வருமானம் ரூபா 1,388 மில்லியன் ஆகும் 2016 ஆம் ஆண்டின ரூபா 1,239 மில்லியனுடன் ஒப்பிடும் போது இது ரூபா 149 மில்லியன் அதிகரிப்பாகும். 2017 ஆம் ஆண்டில் வரிக்கு முன்னரான மொத்த செலவினம் ரூபா 760 மில்லியனாக இருந்தது (அந்நிய செலாவணி நட்டம் அடங்கலாக ரூபா 32 மில்லியன்) 2016 இல் செலவு ரூபா 742 மில்லியன் (ரூபா 44 மில்லியன் அந்நிய செலாவணி நட்டம் அடங்கலாக) ஆகும். இது 2% அதிகரிப்பாகும்.



## திருகோணமலை துறைமுகம்

2017 ஆம் ஆண்டில் திருகோணமலை துறைமுகம் ரூபா 355 மில்லியன் தொகையை வரி அறவிடப்படுவதற்கு முன்னரான இலாபமாக பதிவு செய்துள்ளது. 2017 ஆம் ஆண்டின் மொத்த வருமானம் ரூபா 1,120 மில்லியன் ஆகும். 2016 ல் ரூபா 886 மில்லியன் ரூபா ஆகும். அதிகரிப்பு ரூபா 234 மில்லியன் ஆகும். வரிக்கு முன்னரான மொத்த செலவினம் 2017 ல் இது ரூபா 764 மில்லியன் ஆகும். 2016 ல் செலவு ரூபா 734 மில்லியன ஆகும். இது 4% அதிகரிப்பு ஆகும்.




## ஹம்பாந்தோட்டை துறைமுகம்

2017 ஆம் ஆண்டில் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் ரூபா 1,898 மில்லியன் வரிக்கு முன்னரான நட்டம் பதிவு செய்யப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டின் மொத்த வருமானம் ரூபா 1,776 மில்லியன் ஆகும். 2016 ஆம் ஆண்டில் ரூபா 2,042 மில்லியன் ஆகும். இது ரூபா 266 மில்லியன் குறைந்துள்ளது. 2017 ஆம் ஆண்டில் வரிக்கு முன்னரான மொத்த செலவினம் ரூபா 3,674 மில்லியனாக (அந்நிய செலாவணி நட்டம் அடங்கலாக ரூபா 12 மில்லியன்) இருந்த போதிலும் 2016 இல் செலவினம் ரூபா 12,901 மில்லியன் (அந்நிய செலாவணி நட்டம் அடங்கலாக ரூபா 6,462 மில்லியன்) ஆகும். இது 72% குறைவடைதலாகும்.



இலங்கை துறைமுக அதிகாரசபை மனித மூலதனத்தை பிரதான உந்துசக்தியான அமைப்பென அடையாளம் கண்டுகொண்டுள்ளதுடன், மனித வளத்தை அபிவிருத்தி செய்வதற்கான வழிகளைக் குறிக்கின்ற ஒரு மனிதவள கொள்கையை அறிமுகப்படுத்துவதன் மூலம் இந்த போட்டித்தன்மையான சிறந்த முடிவுகளை மனித வளம் எடுக்கும் நோக்கில் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

மஹபொல துறைமுக மற்றும் கடல்சார் கலாசாலை என்பது மனித வளத்திற்கான பயிற்சி மற்றும் மேம்பாடு ஆகியவற்றில் கவனம் செலுத்துகின்ற பிரதான பயிற்சி நிறுவனமாகும். டிப்ளோமோ பாடநெறிகள் மற்றும் செயலமர்வுகள் கருத்தரங்குகள் மற்றும் நடைமுறை அமர்வுகள் உள்ளிட்ட பல்வேறு பயிற்சித் திட்டங்கள் இந்த கல்வியகத்தில் நடத்தப்படுகின்றன. மேலும் தேசிய அளவிலான தகுதி (NVQ) சான்றிதழ் பெறக்கூடியவாறு செயல்முறை பரீட்சைகளை நடாத்துவதற்கு இந்நிறுவனத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது..

2012 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்திய ஆட்சேர்ப்புத் திட்டமானது, பதவி உயர்வுகளை பெறுவதற்காக உயர் தகுதிகளைப் பெற அனைத்து வகைகளிலும் ஊழியர்களை உற்சாகப்படுத்தியுள்ளது. எனவே, மஹபொல துறைமுக மற்றும் கடல்சார் கலாசாலை இல் பயிற்சி நிகழ்ச்சிகளுக்கான தேவை சமீபத்திய ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளது.

திட்டமிடப்பட்ட மனிதவள கொள்கை, நிர்வாகத்தின் செயல்முறை, ஒழுங்குமுறை நடைமுறை, ஆட்சேர்ப்புத் திட்டம், மனிதவள ஆதாரங்களை பல்வேறு பிரிவுகளின் மனித வளத் தேவைகள் ஆகியவற்றை மறுசீரமைக்கும். மேலும், அனைத்து வகையான மனித வளத்துறை சார்ந்த நடவடிக்கைகள், குறிப்பாக விளம்பரங்களின் போது பாலின சமநிலை மற்றும் பாகுபாடு இன்றிய அல்லாத தன்மை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, அனைத்து வகைகளிலும் இந்த கொள்கை சமமான வாய்ப்பை உறுதி செய்யும்.

# ஒன்றிணைந்த சமூகப் பொறுப்புக்கள்

மீளாய்வுக்குட்படும் ஆண்டினுள் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் ஒன்றிணைந்த சமூகப் பொறுப்புக்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன.

- ♦ க.பொ.த. (சா.்.த) மற்றும் க.பொ.த (உ.்.த) பரீட்சைகளில் மிகவும் சிறந்த முறையில் சித்தி பெற்ற துறைமுக ஊழியர்களின் பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில்கள் வழங்குதல்.

- ♦ துறைமுக ஊழியர்களது சிறு பிள்ளைகளின் நலன்புரி தொடர்பிலான சகல வசதிகளையும் கொண்ட பகல்நேர பராமரிப்பு நிலையம் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

- ♦ சகல வசதிகளையும் கொண்ட துறைமுக தீயணைப்புப் படைப்பிரிவு அதன் பணிகளில் கொழும்பு மாநகர சபைக்கு உதவியுள்ளதுடன் கொழும்பு மற்றும் அண்டிய பிரதேசங்களில் அவசர நிலைமைகளின் போது தீயணைக்கும் நடவடிக்கைகளில் தனது ஒத்துழைப்பையும் நல்கியுள்ளது.

- ♦ முல்லேரியாவிலுள்ள மனநோயாளர் வைத்தியசாலையின் நோயாளர் விடுதியொன்றை பராமரித்தல்.

வர்த்தகத்துடன் தொடர்புடைய சகல தரப்பினர்களினதும் நலனுக்காக வளங்களை வெற்றிகரமாகப் பயன்படுத்தி சம்பந்தப்பட்ட நிறுவனத்தை உரிய வழிகாட்டல்களோடு நிர்வகித்து நடாத்திச் செல்லப்படுவதற்காக அந்நிறுவனத்தினால் ஏற்படுத்தப்படும் ஒட்டுமொத்த செயற்பாடு இதுவாகும். நல்லாட்சி பேணப்படுதல் தொடர்பிலான முக்கிய பொறுப்பு அதிகாரசபையின் தலைவர் மற்றும் அதன் பணிப்பாளர் சபையைச் சார்ந்ததாகும். நிறுவனத்தின் அடிப்படை நோக்கங்களை அடையும் பொருட்டு அதன் செயற்பாடுகள், நிர்வாக மற்றும் உரிய முறையில் செயற்படுகின்றமை. தொடர்பில் அவர்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டியுள்ளதுடன் இதற்கு தொழில்சார் அலுவலர்கள் அவர்களுக்குரிய செயற்பாட்டுத் துறைகளில் பங்களிப்பு வழங்குவதன் மூலம் வசதிகள் செய்தல் வேண்டும். இப்பணியினுள் உள்ளக கணக்காய்வாளர்களுக்கு நிறுவனத்தின் செயலாற்றுகை தொடர்பில் பரீட்சிப்பதற்கும் அங்கீகார நடைமுறைகளிலிருந்து வழுகிச் செல்லும் சந்தர்ப்பங்கள் இருப்பின் அது தொடர்பில் அறிக்கை செய்யப்படுதலின் ஊடாக முக்கிய பணி மேற்கொள்ளப்படுகின்றது. குறிப்பாக இயக்க மற்றும் நிதிசார்ந்த விடயங்களில் எதிர்பார்க்கப்படும் செயலாற்றுகையினை அடையப்பெறுவதற்கான பரிந்துரைகள் உள்ளக கணக்காய்வாளர்களினால் வழங்கப்பட்டு அதனூடாக ஒட்டுமொத்த நல்லாட்சிக்கான பங்களிப்பு செய்யப்படுகின்றது.

நிதிசார்ந்த மற்றும் கையாளல் செயற்பாடுகள் அறிக்கை செய்யப்படும் உயர் நிலை மற்றும் தொடர்ச்சியான தன்மை தொடர்பில் தமக்கு வழங்கப்பட்டுள்ள பணிகள் எவ்வகையில் நிறைவேற்றப்படுகின்றதென்பதை முகாமைத்துவம் பணிப்பாளர் சபையுடன் தொடர்பு கொள்ளும் தகவல்களின் உயர் நிலை, வெளிப்படையான நிறுவனமொன்றினை நடாத்திச் செல்வதற்கு அவர்களின் உயர் அர்ப்பணிப்பு இன்றியமையாததாகும். இதற்கு உயர் நிலையிலான ஒன்றிணைந்த நிர்வாகம் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுவதற்கு அதிகாரசபை உறுதிபூண்டுள்ளது.

அதிகாரசபையின் நிர்வாகம் தொடர்பில் பணிப்பாளர் சபை பொறுப்பு வகிக்கின்றது. சிறந்த நடைமுறைகள் செயற்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கான சட்டதிட்டங்கள், விதிகள், அமைப்பு முறைகள் மற்றும் செயற்பாடுகள் மேம்படுத்தப்படுதலில் குறிப்பிடத்தக்க கவனம் அதிகாரசபையினால் தொடர்ச்சியாக செலுத்தப்படுகின்றது. அதிகாரசபையினால் அதன் நிர்வாகப் பணிகள் தொடர்பான அமைப்பு முறைகள் தொடர்ச்சியான திருத்தங்களுக்கு உட்படுத்தப்படுகின்றன.

நிதி ஆண்டினுள் அதிகாரசபையினால் அனுசரித்து செல்லப்பட்டுள்ள சிறந்த ஒன்றிணைந்த நிர்வாக அடிப்படைகள் பின்வரும் தலைப்புக்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

- ♦ பணிப்பாளர் சபை மற்றும் சபையின் உப குழுக்கள்
- ♦ உள்ளக கட்டுப்பாடு
- ♦ உள்ளக கணக்காய்வு
- ♦ ஒழுக்காற்று விதிமுறைகள்
- ♦ பொது திறைசேரி, நெடுஞ்சாலைகள் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சுடனான தொடர்பு
- ♦ சாசனம் மற்றும் நீதித் தேவைப்பாடுகளுக்கு இணங்கி செயற்படுதல்
- ♦ அரச தொழில் முயற்சிகளின் நல்லாட்சிக்கான வழிகாட்டல்கள்

நிதி அமைச்சின் அரச தொழில் முயற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டிருக்கும் அரச தொழில் முயற்சி நல்லாட்சிக்கான வழிகாட்டல்களில் இனம் காணப்பட்ட சில சரத்துகளிலிருந்து ஒதுங்குவதற்கு துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் நிதி திட்டமிடல் அமைச்சர் ஆகியோரினால் ஒன்றிணைந்து மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளுக்கு அனுமதி வழங்குவதற்கு எடுத்த அமைச்சரவையின் தீர்மானம் பின்பற்றப்பட்டு துறையினுள் உயர் போட்டித்தன்மை மற்றும் செயன்முறையின் அரச துறை நிறுவனமொன்றாக மாறுவதற்கு தேவைப்படும் நெகிழ்வுத்தன்மையும், சுதந்திரமும் உறுதிப்படுத்தும் பொருட்டு நிர்வாகம் தொடர்பான யாப்பொன்று இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நகல்படுத்தப்பட்டுள்ளது.

**பணிப்பாளர் சபையும் சபையின் உப குழுக்களும்**

பணிப்பாளர் சபை தலைவர், உப தலைவர் மற்றும் 07 பணிப்பாளர்களைக் கொண்டிருக்கும். பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் உயர் தொழில் மற்றும் தனிப்பட்ட வகையில் நீதி நெறியுடையவர்களாகவும் அதிகாரசபை ஈடுபட்டிருக்கும் துறையின் அனுபவம் உள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

பணிப்பாளர் சபைக்கு அங்கத்தவர்களைத் தெரிவு செய்தல் கீழ் கண்டவாறு அமையும்.

- துறைமுக அபிவிருத்தி அல்லது துறைமுக இயக்கம் அல்லது சட்டம் அல்லது நிதி விடயங்கள் அல்லது கப்பற்றுறை அல்லது வர்த்தகம் அல்லது பொறியியல் நடவடிக்கைகள் அல்லது, நிர்வாகம், தொழிலாளர் தொடர்பு சம்பந்தமான அனுபவம் மற்றும் ஆற்றலுடையோர் என அமைச்சரினால் கருதப்படுவோரில் தலைவர் உட்பட பணிப்பாளர்கள் 04 பேர் அமைச்சரினால் நியமிக்கப்படுவர்.

- சரத்தின் 13:1 பிரிவின் கீழ் முகாமைப் பணிப்பாளர் அமைச்சரினால் நியமிக்கப்படுவார்.

- நிதி விடயங்கள் தொடர்பிலான அமைச்சரினால் பெயர் குறிப்பிடப்படும் பொதுத் திறைசேரியின் பிரதிநிதியொருவர்.

- சுங்கப் பணிப்பாளர் நாயகம் மற்றும் மீன்பிடி தொடர்பான விடயங்களில் அமைச்சுக்கு பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் பெயர் குறிப்பிடப்படும் பிரதிநிதியொருவர்.

தலைவர் தவிர்ந்த உப சரத்து (1) (அ) அல்லது (1) (இ) யின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள பணிப்பாளர்களிரொருவர் துறைமுக அதிகாரசபையின் உப தலைவராக அமைச்சரினால் நியமிக்கப்பட முடியும்.

தலைவருக்கும், உப தலைவருக்கும், முகாமைப் பணிப்பாளருக்கும் வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் தெளிவாக வெவ்வேறாக விளக்கப்பட்டுள்ளன. நிறைவேற்று தரத்திலல்லாத சகல பணிப்பாளர்களும் ஆழ்ந்த அறிவு மற்றும் முறையான அனுபவங்களின் மீது அதிகாரசபைக்கு சேவைகளை வழங்குவர். இவ்வறிக்கையின் காலப்பகுதியில் பதவி வகித்த அதிகாரசபையின் பணிப்பாளர்களின் பெயர்கள் மற்றும் விபரங்கள் 16-20 ஆம் பக்கங்களில் காட்டப்பட்டுள்ளன.

பணிப்பாளர் சபையின் பிரதான கடமைகளும் பொறுப்புக்களும் பின்வருமாறு

- மூலோபாயமான நோக்கம், கொள்கைகள், குறிக்கோள்கள் போன்றவற்றினை ஸ்தாபிப்பதன் மூலம் கட்டளைகளை வகுத்தல்.

- நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை நிறைவேற்றும் செயற்பாட்டினை மேற்பார்வை செய்தல்.

- போதுமானளவு உள்ளக கட்டுப்பாடு மற்றும் உயர் தரத்திலான நெறியினைப் பேண உத்தரவாதமளித்தல்.

- நோக்கத்தினை அமைத்துக் கொள்வதற்கான வழிகாட்டல், விதிமுறைகளை தயாரித்தல் மற்றும் அதன் செயற்பாட்டிற்கு உத்தரவாதமளித்தல்.

- சகல பிரதான வர்த்தக நடவடிக்கைகளின் இடர்பாடு நிலைமைகளை இனம்கண்டு தகுந்த போதுமான கட்டுப்பாடு பேணல், இடர்பாடு நிலைமைகள் தொடர்பில் காலத்திற்கேற்றவாறு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான குறித்த நிலைமை அறிக்கை செய்யப்படும். மேற்பார்வை செயல்முறை சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றதென்பதில் உத்தரவாதமளித்தல்.

பணிப்பாளர் சபை தொடர்ச்சியாக கூட்டங்களை நடாத்துவதோடு மீளாய்வுக்குட்படும் வருடத்தில் பணிப்பாளர் சபையானது 15 முறை கூடியது. பணிப்பாளர் சபையின்

செயற்பாடுகள் முன்னெடுத்துச் செல்லப்படுவதற்குத் தேவையான விபரங்கள் காலத்திற்கேற்ப பெற்றுக் கொள்ள முடியும். பணிப்பாளர் சபையின் செயலாளர் தலைவருடன் கலந்தாலோசித்து நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்படுவதோடு ஒவ்வொரு பணிப்பாளர் சபையின் கூட்டத்திற்கு முன்னர் எல்லா பணிப்பாளர்களுக்கும் விபரமான அறிக்கை அனுப்பி வைக்கப்படும். பணிப்பாளர் சபையில் கலந்து ஆலோசிப்பதற்குள்ள ஏனைய விடயங்களில் இயக்கம், நிதிச் செயற்பாட்டு சுட்டெண்களை மீளாய்வு செய்தல், பிரதான மூலதன செலவினத் திட்டம் மற்றும் பிரேரணைகள் அதன் வரையறையினுள் அங்கீகரித்தலும் அடங்கிருந்தது.

முன்வைக்கப்பட்ட எல்லா பரிந்துரைகள் சம்பந்தமாக, பணிப்பாளர் சபையின் இறுதி அனுமதி கிடைக்கப்பெறுதலுக்குட்பட்டதாக சில பொறுப்புக்கள் தொடர்பில் செயற்படுவதற்கு கணக்காய்வுக் குழுவிடமும் முகாமைத்துவ குழுவினையொத்த உப குழுக்களிடமும் கையளிக்கப்பட்டன.

**முகாமைத்துவக் குழு**

தலைவர், உப தலைவர் முகாமைப் பணிப்பாளர் மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளர் அடங்கலாக பணிப்பாளர் சபையின் 04 அங்கத்தவர்கள் உட்பட முழு நேர 07 பணிப்பாளர்கள், ஹாபர் மாஸ்டர் ஆகியோர் முகாமைத்துவக் குழுவின் அங்கத்தவர்களாக செயற்பட்டனர்.

அன்றாட நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் கையாளல் நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்படுகையில் வெற்றிகரமான வர்த்தக நிறுவனமொன்றாக மனிதவளம் உள்ளிட்ட வளங்களின் உச்ச பயன்பாடு பெறப்படுவதற்கும் துறைமுக நுகர்வோர்களுக்கும் ஏனைய சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கும் வழங்கப்படும் சேவைகளின் தன்மை உயர்த்தப்படுவதற்கும் முகாமைத்துவ குழு பல்வேறு பாகங்கள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொண்டது.

அதன் கூட்டங்களின் போது சகல கொள்கை சார்ந்த விடயங்கள் போன்று தீர்மானங்கள் நடைமுறைப்படுத்துதற்கு முன்னர் அவை பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மற்றும் உடன்பாடு பெறுவதற்கு முன்னரும் துல்லியமாக பரீட்சித்துப் பார்க்கப்பட்டன. தீர்மானங்கள் முன் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டன. இச்செயற்பாடுகள் தாமதங்களின்றி வெற்றிகரமாக நிறைவேற்றும் பொருட்டு முகாமைத்துவக் குழுவினால் மாதத்திற்கு இருமுறை கூடி தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும். முகாமைத்துவக் குழுவினால் இவ்வருடத்தினுள் 08 கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

**கணக்காய்வுக் குழு**

பணிப்பாளர் சபையின் அங்கத்தவரான பொது திறைசேரியின் பிரதிநிதி மற்றும் பணிப்பாளர் சபையின் இரண்டு அங்கத்தவர்களையும் இக்குழு கொண்டுள்ளது. 2017 டிசெம்பர் மாதம் இக்குழு மீண்டும் நியமிக்கப்பட்டது.

கணக்காய்வுக் குழுவினால் கொள்கைகள் மற்றும் உள்ளக கட்டுப்பாடு விதிமுறைகளின் வெற்றிகரமான செயற்பாடு மீளாய்வு செய்யப்பட்டு செயற்திறன் உறுதிப்படுத்தப்படும். உள்ளக கணக்காய்வு அறிக்கை மற்றும் அரசாங்க கணக்காய்வுக் கடிதங்கள் பரிட்சித்துப் பார்க்கப்பட்டு அவைகளின் பரிந்துரைகள் பகுதித் தலைவர்களினால் அனுசரிக்கப்படும்வாறு பணிப்பாளர் சபை ஊடாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதேபோன்று பணிப்பாளர் சபையின் வழிகாட்டலின் கீழ் அதிகாரசபைக்கு நிதியினாலும் இயக்க செயற்பாடுகளினாலும் நிலவும் இடர்பாடுகள் சிறந்த முறையிலான வரைவிலக்கண செயற்பாடுகளினூடாக அடையாளம் காண்பதற்கும் அவ்வாறான இடர்கள் முகாமைத்துவம் செய்யப்படுவதை உறுதிப்படுத்தும் பொறிமுறையொன்றினை அதிகாரசபை கொண்டுள்ளதனை முகாமைத்துவக் குழு உறுதிப்படுத்துகின்றது.

ஊழியர்கள் மற்றும் துறைமுக நடவடிக்கைகளுடன் தொடர்புடைய நபர்களினது நலன்களின் வினைத்திறன் மேம்படுத்தப்படுவதற்கும் வளங்களினது உற்பத்தித் திறன் உயர்த்தப்படுவதற்குமான நிதி மற்றும் கையாளல் தொடர்பில் நிலவும் விதிகள், முறைமைகள் வலுப்படுத்தப்படுவதற்காக நாள் தோறும் பணிப்பாளர் சபைக்கு அறிக்கை செய்தல் இக்குழுவின் பொறுப்பாகும்.

**உள்ளக கட்டுப்பாடு**

எந்தவொரு அமைப்பிலும் செயற்திறன் மிக்க முகாமைத்துவத்திற்காக திறனாக இயங்கக் கூடிய உள்ளக கட்டுப்பாடு முறையொன்று இருப்பது அவசியமாகும். அதிகாரசபையின் உள்ளக கட்டுப்பாட்டு செயற்பாடுகளின் மீளாய்வு தொடர்பான சகல பொறுப்பும் பணிப்பாளர் சபையைச் சாரும். பின்பற்றப்பட வேண்டிய கொள்கை முறைகள் பற்றியதில் விரிவான ஒழுங்கு விதிகள் அதிகாரசபையினால் தயாரிக்கப்பட்டுள்ளன. அவை அடிக்கடி மீளாய்வு செய்யப்பட்டு முறைப்படுத்தப்பட்டன. வர்த்தக ரீதியான நோக்கங்களை அடைவதற்கு இடையூறாக இருக்கும் இடர்களுக்கு முகம் கொடுப்பதற்காக செயற்பாட்டு முறையொன்று திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய அதிகாரசபையின் சொத்துக்களை அனுமதியின்றி பாவித்தல், கைமாறுதலைத் தவிர்த்தல், முறையான அறிக்கைகளைப் பேணுதல் மற்றும் நிகழும் தகவல்களின் பிழையின்மை தொடர்பாக தேவையான அளவு சான்றுகளையும் இக்குழு வழங்கும்.

அதிகாரசபையின் அமைப்புக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களின் மூலம் அதன் திறன் நேர்மைத் தன்மை, சீரிய நிலைமை மற்றும் சிறந்த தொடர்பாடல் சூழல் பேணப்படுதலின் அதிகாரசபையின் அர்ப்பணிப்புடனான செயற்பாடு உள்ளக கட்டுப்பாட்டிற்கு உறுதுணையாகும்.

**உள்ளக கணக்காய்வாளர்கள்**

பூரண தகுதி வாய்ந்த பட்டயம் பெற்ற கணக்காளரொருவரினால் கணக்காய்வுப் பகுதியின் தலைமை வகிக்கப்படுகின்றது. இப்பகுதி, பூரண சுதந்திரமாக இயங்குகின்றது. தலைவருக்கும் கணக்காய்வுக் குழுவுக்கும் நேரடியாக அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

தலைவரினதும் கணக்காய்வுக் குழுவின் அறிவுரைகளுக்கும் இணங்க இப்பகுதிக்குரிய விடய பணிகள் தயாரிக்கப்படுகின்றன. விடய உள்ளடக்கம் சம்பந்தப்பட்ட திருத்தங்களுக்காக தொடர்ச்சியாக மீளாய்வு செய்யப்படுகின்றன. பிரதானமாக முழு உள்ளக கட்டுப்பாடு தொகுதி கணக்காய்வுப் பகுதியினால் மேற்பார்வை செய்யப்படுகின்றது. அதேபோல் கணக்காய்வுக் குழு தேவையான ஒத்துழைப்பை வழங்குகின்றது. உள்ளக கணக்காய்வானது, உள்ளக கட்டுப்பாடு முறைகளின் வினைத்திறன் மற்றும் துரிதத்தன்மை தொடர்பான குறிக்கோள்கள் வெளிக்கொணரப்பட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்காக செயற்பாட்டுத் திட்டங்கள் மதிப்பிடப்படும்.

**ஒழுக்கச் சட்ட விதிகள்**

ஏற்றுக்கொள்ளக் கூடிய உயர் மட்ட ஒழுக்க நடைமுறை பேணப்படுதலுக்கு வழிகாட்டுவதற்காக ஒழுக்க விதிமுறைகள் விதிக்கப்பட்டுள்ளன. சகல பணிப்பாளர்கள், பகுதித் தலைவர்கள் மற்றும் ஊழியர்களினால் தமது அன்றாட கடமைகள் நிறைவேற்றப்படுகையில், தமது செயற்பாடுகளிலும் அதிகாரசபையின் புகழ் நாமத்திற்கும் தோற்றப்பாட்டிற்கும் பாதிப்பேற்படுத்தும் சந்தர்ப்பங்களில் உயர் நிலையிலான ஒழுக்க நெறியுடன் நேர்மையாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதலை அதிகாரசபை எதிர்பார்க்கின்றது.

ஒழுக்கச் சட்ட விதிகளின் அடிப்படைகள்;

- சகல நடவடிக்கைகளின் போது நேர்மை, நியாயம் மற்றும் பக்க சார்பின்மை பேணுதல்
- சட்டம் பற்றி அறிந்திருத்தல் மற்றும் அதற்கு கீழ்ப்படிதல்
- நிறைவேற்றப்படும் சகல நடவடிக்கைகள் தொடர்பிலும் அந்தரங்கத்தன்மை.
- அதிகாரசபைக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் அல்லது தீய விளைவுகள் ஏற்படக்கூடியவாறு செயற்படுவதைத் தவிர்த்தல்.

**அனுகூலமான திட்ட வரம்பு மற்றும் சாசன சட்ட தேவைகளுக்கு உட்படல்**

எல்லா சாசன மற்றும் சட்ட தேவைகளுக்கு ஏற்ப செயற்படுவதானது இலங்கை துறைமுக அதிகாரசபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்றாகும். இந்நோக்கத்தினை முதன்மையாகக் கொண்டு அதிகாரசபையானது எல்லா சாசன மற்றும் சட்ட தேவைகளுக்கும் ஏற்ப

செயற்படுவதை உறுதிப்படுத்துவதற்கு நிதி மற்றும் உள்ளக கணக்காய்வு பகுதிகள் ஊக்கத்துடன் செயற்படுகின்றன. அதற்கு மேலதிகமாக சட்டப் பகுதி அதிகாரசபையின் வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் ஏனைய கருமங்கள் சட்ட நியதிகளுக்கு ஏற்ப இடம்பெற உறுதிப்படுத்தப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கின்றது.

**துறைமுகங்கள், கப்பற்றுறை அமைச்சு மற்றும் நிதியமைச்சின் பொது திறைசேரியுடனான தொடர்பு**

உரிய வழியில் மற்றும் மூலோபாயமான நோக்கத்தினை அடைந்து கொள்வதற்கு பணிப்பாளர் சபைக்கு வழிகாட்டும் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர், அமைச்சின் செயலாளர், மூலோபாய தொழில் முயற்சி முகாமைத்துவ (ஞநுஆயு) நிறுவனத்துடன் தொடர்ச்சியான கலந்துரையாடல்களை மேற்கொள்கின்றனர். அதற்கு மேலதிகமாக நிதி அமைச்சின் பொது திறைசேரியின் தேவைக்கேற்ப மூன்றாண்டு காலத்திற்கான வர்த்தகத் திட்டம், நிதி மற்றும் ஏனைய இயக்க செயற்பாட்டு அறிக்கை உள்ளடங்கலான முழுமையான அறிக்கைகள் காலாண்டு அடிப்படையில் அதிகாரசபையினால் முன்வைக்கப்பட்டன.

**குறிப்பிடப்பட்ட பங்குதாரர் தொடர்பான வெளிப்பாடு**

இலங்கை துறைமுக அதிகாரசபையுடன் கொடுக்கல் வாங்கல்கள் செய்யும் தரப்பினர் சம்பந்தமாகவும் தனிப்பட்ட அக்கறை அல்லது உறவு தங்களிடத்தில் இல்லையென பணிப்பாளர் சபை உறுதிப்படுத்தி அறிவிக்கின்றது.

**பொறுப்பு**

இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிதி அறிக்கைகள் அதிகாரசபையின் குறிப்பிட்ட நடவடிக்கைகள் தொடர்பில் உண்மை மற்றும் நியாயத் தன்மையினைப் பிரதிபலிப்பதெனவும் அவ்வறிக்கையானது ஏற்றுக்கொள்ளப்பட்ட தேவைகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளதென்பதும் பணிப்பாளர் சபையின் கருத்தாகும்.

**எதிர்காலம்**

உண்மைப் பெறுமதியுடன் ஒட்டுமொத்த திரட்டிய நிர்வாகம் நிலைத்து நிற்பதற்கு கண்மூடித்தனமான திருப்தியடையக்கூடிய முறைகள் மற்றும் கொள்கைகள் போன்றவற்றில் அன்றி உண்மையான முறையில் அனைத்து பங்காளர்களினதும் நம்பிக்கையினை வெல்லக் கூடிய உயர்ந்த செயல்பாட்டுடன் நியாய முறையில் பேணிச் செல்வதன் மூலம் நிலை நாட்டமுடியும் என்பதை இலங்கை துறைமுக அதிகாரசபை நம்புகின்றது.



# துறைமுக புள்ளிவிபரங்கள்
# ஆண்டறிக்கை 2017

## கொழும்பு துறைமுகம்

**துறைமுக பரிமாணம்**

**துறைமுக பிரதேசம்**

| | |
|---|---|
| துறைமுக தடாக பிரதேசம் | 184.6 ஹெக்டயார் |
| வட மேல் அலைதாங்கியின் நீளம் | 810 மீட்டர் |
| வட கிழக்கு அலைதாங்கியின் நீளம் | 330 மீட்டர் |
| மேற்கு நுழைவாயில் | 230 மீட்டர் X 16 மீட்டர் |
| வடக்கு நுழைவாயில் | 190 மீட்டர் X 13 மீட்டர் |

**சேவைக் காலம்**

வருடத்தின் சகல நாட்களிலும் 24 மணித்தியால சேவை அடிப்படையில் கொழும்பு துறைமுகம் இயங்குகிறது.

**2016 இல் கையாளப்பட்ட கப்பல் சரக்குகளின் அளவு**

| | |
|---|---|
| கொள்கலனிலிடப்பட்டவை | 89.7% |
| பிரித்த மொத்தம் | 0.9% |
| உலர் மொத்தம் | 2.8% |
| திரவ மொத்தம் | 6.6% |

## புதிய கொழும்பு தெற்கு துறைமுகம்

**துறைமுகப் பிரதேசம்**

| | |
|---|---|
| துறைமுக தடாக பிரதேசம் | 192.0 ஹெக்டயார் |
| தென்மேற்கு அலைதாங்கியின் நீளம் | 5,140 மீட்டர் |
| வடமேற்கு அலைதாங்கியின் நீளம் | 1,550 மீட்டர் |
| பிரதான நுழைவாயில் | 570 மீட்டர் X 18 மீட்டர் |

## காலி துறைமுகம்

துறைமுக பரிமாணம்

| | |
|---|---|
| நீர் பிரதேசம் | 15.3718 ஹெக்டயார் |
| உட்பிரவேச கால்வாய் | 140 மீட்டர் |
| நிலப் பிரதேசம் | 16.4015 ஹெக்டயார் |
| அங்கீகார மொத்த நீள் அளவு | 130 மீட்டர் |
| அனுமதியேற்கப்பட்ட ஆழம் | 7.3 மீட்டர் |

**வேலை நேரங்கள்**

மே தினம் பகல் நேரத்தில் மாத்திரம் கப்பல் நடவடிக்கைகள் இடம்பெறும் என்பதோடு வருடத்தின் சகல நாட்களிலும் காலி துறைமுக வேலைகள் 24 மணித்தியாலய அடிப்படையில் இடம் பெறும்.

## வழி விலகும் காலம்

கிழக்கு - மேற்கு பிரதான கடல் மார்க்கத்திலிருந்து பயணக் காலம் எதுவுமில்லை.

**நங்கூர வசதிகள்**

### மொத்த கரையோர நங்கூரத்தளங்கள் - 05

| நங்கூரத்தளம் | முழு நீளம் (மீ) | கரையோர ஆழம் (மீ) |
|---|---|---|
| குளோசன்பேர்க் ஜெட்டி | 420 | 8.9 |
| புதிய பாலம் | 162 | 8.9 |
| புதிய பாலம் / குறுக்காக | 84 | 8.9 |

**களஞ்சியசாலை வசதிகள்**

| பெயர் | சராசரி உயரம் (அடி.) | பிரதேசம் (ச.அ) | கொள்ளளவு (கன. அடி) | கொள்கலன் அடுக்கும் உயரம் (அடி) |
|---|---|---|---|---|
| இல. 01 | 23 | 13,333 | 306,667 | 10 உயரம் |
| இல. 02 | 23 | 40,000 | 920,000 | 10 உயரம் |

## திருகோணமலை துறைமுகம்

**துறைமுக பரிமாணம்**

| | |
|---|---|
| நீர் பிரதேசம் | 1,536 ஹெக்டயார் |
| உட்பிரவேச கால்வாய் (ஆகக் குறைந்த அகலம்) | 500 மீட்டர் |
| நில பிரதேசம் | 2,254 ஹெக்டயார் |

**வேலை நேரங்கள்**

திருகோணமலை துறைமுகத்தில் மே தினத்தில் பகல் நேரத்தில் மாத்திரம் கையாளல் நடவடிக்கைகள் இடம்பெறுவதோடு திருகோணமலை துறைமுகத்தில் தவிர்ந்த வருடத்தின் அனைத்து நாட்களிலும் 24 மணித்தியால அடிப்படையில் சேவை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. கப்பல் பயணங்கள் பகல் காலங்களில் மட்டுமே இடம்பெறும்.

**நங்கூரத்தள வசதிகள்**

**இலங்கை துறைமுக அதிகார சபையின் நங்கூரத்தளங்கள்**

| நங்கூரத்தளம் | முழு நீளம் (மீ) | கரையோர ஆழம் (மீ) |
|---|---|---|
| அஷ்ரப் இறங்குதுறை | 250 | 12.5 |
| பக்க துறைமேடைகள் (அஷ்ரப் இறங்குதுறை) | 90 X 2 | 8.5 |
| மட்கோவ் துறைமேடை | 45 | 3.5 |
| ரீரீஏ துறைமேடை | 190 | 2.0-4.0 |
| சிலோன் துறைமேடை | 50 | 2.5 |
| நகர துறைமேடை | 50 | 2.5 |
| மூதூர் துறைமேடை | 60 | 3.0 |
| வீஎஸ்ஓ துறைமேடை | 25 | 1.5 |
| பழைய நகர துறைமேடை | 60 | 2.0 |
| எண்ணெய் துறைமேடை | 130 | 9.75 |

## ஏனைய துறைமேடைகள்

| நங்கூரத்தளம் | முழு நீளம் (மீ) | கரையோர ஆழம் (மீ) |
|---|---|---|
| பிரிமா துறைமேடை (உள்ளக) | 122 | 5.9 |
| பிரிமா துறைமேடை (வெளியக) | 227 | 14.3 |
| பிரிமா துறைமேடை (பன்நோக்கு) | 170 | 10.3 |
| டோக்கியோ சீமெந்து துறைமேடை | 160 | 9.5 |

**குதங்கள் பற்றிய விபரங்கள் - ரீரீஏ**

| குதம் | பரிமாணம் (அடி | சராசரி உயரம் (அடி) | பரப்பளவு (ச.அடி) | கொள்கலன் அடுக்கும் உயரம் (அடி) | கொள்ளளவு (க.அடி) |
|---|---|---|---|---|---|
| இல. 01 | 75 X 34 | - | 2,550 | 12 | 30,600 |
| இல. 02 மற்றும் 03 | 90 X 70 | 15 | 6,300 | 12 | 75,600 |
| இல .04 | 190 X 95 | 19 | 18,050 | 14 | 252,700 |
| இல. 05 A | 150 X 110 | 25 | 16,500 | 15 | 247,500 |
| இல 05 B | 150 X 80 | 15 | 12,000 | 12 | 144,000 |
| இல. 06 | 300 X 110 | 20 | 33,000 | 15 | 495,000 |
| இல. 07 | 96 X 36 | - | 3,456 | 12 | 41,472 |

## மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகம் - தற்போது

**துறைமுக பரிமாணம்**

**துறைமுகப் பிரதேசம்**

| | |
|---|---|
| துறைமுக நீர் பிரதேசம் | 75 ஹெக்டயர் |
| மேற்கு அலைதாங்கியின் நீளம் | 988 மீட்டர் |
| கிழக்கு அலைதாங்கியின் நீளம் | 311 மீட்டர் |
| உட்பிரவேச கால்வாய் | 210 மீட்டர் * 16 மீட்டர் |
| திருப்பும் வட்டம் | 600 மீட்டர் |

**துறைமேடையின் நீளம்**

| | |
|---|---|
| பொதுவான கப்பற் சரக்கு துறைமேடை | 600 மீட்டர் |
| சேவைத் துறைமேடை | 105 மீட்டர் |
| எண்ணெய் துறைமேடை 1 | 310 மீட்டர் |
| எண்ணெய் துறைமேடை 2 | 300 மீட்டர் |
| நீர்த் தடாக ஆழம் | 17 மீட்டர் |
| கப்பல் வடிவம் | 100,000 நிறை தொன் |

## மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகம் - இரண்டாம் கட்டம் முடிவடைந்ததன் பின்னர்

**துறைமுக பரிமாணம்**

**துறைமுகப் பிரதேசம்**

| | |
|---|---|
| பூர்த்தியடைந்ததன் பின்னர் மொத்த நீர்ப் பிரதேசம் | 152 ஹெக்டயார் (கட்டம் 1 இன் நீர்ப் பிரதேசம் அடங்கலாக) |
| உட்பிரவேசக் கால்வாய் | 210 மீட்டர் * 17 மீட்டர் |
| திருப்பு வட்டம் | 600 மீட்டர் |

**துறைமேடையின் நீளம்**

| | |
|---|---|
| பிரதான கொள்கலன் நங்கூரத்தளம் | 835.5 மீட்டர் |
| ஊட்டச்சேவை கொள்கலன் முனையம் | 460 மீட்டர் |
| பல் நோக்கு நங்கூரத்தளம் | 838.5 மீட்டர் |
| பரிமாற்ற நங்கூரத்தளம் | 208 மீட்டர் |
| நீர்த்தடாகத்தின் ஆழம் | 17 மீட்டர் |
| கப்பல் வடிவம் | 100,000 நிறை தொன் |



# நிதி அறிக்கைகள்

# ஆண்டறிக்கை 2017

31.12.2017 அன்று இலங்கை துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளர் சபை பின்வருமாறு:

**கலாநிதி பராக்கிரம திசாநாயக்க**
தலைவர்

**திரு. பீ.ஜி. தசாநாயக்க**
உபதலைவர்

**திரு. எச்.டி.ஏ.எஸ் பிரேமசந்திர**
முகாமைத்துவ பணிப்பாளர்

**திரு. எச்.ஏ. விமலசூரிய**
நிறைவேற்றுப் பணிப்பாளர்

**திருமதி பீ.எஸ்.எம். சார்ள்ஸ்**
பணிப்பாளர்

**திரு. எச்.ஜி. சுமணசிங்க**
பணிப்பாளர்

**திரு. ஜகத் பீ விஜேவீர**
பணிப்பாளர்

**திரு. நிலான் விக்கிரமசிங்க**
பணிப்பாளர்

**திரு. சுரங்க பீ ஹிதெல்லாராச்சி**
பணிப்பாளர்

மீளாய்வாண்டினுள் பணிப்பாளர் சபையின் 15 கூட்டங்கள் நடைபெற்றன.

பணிப்பாளர் சபையின் உப குழுவாக செயல்படும் முகாமைத்துவக் குழுவின் 08 கூட்டங்கள் 2017 ஆம் ஆண்டினுள் நடைபெற்றது. சபையின் ஏனைய உப குழுவான கணக்காய்வுக் குழு 2017 ஆம் ஆண்டில் 04 கூட்டங்களை நடத்தியது. கீழ்வரும் பணிப்பாளர்கள் கணக்காய்வுக் குழுவின் அங்கத்தவர்களாக செயல்படுகின்றார்கள்

**திரு. எச்.ஜி. சுமணசிங்க**
தலைவர்

**திருமதி. பீ.எஸ்.எம் சார்ள்ஸ்**
உறுப்பினர்

**திரு. நிலான் விக்கிரமசிங்க**
உறுப்பினர்

2017 ஆண்டில் கொழும்பு துறைமுகத்தினால் கையாளப்பட்ட ஆகக் கூடிய கொள்கலன் அளவாக 6,209,068 இருபது சம அலகுகள் பதிவாகி இருந்ததோடு அதன் முழு அளவானது 89.03 மில்லியன் தொன்களாகும். மொத்த கொள்கலன் கையாளல் 8.3% னாலும் மொத்த கையாளல் தொன் அளவு 8.7% னாலும் உயர்வடைந்திருந்தன.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் முனையங்களில் 2,010,702 இருபது சம அலகுகள் 2016 உடன் ஒப்பிடும் போது, 89,415 இருபது சம அலகுகள் (-4.3 சதவீதம்) குறைந்துள்ளது. இதற்கு, புதிய கூட்டுக்கள், மாற்றப்பட்ட சேவைகள், மற்றும் போட்டி விகிதங்கள் மற்றும் சலுகைகள் மற்ற தனியார் டெர்மினல் ஆபரேட்டர்கள் என்பன காரணங்களாகும். SAGT மற்றும் CICT இரண்டும் முறையே 10.9 சதவீதம், 19.3 சதவீதம் வளர்ச்சியை பதிவு செய்துள்ளன.

- 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது கொழும்பு துறைமுகத்தின் கொள்கலன் கையாளல் பரிமானம் 5,734,923 இருபது சம அலகுகளாகும். இது 2017 இல் 6,209,068 இருபதின் சம அலகுகளாக அதிகரித்துள்ளது. (அதிகரிப்பு 474,145 இருபது சம அலகுகள் அல்லது 8.3 சதவீதம் ஆகும்).

- 2016 ஆண்டுடன் ஒப்பிடும் போது கொழும்பு துறைமுகத்தில் உள்நாட்டு கப்பற்சரக்குகளின் கையாளல் பரிமாணம் 2017 ஆண்டில் 6.4% இனால் வளர்ச்சி அடைந்தது. (83,701 இருபது சம அலகுகள்)

- 2016 ஆண்டுடன் ஒப்பிடும் போது கொழும்பு துறைமுகத்தில் மீள் ஏற்றுமதி கொள்கலன் கையாளல் பரிமாணம் 8.9% இனால் வளர்ச்சியடைந்துள்ளது. (386,321 இருபது சம அலகுகள் அதிகரிப்பாகும்)

- கொழும்பு துறைமுகத்தில் கையாளப்பட்ட மொத்த கப்பற் சரக்குகளின் பரிமாணம் 8.7% ஆல் அதிகரித்தது. (இது 2016 ஆம் ஆண்டில் கையாளப்பட்ட மில்லியன் தொன் 81,879 இருந்து 2017 ஆம் ஆண்டில் கையாளப்பட்ட தொன் பரிமாணம் 89,035 மில்லியனால் அதிகரித்தது.

- 2016 ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட ஒட்டுமொத்த உள்நாட்டு வாகனங்கள் (கொழும்பு மற்றும் மாகம் ருஹுனுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகம்) ) 63,407 அலகுகளிலிருந்து 2017 ஆம் ஆண்டில் 63,030 அலகுகளாக குறைடைந்துள்ளது.

- கையாளப்பட்ட ஒட்டுமொத்த மீள் ஏற்றுமதி வாகனங்கள் (கொழும்பு மற்றும் துறைமுகம்) 2016 ஆண்டில் 150,921 இருபது சமஅலகுகளிலிருந்து 2017 ஆண்டில் 83,787 அலகுகள் வரை அதாவது 44.5% னால் வீழ்ச்சியடைந்துள்ளது.

2017 ஆண்டில் கொழும்பு துறைமுகத்திற்கு வருகை தந்த கப்பல்களின் எண்ணிக்கையுடன் 2016 ஆண்டை ஒப்பிடும் போது 4,405 இருந்து 4,329 வரை 1.7% வீழ்ச்சி அடைந்துள்ளது. 2016 ஆண்டில் கொள்கலன் கப்பல்களின் வருகையின் எண்ணிக்கை 3,804 இருந்ததுடன் 2017 ஆண்டில் 3,683 வரை 3.2% இனால் வீழ்ச்சியடைந்துள்ளது.

இலங்கை துறைமுக அதிகாரசபையுடன் கொடுக்கல் வாங்கல்களை முன்னெடுத்துச் செல்வதற்கும்தொடர்புகளை பேணிச்செல்வதற்கும் துறைமுகத்தினுள் பிரதான கப்பல் சேவைகளுடன் முனைய சேவை ஒப்பந்தங்கள் 04 வும், ஊட்டக் கப்பல் சேவைகள் 03 வும் கவர்ந்து கொள்வதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு முடிந்துள்ளது. இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு மேலதிக கப்பற் சரக்குகளை கையாள்வதற்கும் முனையங்களுக்கு முடிந்துள்ளது.

இருபதின் சம அலகுகள் 6.2 மில்லியன் கொள்கலன்களை கொழும்பு துறைமுகத்தினால் கையாளக் கிடைத்தமை இலங்கை துறைமுக அதிகாரசபை வரலாற்றில் முக்கியத்துவம் பெறுகின்றது. அல்பா லைனர் (AlPha Liner) ஆய்வறிக்கைக்கு ஏற்ப கொழும்பு துறைமுக சர்வதேச கொள்கலன்கள் கையாளும் துறைமுகங்களின் தரப்படுத்தல் வரிசைக்கேற்ப 23 ஆம் இடத்திலிருந்து 22 ஆம் இடம் வரை உயர்ந்துள்ளது.

பாரியளவிலான கொள்கலன் கப்பல்களுக்காக இலங்கை துறைமுக அதிகாரசபையினால் கொழும்பு தெற்கு துறைமுகத்தின் ஆழமான (Deep Water Facilities) வசதிகள் நிர்மாணிக்கப்பட்டது. இவ்வசதிகளை பயன்படுத்தி நான்கு வருடங்களுக்குப் பின் வ/ப கொழும்பு சர்வதேச கொள்கலன் முனையம் (CICT) 2017 ஆம் ஆண்டில் இருபதின் சம அலகுகள் 2.3 மில்லியன் கொள்கலன்கள் கையாளப்பட்டதோடு இது 19.3% அதிகரிப்பென அறியப்பட்டது. இந்நவீன வசதிகளின் கீழ் கொழும்பு துறைமுகத்திற்கு 2017 ஆம் ஆண்டில் 8.3% அதிகரிப்பொன்றை பெற்றுக்கொள்ள முடிந்தது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது 2017 ஆம் ஆண்டில் இலங்கை துறைமுக அதிகாரசபை வருமானம் ரூ. 45,609 மில்லியனாக, இருந்ததோடு 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது இது 3.5% அதிகரிப்பாகும். 2016 ஆம் ஆண்டின் இயக்க இலாபம் (வெளிநாட்டு கடன் வட்டி மற்றும் அந்நிய செலாவணி நட்டம் / இலாபத்துக்கு முன்னர்) ரூபா 15,376 மில்லியனில்லிருந்து 2017 ஆம் ஆண்டில் ரூபா 17,510 மில்லியனாக அதிகரித்த்து. இது 13.9% அதிகரிப்பாகும்.

# நிதி அறிக்கை வெளியிடல் தொடர்பான பணிப்பாளர் சபையின் அறிக்கை

இலங்கை துறைமுக அதிகாரசபையின் சகல நிதி கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் கணக்குப் புத்தகங்கள் முறையாக பேணப்படுதலையும், அச்செயற்பாட்டின் நிலைமை மற்றும் வருடத்தின் இலாபம்/நட்டம் தொடர்பான உண்மையானதும் தெளிவான எண்ணப்பாடும் ஏற்படும் வண்ணம் அதன் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றதென்பதனை 1971 இன் 38 ஆம் இலக்கச் சட்டத்தின் (12) மற்றும் (13.6) ஆம் பிரிவின் மீது உறுதிப்படுத்துதல் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளர்களினது பொறுப்பாகும்.

இதன்படி கணக்குப் புத்தகங்கள் முறையாகப் பேணி நடாத்திச் செல்வதற்கு அதிகாரசபைக்கு பணிப்பாளர் சபை வழிகாட்டியுள்ளதுடன் வழமையான கூட்டங்களின் போது கணக்காய்வுக் குழு ஊடாக நிதி நிலைமைகளின் அறிக்கையிடல் முறைமைகள் மீளாய்வுக்குட்படுத்தப்பட்டன.

இவ்வறிக்கையில் குறிப்பிடப்படும் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் நீதியானதும், தூரநோக்குடனான தீர்மானங்கள் மற்றும் மதிப்பீடுகளின் மூலம் கணக்கீட்டுக் கொள்கைகள் தொடர்ச்சியான அடிப்படையின் மீது ஏற்றுக்கொள்ளப்படுவது தொடர்பில் பணிப்பாளர்களினால் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அதிகாரசபையின் சொத்துக்களைப் பாதுகாத்தல், நிதி மோசடி மற்றும் வேறு ஒழுங்கீனங்களை தடுப்பதற்கும் கண்டுபிடிப்பதற்குமாக தம்மால் எடுக்கக்கூடிய சகல நடவடிக்கைகளையும் பணிப்பாளர் சபை எடுத்துள்ளது. இலங்கை துறைமுக அதிகாரசபையின் வர்த்தக நடவடிக்கைகளை முறையான முகாமைத்துவம் செய்வதற்கும் எமது ஆவணங்களின் உண்மை மற்றும் நம்பிக்கைத் தன்மையை செயன்முறையாக முடிந்தளவு பாதுகாக்கப்படும் பொருட்டு உள்ளக பரீட்சிப்புக்கள், உள்ளக கணக்காய்வுகள், நிதி மற்றும் ஏனைய கட்டுப்பாடுகள் அடங்கலான பயனானதும் பூரண கட்டுப்பாடும் கொண்ட முறையொன்றினை பணிப்பாளர் சபை ஸ்தாபித்துள்ளது.

பணிப்பாளர் சபையின் உத்தரவின் பிரகாரம்

**எஸ்.ஏ.எஸ்.கே. ஜயசேகர**
**பணிப்பாளர் சபைச் செயலாளர்**

நிறுவனத்தின் நிதி முகாமைத்துவம் தொடர்பிலான தமது பொறுப்புக்களை நிறைவேற்றும் போது பணிப்பாளர் சபைக்கு உதவுதல் கணக்காய்வுக் குழுவின் பொறுப்பாகும். இது நிறைவேற்றப்படுதலில் குழுவின் பிரதான பொறுப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

- ♦ பயன்மிகுந்த உள்ளக கட்டுப்பாடு மற்றும் உள்ளக கணக்காய்வுப் பணிகள் நிறைவேற்றப்படுவதனை உறுதிப்படுத்தல்

- ♦ நிதிக் கூற்றுக்கள், நிதிசார்ந்த அறிக்கையிடல் மற்றும் கணக்காய்வு செயற்பாடுகளின் வெளிப்படைத் தன்மை தொடர்பில் மீளாய்வு மற்றும் மேற்பார்வை

- ♦ யாப்பு ரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தும் தேவைப்பாட்டின் உடன்பாட்டினை உறுதிப்படுத்தல்

- ♦ இயக்க செயற்திறன் மற்றும் ஆகுசெலவு கட்டுப்பாடு உறுதிப்படுத்தப்படும் வகையில் தொகுதிகளின் மீளாய்வு

பொது திறைசேரியின் பிரதிநிதியொருவர்/இலங்கை துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளரொருவர் கணக்காய்வுக் குழுவின் தலைமையை வகிப்பதோடு அதிகாரசபையின் நிர்வாகம் சிறந்த முறையில் விருத்தி செய்து கொள்வதற்காக மீளாய்வுக்குட்படும் ஆண்டினுள் பல முக்கிய செயற்பாடுகள் முன்னெடுத்துச் செல்லப்பட்டன.

முக்கிய பூர்வாங்க உள்ளக கட்டுப்பாடு செயன்முறையாக, 2017 ஆண்டு உள்ளக திட்ட மற்றும் செய்திட்டம் நடைமுறைப்படுத்தியதோடு அதனை செயலில் ஈடுபடுத்தப்படுவதன் பயனான தன்மை மாதாந்த முன்னேற்ற அறிக்கை பெறப்பட்டு மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது. கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் 2016 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட நகல் அறிக்கையானது பணிப்பாளர் சபையின் பதில்களோடு மீளாய்வு செய்யப்பட்டது. குழுக் கூட்டத்தில் கவனத்திலெடுக்கப்பட்ட முக்கிய காரணிகள் கணக்காய்வுக் குழுவின் பரிந்துரைகளோடு பணிப்பாளர் சபையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. அதிகாரசபையின் மூன்று மாதங்களுக்கான அறிக்கை மற்றும் 2016 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வுடன் தொடர்ந்து மீளாய்வு செய்யப்பட்டதோடு, பணிப்பாளர் சபையின் விருப்பத்தின் பேரில் மேற்கொண்டும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. குழுக் கூட்டத்தின் போது சுட்டிக்காட்டப்பட்ட காரணிகள் கணக்காய்வுக் குழுவின் சிபாரிசுடன் பணிப்பாளர் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

அதிகாரசபையின் சொத்துக்கள் பாதுகாப்பாக இருக்கின்றமை, கணக்காய்வு கணக்குகளில் காட்டப்படும் நிதி நிலைமைகள் மற்றும் பெறுபேறுகள் பிரயோசனமற்ற கூற்றுக்களிலிருந்து தவிர்க்கப்படும் என்பதனை காட்டுவதற்காக தேவைப்படும் ‘‘பரிசோதனைகள் மற்றும் சமநிலை பேணல்’’ நடைமுறைப்படுத்தப்படுகின்றதென்பது கணக்காய்வுக் குழுவின் அபிப்பிராயமாகும். ஆண்டினுள் அதிகாரசபையின் கட்டுப்பாடு மேம்படுத்தப்படுவதற்கும் அதிகாரசபையின் பணிகள் சிறந்த வெளிப்படைத்தன்மையுடன் மேற்கொள்ளப்படுவதற்கும் குழுவினால் பாரிய பங்களிப்பு வழங்கப்பட்டது.



**எச். ஜீ. சுமனசிங்ஹ**
**தலைவர் கணக்காய்வுக் குழு**

சட்டபூர்வ தேவைகளுக்கு இணங்குதலின் முக்கியத்துவம் தொடர்பான விடயங்கள் பின்வருமாறு

**ஊழியர் சேமலாப நிதி - அதிகாரசபையினதும் ஊழியர்களினதும் பங்களிப்பு**

இலங்கை துறைமுக அதிகாரசபையின் சகல நிரந்தர ஊழியர்களுக்குமுரிய இலங்கை துறைமுக அதிகாரசபையினது பங்களிப்பு 15% மற்றும் ஊழியர்களின் பங்களிப்பு 10% உரிய மாதத்திற்கு பின்வரும் மாதத்தின் கடைசி தினத்திற்கு முன்னர் தொழில் திணைக்களத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

ஊழியர்களிடமிருந்து குறைக்கப்பட்ட சகல நிதி மற்றும் ஊழியர்களுக்காக அதிகாரசபையினால் பங்களிப்பு நிதி குறிப்பிட்ட திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் அனுப்பப்பட்டுள்ளது.

**ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம்**

அதிகாரசபையின் மாதாந்த பங்களிப்பான 3% குறிப்பிடப்பட்ட திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் அனுப்பப்பட்டுள்ளது.

**உழைக்கும் போதே செலுத்தும் வரி**

உழைக்கும் போதே செலுத்தும் வரி குறிப்பிடப்பட்ட திகதிக்கு முன்னர் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

**வருமான வரி**

ஈட்டப்பெற்ற வருமானத்திற்கான வரி செலுத்துதல் வரி செலுத்த வேண்டிய வருமானம் பெறப்பட்டுள்ள ஒவ்வொரு சந்தர்ப்பங்களின் குறிப்பிடப்பட்ட திகதியில் மூன்று மாதத்திற்கொருமுறை 2006 இன் உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 10 ஆம் இலக்கத்தின் 113 ஆம் பிரிவின் விதிமுறைகளுக்கேற்ப அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**வருடாந்த வருமானம்**

2016 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான அதிகாரசபையின் வருமான வரி தொடர்புபட்ட வருடாந்த அறிக்கைகள் தேசிய உள்நாட்டு இறைவரி திணைக்களத்தில் வருடாந்தம் கோவையிலிடப்படுகின்றன. இது சகல ஆண்டுகளிலும் குறிப்பிட்ட திகதியான நவம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

**வருடாந்த அறிக்கையிடல்**

சகல வருடங்களிலும் வரவு செலவு மற்றும் கணக்குகள், வருடாந்த அறிக்கைகள் ஆகியவை இலங்கை பாராளுமன்றம், பொது திறைசேரி மற்றும் அமைச்சிற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

| டிசெம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கானது | கொழும்பு | திருகோணமலை | காலி | ஹம்பாந்தோட்டை | இதுஅச 2017 | 2016 |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | - |
| **வருகை தந்த கப்பல்களின் எண்ணிக்கை** | | | | | | |
| சரக்கு கப்பல்கள் | 4,239 | 225 | 81 | 225 | 4,770 | 4,868 |
| ஏனைய கப்பல்கள் | 153 | 8 | 6 | 5 | 172 | 155 |
| ஏனைய கலங்கள் | 717 | 38 | 63 | 21 | 839 | 759 |
| | **5,109** | **271** | **150** | **251** | **5,781** | **5,782** |
| **கையாளப்பட்ட** | | | | | | |
| **கொள்கலன் ரீ.ஈ.யூக்கள் (இ.து.அ.ச)** | | | | | | |
| மாற்றியேற்றல் | 1,609,114 | - | - | | 1,609,114 | 1,607,792 |
| உள்நாட்டு | 388,282 | - | - | | 388,282 | 483,109 |
| மீளடுக்குதல் | 13,306 | - | - | | 13,306 | 9,216 |
| **மொத்த ரீ.ஈ.யூக்கள் (இ.து.அ.ச)** | **2,010,702** | **-** | **-** | | **2,010,702** | **2,100,117** |
| **கொள்கலன் ரீ.ஈ.யூக்கள் (எஸ்.ஏ.ஜீ.ரீ)** | | | | | | |
| மாற்றியேற்றல் | 1,406,265 | - | - | - | 1,406,265 | 1,294,631 |
| உள்நாட்டு | 375,944 | - | - | - | 375,944 | 317,707 |
| மீளடுக்குதல் | 27,626 | - | - | - | 27,626 | 19,869 |
| **மொத்த இருபது சம அலகுகள்** | **1,809,835** | **-** | **-** | **-** | **1,809,835** | **1,632,207** |
| **கொள்கலன் இ.சம அலகுகள் (சீஐசீரீ)** | | | | | | |
| மாற்றியேற்றல் | 1,726,203 | - | - | - | 1,726,203 | 1,452,838 |
| உள்நாட்டு | 619,325 | - | - | - | 619,325 | 499,034 |
| மீளடுக்குதல் | 43,003 | - | - | - | 43,003 | 50,727 |
| **மொத்த இ.சம அலகுகள்** | **2,388,531** | **-** | **-** | | **2,388,531** | **2,002,599** |
| **கொள்கலன் ரீ.ஈ.யூக்கள் (கொழும்பு துறைமுகம்)** | | | | | | |
| மாற்றியேற்றல் | 4,741,582 | - | - | - | 4,741,582 | 4,355,261 |
| உள்நாட்டு | 1,383,551 | - | - | - | 1,383,551 | 1,299,850 |
| மீளடுக்குதல் | 83,935 | - | - | - | 83,935 | 79,812 |
| **மொத்த ரீ.ஈ.யூக்கள்** | **6,209,068** | **-** | **-** | **-** | **6,209,068** | **5,734,923** |
| மரபு முறையான மெ/தொ | 3,367,233 | 3,443,596 | 711,511 | 213,167 | 7,735,507 | 7,810,827 |
| திரவ மெ/தொ | 5,865,240 | 453,714 | - | - | 6,318,954 | 5,052,774 |
| | **9,232,473** | **3,897,310** | **711,511** | **213,167** | **14,054,461** | **12,863,601** |
| **சம அலகுகள் (மெ/தொ) (இ.து.அ.ச)** | | | | | | |
| கொள்கலனிடப்பட்ட சரக்கு | 25,791,290 | - | - | - | 25,791,290 | 26,975,029 |
| மரபு முறையான சரக்கு | 3,367,233 | 3,443,596 | 711,511 | 213,167 | 7,735,507 | 7,810,827 |
| திரவம் | 5,865,240 | 453,714 | - | - | 6,318,954 | 5,052,774 |
| **மொத்த இ.சம அலகுகள்** | **35,023,763** | **3,897,310** | **711,511** | **213,167** | **39,845,751** | **39,838,630** |
| **இ.சம அலகுகள் (மெ/தொன்) (எஸ்.ஏ.ஜீ.ரீ)** | | | | | | |
| கொள்கலனிடப்பட்ட சரக்கு | 23,622,195 | - | - | - | 23,622,195 | 21,195,940 |
| **மொத்த இ.சம அலகுகள் (மெ.தொ)** | **23,622,195** | **-** | **-** | **-** | **23,622,195** | **21,195,940** |
| **இ. சம அலகுகள் (மெ.தொ) சீ.ஐ.சீ.ரீ** | | | | | | |
| கொள்கலன்களிலான கப்பற்சரக்குகள் | 30,411,243 | - | - | - | 30,411,243 | 25,511,052 |
| | **30,411,243** | **-** | **-** | **-** | **30,411,243** | **25,511,052** |
| **இ.சம அலகுகள் (மெ/தொ) கொழும்பு துறைமுகம்** | | | | | | |
| கொள்கலனிடப்பட்ட சரக்கு | 79,824,728 | - | - | - | 79,824,728 | 73,682,031 |
| மரபு முறையான சரக்கு | 3,367,233 | 3,443,596 | 711,511 | 213,167 | 7,735,507 | 7,810,827 |
| திரவம் | 5,865,240 | 453,714 | - | - | 6,318,954 | 5,052,774 |
| **மொத்த இ.சம அலகுகள் (மெ/தொ)** | **89,057,201** | **3,897,310** | **711,511** | **213,167** | **93,879,189** | **86,545,632** |
| **கையாளப்பட்ட (மெ/தொ) (இ.து.அ.ச)** | | | | | | |
| கொள்கலனிடப்பட்ட சரக்கு | 54,109,284 | - | - | - | 54,109,284 | 59,333,004 |
| மரபு முறையான சரக்கு | 10,120,094 | 3,793,629 | 559,058 | 11,659,487 | 26,132,268 | 26,918,253 |
| ஏனையவை | 4,591,126 | 126,146 | 43,702 | 199,820 | 4,960,794 | 3,703,064 |
| **மொத்த தொன் இடை** | **68,820,504** | **3,919,775** | **602,760** | **11,859,307** | **85,202,346** | **89,954,321** |
| **கையாளப்பட்டமொத்த தொன் எடை (எஸ்.ஏ.ஜீ.ரீ)** | | | | | | |
| கொள்கலனிடப்பட்ட சரக்கு | 42,569,709 | - | - | - | 42,569,709 | 39,513,906 |
| **மொத்த தொன் இடை** | **42,569,709** | **-** | **-** | **-** | **42,569,709** | **39,513,906** |
| **கையாளப்பட்ட மொத்தத் தொன் எடை (சீ ஐ.சீ.ரீ)** | | | | | | |
| கொள்கலனிடப்பட்ட சரக்கு | 93,110,002 | - | - | - | 93,110,002 | 81,742,402 |
| **மொத்த தொன் எடை** | **93,110,002** | **-** | **-** | **-** | **93,110,002** | **81,742,402** |
| **கையாளப்பட்ட மொத்தத் தொன் எடை (கொழும்பு துறைமுகம்)** | | | | | | |
| கொள்கலனிடப்பட்ட சரக்கு | 189,788,995 | - | - | - | 189,788,995 | 180,589,312 |
| மரபு முறையான சரக்கு | 10,120,094 | 3,793,629 | 559,058 | 11,659,487 | 26,132,268 | 26,918,253 |
| ஏனையவை | 4,591,126 | 126,146 | 43,702 | 199,820 | 4,960,794 | 3,703,064 |
| **மொத்த தொன் எடை** | **204,500,215** | **3,919,775** | **602,760** | **11,859,307** | **220,882,057** | **211,210,629** |
| **ஆளணி** | | | | | | |
| ஊழியர்களின் எண்ணிக்கை | **8,588** | **401** | **351** | **37** | **9,377** | **9,651** |

# நிதி நிலைமை தொடர்பான அறிக்கை

(இலங்கை ரூபாய்களில் காட்டப்பட்டுள்ளன)

| 2017 டிசெம்பர் 31 வரையிலான நிதிசார் நிலைமை தொடர்பான கூற்று | குறிப்பு | வகை 2017 | வகை 2016 | இது அச 2017 | இது அச 2016 |
|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | | |
| **நடைமுறையற்ற சொத்துக்கள்** | | | | | |
| சொத்துக்கள் ,இயந்திர வகை மற்றும் உபகரணங்கள் | 3 | 149,469,781,120 | 306,125,425,551 | 149,426,989,444 | 306,083,716,729 |
| உணரா சொத்துக்கள் | 4 | 57,579,403 | 70,316,518 | 57,039,427 | 69,547,232 |
| முதலீடு செய்யப்பட்ட சொத்துக்கள் | 5 | 173,647,489,750 | 4,064,444,037 | 173,647,489,750 | 4,064,444,037 |
| மேலதிக முதலீடுகள் | 6 | - | - | 76,000,000 | 76,000,000 |
| துணைக் கம்பெனிகளின் மீதான முதலீடுகள் | 7 | 39,215,920,136 | 64,942,056 | 39,196,120,030 | 40,030 |
| விற்பதற்குள்ள நிதிசார் சொத்துக்கள் (AFS) | 9 | 21,974,163,908 | 3,611,120,617 | 21,974,163,908 | 3,611,120,617 |
| அரச ஈட்டு முதலீட்டு வங்கியிலிருந்து அற/வேண் தொகை | 12.2 | 123,179,741 | 147,411,904 | 123,179,741 | 147,411,904 |
| திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெறுதல்- மக்கள் வங்கிக் கடன் | 41 | 3,950,858,870 | | 3,950,858,870 | |
| **மொத்த நடைமுறையற்ற சொத்துக்கள்** | | **388,438,972,926** | **314,083,660,683** | **388,451,841,169** | **314,052,280,548** |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | | | |
| பட்டியலிடப்பட்ட பொருட்கள் | 11 | 2,971,202,423 | 2,947,698,209 | 2,484,790,666 | 2,461,286,452 |
| வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்கப்பெறுதல்கள் | 12 | 114,635,412,269 | 10,516,400,758 | 114,562,457,908 | 10,443,166,849 |
| வைப்புக்கள் மற்றும் முற்பணம் | 13 | 295,557,929 | 201,127,216 | 295,557,929 | 201,127,216 |
| முன் செலுத்துதல் செலவினம் | | 108,008,573 | 56,481,917 | 105,069,819 | 51,999,609 |
| ஊழியர்களின் கடன் | 14 | 4,296,739,607 | 4,305,199,594 | 4,270,311,803 | 4,278,923,434 |
| ஏனைய நிதிசார் சொத்துக்கள் | 15 | 22,345,520,484 | 17,743,408,267 | 22,345,520,484 | 17,743,408,267 |
| காசு மற்றும் காசுக்குச் சமனான சொத்துக்கள் | 16 | 1,762,527,731 | 1,330,100,814 | 914,764,144 | 582,143,737 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | **146,414,969,015** | **37,100,416,774** | **144,978,472,752** | **35,762,055,563** |
| **மொத்த சொத்துக்கள்** | | **534,853,941,942** | **351,184,077,452** | **533,430,313,920** | **349,814,336,110** |
| **திணிவு மற்றும் பொறுப்புக்கள்** | | | | | |
| **திணிவு** | | | | | |
| ஈடுபடுத்தப்பட்ட மூலதனம் | 17 | 7,591,379,785 | 7,591,379,785 | 7,591,379,785 | 7,591,379,785 |
| இருப்பு மூலதனம் | 18 | 14,533,969,106 | 712,038,233 | 14,533,969,106 | 712,038,233 |
| ஏனைய இருப்புக்கள் | 40 | 173,118,815,356 | 3,072,587,812 | 173,118,815,356 | 3,072,587,812 |
| கடன் தீர்க்கும் இருப்புக்கள் | 19 | 4,613,549,887 | 4,613,549,887 | 4,613,549,887 | 4,613,549,887 |
| மீள் மதிப்பிடலின் இருப்புக்கள் | 20 | 75,893,542,157 | 74,048,089,533 | 75,893,542,157 | 74,048,089,533 |
| விற்பதற்குள்ள நிதிசார் சொத்துக்களின் இருப்புக்கள் | | 174,592,752 | 152,949,462 | 174,592,753 | 152,949,462 |
| தடுத்து வைக்கப்பட்ட ஈட்டல்கள் (பற்று) | | 32,882,966,740 | (13,662,508,210) | 34,320,307,692 | (12,170,982,560) |
| **முழு திணிவு மொத்தம்** | | **308,808,815,783** | **76,528,086,502** | **310,246,156,735** | **78,019,612,152** |
| **நடைமுறையற்ற பொறுப்புக்கள்** | | | | | |
| கடன்பெறுதல்கள் - இலங்கை அரசாங்கம் | 21.1 | 54,924,342,666 | 214,555,128,086 | 54,924,342,666 | 214,555,128,086 |
| கடன்பெறுதல்கள் - நிதிசார் நிறுவனங்கள் | 22.1 | 14,296,509,447 | 13,529,318,308 | 11,360,327,710 | 10,593,136,571 |
| அரச ஏற்பாடுகள் | 23 | 28,764,321,596 | 2,112,806,647 | 28,764,321,596 | 2,112,806,647 |
| பின்னுரிமை வரி பொறுப்புக்கள் | 24 | 4,191,116,180 | 12,114,566,119 | 4,191,116,180 | 12,114,566,119 |
| ஓய்வு பெறுதலின் அனுகூலங்களுக்கான பிணைப்புகள் | 25 | 4,743,019,850 | 4,361,535,839 | 4,731,949,905 | 4,350,188,554 |
| **நடைமுறையற்ற முழு பொறுப்புக்கள்** | | **106,919,309,739** | **246,673,354,999** | **103,972,058,057** | **243,725,825,975** |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | | | | |
| வர்த்தக மற்றும் ஏனைய கடனாளிகள் | 26 | 105,806,896,751 | 1,306,998,191 | 105,914,892,043 | 1,429,776,503 |
| கடன்பெறுதல்கள் - இலங்கை அரசாங்கம் | 21.2 | 5,198,526,722 | 10,285,274,220 | 5,198,526,722 | 10,285,274,220 |
| கடன்பெறுதல்கள் - நிதிசார் நிறுவனங்கள் | 22.2 | 1,555,871,084 | 1,913,783,798 | 1,555,871,084 | 1,912,413,794 |
| வைப்புக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற முற்பணம் | 27 | 2,215,795,483 | 4,256,906,103 | 2,215,795,483 | 4,256,906,103 |
| செலுத்த வேண்டிய நடைமுறை வரி | 28 | 294,334,230 | 286,271,593 | 276,768,597 | 271,397,419 |
| ஏற்பாடுகள் மற்றும் ஒன்றுசேர்ந்த செலவினம் | 29 | 4,054,392,146 | 9,933,402,042 | 4,050,245,199 | 9,913,129,942 |
| **நடைமுறைசார்ந்த முழு பொறுப்புக்கள்** | | **119,125,816,415** | **27,982,635,948** | **119,212,099,127** | **28,068,897,982** |
| **திணிவு மற்றும் பொறுப்புக்களின் மொத்த கூட்டுத்தொகை** | | **534,853,941,942** | **351,184,077,452** | **533,430,313,920** | **349,814,336,110** |

104-118 பக்கங்களில் கணக்கீட்டு நியமங்களும் 119-140 பக்கங்கள் வரையிலான நிதிசார் பொறுப்புக்களும் குறிப்புக்களும் இந்த நிதிசார் கூற்றுக்களில் விசேட பங்கினை வகிக்கின்றன

வழங்கப்பட்டுள்ள இந்த நிதிசார் கூற்று 2017/12/31 வரை இலங்கை துறைமுக அதிகாரசபையின் உண்மையானதும் சுமாரணதுமான தோற்றப்பாடும் ஆகும்.

சிறாணி வன்னியாராச்சி
பணிப்பாளர் (நிதி)

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப நிதிசார் அறிக்கைகள் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும். இந்த நிதிக் கூற்றுக்கள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் சார்பில் ஒப்பமிடப்பட்டுள்ளன

பராக்ரம திசாநாயக்க
தலைவர்

பீ.ஜீ. தசநாயக்க
உப தலைவர்

திகதி 2018 நவம்பர் 05

அடைப்புக்குறிக்குள் குறிப்பிடப்பட்டுள்ளவை வழித்தல்களாக காண்பிக்கப்பட்டுள்ளன .

# விபரமான வருமான அறிக்கை

(இலங்கை ரூபாய்களில் காட்டப்பட்டுள்ளன)

| 2017 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டின் உள்ளடக்கப்பட்ட வருமான கூற்று | குறிப்பு | வகை 2017 | வகை 2016 | இதுஅச 2017 | இதுஅச 2016 |
|---|---|---|---|---|---|
| வருமானம் | 30 | 36,914,350,371 | 36,822,240,450 | 36,914,350,371 | 36,799,110,383 |
| நேரடி செலவினம் | 31 | (20,129,228,457) | (20,922,237,967) | (20,019,597,180) | (20,201,445,201) |
| **மொத்த இலாபம்** | | **16,785,121,914** | **15,900,002,483** | **16,894,753,191** | **16,597,665,182** |
| ஏனைய இயக்க வருமானம் | 32 | 7,044,597,306 | 6,196,619,861 | 7,044,376,955 | 6,194,911,829 |
| நிர்வாக செலவினம் | 33 | (7,844,470,229) | (8,071,153,006) | (8,029,995,485) | (8,458,510,089) |
| **இயக்க இலாபம்** | | **15,985,248,990** | **14,025,469,338** | **15,909,134,660** | **14,334,066,922** |
| தூய நிதிசார் ஆகுசெலவு | 34 | (440,111,202) | (3,326,160,842) | (481,061,680) | (3,260,038,732) |
| அந்நிய செலாவணி மாற்றம்/ கிடைக்கப்பெறுதல்கள் / நட்டம் | 43 | (2,205,937,060) | (10,108,178,558) | (2,205,937,060) | (10,038,302,300) |
| துணை கம்பெனி இலாபங்களின் பாகம் | 7.1 | (45,101,920) | 3,848,613 | - | - |
| **வரிகளுக்கு முன்னரான இலாபம்** | | **13,294,098,808** | **594,978,551** | **13,222,135,920** | **1,035,725,890** |
| வருமான வரி செலவினம் | 35 | (12,328,717) | (12,447,110) | - | - |
| மாறுபடும் வரிச் செலவினம் | 24 | 102,008,604 | - | 102,008,604 | - |
| **வருடத்திற்கான இலாபம்** | | **13,383,778,696** | **582,531,441** | **13,324,144,525** | **1,035,725,890** |
| **தாய்க் கம்பெனியின் வர்த்தக பங்காளர்களுக்கான ஒதுக்குதல்கள்** | | **13,383,778,696** | **582,531,441** | **13,324,144,525** | **1,035,725,890** |
| **ஏனைய விபரமான வருமானம்** | | | | | |
| ஓய்வாற்றலின் அனுகூல கொடுப்பனவின் மீள் மதிப்பீடு | | (176,382,793) | (525,922,090) | (177,735,321) | (526,172,368) |
| விற்பனைக்குள்ள நிதிச்சொத்துக்களின் பெறுமதி மாற்றம் | 9.1 | 21,643,291 | (156,312,657) | 21,643,291 | (156,312,657) |
| வருடத்தின் ஏனைய விபரமான மொத்த வருமானம் | | (154,739,502) | (682,234,747) | (156,092,030) | (682,485,025) |
| **ஆண்டின் முழு விபரமான வருமானம்** | | **13,229,039,193** | **(99,703,305)** | **13,168,052,495** | **353,240,866** |
| **தாய்க் கம்பெனியின் வர்த்தக பங்காளர்களுக்கான ஒதுக்குதல்கள்** | | **13,229,039,193** | **(99,703,305)** | **13,168,052,495** | **353,240,866** |

104-118 பக்கங்களில் கணக்கீட்டு நியமங்களும் 119-140 பக்கங்கள் வரையிலான நிதிசார் பொறுப்புக்களும் குறிப்புக்களும் இந்த நிதிசார் கூற்றுக்களில் விசேட பங்கினை வகிக்கின்றனது.

(இலங்கை ரூபாய்களில் காட்டப்பட்டுள்ளன)

**2017 டிசெம்பர் 31 திணிவு மாற்றங்கள் பற்றியதான கூற்று**

| வகை | ஈடுபடுத்தப்பட்ட மூலதனம் | மூலதன இருப்பு | ஏனைய இருப்பு | கடன் விடுவித்தலின் இருப்பு | மீள் மதிப்பிடலின் இருப்பு | விற்பனைக்குள்ள இருப்பு | தடுத்து வைக்கப்பட்ட வருமானம் ( கடன்களுக்காக ) | தடுத்து வைக்கப்பட்ட இருப்புக்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **2016 சனவரி 01 ஆம் திகதிக்கு மீதி** | | | | | | | | | |
| | **7,591,379,785** | **712,038,233** | **1,673,780,305** | **4,613,549,887** | **74,093,898,320** | **309,262,118** | | **(15,191,429,585)** | **73,802,479,064** |
| ஆண்டின் இலாபம் | - | - | - | - | - | - | | 582,531,441 | 582,531,441 |
| ஏனைய விபரமான வருமானம் | - | - | - | - | - | (156,312,657) | | - | (156,312,657) |
| **விபரமான வருமானங்களின் மொத்தம்** | | | | | | | | 582,531,441 | 426,218,785 |
| மேலதிக மீள் மதிப்பிடலின் சீர் செய்தல்கள் | - | - | - | - | (45,808,787) | - | | 45,808,787 | 0.00 |
| வழங்கப்பட்ட பங்கிலாபங்கள் | | | | | | | | (3,683,000) | (3,683,000) |
| அகற்றப்படுதல்களின் சீர்செய்தல்கள் | - | - | - | - | - | - | | 152,406,471 | 152,406,471 |
| முன்னைய ஆண்டுடன் சீர்செய்தல் (குறிப்பு 43) | - | - | - | - | - | - | | 1,277,779,765 | 1,277,779,765 |
| CICT யினால் செலுத்தப்பட்டுள்ள முற்கொடுப்பனவுடனான சீர்செய்தல் | - | - | (103,534,286) | - | - | - | | - | (103,534,286) |
| கடன் மீட்பின் சீர்செய்தல் | | | | - | | | | - | - |
| ஓய்வுபெறுதல் அனுகூலங்களின் மீள் மதிப்பிடுதல் | | | - | | | | | (525,922,090) | (525,922,090) |
| சீ ஐ சீ ரீகொடுக்கப்பட்ட முற்கொடுப்பணவு | | | 1,503,000,000 | | | | | | 1,503,000,000 |
| தவணைத் தொகைப் பணம் லாப்ஸ் டேர்மினல்ஸ் லிமிட்டட் | | | (658,207) | | | | | | (658,207) |
| | | | | | | | | | - |
| **2016 டிசெம்பர் 31 ஆம் திகதியின் மீதி** | **7,591,379,785** | **712,038,233** | **3,072,587,812** | **4,613,549,887** | **74,048,089,533** | **152,949,462** | | **(13,662,508,210)** | **76,528,086,502** |
| ஆண்டின் இலாபம் | - | - | - | - | - | - | | 13,383,778,696 | 13,383,778,696 |
| ஏனைய விபரமான வருமானம் | - | - | - | - | - | 21,643,291 | | - | 21,643,291 |
| **மொத்த விபரமான வருமானம்** | | | | | | | | **13,383,778,696** | **13,405,421,986** |
| மேலதிக மீள் மதிப்பிடலின் சீர் செய்தல்கள் | - | - | - | - | 2,157,158,929 | - | | | 2,157,158,929 |
| பங்கிலாபங்கள் செலுத்துதல் | | | | | | | | (6,802,000) | (6,802,000) |
| அகற்றப்படுதல்களின் சீர்செய்தல்கள் | - | - | - | - | (311,706,305) | - | | 311,706,305 | - |
| HIPS இன் முதலீடு மீதான (இலாபம் / நட்டம்) | | 13,821,930,873 | | | | | | | 13,821,930,873 |
| முன்னைய ஆண்டுடன் சீர்செய்தல் (குறிப்பு 43) | - | - | - | - | - | - | | 33,033,174,743 | 33,033,174,743 |
| CICT யினால் செலுத்தப்பட்டுள்ள முற்கொடுப்பணவுடனான சீர்செய்தல் | - | - | (103,534,286) | - | - | - | | | (103,534,286) |
| ஓய்வுபெறுதல் அனுகூலங்களின் மீள் மதிப்பிடுதல் | | | | | | | | (176,382,793) | (176,382,793) |
| கடன் மீட்புடனான சீர்செய்தல்கள் | - | - | - | - | - | - | | - | - |
| மொத்தத் தவணைப் பணம் சீர்செய்தல் லாப் டர்மினல்ஸ் கம்பனி | | | (658,207) | | | | | | (658,207) |
| வ/ப லாப் டர்மினஸ் கம்பனியினால் ஆண்டினுள் செலுத்தப்பட்டுள்ளது . | | | (6,829,041) | | | | | | (6,829,041) |
| வ/ப டிஸ்டிலரீஸ் கம்பனியினால் ஆண்டினுள் செலுத்தப்பட்டுள்ளது . | | | (596,774) | | | | | | (596,774) |
| வ/படோக்கியோ சீமெந்து கம்பனியினால் ஒரு தடவை செலுத்திய தவணைக் கட்டணம் | | | 309,000,000 | | | | | | 309,000,000 |
| வ/ப டிஸ்டிலரீஸ் கம்பனியினால் ஆண்டினுள் செலுத்தப்பட்டுள்ளது . | | | 370,000,000 | | | | | | 370,000,000 |
| HIPS இன் முதலீடு மீதான (இலாபம் / நட்டம்) | | | 72,388,674,280 | | | | | | 72,388,674,280 |
| HIPG இன் முதலீடு மீதான குத்தகை வாடகை | | | 97,198,113,903 | | | | | | 97,198,113,903 |
| HIPS இன் முதலீடு மீதான (இலாபம் / நட்டம்) | | | (46,075,536) | | | | | | (46,075,536) |
| HIPG இன் முதலீடு மீதானகுத்தகை வாடகை | | | (61,866,795) | | | | | | (61,866,795) |
| **பங்கிலாபங்கள் செலுத்துதல்** | **7,591,379,785** | **14,533,969,106** | **173,118,815,356** | **4,613,549,887** | **75,893,542,157** | **174,592,752** | **-** | **32,882,966,740** | **308,808,815,783** |
| **இதுஅச** | | | | | | | | | |
| **2016 ஜனவரி 01 ஆம் திகதியின் மீதி** | **7,591,379,785** | **712,038,233** | **3,072,587,812** | **4,613,549,887** | **74,048,089,533** | **152,949,462** | **-** | **(12,170,982,560)** | **78,019,612,153** |
| | - | - | - | - | - | - | - | 13,324,144,525 | 13,324,144,525 |
| ஏனைய விபரமான வருமானம் | - | - | - | - | - | *21,643,291* | | - | 21,643,291 |
| **விபரமான வருமானங்களின் மொத்தம்** | | | | | | | | | **13,345,787,816** |
| மேலதிக மீள் மதிப்பிடலின் சீர் செய்தல்கள் | - | - | - | - | 2,157,158,929 | - | | | 2,157,158,929 |
| அகற்றப்படுதல்களின் சீர்செய்தல்கள் | - | - | - | - | (311,706,305) | - | | 311,706,305 | - |
| HIPS இன் முதலீடு மீதான (இலாபம் / நட்டம்) | | 13,821,930,873 | | | | | | | 13,821,930,873 |
| முன்னைய ஆண்டுடன் சீர்செய்தல் (குறிப்பு 43) | | | | | | | | 33,033,174,743 | 33,033,174,743 |
| CICT யினால் செலுத்தப்பட்டுள்ள முற்கொடுப்பனவுடனான சீர்செய்தல் | - | - | *(103,534,286)* | - | - | - | | - | (103,534,286) |
| ஓய்வுபெறுதல் அனுகூலங்களின் மீள் மதிப்பிடுதல் | | | | | | | | (177,735,321) | (177,735,321) |
| கடன் மீட்புடனான சீர்செய்தல்கள் | - | - | - | - | - | - | | - | - |
| வ/ப லாப் டர்மினஸ் கம்பனியினால் ஆண்டினுள் செலுத்தப்பட்டுள்ளது . | | | *(658,207)* | | | | | | (658,207) |
| வ/ப டிஸ்டிலரீஸ் கம்பனியினால் ஆண்டினுள் செலுத்தப்பட்டுள்ளது . | | | *(6,829,041)* | | | | | | (6,829,041) |
| வ/ப டோக்கியோ சீமெந்து கம்பனியினால் ஒரு தடவை செலுத்திய தவணைக் கட்டணம் | | | *(596,774)* | | | | | | (596,774) |
| வ/ப டிஸ்டிலரீஸ் கம்பனியினால் ஆண்டினுள் செலுத்தப்பட்டுள்ளது . | | | *309,000,000* | | | | | | 309,000,000 |
| வ/படோக்கியோ சீமெந்து கம்பனியினால் ஒரு தடவை செலுத்திய தவணைக் கட்டணம் | | | *370,000,000* | | | | | | 370,000,000 |
| HIPS இன் முதலீடு மீதான (இலாபம் / நட்டம்) | | | *72,388,674,280* | | | | | | 72,388,674,280 |
| HIPG இன் முதலீடு மீதான குத்தகை வாடகை | | | *97,198,113,903* | | | | | | 97,198,113,903 |
| HIPS இன் முதலீடு மீதான (இலாபம் / நட்டம்) | | | *(46,075,536)* | | | | | | (46,075,536) |
| HIPG இன் முதலீடு மீதானகுத்தகை வாடகை | | | *(61,866,795)* | | | | | | (61,866,795) |
| **2017 டிசெம்பர் 31 ஆம் திகதியின் மீதி** | **7,591,379,785** | **14,533,969,106** | **173,118,815,356** | **4,613,549,887** | **75,893,542,157** | **174,592,753** | **-** | **34,320,307,692** | **310,246,156,735** |

104-118 பக்கங்களில் கணக்கீட்டு நியமங்களும் 119-140 பக்கங்கள் வரையிலான நிதிசார் பொறுப்புக்களும் குறிப்புக்களும் இந்த நிதிசார் கூற்றுக்களில் விசேட பங்கினை வகிக்கின்றனது.

# காசுப் பாய்ச்சல் அறிக்கை

(இலங்கை ரூபாய்களில் காட்டப்பட்டுள்ளன)

| 2017 டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டின் காசுப்பாய்ச்சல் அறிக்கை | வகை 2017 | வகை 2016 | இதுஅச 2017 | இதுஅச 2016 |
|---|---|---|---|---|
| **வரிகளுக்கு முன்னரான இலாபம்** | **13,294,098,808** | **594,978,551** | **13,222,135,920** | **1,035,725,890** |
| **சீர்செய்யப்பட்ட** | | | | |
| துணைக் கம்பெனிகளின் இலாபத்தின் பங்கு (தூய பங்கு இலாபம் ) | 45,101,920 | (3,725,509) | - | - |
| தேய்மானம் | 5,553,448,576 | 5,950,743,934 | 5,547,819,038 | 5,939,600,253 |
| உணரா சொத்துக்களின் கடன் ஈடுசெய்தல் | 23,924,336 | 56,420,801 | 23,695,026 | 55,744,966 |
| ஆண்டின் பணிக்கொடைக் கட்டணம் மற்றும் ஏனைய செலவினம் | 633,966,717 | 555,730,238 | 632,614,189 | 552,156,270 |
| பங்கிலாப வருமானம் | (839,681,509) | (851,416,512) | (839,681,509) | (851,539,616) |
| வட்டி வருமானம் | (1,691,682,775) | (1,139,882,097) | (1,650,080,928) | (1,086,163,725) |
| வட்டி செலவினம் | 2,082,669,764 | 4,426,312,782 | 2,082,018,395 | 4,301,850,044 |
| அரச கொடுப்பனவுகளுக்கான கடன் ஈடுசெய்தல் | (61,171,076) | (48,042,872) | (61,171,076) | (48,042,872) |
| தூய அந்நிய செலாவணி நட்டம் | 2,205,937,060 | 10,107,909,987 | 2,205,937,060 | 10,038,302,300 |
| சீஜசீரீ யின் முற்கொடுப்பனவு | (103,534,286) | (103,534,286) | (103,534,286) | (103,534,286) |
| பட்டியலிடப்பட்டவற்றின் குறைதல்கள் | - | 585,800,009 | - | - |
| ஆண்டினுள் லாப் டர்மினல்ஸ் கம்பனியின் பதிவழித்தல்கள் | (658,207) | (658,207) | (658,207) | (658,207.00) |
| வ/ப லாப் டர்மினஸ் கம்பனியின் வ/ப லாப் டர்மினஸ் கம்பனியினால் ஆண்டினுள் செலுத்தப்பட்டுள்ளது . | (6,829,041) | - | (6,829,041) | - |
| வ/படோக்கியோ சீமெந்து கம்பனியினால் ஒரு தடவை செலுத்திய தவணைக் கட்டணம் | (596,774) | - | (596,774) | - |
| திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெறுதல்- மக்கள் வங்கிக் கடன் | 3,950,858,870 | | 3,950,858,870 | |
| திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெறுதல்- மக்கள் வங்கிக் கடன் | (3,950,858,870) | | (3,950,858,870) | |
| HIPG,HIPS கம்பனிகளினது குத்தகை வாடகை உரித்துக்களிலானது மேற்கொள்ளப்பட்டவை | (107,942,331) | - | (107,942,330) | - |
| நிலையான சொத்துக்கள் அகற்றப்படுதலின் இலாபம் | (18,139,866) | (23,939,047) | (18,139,866) | (23,939,047.00) |
| ஒன்றிணைந்த சமூக பொறுப்புக்களுக்கான செலவினம் | (17,467,352) | | (17,467,352) | |
| **இலாபத்திற்கு முன்னரான தொழிற்படு மூலதனத்தின் மாற்றம்** | **20,991,443,966** | **20,106,697,772** | **20,908,118,260** | **19,809,501,969** |
| **தொழில்படு மூலதனத்தின் மாற்றம்** | | | | |
| பட்டிலியடப்பட்ட பொருட்கள் | (23,504,214) | 255,087,696 | (23,504,214) | 243,172,672 |
| வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்கப் பெறுதல்கள் | (103,738,505,748) | (6,701,497,285) | 103,740,921,708 | (6,649,830,602) |
| வைப்புக்கள் மற்றும் முற்பணம் | (88,758,338) | 11,753,221,232 | (88,758,338) | 11,753,221,232 |
| முன் செலுத்திய செலவினம் | (55,549,253) | 11,978,119 | (53,070,210) | 11,978,119 |
| ஊழியர் கடன்கள்/ ஏனையவை | 7,706,118 | (6,801,218) | 8,611,631 | (6,801,218) |
| வர்த்தக மற்றும் ஏனைய கடனுரிமையாளர்கள் | 106,896,579,377 | 388,029,183 | 106,897,012,310 | 385,103,140 |
| வைப்புக்கள் மற்றும் முற்பணம் | (2,041,110,620) | (800,737,331) | (2,041,110,620) | (800,737,336) |
| திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெறுதல்- மக்கள் வங்கிக் கடன் | 4,369,842 | | 4,369,842 | |
| ஏற்பாடுகள் மற்றும் ஒன்றுசேர்ந்த செலவினம் | (5,862,884,744) | 6,691,747,667 | (5,862,884,744) | 6,780,029,198 |
| **இயக்கம் மூலம் உழைக்கப்பட்ட நிதி** | **16,085,416,543** | **31,697,725,835** | **16,007,862,208** | **31,525,637,174** |
| செலுத்தப்பட்ட வட்டி | (3,192,085,866) | (4,422,283,101) | (3,191,434,497) | (4,421,838,077) |
| கொடை மீள் செலுத்துதல் | - | (25,000,000) | - | (25,000,000) |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை நிதி | (428,803,093) | (361,748,050) | (428,588,159) | (361,439,857) |
| செலுத்தப்பட்ட வரி நிதி | (308,919,487) | (153,273,226) | (299,155,517) | (146,015,545) |
| **இயக்க நடவடிக்கைகளில் கிடைக்கப்பெற்ற தூய தொகை** | **12,155,608,095** | **26,735,421,459** | **12,088,684,032** | **26,571,343,696** |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் கிடைக்கப்பெற்ற காசுப்பாய்ச்சல்** | | | | |
| சொத்துக்கள் , இயந்திர வகை, உபகரணங்கள் கைப்பற்றல் | (233,460,153) | (236,887,628) | (226,747,761) | (219,007,180) |
| நிலையான சொத்துக்கள் விற்பனையின் முன்கொண்டு வரப்பட்டவை | 24,107,030 | 25,156,034 | 24,107,030 | 25,156,034 |
| வ/ப லாப் டர்மினஸ் கம்பனியின் வ/ப லாப் டர்மினஸ் கம்பனியினால் ஆண்டினுள் செலுத்தப்பட்டுள்ளது . | 309,000,000 | - | 309,000,000 | - |
| வ/படோக்கியோ சீமெந்து கம்பனியினால் ஒரு தடவை செலுத்திய தவணைக் கட்டணம் | 370,000,000 | | 370,000,000 | |
| CICT யின் முற்கொடுப்பனவு | - | 1,503,000,000 | - | 1,503,000,000 |
| நடைபெற்று வரும் பணிகளுக்கான மூலதனம் | (13,448,381,643) | (21,540,899,726) | (13,448,381,643) | (21,540,899,726) |
| உணரா சொத்துக்கள் கைப்பற்றல் | (11,187,222) | (84,721,232) | (11,187,222) | (84,721,232) |
| கிடைக்கப்பெற்ற பங்கிலாபம் | 832,879,509 | 847,733,512 | 839,681,509 | 851,416,512 |
| வட்டி கிடைக்கப்பெறுதல்கள் | 1,140,142,394 | 865,767,501 | 1,098,540,547 | 812,049,130 |
| அரச ஈட்டு முதலீட்டு வங்கியிலிருந்து அற/வேண் தொகை | 24,232,164 | 27,007,008 | 24,232,164 | 27,007,008 |
| ஏனைய நிதிசார் சொத்துக்களிலிருந்து முன் கொ.வ தூய கிடைக்கப்பெறுதல்கள் | (4,050,571,836) | (4,412,862,668) | (4,050,571,836) | (4,412,862,668) |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் கிடைக்கப்பெற்ற தூய நிதி (பயன்படுத்தப்பட்ட )** | **(15,043,239,760)** | **(23,006,707,200)** | **(15,071,327,214)** | **(23,038,862,126)** |
| **நிதிசார் நடவடிக்கைளின் காசுப்பாய்ச்சல்** | | | | |
| இலங்கை அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற கடன் | 12,016,727,822 | 8,465,254,991 | 12,016,727,822 | 8,465,254,991 |
| நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட கடன் | 4,794,994 | 195,298,783 | - | 189,133,785 |
| இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட கடன் மீள் செலுத்துதல் | (6,959,384,915) | (9,403,339,687) | (6,959,384,915) | (9,403,339,687) |
| நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட கடன் மீள் செலுத்துதல் | (1,742,079,319) | (3,082,332,262) | (1,742,079,319) | (3,062,732,767) |
| **நிதிசார் சொத்துக்களின் மதிப்பிடலின் மீதான புரியப்படாத செலாவணி நட்டம்** | **3,320,058,582** | **(3,825,118,175)** | **3,315,263,589** | **(3,811,683,678)** |
| **காசு மற்றும் சம மதிப்புகளின் தூய மாற்றம்** | **432,426,917** | **(96,403,916)** | **332,620,407** | **(279,202,107)** |
| வருட ஆரம்பத்தில் காசு மற்றும் காசு சம மதிப்புகள் | **1,330,100,814** | **1,426,504,730** | **582,143,737** | **861,345,843** |
| **வருட இறுதியின் காசு மற்றும் காசு சம மதிப்புகள்** (குறிப்பு 16) | **1,762,527,730** | **1,330,100,814** | **914,764,144** | **582,143,737** |

104-118 பக்கங்களில் கணக்கீட்டு நியமங்களும் 119-140 பக்கங்கள் வரையிலான நிதிசார் பொறுப்புக்களும் குறிப்புக்களும் இந்த நிதிசார் கூற்றுக்களில் விசேட பங்கினை வகிக்கின்றனது.

**1 தாபனம் தொடர்பான தகவல்கள்**

**1.1 பொது விடயங்கள்**

1984 இன் 7 மற்றும் 35 ஆம் இலக்க சட்டங்களின் பின் திருத்தியமைக்கப்பட்ட 1979 இன் 51 ஆம் இலக்க இலங்கை துறைமுக அதிகாரசபைச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கு அமைய 1979 ஆகஸ்ட் 01 ஆம் திகதி இலங்கை துறைமுக அதிகாரசபை நிறுவப்பட்டது.

**1.2 முக்கிய விடயங்கள் மற்றும் இயக்க செயற்பாடுகளின் நிலை**

கப்பல்சுமை, கப்பலேற்றல் மற்றும் மாற்றியேற்றல் தரை இறக்குதல் மற்றும் பண்டக சாலையிடல், வாப்பு சேவைகள் கலங்களிலிருந்து கலங்களுக்கானதும் வழிகாட்டி கட்டணங்ளுக்காக குதங்கள் மற்றும் களஞ்சியங்களுக்கிடையிலும் நீர் மூழ்கும் பணிகளுக்கு கலங்களைக் கட்டி வைப்பதற்கும் மற்றும் சுழியோடுதல் மற்றும் நீருக்கடியிலான கப்பல்களின் பழுதுபார்க்கும் நடவடிக்கைகள், அதற்கான துணைச் சேவைகளாக கலங்களுக்கு தண்ணீர், எரிபொருள் மற்றும் மின்சாரம் வழங்குதல்

**1.3 நிதி ஆண்டு**

அதிகாரசபையின் நிதியாண்டு டிசெம்பர் 31 ஆம் திகதியன்றுடன் முடிவடையும்.

**1.4 பதிவு அலுவலகம்**

இலங்கை துறைமுக அதிகாரசபையின் பதிவு அலுவலகம் இல : 19 சைத்திய வீதி, கொழும்பு - 01 ஆகும். அதன் தபால்பெட்டி இலக்கம் 595 ஆகும்.

**1.5 ஊழியர் தொகை**

2017 திசெம்பர் 31 ஆம் திகதிக்கான ஊழியர் தொகை 9,377 **(2016 - 9,651)** ஆகும்

**1.6 பிரகடனப்படுத்தப்படுவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ள திகதி**

2017 டிசம்பர் 31 இல் முடிவடையும் ஆண்டிற்கான பணிப்பாளர் சபையில் முன்மொழியப்பட்ட பிரேரணைக்கமைய 2018 பெப்ரவரி 23 ஆம் திகதிக்கு துறைமுக அதிகாரசபையின் நிதிசார் அறிக்கைகள் வெளியிடப்படுவதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**2 முக்கிய கணக்கியற் கொள்கைகளின் சாராம்சம்**

**2.1 தயாரிக்கும் அடிப்படை**

இலங்கை கணக்கீட்டு நியமங்களின் விதிமுறைகளுக்கமைய (SLFRSs) துறைமுக அதிகாரசபையின் ஒன்றிணைந்த நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. விற்பதற்குள்ள நிதிசார்ந்த சொத்துக்களின் நியாயமான பெறுமதிக்கேற்ப மாற்றப்பட்ட பழைய நிதிசார் கூற்றுக்களின் மீது ஒன்றிணைந்த நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இலங்கை கணக்கீட்டு நியமங்களை அனுசரித்து நிதிசார் கூற்றுக்கள் தயார் செய்யப்படுகையில் சில பகுப்பாய்வு கணக்கியல் மதிப்பீடுகளை பயன்படுத்துதல் அவசியமாகும். இந்த செயற்பாட்டின் போது குழு கணக்கியலின் கொள்கைகள் பயன்படுத்துதலிலான தமது தீர்வுகளை அடைவதற்கு முகாமைத்துவத்திற்கு இது அவசியப்படும்.

## 2.2 ஒன்றிணைத்தல்

### 2.2.1 துணை நிறுவனம்

துணை நிறுவனம் என்பது பொதுவாக விருப்பம் கோரலின் அரைவாசிக்கும் மேல் பங்கு உரித்துக்கள் கொண்ட குழுவின் கீழ் நிர்வகிக்கப்படும் நிதிசார்ந்த மற்றும் செயற்பாட்டுக் கொள்கைகள் கொண்ட அலகொன்றாகும். துணை நிறுவனமொன்றின் நிர்வாகம் குழுவிற்கு மாற்றப்படும் திகதியிலிருந்து துணை நிறுவனமொன்று முற்றாக ஒன்றிணைந்ததாகக் கருதப்படும். இதன் நிர்வாகம் முடிவடையும் திகதியிலிருந்து இது ஒன்றிணைந்த நிலையிலிருந்து நீக்கப்படுகின்றது.

வர்த்தகக் கூட்டாக கருதப்படும் பொருட்டு கைப்பற்றப்படும் செயற்பாட்டை குழு பயன்படுத்தும். மாற்றப்பட்ட சொத்துக்களினது நியாயபூர்வ பெறுமதி மற்றும் துணை நிறுவனங்களினால் வகிக்கப்படும் பொறுப்புக்களைக் கொண்டதாக துணை நிறுவனம் அமைந்திருக்கும். துணை நிறுவனம் முற்றாக அதிகாரசபைக்குச் சொந்தமானதால் துணை நிறுவனத்தின் கட்டுப்பாட்டிற்கு உட்படாத நடவடிக்கைகள் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இடை கூறுகளின் கொடுக்கல் வாங்கல்கல் மீதிகள், குழுவின் கூறுகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்களில் ஏற்படும் வருமானம் மற்றும் செலவினம் நீக்கப்படும். மேலும் சொத்துக்களில் ஏற்றுக்கொள்ளப்படும் கூறுகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்களில் ஏற்படும் இலாபம் மற்றும் நஷ்டமும் நீக்கப்படும். குழுவினால் பயன்படுத்தப்படும் கொள்கைகள் தொடர்ந்தும் மாற்றமில்லாது பயன்படுத்தப்படும் தேவைப்பாட்டின் மீது துணை நிறுவனத்தின் கணக்கியற் கொள்கைகள் மாற்றப்பட்டுள்ளன.

### 2.2.2 ஒன்றிணைந்த நிறுவனம்

குழுவில் தாக்கம் செலுத்தக்கூடிய அலகொன்றின் பொதுவாக பிரகடனப்படுத்தும் உரிமையில் 20% அல்லது அதற்கு மேலான அளவில் நேரடியான அல்லது நேரடியற்ற உரிமை கொண்ட நிர்வாகமின்றிய அலகொன்றாகும். இணைந்த நிறுவனத்தின் முதலீடு திணிவு முறை பயன்பாட்டில் கணக்கு வைக்கப்படுகின்றது நியாயத்தின் முறைமையின் கீழ் முதலீடு ஆரம்பத்தில் ஆகு செலவாகக் கருதப்படுவதோடு பொறுப்பேற்றுக்கொள்ளும் திகதியின் பின்னர் முதலீடு பொறுப்பேற்பவரின் இலாபம் அல்லது நஷ்டம் முதலீட்டாளரின் பாகத்தின் அதிகரிப்பு அல்லது குறைவடைதலாக ஏற்றுக்கொள்ளப்படும்.

குழுவின் பிற்கால ஒப்படைப்பு இலாபங்கள் அல்லது நஷ்டப்பாகங்கள் மொத்த வருமானத்தின் பிற்கால ஒப்படைப்பு பாகங்களின் செயற்படுகை, ஏனைய வருமானம் தொடர்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இது முதலீட்டின் போது முன்கொண்டு வரப்படும் நிதிக்கேற்ப சீர்செய்தலோடு கவனத்தில் கொள்ளப்படுகின்றது.ஒவ்வொரு நிதியாண்டு இறுதித் தினத்தில் ஒன்றிணைந்த நிறுவனத்தின் சொத்துக்களுக்கு பாதிப்பேற்பட்டுள்ளதா என கவனிக்கப்படுதல் வேண்டும்.

இதன்போது இணைந்த நிறுவனத்தின் சொத்துக்களினது நியாயமான பெறுமதியானது அவை மீள் அறவிட்டுக்கொள்ளக்கூடிய பெறுமதியை தாண்டும் போது அதுவானது பாதிப்பின் நட்டம் என அடையாளம் காணப்பட்டு இணைந்த நிறுவனத்தின் இலாப நட்டத்துடன் சீர் செய்தல் வேண்டும்.

## 2.3 வெளிநாட்டு நிதி பரிமாற்றம்

### 2.3.1 செயற்படுத்தப்படும் மற்றும் சமர்ப்பிக்கப்படும் நிதி வகை

குழுவின் ஒவ்வொரு அலகுளின் நிதிசார் அறிக்கைகளில் உள்ளடங்கப்படும் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் மீதமடைதல்கள் அந்த அலகு செயற்படும் ஆரம்ப பொருளாதார நடவடிக்கைகளில் தொடர்புபடும் நிதி வகை பயன்பாட்டில் கணக்கிடப்படும். ஒன்றிணைந்த

நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாய்களில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் இது குழுவினால் சமர்ப்பிக்கப்படும் நிதி வகையாகும்.

**2.3.2 கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் மீதமடைதல்கள்**

வெளிநாட்டு நிதிகளில் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்கள் பயன்பாட்டிலுள்ள நிதி வகையில் மாற்றப்படும் போது அக்கொடுக்கல் வாங்கல்களுக்குரிய திகதிகளில் வெளிநாட்டு நாணய விகிதத்திற்கேற்ப அவ்வாறு செய்யப்படும். அவ்வாறான கொடுக்கல் வாங்கல்கள் சீர் செய்தலின் பயனாக கிடைக்கப்பெறும் வெளிநாட்டு நாணய இலாப நஷ்டங்கள் மற்றும் வருட இறுதியில் நிதிசார் சொத்துக்கள், பொறுப்புக்கள், மாற்றப்படுதலில் எழும் இலாப நஷ்டங்கள் விபரமான கூற்றினுள் அடையாளங் காணப்படுதல் வேண்டும்.

ஆகுசெலவின் மாற்றங்களுக்குரிய பரிமாற்ற வேறுபாடுகள் விபரமான வருமான கூற்றினுள் குறிப்பிடப்பட்டுள்ளன.

**2.4.1 சொத்துக்கள், இயந்திர வகை மற்றும் உபகரணங்கள்**

சொத்துக்கள், இயந்திர வகை மற்றும் உபகரணங்கள் அடிப்படையாக ஆகுசெலவுக்கேற்ப ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இருந்த சொத்து அமைந்துள்ள இடத்திற்கு கொண்டு வருவதற்காக நேரடியாக செலவு செய்யப்பட்ட ஆகுசெலவும் குழுவின் முகாமைத்துவத்தினால் கருதப்படும் வகையில் அவை செயற்படுத்தப்படக் கூடிய நிலைக்குக் கொண்டு வருவதற்காக செலவு செய்யப்பட்ட நிதியும் இந்த ஆகுசெலவில் அடங்குதல் வேண்டும்.

அதிகாரசபையின் சொத்துக்கள், இயந்திர வகை மற்றும் உபகரணங்களின் மீள் அளவு மதிப்பீடு செய்யப்பட்ட நிதித் தொகையானது சொத்துக்கள், இயந்திர வகை மற்றும் உபகரணங்களின் பெறுமதி நியாயபூர்வ பெறுமதிக்கு சமனாகும் சந்தர்ப்பங்களில் மீள் அளவு மதிப்பீடு செய்யப்பட்ட திகதியில் கருதப்பட்ட ஆகுசெலவாக கொள்ளப்படுகின்றது. சொத்துக்கள், இயந்திரவகை மற்றும் உபகரணங்களின் பெறுமதியில் சேர்ந்த தேய்மானம். மற்றும் சேர்ந்த பாதிப்புகள் கழிக்கப்பட்ட ஆகுசெலவாகும்.

சொத்துக்கள் பேணிச்செல்லப்படும் பெறுமதியில் அல்லது சொத்தாக அடையாளங் காணப்படும் சந்தர்ப்பங்களில் பேணிச் செல்லப்படும் நிதித் தொகை பிற்கால ஆகுசெலவில் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஏதாவது காரணமொன்றிற்குரிய எதிர்கால பொருளாதார அனுகூலங்கள் குழுவில் சேரக்கூடிய சந்தரப்பங்களில் மாத்திரம் இவ்வாறு செய்யப்படும். ஏனைய சகல பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் அவை நடைபெறும் நிதி சார்ந்த காலப்பகுதிக்குரிய பூரண வருமான கூற்றினுள் உள்ளடக்கப்படுகின்றது.

காணிகளின் பெறுமதி தேய்மானம் செய்யப்படமாட்டாது. எளிய வழி முறையொன்றின் பயன்பாட்டில் ஏனைய பெறுமதிகளின் தேய்மானம் கணிப்பிடப்படுகின்றது. அவற்றின் ஆகுசெலவு அல்லது ஆகுசெலவாக கருதப்படக் கூடிய பெறுமதிகள் பின்வருமாறு அவற்றின் மதிப்பிடப்பட்ட ஆயுட்காலங்களுக்கேற்பவாறாக இருக்கும்.

| சொத்து வகை | | அளவு |
|---|---|---|
| கையாளல் கட்டடங்கள் மற்றும் அமைவுகள் | 5-50 வருடங்கள் | 1% -20% |
| மிதவை உபகரணங்கள் | 2-15 வருடங்கள் | 6.7% - 50% |
| கையாளல் உபகரணங்கள் | 2-20 வருடங்கள் | 5% - 50% |
| இயந்திர உபகரணங்கள் | 2-20 வருடங்கள் | 5% -50% |
| அலுவலகங்கள் மற்றும் நலன்புரி கட்டடங்கள் | 2-75 வருடங்கள் | 1.3% - 50% |
| கணனி வன் பொருள் | 2–5 வருடங்கள் | 20% - 50% |

சொத்துக்களின் ஏற்படும் பெறுமதி அவை மீள் அறவிடப்படக் கூடிய பெறுமதியை விட அதிகரித்திருப்பின் ஏற்படும் பெறுமதியானது மீள் அறவிட்டுக் கொள்ளக் கூடிய பெறுமதி நீக்கப்படுதல் வேண்டும்.

**2.4.2 உணரா சொத்துக்கள்**

பெறப்படுவதற்கு செலவு செய்யப்படும் ஆகுசெலவு, குறிப்பிட்ட மென் பொருள் மற்றும் தொகுதிகளின் அடிப்படையில் பெறப்பட்ட கணனி மென் பொருள் மற்றும் கையாளல் தொகுதிகள் மூலதன சொத்துக்களாகக் கணிக்கப்படுகின்றன. சேர்ந்த கடன் தொகை மற்றும் சேர்ந்த பாதிப்புகள் கழிக்கப்பட்டதன் பின்னர் உணரா சொத்துக்களின் பெறுமதி குறிப்பிடப்பட்டுள்ளது. பின்வருமாறு அவற்றின் மதிப்பிடப்பட்டுள்ள ஆயுட்காலம் குறைக்கப்பட்டு கடன் ஈடுசெய்தலின் பின்னரான ஆகுசெலவு குறிப்பிடப்பட்டுள்ளது.

கணனி மென் பொருள் 2-5 வருடங்கள் 20% - 50%

கணனி மென் பொருள் வேலைத்திட்டங்கள் பராமரித்தலின் ஆகுசெலவினுள் நடைபெறுவதுடன் அவை செலவு செய்யப்பட்ட நிதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

**2.4.3 முதலீடு செய்யப்பட்டுள்ள சொத்துக்கள்**

வாடகைப் பணம் அறவிடப்படுவதற்காக பேணப்பட்டு வரும் முதலீடு செய்யப்பட்டுள்ள சொத்துக்கள் ஆரம்பமாக அதன் ஆகு செலவுக்கேற்ப கணக்கிடப்படுகின்றது.

2011 டிசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப தயார்செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள மீள் மதிப்பீடு செய்யப்பட்ட விலைகளுக்கேற்ப முதலீட்டுச் சொத்துக்கள் பேணப்பட்டு வந்துள்ளன. முதலீட்டுச் சொத்துக்களின் விற்பனை வரி பெறுமதி நியாயபூர்வ பெறுமதிக்கு சமனாகுவதால் முதலீடு செய்யப்பட்டுள்ள சொத்துக்களில் அடங்கிய நிதி அவ்வாறு மீள் பெறுமதி செய்யப்பட்ட திகதியிலிருந்து வந்த கருதிய ஆகுசெலவாக அதிகாரசபையினால் கருதப்பட்டுள்ளது. அதன்படி முதலீடு செய்யப்பட்டுள்ள சொத்துக்கள், சேர்ந்த தேய்மானங்கள் மற்றும் சேர்ந்த பாதிப்புக்கள் கழிக்கப்பட்டதாக கருதப்பட்ட ஆகுசெலவாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஏனைய சொத்துக்கள், இயந்திர வகை, உபகரணங்கள் சேர்ந்த தேய்மானங்கள் மற்றும் சேர்ந்த பாதிப்புக்கள் கழிக்கப்பட்ட ஆகுசெலவாக பின்னர் கணக்கிடப்பட்டுள்ளது.

காணிகளின் பெறுமதி தேய்மானம் செய்யப்படமாட்டாது. இலகு முறையொன்றின் பயன்பாட்டில் ஏனைய பெறுமதிகளின் தேய்மானம் கணிக்கப்படுகின்றது. அவற்றின் ஆகுசெலவு அல்லது ஆகுசெலவாக கருதப்படக் கூடிய பெறுமதி பின்வருமாறு அவற்றின் மதிப்பிடப்பட்ட ஆயுட்காலத்திற்கமைய இவ்வாறு செய்யப்படும்.

முதலீடு செய்யப்பட்டுள்ள சொத்துக்கள் 15 -100 வருடங்கள் 2.9% - 6.7%

**2.4.4. நிதிசாராத சொத்துக்களின் பாதிப்பு**

அறிக்கை செய்யப்படுவதற்குட்படும் ஒவ்வொரு காலப்பகுதியின் இறுதியில் குழுவினால் அதன் சொத்துக்கள், இயந்திர வகை மற்றும் உபகரணங்கள் முதலீடு செய்யப்பட்டுள்ள சொத்துக்கள் மற்றும் உணரா சொத்துக்களின் பெறுமதி மீளாய்வு செய்யப்படுவதோடு அந்த சொத்துக்களுக்கு பாதிப்பேதும் ஏற்பட்டதற்கான ஏதாவது காட்டப்படுதல் உள்ளதாவென தீர்மானிக்கப்படும். அவ்வாறு காட்டுப்படின் அவ்வாறான பாதிப்புகளில் ஏற்பட்ட பாதிப்பின் அளவு தீர்மானிக்கப்படுவதற்காக சொத்துக்களிலிருந்து அறவிட்டுக் கொள்ளக்கூடிய தொகை மதிப்பீடு செய்யப்படும். ஏதாவது சொத்தொன்றின் அறவிட்டுக்கொள்ளக்கூடிய நிதி மதிப்பிடப்பட முடியாத சந்தர்ப்பங்களில் குழுவினால் நிதி ஈட்டல் அலகு

தீர்மானிக்கப்படுவதுடன் அந்த சொத்துக்குரிய நிதி ஈட்டல் அலகினால் அறவிட்டுக்கொள்ளக்கூடிய நிதி மதிப்பீடு செய்யப்படும்.

ஏதாவதொன்று விற்பதற்காக செலவு செய்யப்படும் செலவினம் மற்றும் பாவனையிலுள்ள ஏதாவது விற்பதற்காக செலவு செய்யப்படும் செலவினம் மற்றும் பாவனையின் பெறுமதியானது கழிக்கப்பட்ட நியாயமான பெறுமதியின் உயர் மட்ட அறவிட்டுக்கொள்ளக் கூடிய நிதி எனப்படும். பாவனையின் பெறுமதி மதிப்பிடப்படுகையில் எதிர்கால நிதி கிடைக்கப்பெறுதல்கள் நிகழ்கால பெறுமதியில் கழிக்கப்பட்ட நிதிக்கமைய வருமானம் செலுத்தப்படுவதற்கு முன் கழிவுக் கட்டண முறை பின்பற்றப்பட்டு மதிப்பீடு செய்யப்படும். தற்போதிருக்கும் பணத்தில் காலப் பெறுமதி மற்றும் சொத்துக்குரிய விசேட இடர்நேர் கொண்ட சந்தை நிலை வெளிக்காட்டப்படும் வகையில் கழிக்கப்படுவதற்கு முன்பிருந்த வரி நிலைமை பயன்படுத்தப்பட்டு இவ்வாறு செய்யப்படும். எதிர்காலத்தில் ஏற்படும் காசுப் பாய்ச்சலோடு இது சீர்செய்யப்பட மாட்டாது.

ஏதாவது சொத்தொன்றில் அறவிட்டுக் கொள்ளக்கூடிய நிதி (நிதி ஈட்டல்) அலகானது) அதில் நிலவும் பெறுமதிக்குக் குறைவாக மதிப்பீடு செய்யப்பட்டிருப்பின் சொத்தொன்றில் பேணப்படும் நிதி (நிதி ஈட்டல் அலகு) அறவிட்டுக் கொள்ளக்கூடிய நிதித் தொகை வரை கழிக்கப்படும். பாதிப்புகளில் ஏற்படும் நஷ்டம் மொத்த வருமானக் கூற்றில் விரைவில் அடையாளங் காண முடியும்.

## 2.5 நிதிசார் சொத்துக்கள்

2.5.1 பூர்வாங்க அடையாளங்காணலிலேயே குழுவினால் நிதிசார் சொத்துக்களினது வகையீடு தீர்மானிக்கப்படுவதோடு குழுவினால் அதன் நிதிசார் சொத்துக்கள் பின்வருமாறு வகையீடு செய்யப்பட்டுள்ளது.

(அ) கால முதிர்வடையும் வரை பேணப்படும் முதலீடுகள்
(ஆ) கடன் மற்றும் கிடைக்கப்பெற வேண்டியவை
(இ) விற்கப்பட வேண்டியுள்ளவை

### அ) கால முதிர்வடையும் வரை பேணப்படும் முதலீடுகள்

கால முதிர்வடையும் வரை பேணப்படும் முதலீடுகள் என்பது கடன் மற்றும் கிடைக்கப்பெற வேண்டியவை தவிர்ந்த நிரந்தர மற்றும் தீர்மானிக்கப்பட வேண்டிய செலுத்தும் மூலக் கருவில்லாத நிதிசார் சொத்துக்களாகும். கால முதிர்வடையும் வரை வைத்துக்கொள்ளப்படும் முதலீடுகளாக அந்த முதலீடுகள் முதிர்வடையும் வரை வைத்துக்கொள்ளப்படுவதற்கு குழுவிற்கு கரு அல்லது ஆற்றல் பெறக் கூடிய முதலீடுகள் வகையீடு செய்யப்பட்டுள்ளன. முதலீடுகளாக காலமுதிர்வடைவு இல்லாதிருப்பின் கால முதிர்வடையும் வரை வைத்துக்கொள்ளப்படும் முதலீடுகள் நடைமுறையற்ற சொத்துக்களில் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த வகையின் கீழ் தற்போது பொறுப்பேற்கப்படும் கடன்காரர்களை குழு குறிப்பிடப்பட்டுள்ளது.

### (ஆ) கடன் மற்றும் கிடைக்கப்பெற வேண்டியவை

கடன் மற்றும் கிடைக்கப்பெற வேண்டியவை என்பது நிரந்தர மற்றும் தீர்மானிக்கப்பட வேண்டியவை போன்று தற்போது செயற்படும் சந்தையில் தெரிவிக்கப்படாதுள்ள மூலக் கருவில்லா நிதிசார் சொத்துக்களாகும் அறிக்கை செய்யப்படுதலுக்குட்படும் காலப்பகுதி முடிவடைந்த 12 மாதங்களுக்கு மேற்படும் கால முதிர்வடையும் சொத்துக்கள் தவிரந்த நடைமுறைச் சொத்துக்களினுள் சேர்க்கப்பட்டுள்ள கடன் மற்றும் கிடைக்கப்பெற வேண்டியவைகளாகும். இவை நடைமுறைசாராத சொத்துக்களாக வகையீடு செய்யப்பட்டுள்ளன. வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்கப்பெற வேண்டியவை, மீள் விலைக்கு வாங்கப்பட்ட அரசாங்க பிணைமுறிகள், நிரந்தர வைப்புக்களுக்கான பூர்வாங்க செலுத்துதல்கள், முற்பண வைப்புக்கள் ஊழியர்களின் கடன்கள் அறிக்கை செய்யப்படும் காலப்பகுதியின் இறுதியில் இருக்கும்

காசு மற்றும் காசு சம மதிப்புகள் குழுவின் கடன்கள் மற்றும் கிடைக்கப்பெற வேண்டிய பொருட்களாகும்.

**(இ) விற்பதற்குள்ள பொருட்கள்**

விற்பதற்குள்ள நிதிசார் சொத்துக்கள் என்பது இவ்வகையின் கீழ் பெயரிடப்பட்டுள்ள அல்லது பெயரிடப்படாத வேறு வகையின் கீழ் வகையீடு செய்யப்பட்டிராத மூலகூறு அற்ற நிதிசார் சொத்துக்களாகும். முதலீடு, கால முதிர்வு அடையாதொன்றெனில் அல்லது அதுவானது அறிக்கை செய்வதற்கு உட்படும் காலப்பகுதியின் இறுதியிலிருந்து 12 மாதங்களினுள் பணிகள் முடிவுறுத்தப்பட முகாமைத்துவத்தினால் கருதப்படாத நடைமுறை சாராத சொத்துக்களினுள் இவை உள்ளடக்கப்பட்டுள்ளன. முன்வைக்கப்பட்டுள்ள வர்த்தகப் பொருட்களின் முதலீடுகள் மற்றும் முன்வைக்கப்படாத வர்த்தகப்பொருட்களின் முதலீடுகளை விற்பதற்குள்ள நிதிசார் சொத்துக்கள் கொண்டிருக்கும்

### 2.5.2 ஏற்றுக் கொள்ளல் மற்றும் அடிப்படை அளவீடு

கடன் மற்றும் கிடைக்கப்பெற வேண்டியவை நிதிசார் சொத்துக்களாக குழுவினால் இக்கொடுக்கல் வாங்கல் ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து வகையீடு செய்யப்பட்டுள்ளது. குழுவானது நிதி உடன்பாட்டின் ஏற்பாடுகளுக்கமைய ஒப்பந்தத்தின் தரப்பினரான வர்த்தக கொடுக்கல் வாங்கல் திகதியிலிருந்து ஏனைய நிதிசார் சொத்துக்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

நிதிசார் சொத்துக்கள் முதலில் நியாயபூர்வ பெறுமதிக்கேற்ப கணிப்பீடு செய்யப்படுகின்றன. இதற்குப் புறம்பாக நியாயபூர்வ பெறுமதி குறிப்பிடப்படாதுள்ள சொத்துக்கள் அவற்றின் இலாப நஷ்டங்களின் ஊடாக கொடுக்கல் வாங்கலின் ஆகுசெலவின் நேரடி தொடர்பு மீது கணக்கீடு செய்யப்படுகின்றது.

நிதிசார் சொத்துக்களிலிருந்து காசுப் பாய்ச்சல் கிடைக்கப்பெற உரித்து இல்லாதபோது அல்லது மாற்றப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் நிதிசார் சொத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. அதேபோன்று இந்த நிலைமையின் கீழ் குழுவினால் அதன் உரித்தின் அனைத்து இடர்நேர் தன்மை மற்றும் அனுகூலங்கள் பெருமளவில் நிதிசார் சொத்துக்களுக்கு மாற்றப்படுகின்றது.

### 2.5.3 பின்னர் மேற்கொள்ளப்படும் கணக்கீடுகள்

**அ) கால முதிர்வடையும் வரை தடுத்து வைக்கப்படும் முதலீடுகள்**

காலம் தாண்டப்படும் வரை பொறுப்பேற்கப்படும் முதலீடுகளானது பாதிப்புகளில் நஷ்டமேற்பட்டிருப்பின் அவை கழிக்கப்பட்டு பயனான வட்டி முறை அனுசரிக்கப்பட்டு பிற்காலத்தில் நடைபெறும் கடன் ஈடுசெய்தலின் செலவினமாகும். பொறுப்பேற்றலின் கொடுக்கல் வாங்கல்களில் ஏற்படும் தள்ளுபடி கழித்தல் அல்லது தவணைகள் கருத்திலெடுக்கப்பட்டு கடன் ஈடுசெய்தலின் செலவினம் கணக்கிடப்படுகின்றது.

**(ஆ) கடன் மற்றும் கிடைக்கப்பெற வேண்டியவை**

பூரண ஏற்றுக்கொள்ளலின் பின்னர் கடன் மற்றும் கிடைக்கப்பெற வேண்டியவை கடன் ஈடுசெய்தலின் செலவினத்திற்கேற்ப கணக்கிடப்படுவதுடன் அவ்வாறு செய்யப்படுகையில் பாதிப்புகளுக்கான ஏற்பாடுகள் கழிக்கப்பட்டு பயனான வட்டி முறை அனுசரிக்கப்படுகின்றது.

**(இ) விற்பதற்குள்ள பொருட்கள்**

ஆரம்ப ஏற்றுக்கொள்ளலின் பின்னர் விற்பதற்குள்ள நிதிசார் சொத்துக்களாக வகையீடு செய்யப்பட்டுள்ள வட்டியில்லாத பங்கு முதலீடுகள் நியாயபூர்வ பெறுமதிக்கேற்ப

கணிப்பிடப்படுகின்றன. விற்பதற்குள்ள நிதிசார் சொத்துக்களின் நியாயபூர்வ பெறுமதியின் வித்தியாசம் பங்குகளின் மாற்றங்கள் மீதான கூற்றில் விற்பதற்காக ஒதுக்கப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ள ஏனைய முழு வருமானத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். குழுவின் உபாயரீதியான முதலீடுகளான வட்டியில்லா பங்குகளின் முதலீடுகள், பாதிப்புகளில் ஏற்பட்ட நஷ்டம் கழிக்கப்பட்டபின் ஏற்படும் செலவினம் மீது கணிக்கப்படுகின்றன. அவற்றின் நியாயபூர்வ பெறுமதியானது நம்பிக்கையான முறையில் மதிப்பிடப்பட முடியாதுள்ளதனால் இவ்வாறு செய்யப்படும்.

### 2.5.4 நிதிசார் சொத்துக்கள் பாதிப்படைதல்

#### (அ) செலவு மீட்புக்கான சொத்துக்களின் பராமரிப்பு

கடன் ஈடுசெய்தலின் செலவின முறைக்கமையமுன்கொண்டு செல்லப்படும் சொத்துக்கள், ஏதாவது நிதி சார்ந்த சொத்தொன்றுக்கு பாதிப்பேற்பட்டிருப்பின் பாதிப்பு ஏற்பட்டுள்ளதென அடிப்படை விடய மூல சான்றுகள் உள்ளக சந்தர்ப்பமொன்றின் போது அறிக்கை செய்யப்படுவதற்கு உட்படும் காலப்பகுதியின் இறுதியில் குழுவினால் அது தொடர்பில் மதிப்பிடப்படுகின்றது. சொத்தொன்றின் ஆரம்ப ஏற்றுக் கொள்ளப்படுதலின் பின்னர் ஏதாவது விடயம் அல்லது பல சம்பவங்களின் பயனாக பாதிப்பு அல்லது அதனால் நஷ்டமேற்பட்டுள்ளதென விடய மூல சான்றுகள் இருப்பின் மாத்திரம் நிதிசார்ந்த சொத்தொன்றுக்கு பாதிப்பு ஏற்பட்டதாக கருதப்படும். இங்கு நஷ்டமேற்பட்ட விடயம் அல்லது பல சம்பவங்கள் நிதிசார்ந்த சொத்தின் எதிர்கால காசுப்பாய்ச்சல்கள் தொடர்பில் தாக்கமேற்படும் போது அதுவானது நம்பிக்கையூட்டும் வகையில் மதிப்பிடப்படக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

கடன் மற்றும் கிடைக்கப்பெற வேண்டியவை போன்று காலம் தாண்டும் வரை பொறுப்பேற்கப்படும் முதலீடுகள் கடன் ஈடுசெய்தலின் செலவினத்திற்கேற்ப பேணப்படுவதுடன் நஷ்டத்தின் அளவானது சொத்தில் பேணப்படும் நிதியின் சமனாக மதிப்பிடப்பட்டுள்ள வித்தியாசத்திற்கேற்ப கணிப்பிடப்படுகின்றது. (இதற்கு எதிர்காலத்தில் நடைபெறும் கடன் பாதிப்புகள் உள்ளடங்கப்படமாட்டாது.) அதேபோன்று மேற்குறிப்பிடப்பட்டுள்ள நிதி சார்ந்த சொத்துக்களினது பயனான வட்டி முறை மீது தள்ளுபடி செய்தல் வேண்டும். நிதிசார் பெறுமதியில் பேணப்பட்டு வரும் நிதி கழிக்கப்படுவதுடன் மொத்த வருமானம் பற்றிய கூற்றில் நஷ்டம் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.
பிற்காலத்தில் பாதிப்பினால் ஏற்பட்ட நஷ்டம் குறைவடையின் மற்றும் அந்த நஷ்டமானது விடய மூல நிலைக்கேற்ப நஷ்டம் ஏற்பட்ட பின் நடைபெற்ற சம்பவத்துடன் தொடர்புடையதென ஏற்றுக்கொள்ளப்படின் அவ்வாறான சந்தர்ப்பமொன்றின் போது முன்னர் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாதிப்பிலான நஷ்டம் மொத்த வருமான கூற்றில் ஏற்றுக் கொள்ளப்படும்

#### (ஆ) விற்பதற்குள்ள பொருட்கள்

நிதிசார் சொத்துக்களுக்கு பாதிப்பேற்பட்டுள்ளதான விடய மூல சான்றுகள் இருக்கின்றதாவென அறிக்கை செய்யப்படுதலுக்குட்படும் ஒவ்வொரு காலப்பகுதி முடிவிலும் குழுவினால் மதிப்பீடு செய்யப்படும். விலை குறிப்பிடப்பட்டுள்ள பங்குகளிலான முதலீடுகள் தொடர்பில் நியாய பெறுமதியில் முக்கியமான அல்லது நீண்டகாலமாக அதன் ஆகு செலவிற்குக் குறைந்த சொத்துக்களினது அளவு இருப்பது சொத்துக்கு பாதிப்பு ஏற்படுதலாக கருதப்படும் சான்றாகும். இங்கு குறிப்பிடப்பட்ட முதலீடுகள் தொடர்பில் அவ்வாறான சான்று இருப்பின் இலாபம் மற்றும் நஷ்டம் கணக்கிடப்படுகையில் முன்னர் ஏற்றுக்கொள்ளப்பட்ட நஷ்டம் கழிக்கப்பட்டு பொறுப்பேற்றலின் செலவினம் மற்றும் நிகழ்கால நியாயபூர்வ பெறுமதிக்கிடையிலான வித்தியாசம் கருதப்பட்ட சேர்ந்த மீள் வகையீடு செய்தலாக ஏற்றுக்கொள்ளப்படும்.

விலை குறிப்பிட்ட பங்குகளிலான முதலீட்டு ஒப்பந்தத்தில் இலாபம் அல்லது நஷ்டத்தில் பாதிப்பு உள்ளதென அந்த சந்தர்ப்பத்தில் விற்பதற்குள்ள பொருட்கள் வகையீடு செய்வதற்காக இலாபம் அல்லது நஷ்டத்தின் ஊடாக மீள் வகைப்படுத்தலின் மூலம் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இந்த மீள் காட்டப்படும் பணம் ஏனைய மொத்த வருமானம் தொடர்பில் ஏற்றுக்கொள்ளப்படும்

* வரி செலுத்தப்படுகையில் ஏதாவது தாமதம் ஏற்பாட்டால் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் ஏதாவது தண்டப்பணம் ஒன்றை விதித்தால் அதற்கு 72 மில்லியன் ரூபா தொகையை இலங்கை துறைமுக அதிகாரசபை தடுத்து வைத்துள்ளது .

(பல்வேறு வகையான வைப்புக் கணக்கு)

**38** **இல CA (PHC) APN 45/2006-MV "JAAMI" கொண்ட மேன்முறையீட்டு வழக்கு தீர்க்கப்படுதல்**

2017.02.23 ஆந் தகதிய இல PAM/ 61 /2017 ஆம் பணிப்பாளர் சபையின் தீர்மானத்திற்கு அமைய மேற்குறித்த வழக்கை தீர்ப்பதற்கு எஞ்சிய மீதியை பிரித்துக்கொள்வதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்ததோடு (ஆகக் குறைந்தது 50% பாகம்) 2017 .03.29 ஆந் திகதி இலங்கை துறைமுக அதிகாரசபை கப்பல் கூட்டுத்தாபனம் முகாமைப் பணிப்பாளருக்கு சட்டப் பகுதியினால் கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது . இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் இப்பிரேணையும் உடன்பட்டதோடு இந்த விடயம் தொடர்பில் 2017.06.29 ஆந் திகதி மேன் முறையீட்டு நீதி மன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது . இரண்டு தரப்பினர்களினதும் சட்ட வல்லுனர்கள் தீர்ப்பை எட்டும் உத்தரவை கோவை இடுவதற்கு உடன்பட்டனர். அதன்படி இலங்கை துறைமுக அதிகாரசபை மேற்குறித்த உத்தரவைசட்ட ஆலோசகருக்கு அனுப்பியுள்ளதோடு தீர்ப்பின் நிபந்தனைகள் மேன்முறையீட்டு நீதி மன்றில் உள்ளடக்கப்படாதுள்ளதோடு குறித்த விடயம் 2018.02.01 ஆந் திகதி குறிப்பிடப்பட உள்ளது.

*நிதி அறிக்கைகளுக்கான குறிப்புக்கள்*

**39 *அறிக்கை செய்யப்படும் காலப்பகுதியின் பின்னர் ஏற்பட்ட சம்பவங்கள்***

2008/2019 ஆகிய மதிப்பீட்டு ஆண்டுகளுக்கு இலங்கை துறைமுக அதிகாரபையினால் முன்வைக்கப்பட்டமேன் முறையீடு வரிமேன்முறையீட்டு ஆணைக்குழுவினால் நிராகரிக்கப்பட்டு குறித்த தீர்மாணத்திற்கு எதிராகமேன் முறையீடு நீதி மன்றில் மேன் முறையீடு ஒன்றை முன்வைப்பதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை தீர்மானித்துள்ளது .

**40 *வரி மேன் முறையீட்டு ஆணைக்குழு மற்றும் மேன் முறையீட்டு நீதி மன்றத்தில் இருக்கும் வழக்குகள்***

2006 உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் இல : 10.25 (1) பந்திக்குப் கதிலாக குறித்த சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் வெளிநாட்டு கடன் வட்டி குறைப்பதற்கான மேற்கொள்ளப்பட்டுள்ள வேண்டுகோளும் உள்நாட்டு இறை வரிச் சட்டத்தின் 25 (1) பிரிவின் கீழான வெளிநாட்டு கடன் தொடர்புபடும் வெளிநாட்டு செலாவணி நட்டம் குறைக்கப்படுவதற்கான வேண்டுகோளும் புறக்கணிக்கப்பட்டு 2007/2008, 2008/2009,2009/2010 மற்றும் 2010/2011 போன்ற மதிப்பீட்டு ஆண்டுகளுக்கு உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகள் தொடர்பாக இலங்கை துறைமுக அதிகாரசபையில் உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகத்தின் அபிப்பிராயத்திற்கு எதிராக வரி மேன் முறையீட்டு ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யப்பட்டது . 2008/2009 மற்றும் 2009/2010 வருடங்களுக்கான வரி மேன்முறைப்பாட்டு ஆண்டுடன் வழக்கு விசாரிக்கப்பட்டு வருவதோடு சட்டரீதியாக சிக்கல்களின் அடிப்படையில் இலங்கை துறைமுக அதிகாரசபை மேன்முறையீட்டு நிர்மாணித்தல் முன்வைத்துள்ளது . 2009/2010 ஆண்டின் வரி மேன் முறையீட்டு ஆண்டுடன் வழக்குத் தீர்ப்பு இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு சார்பாக வழங்கப்பட்டுள்ளது . (உதா கையொப்பமிடப்படாதிருந்ததனால் மதிப்பீடு செல்லுபடியற்றது .) இறைவரி திணைக்களத்தினால் வரிமேன் முறையீட்டு ஆண்டுக்குள் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது . வழக்குகளின் சாரம்சம் பின்வருமாறு

| மதிப்பீட்டு ஆண்டு | வழக்கின் தற்பதைய நிலைமை | வங்கி பிணை (பெறுமானம் , ரூபா) | பிணையாக உடன்பட்ட நிலையான வைப்பின் |
|---|---|---|---|
| 2007/2008 | வரிமேன் முறையீட்டு ஆணைக்கழுவினால் பெற்றுக்கொடுக்கப்பட்ட தீர்மானம் மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபை உடன்படாத்தனால் குறித்த விடயம்மேன் முறையீட்டு நீதி மன்றில் முன்வைக்கப்பட்டுள்ளது . | - | - |
| 2008/2009 | 2008 /2009 ஆண்டிற்கான இலங்கை துறைமுக அதிகாரசபையினால் முன்வைக்கப்பட்ட மேன்முறையீட்டினை வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு நிராகரித்துள்ளதுடன் இதற்கு எதிராக இலங்கை துறைமுக அதிகாரசபை மேன்முறையீட்டு ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கு எதிராக மேன்முறையீட்டு நீதி மன்றில் மேன்முறையீடு ஒன்றை முன்வைப்பதற்கு தீர்மானித்துள்ளதுள்ளது . | 310,869,170 | ரூபா .315 மில்லியன் |
| 2009/2010 | வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு சார்பாக தீர்மானம் வழங்கியுள்ளது . ஆயினும் வரி மேன்முறை ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கு எதிதாக உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் மேன்முறையீட்டு நீதி மன்றத்தில் வழக்கொண்று தொடரப்பட்டுள்ளது . | | - |
| 2010/2011 | குறித்த வழக்கு வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவில் இன்னும் விசாரிக்கப்பட்டு | 749,708,930 | ரூபா .812.10 மில்லியன் |

**41 *உணரா பொறுப்புக்கள்***

பொதுவான வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் போது எழும் சட்ட ரீதியான உரித்துகளுக்கு அதிகாரசபைக்கு உணரா பொறுப்புக்கள் உரியதாக இருக்கும் ஏற்பாடுகளை (குறிப்பு 29) அடையாளம் காணாது விடின் முகாமைத்துவம் இந்த உரித்துக்கான நியாயமற்றதென கருதி அவற்றை தீர்ப்பதற்கு வளங்கள் வெளேயே செல்லும் ஆற்றுல் குறையுமென கருதப்படும் இக்கணிப்பீடானது அதிகாரசபையினின் நீதிப் பிரிவின் ஆலோசனைகளுடன் ஒன்றிணைந்ததாக இருக்கும். அதன்படி பின்வரும் வழக்குகளுக்கான சட்டரீதியான உரித்துக்களுக்கு ஏற்பாடுகள் ஒதுக்கப்படவில்லை .

*நிதி அறிக்கைகளுக்கான குறிப்புக்கள்*

**42 குழுமத்தின் நிதிப்பெறுமானங்களின் ஒப்பீட்டை மீள் ஆவணப்படுத்துதல்**

துணைக்கம்பனிகள் மற்றும் உப கம்பனிகளினது நிதி கூற்றுகள் கிடைக்கப்பெறுதலோடு 2016 ஆம் ஆண்டிற்கு இலங்கை துறைமுக அதிகாரசபையின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதி கூற்றுக்கள் பின்வருமாறு மீண்டும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது .

| | | குழுமம் | |
|---|---|---|---|
| **2016 டிசெம்பர் 31 ஆந் திகதிக்கான நிதி நிலைமை பற்றிய கூட்டு பிரகடனத்தின் மீதான தாக்கம்** | **குறிப்பு** | **2016 ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கு** | **2016 ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்படாத கணக்கு** |
| துணைக்கம்பனிகளினது முதலீடுகள் | 7 | 64,942,056 | 61,093,443 |
| வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்கப்பெறுதல்கள் | 12 | 10,516,400,758 | 10,542,478,553 |
| தடுத்து வைக்கப்பட்ட ஈட்டல்கள் (கடனாளிகள்) | | ############ | (13,662,500,097) |
| கடன் பெறுதல் - நிதி நிறுவனங்கள் (நடைமுறைசாராத பொறுப்புக்கள்) | 22.1 | 13,529,318,308 | 10,597,931,565 |
| வர்த்தக மற்றும் ஏனைய கடன் உரிமையாளர்கள் | 26 | 1,306,998,191 | 1,328,533,167 |
| கடன் பெறுதல் - நிதி நிறுவனங்கள் (நடைமுறைசாராத பொறுப்புக்கள்) | 22.2 | 1,913,783,798 | 4,845,170,541 |
| செலுத்த வேண்டிய வரி கட்டணங்கள் | 28 | 286,271,593 | 286,957,687 |

| | | | |
|---|---|---|---|
| **2016 டிசெம்பர் 31 ஆந் திகதிக்கான நிதி நிலைமை பற்றிய கூட்டு பிரகடனத்தின் மீதான தாக்கம்** | 7.1 | 3,848,613 | - |
| துணைக் கம்பனிகளினது வருமானம் | 31 | 20,922,237,967 | 20,934,955,843 |
| நேரடி செலவினங்கள் | 33 | 8,071,153,006 | 8,054,578,405 |
| நிர்வாக செலவினம் | | | |

**43 முன்னைய ஆண்டின் சீர்செய்தல்**

| விபரம் | தொகை ரூபா | தொகை ரூபா |
|---|---|---|
| 2016 ஆண்டிற்கு காலி முகத்திடலின் நிர்வாகம் தொடர்பில் இலங்கை துறைமுக முகாமைத்துவ ஆலோசனை கம்பனியிலிருந்து (SLMPCS) கிடைக்கப்பெற வேண்டிய இலாபம் 2017 நவம்பர் 03 ஆம் திகதி கிடைக்கப்பெற்றது . இந்த வருமானம் 2016 ஆம் வருடத்துடன் தொடர்புடையதால் முன்னைய ஆண்டின் கணக்கு மூலம் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது . | | 5,672,374.89 |
| திகதி, இடம் சேவைகளின் மாற்றங்கள் முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது மேலதிகமாக அறவிடப்பட்ட தேய்மானம் பின்வருமாறு சீர்செய்யப்பட்டுள்ளது . | | 14,208,124.56 |
| இயக்க கட்டிடம் மற்றும் அமைவுகள் | 13,757,845.98 | |
| இயந்நதிர வகை மற்றும் உபகரணங்கள் | 211,599.31 | |
| மின்சாரம் மற்றும் இலத்திரனியல் உபரகணங்கள் | 148,103.26 | |
| மரத்தளபாடங்கள் மற்றும் அலுவலக உபரகணங்கள் | 30,802.50 | |
| ஏனைய சொத்துக்கள் | 59,773.50 | |
| திகதி, இடம் சேவைகளின் மாற்றங்கள் முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது மேலதிகமாக அறவிடப்பட்ட தேய்மானம் பின்வருமாறு சீர்செய்யப்பட்டுள்ளது .<br>இயக்க உபகரணங்கள் t-1,389,294.88 மின்சாரம் மற்றும் இலத்திரனியல் உபரகணங்கள் -1,701.96 வாகனங்கள் -13,179,157.70 | | 14,570,154.54 |
| திகதி, இடம் சேவைகளின் மாற்றங்கள் முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது மேலதிகமாக அறவிடப்பட்ட தேய்மானம் பின்வருமாறு சீர்செய்யப்பட்டுள்ளது .<br>இயக்க கட்டிடம் மற்றும் அமைவுகள் -59,826,226.50 | | 59,826,226.50 |
| 2009 ஆண்டில் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் வானொலி வலையமைப்பு உபகரணங்களுக்கு இறக்குமதி செய்யப்பட்ட செல்லுபடியான சுங்க பிரகடனம் இல்லாத காணரத்தால் பெறுமதிசேர் வரி (VAT) செலுத்துதல் புறக்கணிக்கப்பட்டுள்ளது . 2017 நவம்பர் 07 ஆம் திகதிய பணிப்பாளர் சபையின் PA/HD/28 தீர்மானத்திற்கமைய இக்கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது . | | 72,876,120.00 |
| ஹம்பாந்தோட்டை துறைமுக வளவை குத்தகைக்கு எடுத்த வ/ப ஹேலீஸ் அட்வான்ஸ் கம்பனி அலுவலக நிலத்தை பயன்படுத்தாததனால்நிலையான வருடாந்த பாவிக்கப்பட்ட கி.வொட்ட 3970 இல் 20% மாத்திரம் அறிவிடப்படுவதற்கும் 2014 ஆகஸ்ட் இருந்து 2016 டிசெம்பர் வரை ரூபா 2,383,191 அறவிடுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. எனவே மேலதியமாக கணக்கிடப்படப்பட்ட தொகையான ரூபா 1,906,552 முன்னைய ஆண்டின் கணக்குடன் சீர்செய்யப்பட்டுள்ளது . | | 1,906,552.00 |
| 2016 ஆண்டின் குழுநிலை செயலாற்றுகை கணக்கிற்கு அறவிடப்பட்ட பழுதுபார்ப்பு செலவினம் வேறு கணக்கிற்கு மாற்றுதல் முன்னைய ஆண்டின் செலவினமாக கருதப்பட்டுள்ளது . (காலி துறைமுகம்) | | 4,050,363.37 |
| அறவிடப்பட்ட வெளிநாட்டு செலாவணி நட்டம்/ இலாபம் தற்போது வேறு கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளதோடு ஹம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பில் தற்போது எதுவித சீர் செய்யப்பட்டாதிருக்கும் நிலுவைகள் இலங்கை துறைமுக அதிகாரசபையின் புத்தகங்களில் இல்லை. | | 27,458,931,208 |
| ஹம்பாந்தோட்டை இன்டர்நெஷனல் போர்ட் குரூப் கம்பனிகளினது குத்தகை வாடகை உரித்துக்கள் அசையும் சொத்துக்கள் மற்றும் பட்டியல்படுத்தப்பட்ட பொருட்கள் ஹம்பாந்தோட்டை இன்டர்நெஷனல் போர்ட் சேர்விசஸ் கம்பனியின் முதலீடாக கணக்கு வைத்தல் | | 59,951,400 |
| 2010 வருடத்தில் வழங்கப்பட்ட மாறுபடும் வரி ஏற்பாடுகள் வேறு கணக்கிற்கு மாற்றுதல் | | 5,664,282,405.12 |
| JE/FD/RND/2017/201,சரி செய்வதொன்றாக வாடகைக் கட்டணம் மற்றும் மின்சாரம் சார்பில் அறவிட முடியாத ஐயுறு கடனுக்கான ஏற்பாடுகள் வழங்குதல் | | 29,242,247.70 |
| குருளுதூவ பாலத்தை நிர்மாணிப்பதற்கு எஞ்சிய தொகை வழங்குதல் | | 17,467,351.85 |
| **மொத்தம்** | | **33,033,174,742.55** |

**44 வெளிநாட்டு செலாவணி இலாபம் / நட்டம்**

வெ ளிநாட்டு செலாவணி இலாபம் / நட்டம் சீர்செய்யும் LKAS 1 மேலதிக விடயம் பிரகாரம் விரமான வருமான பிரகடனத்தில் சேர்க்கப்பட்டுள்ளது இந்த

(இலங்கை ரூபாய்களில் காட்டப்பட்டுள்ளன)

**45 ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்கள்**

இலங்கை துறைமுக அதிகாரசபையின் உப கம்பொனியொன்றான ஜய கொள்கலன் முனையம் மற்றும் ஹம்பாந்தோட்டை இன்டர்நெஷனல் போர்ட் கம்பனி 2017 ஆண்டிற்கு கணக்காய்வு செய்யப்படாத நிதிக் கூற்றுக்களை முன்வைத்துள்ளது . உப கம்பனியொன்றான வ/ப மாகம்புர துறைமுக முகாமைத்து கம்பனி (MPMC) மற்றும் இலங்கை துறைமுக முகாமைத்துவ மற்றும் ஆலோசனைச் சேவைகள் கம்பனி (SLMPCS) அவர்களின் நிதிக் கூற்றுக்களை இன்னும் முன்வைக்கவில்லை . எனவே ஜய கொள்கலன் முனையத்தினதும் ஹம்பாந்தோட்டை இன்டர்நெஷனல் போர்ட் கம்பனியின் நகல் நிதிக் கூற்றுக்கள் பயன்பாட்டில் ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன . வ/ப மாகம்புர துறைமுக முகாமைத்துவ கம்பனியினதும் இலங்கை துறைமுக முகாமைத்துவ ஆலோசனைச் கோவைக் கம்பனியினதும் இலாபம் கவனத்தில் கொள்ளப்படவில்லை .

**46 CICT நிலத்தின் பெறுமதி மூலதனமாக்கப்படுதல் CICT காணிகளை ஒப்படைத்தல்**

CICT நிலம் ஒப்படைக்கப்படுவதை முறையாகச் செய்வதற்கு சட்டமா அதிபரின் அவதானிப்புகளை இலங்கை துறைமுக அதிகாரசபை எதிர்பார்த்திருப்பதோடு இந்த நிலத்தை காணிப் பதிவு அலுவலத்தில் பதிவுசெய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது . இத்தீர்மானம் கிடைக்கப்பெறும் வரையில் மேற்குறித்த நிலம் இலங்கை துறைமுக அதிகாரபையினால் மூலதனமிடப்பட முடியாதுள்ளது .

**47 ஒலுவில் துறைமுகம் மூலதனமிடப்படுத்தல்**

ஒலுவில் துறைமுகம் தொடர்பில் 2017.12.31 ஆம் திகதி குழுநிலை செயலாற்றுகை கணக்கின் செலவினம் மூலதனமிடப்பட்டுள்ளது .

**48 ஹட்டன் நெஷனல் வங்கியின் கடன் கடித வசதிகளை பெறுவதற்காக வழங்கும் தாபனரீதியான பிணை**

வ/ப மாகம்புர துறைமுக முகாமைத்துவ கம்பனி பெற்றுக்கொள்ளும் கடன் கடித வசதிகளுக்கு இலங்கை துறைமுக அதிகாரசபையினால் ஹட்டன் நெஷனல் வங்கிக்கு தாபனரீதியான பிணையொன்று வழங்கப்பட்டுள்ளது . ஆயினும் கொடுத்த தாபன ரீதியான பிணை ஒப்பந்தமானது வ/ப மாகம்புர துறைமுக முகாமைத்து கம்பனி மற்றும் ஹட்டன் நெஷனல் வங்கியானது உடன்பாட்டுக் கடிதத்துடன் உடன்படுபதில்லை . எனவே இலங்கை துறைமுக அதிகாரசபையின் பொறுப்பு கேள்விக் குறியாக உள்ளது. மேலும் இந்த வசதியை செலுத்தும் பொறுப்பானது வ/ப மாகம்புர துறைமுக முகாமைத்துவ கம்பனிக்கு இல்லாததுடன் இதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் 2016.11.22 ஆம் திகதி வழஙகப்பட்டது . மேலும் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சின் செயலாளர், பொது திறைசேரியின் செயலாளரினால் பெயரிடப்பட்ட பிரதிச் செயலாளர் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் சிரேஷ்ட உதவிப் பணிப்பாளர் (சட்டம்) உள்ளடங்கிய மூன்று உறுப்பினரைகளைக் கொண்ட குழுவினால் ஆய்வை மேற்கொள்வதற்கு அமைச்சரவையின் தீர்மானம் மீது நியமிக்கப்பட்டுள்ளது .

**49 ஹம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பில் நடைபெற்ற அதிவிஷேட கொடுக்கல் வாங்கல்**

1சலுகை உடன்படிக்கை நடைமுறைப்படுத்தலோடு பின்வரும் கொடுப்பனவுகள் அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டவாறு மேற்கொள்ளப்பட்டுள்ளது .

i. ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் கடன் மீள் செலுத்துவது தொடர்பான பொறுப்பு 2017.07.27 ஆம் திகதிய அமைச்சரவையின் தீர்மானம் மீது பொது திறைசேரியினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது .

அதன்படி 2017 யூலை மாத்திதிலிருந்து டிசெம்பர் வரை மேற்கொள்ளப்பட்ட மீள் செலுத்துதல் சலகை உடன்படிக்கையின் 33.2 பந்தி பிரகாரம் 2017.10.03 ஆம் அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் ஹம்பாந்தோட்டை இன்டர்நெஷனல்போர் குரூப் / ஹம்பாந்தோட்டை இன்டர்நெஷனல் போட் சேர்விசஸ் கம்பனிகளுக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட குத்தகை உடன்படிக்கைக்கு செலவாகிய கட்டணங்களுடன் பொது திறைசேரியின் கிடைக்கப்பெறுதலாக காண்பிக்கப்பட்டுள்ளது .

ii. சலுகை உடன்படிக்கையின் பிரகாரம் ஹம்பாந்தோட்டை இன்டர்நெஷனல் போர்ட் குரூப் கம்பனியின் பங்கு மூலதனத்தில் 85% சைனா மேர்சன்ட் போட் கம்பனி விலைக்கு வாங்கியதோடு ரூபா 10,960,332,400 2017.12.31 திகதிக்கு கிடைக்கப்பெறுதல் வேண்டும்

iii. சலுகை உடன்படிக்கையின் நிபந்தனைகள் பிரகாரம் ஹம்பாந்தோட்டை துறைகத்திற்குரி அசையா சொத்துக்களினது குத்தகை வாடகை உரித்துக்களைக் ஹம்பாந்தோட்டை இன்டர்நெஷனல்போர்ட் குரூப் /ஹம்பாந்தொட்டை இன்டர்நெஷனல் போர்ட் சேர்விசஸ் கம்பனிகளுக்கு வழஙகப்பட்டன .

2. 2017 டிசெம்பர் 12 ஆம் திகதிய பணிப்பாளர் சபையின் இல: PA/HD/28 தீர்மானம் மீது பின்வரும் விடயங்களுக்கான அங்கீகாரம் வழஙகப்பட்டுள்ளது .

i. இலங்கை துறைமுக அதிகாரபையின் பட்டியலிடப்பட்ட பொருட்கள் HIPS கம்பனிக்கு பொறுப்பதற்கு

ii. இலங்கை துறைமுக அதிகாரசபையின் வேறு ஒப்பந்தங்களின் மீது அபிவிருத்தி செய்யப்பட்ட ஆனால் குத்தகைப் பிரதேசத்தின்னுள் நிலைப்படுத்தப்பட்டுள்ள அசையா சொத்துக்களை பொறுப்பளிப்பதற்கு

iii. விலைமதிப்பு திணைக்களத்தினால் பிரேரிக்கப்பட்ட குத்தகை வாடகைக் கட்டணப் பயன்பாட்டில் பெறுப்பட்ட பெறுமதி n. மீது அரசாங்க கம்பனிகளின் குத்தகை வாடகை உரித்துக்களை ஹம்பாந்தோட்டை இன்டர்நெஷனல் போர்ட் சேர்விசஸ் கம்பினியிடம் பொறுப்பளிப்பதற்கு

**50 குருளுதுவ பாலத்தைமைப்பதற்கு எஞ்சிய கொடுப்பனவு**

அமைச்சரவை தீர்மான இல PED/INFR/PTSP/CM/939 மற்றும் 2016.0929 ஆம் திகதி பணிப்பாளர் பையின் கூட்ட தீர்மானம் மீது (பணிப்பாளர் சபையின் தீர்மானம் (இல :PAM/148/2016 ( 28/09/2016 ஆம் திகதி) மாத்றை குருளுதுவ பாலத்தை நிர்மாணிப்பதற்கு எஞ்சிய தொகையான ரூபா 17,467,351.85தொகை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்துக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது .

**51 ஒன்றசேர்ந்த மொத்தக் கணக்கின்**

தொகுதியில் ஏற்பட்ட பிழைகள் காரணமாக வெளிநாட்டு கடன் இல 321010 ஒப்பிடுதல் மற்றும் சரி செய்தல் அவசியமாகும்.

**52 சொத்தின் பயனான ஆயுட்காலம் மீளாய் செய்தல்**

மிதக்கும் மற்றும் கையாளல் உபகரணங்கள், இயக்க கட்ட்டங்கள் மற்றும் அமைவுகளினது பயனான ஆயுட்காலம் ஆண்டினுள் மீளாய்வு செய்யப்பட்டதோடு புத்தகங்களில் தூய பெறுமதி அதற்கேற்ப சீர் செய்யப்பட்டுள்ளது . இலங்கை துறைமுக அதிகாரசபையின் சொத்துக்களின் மீளாய்வானது தொடர்ச்சியான செயற்பாடாக இடம்பெறும் .

**53 ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் கொடுக்கல் வாங்கல் நிறுத்தும் திகதி**

சலுகை உடன்படிக்கை அமுலாகும் திகதி (2017.12.09) வரை நடைபெற்ற கொடுக்கல் வாங்கல்கை கருத்தில் கொண்டு ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன .

**54 ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் மூலதனமிடலின் சொத்துக்களினது ஆயுட்காலம்**

ஹம்பாந்தோட்டை இன்டர்நெஷனல் போர்ட் குரூப் கம்பனி/ ஹம்பாந்தோட்டை இன்டர்நெஷனல் போட் சேர்விசஸ் கம்பனிகளுக்கு 99 வருடங்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்ட சொத்துக்களின் மதிப்பீட்டு ஆயுட்காலம் 100 வருடங்களாக கருதப்பட்டதற்கான காரம் குத்தகை வாடகையிலிருந்து உழைக்கப்படும் வருமானம் குறித்த காலத்தினுள்ளே மேற்கொள் வதனலேயே ஆகும்.

**55 ஹம்பாந்தோட்டை துறைமுக செய்திட்ட பிரதேசத்தினுள் அமையப் பெறாத இடமொன்றிற்கான நட்டஈடு செலுத்துதல்**

ஹம்பாந்தோட்டை இன்டர்நெஷனல் போர்ட் குரூப் கம்பனிக்கு பொறுப்பளிக்கப்பட்ட ஹம்பாந்தோட்டை துறைமுக செய்திட்ட பிரதேசத்தினுள் அமையப்பெறாத இடமொன்றிற்காக இலங்கை துறைமுக அதிகாரசபை நட்டஈடு செலுத்தியுள்ளது தற்போது இந்த இடம் முதலீட்டுச் சபைக்குக்குச் சொந்தமாகவுள்ளதால் இது இலங்கை துறைமுக அதிகாரசபையின் புத்தகங்களில் மூலதனமிடப்படவில்லை .

**56 காலி துறைமுக அபிவிருத்தி செய்திட்டம் (SLP-85கடன்)**

யென் 14,495 மில்லியனுக்கான JICA கடன் தொகையில் யென் 458 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளதோடு அது காலி துறைமுகத்துக்கான சாத்தியவள ஆய்வை மேற்கொள்வதற்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளது . இது இன்னும் மூலனதனமிடப்படவில்லை .

**57 மூலதன சொத்துக்களினது நியாயமான பெறுமதி தீர்மானிக்கப்படாமைக்கான காரணம்**

மூலதனசொத்துக்கள் என்பது பிரதானமாக கடல்சார் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும அமைவுகள் உள்ளடங்களலான துறைமுக உட்கட்டமைப்பு மற்றும் அமைவுகள் உள்ளடங்கலான துறைமுக உட்கட்டமைப்பு வசதிகளாகும். இந்த வகையிலான துறைமுக அபிவருத்தி செய்திட்டங்கள் மேற்கொள்ளப்படாத அல்லது ஆகக் குறைவாக மேற்கொள்ளப்படுவதுடன் ஹம்பாந்தொட்டை துறைமுகம் பசுமை எண்ணக்கரு மீது அபிவிருத்தி செய்யப்பட்ட விசேட பாகங்களுடன் உடையதானது மேலும் துறைமுக வர்த்தக மயமாக்கல் அப்போது முழுமையாக நடைபெறவில்லை . இப்பின்னணியில் வர்த்தக சந்தையின் நியாயமான மதிப்பீடொன்றைப் பெற்றுக் கொள்வதற்கான்ன எந்தவிதக அடிப்படையும் இல்லிருந்த்தோடு விலைகள் மீது அடிப்படையான மதிப்பீடொன்றைப் மேற்கொள்வதற்கு தேவையான தரவு வழிகளில் பெறக்கூடிய ஆற்றல் இருந்தது

## 58 தொடர்புபடும் தரப்பினர்களை வெளிப்படுத்துதல்

இலங்கை பொது திறைசேரி ,அரசாங்கத்துடன் தொடர்புபடும் நிறுவனங்கள் ,உப கம்பெனிகள் , துணைக் கம்பெனிகள் மற்றும் முகாமை நபர்கள் அதிகாரசபையுடன் தொடர்புபடும் தரப்பினர்கள் போன்றவை உள்ளடங்கும்

### 58.1 பூர்வாங்க முகாமைத்துவ நபர்களுடனான கொடுக்கல் வாங்கல்

இலங்கை கணக்கீட்டு (LKAS 24) நியமங்களுக்கேற்ப "சம்பந்தப்பட்ட தரப்பினர்களை வெளிப்படுத்துதல் , திட்டமிடுதல் , மேற்பார்வை மற்றும் ஏதாவதொன்றின் செயற்பாடுகள் நேரடியாகவோ மறைமுகமாகவோ நிர்வகிக்கப்படுவதற்காக பூர்வாங்க முகாமைத்துவ நகர்கள் இதற்கான பொறுப்புக்களை வகிக்கின்றது . இதன்படி நிறைவேற்று மற்றும் நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்களைக் கொண்ட பணிப்பாளர் சபை பூர்வாங்க முகாமைத்துவ நபர்களாக வகையீடு செய்துள்ளது .

| பூர்வாங்க முகாமைத்துவ நபர்களுடனான மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு | 2017 | 2016 |
|---|---|---|
| சம்பளம் மற்றும் ஏனைய ஊழியர்களுக்கான குறுகிய கால அனுகூலங்கள் | 32,138,677 | 28,575,950 |
| செலுத்தப்பட வேண்டியுள்ள நிலுவைகள் - கடன் மற்றும் முற்பணம் | 499,900 | 699,940 |

### 58.2 சம்பந்தப்படும் தரப்பினர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள்

அதிகாரசபையினால் பேணப்பட்டு வரும் விசேட சம்பந்தப்படும் தரப்பினர்களுடனான கொடுக்கல் வாங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு

| நிறுவனத்தின் பெயர் | தொடர்பு | பணிப்பாளர்களின் பெயர்கள் / பிரதிநிதிகள் | கொடுக்கல் வாங்கல்களின் தன்மை | கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி | செலுத்த வேணடியுள்ள மீதி | கிடைக்க பெற்றவை |
|---|---|---|---|---|---|---|
| இலங்கையின் பொதுத்திறைசேரி | பிரதான பங்களிப்பு | | வழங்கப்பட்ட கடன் | - | | |
| | | | மீள் செலுத்தப்பட்ட கடன் | 4,840,274,812 | | |
| | | | செலுத்தப்பட்ட வட்டி | 1,271,415,919 | | |
| **அரசுடன் தொடர்புடைய நிறுவனங்கள்** | | | | | | |
| இலங்கை சுங்கம் | தொடர்புபடும் நிறுவனம் | | இலங்கை துறைமுக அதிகாரசபையுடனான முகவர் நிறுவனங்களின் கையாளல்கள் | 14,717.00 | - | 1,242,838.40 |
| மீன்பிடி மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சு | தொடர்புபடும் நிறுவனம் | | - | - | - | - |
| வ/ப கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் தகவல் | தொடர்புபடும் நிறுவனம் | | - | - | - | - |
| ஆராய்ச்சி நிறுவனம் | தொடர்புபடும் நிறுவனம் | | வழங்கப்பட்ட சேவைகள் | | | |
| ஏனைய சம்பந்தப்படும் நிறுவனங்கள் | | | வழங்கப்பட்ட சேவைகளுக்கான நிதி செலுத்துதல் | | | - |
| | | | துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சலைகள் அமைச்சிற்கான எரிபொருள் வழங்குதல் | 1,287,708 | | 274,211.44 |
| இலங்கை துறைமுக மற்றும் ஆலோசணை தனியார் கம்பனி | | | வர்த்தக செயலகத்திற்கு எரிபொருள் வழங்குதல் | 103,796 | | 20,975.22 |
| | | | கப்பல் எண்ணெய் வழங்குவதற்கான 02 கலங்களை பதிவு செய்யும் கட்டணம் | 1,248,310 | | |
| | | | வருடாந்த தொன்னளவுக்கனான செலுத்த வேண்டிய கட்டணம் | 494,455 | | |
| இலங்கை பேற்றோலிய கூட்டுத்தாபனம் | | | இலங்கை துறைமுக அதிகாரசபையுடனான முகவர் நிறுவனங்களின் கையாளல்கள் | 17,049,330 | | 4,443,963.65 |
| வ/ப லங்கா உர கம்பனி | | | இலங்கை துறைமுக அதிகாரசபையுடனான முகவர் நிறுவனங்களின் கையாளல்கள் | 11,205,565 | | 98,313.87 |
| இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் | | | இலங்கை துறைமுக அதிகாரசபையுடனான முகவர் நிறுவனங்களின் கையாளல்கள் | 35,091,712 | | 36,236,899.32 |
| இலங்கை துறைமுக மற்றும் ஆலோசணை தனியார் கம்பனி | துணைக் கம்பெனி | | காப்பாளர் சேவைக்கான செலுத்துதல் | 39,071,160 | 11,101,170 | - |
| | | | சம்பளம் வழங்கல் | 119,483,988 | | 21,550,064.05 |
| | | | கிடைக்கப்பெற்ற சேவைக்கான செலுத்துதல் | 85,375,498 | 9,780,090 | - |
| | | | கிடைக்க வேண்டிய பங்கிலாபம் | | | |
| ஜய கொள்கலன் முனையம் | தொடர்புபடும் கம்பனி | | நிர்வாக மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் கட் | 252,075,174 | 24,913,388 | - |
| | | | கிடைக்க வேண்டிய பங்கிலாபங்கள் | 6,121,800 | - | - |
| | | | எரிபொருள் வழங்கல் | 1,076,596 | | 172,179.01 |
| | | | மருந்து வினியோகம் | 57,948 | 104,475.26 | - |
| | | | காப்பாளர் சேவைக்கான கொடுப்பணவுகள் | | 523,900 | |
| வ/ப சவுத் ஏஷியா கேட்வே டேர்மினல்ஸ் கம்பனி | இணைந்த கம்பனி | | கிடைக்கப்பெற்ற வாடகை | 450,278,531 | - | 33,725,732 |
| | | | கிடைக்கப்பெற்ற இறைமைக் கட்டணம் | 944,288,027 | - | 89,648,157 |
| | | | கிடைக்கப்பெற்ற பங்கிலாபம் | 833,559,709 | - | - |
| இலங்கை நிரக்கரி கம்பனி (தனியார் ) | தொடர்புபடும் கம்பனி | | ஆண்டினுள் எதுவித கொடுக்கல் வாங்கல்களும் இடம்பெற வில்லை | | - | |
| கொழும்பு சர்வதேச கொள்கலன் முனைய கம்பெனி (CICT) | தொடர்புபடும் கம்பனி | கலாநிதி பராக்ரம திசாநாயக்க | கிடைக்கப்பெற்ற குத்தகை / வாடகை | 1,237,230,334 | - | |
| | | திருமதி . சிராணி வன்னியாராச்சி | இறைமைக் கட்டணம் | 1,544,995,138 | - | 86,544,609 |
| | | திருமதி . சிராணி வன்னியாராச்சி | கிடைக்கப்பெற்ற மாறுபடும் வட்டி | 33,368,539 | - | |
| | | | CICT யினால் முதல் தடவையாக செலுத்திய பணம் | 103,534,286 | - | - |
| | | | | | - | - |
| | இணைந்த கம்பனி | திரு. நிலான் விகரமசிங்ஹ | *செலுத்த வேண்டிய நிர்வாக கட்டணம் கீழே செலவினம் | 616,162,893 | 71,819,156 | 1,804,652 |
| | | திருமதி . சிராணி வன்னியாராச்சி | குறைக்கப்பட்டதன் பின்னர் மேற்குறித்த க/ செ | | | |
| மாகம்புர துறைமுக முகாமைத்துவ கம்பனி | | | சம்பளம் | 9,367,089.52 | | |
| | | | நீர் | 718.06 | | |
| | | | மின்சாரம் | 42.50 | | |
| | | | ஏனையவை | 15,722,150.96 | | |
| கொழும்பு டொக்யாட் கம்பனி | பங்கு முதலீடுகள் | | இலங்கை துறைமுக அதிகாரசபையுடனான முகவர் நிறுவனங்களின் | 9,481,712.15 | | 72.11 |
| | | | கிடைக்கப்பெற்ற பங்கிலாபம் | | | |
| வ/ப ஹம்பாந்தோட்டை இன்டர்நேசனல் சேர்விஸஸ் கம்பனி | | கலாநிதி பராக்ரம திசாநாயக்க | | | | |
| | | திரு. நிலான் விகரமசிங்ஹ | | | | |
| வ/ப ஹம்பாந்தோட்டை இன்டர்நேசனல் போர்ட் கம்பனி | | கலாநிதி பராக்ரம திசாநாயக்க | | | | |
| | | திரு. நிலான் விகரமசிங்ஹ | | | | |

நிதிக் கூற்றுக்களின் பாவனை காரணமாக அதிகாரசபைக்கு பின்வரும் இடர்பாடுகளை எதிர்நோக்க வேண்டியேற்படும்.

1. கடன் இடர்பாடு
2. ஒப்புரவு இடர்பாடு
3. சந்தை இடர்பாடு (நிதி மற்றும் வட்டி விகித இடர்நேர்)

அதிகாரசபையின் நிதிக் கூற்றுக்கள் சமனான பங்குகளிலான முதலீடுகள் ( ஆவண மற்றும் ஆவணப்படுத்தப்படாத), கடன் முறிகளின் மீதான முதலீடுகள், காலத்திற்கேற்ற வைப்புக்கள், நிதி மற்றும் நிதிசார் சந்தை முதலீடுகள் போன்றவற்றைக் கொண்டிருக்கும். காலத்திற்கேற்ற வைப்புக்கள், நிதிசார் சந்தைகளிலான முதலீடுகளின் பிரதான நோக்கம் இயக்கங்களுக்கான ஒப்புரவினை அதிகரித்தலும் பேணிச் செல்வதும் ஆகும். சமனான பங்குகளிலான மற்றும் கடன்முறி காப்புறுதிகளிலான முதலீடுகள், மூலோபாய முதலீடுகளாக இருப்பதோடு வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்கப்பெறுதல்கள் போன்ற வேறு நிதிசார் ஆவணங்களும் அதன் வியாபார நடவடிக்கைகளின் போது நேரடியாக எழும் வர்த்தக மற்றும் ஏனைய செலுத்தப்பட வேண்டியவையும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் வசமுள்ளன.மேலும் துறைமுக விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களுக்காக இலங்கை அரசாங்கத்திடமிருந்தும் நிதி நிறுவனங்களிடமிருந்தும் பெறப்பட்டுள்ள கடன்களுக்கான வட்டிகள் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் செலுத்தப்படுதல் வேண்டும்.

1. **கடன் இடர்பாடு**

கடன் இடர்பாடு என்பது வாடிக்கையாளரொருவர் உடன்படிக்கை மீதான பொறுப்புக்களை செலுத்தத் தவறும் பட்சத்தில் , அதிகாரசபைக்கு ஏற்படக் கூடிய நிதிசார்ந்த நஷ்டம் கடன்இடர்பாடாகும். இலங்கை படைகள், ஏனைய அரச நிறுவனங்கள் மற்றும் முதலீட்டு கடன் முறிகள் உள்ளிட்ட வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைக்கப்பெற வேண்டியவற்றிலிருந்து பிரதானமாக இது எழுகின்றது.

**வியாபார கிடைக்கப்பெறுதல்கள்**

இலங்கை துறைமுக அதிகாரசபையானது கப்பல் முகவர்கள் மற்றும் அரச நிறுவனங்களோடு பிரதானமாக வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது. சென்ற கால அனுபவமும் கப்பல் முகவர்களினது நிதி சார்ந்த சான்றுறுதி போன்ற ஏனைய காரணிகளையும் அடிப்படையாகக் கொண்டு கப்பல் முகவர்களின் கடன் நிலைமையை முகாமைத்துவம் மதிப்பிடுகின்றது. இதற்குப் புறம்பாக முகாமைத்துவ குழுவிலும் பணிப்பாளர் சபை கூட்டத்திலும் இருக்கும் அடிப்படையின் மீது செலுத்துவதற்குள்ள நிலுவைகளும் மேற்பார்வை செய்யப்படுகின்றன.

வர்த்தக கிடைக்கப்பெறுதல்கள் தொடர்பில் ஏற்படும் நஷ்ட மதிப்பீடுகளில் காண்பிக்கப்படும் பாதிப்பேற்படுத்துதல்களுக்கான ஏற்பாடுகள் (நிதிசார் கூற்றுக்களின் 2.7 ஆம் குறிப்பு விபரத்தை பார்க்கவும்) இலங்கை துறைமுக அதிகார சபையினால் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. விசேட வாடிக்கையாளர்களுக்கு வெவ்வேறாக மதிப்பிடப்படுதலில் அவர்களுக்கு தனியாக ஏற்படும் பாதிப்புகளுக்கான நஷ்டங்கள் விசேடமில்லாத வாடிக்கையாளர்களுக்கான ஒட்டு மொத்த பாதிப்புகளின் ஏற்பாடுகள் பிரதான காரணிகளாகும். செலுத்துதல் முறையின் வரலாற்று தரவுகளைக் கொண்டு ஒட்டுமொத்த பாதிப்பு ஏற்பாடுகளின் நஷ்டங்கள் தீர்மானிக்கப்படுகின்றன. ஏற்படுத்தப்பட்ட பாதிப்பேற்படுத்தும் கொள்கைக்கேற்ப பாதிப்பேற்படுத்தும் நஷ்டங்கள் அளவீடு செய்யும் பொருட்டு இலங்கைப் படைகள், ஏனைய அரச நிறுவனங்கள், வழக்கு நடவடிக்கைகளுக்கு உட்பட்டுள்ள கப்பல் முகவர்கள் மற்றும் விசேட கப்பல் முகவர்கள் தொடர்பில் தனிப்பட்ட வகையில் கலந்தாலோசிக்கப்பட்டன. ஏனையவை ஒட்டுமொத்தமாகவும் கலந்தாலோசிக்கப்பட்டன.. வியாபார கிடைக்கப்பெற வேண்டியவை மற்றும் பாதிப்பேற்படுத்தும் நஷ்டங்களுக்கான ஏற்பாடுகளின் விபரங்களுக்கு தயவு செய்து நிதிசார் கூற்றுக்களின் 12 ஆம் குறிப்பைப் பார்க்கவும்.

**ஏனைய நிதிசார் சொத்துக்கள்**

காலத்திற்கேற்ற வைப்பு நிதி, காசு,காசு சம மதிப்புக்கள் மற்றும் கடன் முறிகளின் மூலதன முதலீடுகளினால் அதிகாரசபை எதிர்கொள்ளும் ஏனைய நிதிசார் சொத்துக்களிலிருந்து எழும் கடன்

இடர்பாட்டினுள் இது அடங்கும். இந்த நிதிசார் ஆவணங்களில் முன்கொண்டு வரும் நிதிக்குச் சமனான உச்ச வெளிப்பாட்டுடன் தரப்பினர்களினது உடன்பாடுகளின் புறக்கணித்தல்களின் மீது எழும் கடன் இடர்நேர் நிலைமையினை அதிகாரசபை நிர்வகிக்கின்றது. அரச நிதி நிறுவனங்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுடன் பிரதானமாக அதில் நிதி ஈடுபடுத்துதலின் மூலம் இந்த நிதிசார் ஆவணங்கள் தொடர்பில் அதிகாரசபை அதன் கடன் இடர்நேர் நிலைமையினை முகாமைத்துவம் செய்கின்றது.

2. **ஒப்புரவு இடர்பாடு**

அதிகாரசபைக்குரிய நிதிசார் பொறுப்புக்களை நிறைவேற்றும் ஆற்றல் இல்லாமல் போகுதல் ஒப்புரவு இடர்பாடு எனப்படும். பொதுவான மற்றும் எதிர்பாராத சந்தர்ப்பங்களில் பொறுப்பேற்க முடியாத நஷ்டம் எதிர்நோக்காமல் அல்லது அதிகாரசபையின் புகழ் நாமத்திற்கு பாதிப்பேற்படுத்தாத முறையில் கவனம் எடுக்க முடியுமான சகல சந்தர்ப்பங்களிலும் உரிய நேரத்தில் நிதியை செலுத்தப்பட வேண்டிய சந்தர்ப்பங்களில் செலுத்தப்படுவதற்கு போதுமானளவு நிதி வைத்திருத்தல் அதிகாரசபையின் ஒப்புரவு முகாமைத்துவம் செய்யும் முறையாகும்.

வருடந்தோறும் இயக்க காசுப் பாய்ச்சல் மற்றும்( மீண்டு வரும்/ வரவு செலவு) மூலதன வரவு செலவுகளின் முன்மொழிவுகள் தயார் செய்யப்படுகின்றன. இயக்க தேவைப்பாடுகளுக்குப் போதுமான நிதி அதிகாரசபையில் உள்ளதென்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு மீண்டு வரும் வரவு செலவு மற்றும் மூலதனம் ஆகிய இரண்டும் ஒப்புரவு தேவைப்பாடுகளும் நிதிப் பகுதியினால் கண்காணிக்கப்படுகின்றன. அறிக்கைகள் தயாரிக்கப்படும் காலப்பகுதியின் இறுதியில் ரூபா 23,260,284,628.21/= 2015 : ரூபா 18,325,552,004/=) விற்கு அதிகாரசபையினால் காலத்திற்கேற்ற வைப்புக்கள், குறுகிய கால அரசாங்க பிணைமுறிகள் மற்றும் ஏனைய ஒப்புரவு சொத்துக்கள் பேணிச் செல்லப்பட்டன.

உடன்பாடுகளின்படி முதிர்வடையும் திகதியில் அறிக்கை செய்யப்படும் காலப்பகுதியின் இறுதி நாளின் கால எல்லை அடிப்படையாகக் கொண்ட அதிகாரசபையின் நிதிசார் பொறுப்புக்களினது முதிர்ந்த பகுப்பாய்வுகள் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன. உடன்பாட்டின் மீதான கழிவு கிடைக்கப்பெறாத காசுப் பாய்ச்சல்கள் அட்டவணையின் பெறுமானங்களில் தெரிவிக்கப்படுகின்றன.

3. **சந்தை இடர்பாடு**

| நிதிசார்ந்த பொறுப்புக்கள் | 2017 டிசெம்பர் 31 | | | 2016 டிசெம்பர் 31 மீள்குறிப்பிடப்பட்ட | | |
|---|---|---|---|---|---|---|
| | ஒரு வருடத்திற்கு குறைந்த | ஒரு வருடத்திற்கு கூடிய | மொத்தம் | ஒரு வருடத்திற்கு குறைந்த | ஒரு வருடத்திற்கு கூடிய | மொத்தம் |
| கடன் வாங்குதல் அரசாங்கம் | 5,198,526,722 | 54,924,342,666 | 60,122,869,388 | 10,285,274,220 | 214,555,128,086 | 224,840,402,306 |
| கடன்யளித்தல் நிதி நிறுவனங்கள் | 1,555,871,084 | 11,360,327,710 | 12,,916,198,794 | 1,912,413,794 | 10,593,136,572 | 12,505,550,366 |
| வர்த்தக மற்றும் ஏனைய கடனாளிகள் | 105,914,892,043 | - | 105,914,892,043 | 1,429,776,503 | - | 1,429,776,503 |
| **மொத்தம்** | 112,664,920,006 | 62,333,811,506 | 174,998,731,513 | 13,627,464,517 | 225,148,264,658 | 238,775,729,175 |

அதிகாரசபையின் வருமானத்திற்கு அல்லது நிதிசார் ஆவணங்களில் கொண்டு வரப்பட்ட தடுத்து வைக்கப்பட்டுள்ள பெறுமானத்திற்கு தாக்கமேற்படுத்தும் வெளிநாட்டு பரிமாற்ற விகிதங்கள் மற்றும் வட்டி விகிதங்கள் போன்ற சந்தை விலைகள் மாற்றமடையும் நிலை சந்தை இடர்பாடாகும்.

### 3.1 நிதி இடர்பாடு

அறிக்கை செய்யப்படும் காலப்பகுதியினுள் இலங்கை மத்திய வங்கியானது அ.டொலருக்கு சார்பாக இலங்கை ரூபாவினை மிதக்க இடமளித்தலின் பின்னர் இலங்கை ரூபாவிற்கு சார்பாக அ.டொலரின் பெறுமதியின் ஏற்றத்தாழ்வினால் அதிகாரசபைக்கு நிதி இடர்நேர் நிலைக்கு முகம்கொடுக்க வேண்டியேற்படும்.கம்பனியின் அநேக கொடுக்கல் வாங்கல்கள் அதில் பயன்படுத்தப்படும் நிதி அலகான இலங்கை ரூபாவினால் நடைபெறுகின்றன. ஆனால் துறைமுக விரிவாக்கல் திட்டங்கள், அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் சில வங்கிகளினது நிலுவைகள்,கப்பல் முகவர்களிடமிருந்து பெறவேண்டியவை (வ/ப APL இலங்கை தனியார் நிறுவனம்) போன்ற வட்டியுடனான கடன் பெறுதல் வெளிநாட்டு நாணய (யப்பான் யென் மற்றும் அமெரிக்க டொலர்) பயன்பாட்டில் நடைபெறுகிறது.

அமெரிக்க டொலர் மிதப்பதன் பயனாக 2017 ஆண்டின் அறிக்கை செய்யப்படும் காலப் பகுதியில் அமெரிக்க டொலருக்கு சார்பாக இலங்கை ரூபா தேய்வடைந்ததனால் கையாளல்களுக்கான தாக்கம் ரூபா 2,205,937,060/= ஆக இருந்ததோடு இதுவானது வ/ப APL இலங்கை தனியார் கம்பெனிக்கு வழங்கப்பட்ட சேவைகள், இன்வோயிஸ் இடுதல் மற்றும் பெறப்பட்ட கடன் மீள் செலுத்தப்படுதலில் ஈட்டப்பட்டது. ஆனால் ஒரேயோரு நிதி அலகு ஊடாக நடாத்திச் செல்லப்பட்ட நிதி வைப்புக்கள் மூலம் மீள் செலுத்துதலின் பெறப்பட்ட கடன் மீள் செலுத்துதல் மற்றும் நிதியோட்டத்தின் தாக்கம் குறைக்கப்படுவதற்காக அதிகார சபையினால் ஒரேயோரு நிதி அலகு பயன்படுத்தப்படுகின்றது.

வட்டியுடனான கடன் மற்றும் வெளிநாட்டு நாணய மூலம் காட்டப்பட்டுள்ள கடன் பெறுதல் பற்றியதான தகவல்களுக்கு தயவு செய்து நிதி கூற்றின் பக்க இல.21 மற்றும் 22 ஐ பார்க்கவும்.

**வட்டி இடர்நேர்**

அரச முறிகள், வங்கி வைப்புக்கள் நிலையானதும் தொடர் வட்டியுடனான கடன் பெறுதல் தொடர்புபடும் சந்தை வட்டி விகிதத்தின் வித்தியாசங்கள் அதிகார சபையின் வட்டி இடர்நேருக்கு உட்படும்.

ரூபா 54,209,363,742.81 (2016 : ரூபா 54,103,443,683.80/=) அதிகார சபையின் வட்டியுடனான கடன் மற்றும் பெறுதல்களின் வட்டிகளினது விகிதங்களுக்கேற்ப கணக்கிடப்படுவதுடன் ஏனைய நிதியான ரூபா 18,829,704,438.21 (2016 . ரூபா 183,242,508,989.33/=) இன் வட்டி நிலையான வீகிதத்திற்கேற்ப கணக்கிடப்படும்.

அரச வங்கிகள் மற்றும் அரசுடனான வைப்புக்கள் அடங்கலான நிதி மற்றும் வங்கி மீதிகள் அதிகாரசபைக்கு உண்டு. அதிகாரசபையினால் முனைப்பாக வட்டி விகித நகர்வுகள் மேற்பார்வை செய்யப்படுதலின் ஊடாக வட்டி இடர்பாடு கண்காணிக்கப்படுகின்றது.

| Loan | 2017 (Rs) | 2016 (Rs) |
|---|---|---|
| **Floating Rate** | | |
| Colombo Port Expansion (South Harbor) | 41,293,164,949 | 41,567,362,731 |
| Terminal Tractors- (EXIM Bank of Malaysia) | | 30,530,586 |
| Bank of Ceylon | 8,960,970,082 | 12,505,550,365 |
| People's Bank | 3,955,228,712 | |
| **Fixed Rate** | | |
| Colombo Port Development Project | 18,829,704,439 | 21,286,883,069 |
| Hambanthota Port Develop. - ( Phase I) | - | 34,920,772,393 |
| Hambanthota Port Develop. - ( Phase II US$ 600 Mn) | - | 90,614,160,000 |
| Hambanthota Port Develop. - ( Phase II Yuan 1 bn) | - | 5,317,703,819 |
| Hambanthota Port Tank Farm Project | - | 9,872,233,068 |
| Ancillary works & Supply of Equipment Proj- Phase I HPDP | - | 21,230,756,640 |

**2017 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான**

**கடன் வசதிகள் பெறுவதற்கான விதிகள் மற்றும் நிபந்தனைகள்**

| கடன் பெயர் | | கடன் வழங்கும் நிறுவனம் | நாணயம் | வட்டி விகிதம் | கடன் தொகை (கடன் நாணயத்தில்) | 2017/12/31 ஆம் திகதிக்கான (நிலுவை) | கடன் பெறுதலின் செலவினம் |
|---|---|---|---|---|---|---|---|
| JBIC | SLP-23 | JAICA | JPY | 2.50% | 5,703,407,055 | 964,282,792 | |
| | SLP-27 | | JPY | 2.50% | 10,432,338,189 | 2,469,347,541 | |
| | SLP-30 | | JPY | 2.60% | 19,962,268,331 | 6,075,143,798 | |
| | SLP-33 | | JPY | 2.60% | 6,828,220,432 | 2,770,709,309 | |
| | SLP-41 | | JPY | 2.60% | 4,878,185,478 | 2,309,334,798 | |
| | SLP-46 | | JPY | 2.60% | 2,644,187,565 | 2,235,258,060 | |
| | SLP-67 i | | JPY | 1.80% | 1,354,512,318 | 1,265,894,112 | |
| | SLP-67 ii | | JPY | 0.75% | 217,445,997 | - | |
| | SLP-85 | | JPY | 0.30% | 14,495,000,000 | 589,600,324 | |
| ஆசிய அபிவிருத்தி வங்கி 2316 | | ஆசிய அபிவிருத்தி வங்கி | US $ | Libor+0.6% | 300,000,000 | 41,145,993,958 | |
| தெரிவு செய்யப்பட்ட கொள்வனவாளர்களின் கடன் அரச | | Exim வங்கி - சீனா | US $ | 2.00% | 600,000,000 | | 931,530,666 |
| கடன் அரசாங்க சலகைக்கான கட்டம் ( II) | | Exim வங்கி - சீனா | RMB | 2.00% | 1,000,000,000 | | 56,295,274 |
| சூரியவெவ விளையாட்டு அரங்கு அமைத்தல் | | மக்கள் வங்கி | LKR | AWPR+2.5 | 3,950,858,870 | 3,950,858,870 | |
| கிழக்கு கொள்கலன் முனையம். | | இலங்கை வங்கி | US $ | 6 Months Libor+4.25% | 80,000,000 | 8,960,970,082 | |
| | | | | **மொத்தம்** | | **72,737,393,644** | **987,825,940** |
| | | | ஒன்று சேர்ந்த வட்டி | | | 301,674,537 | |
| | | | | | | **73,039,068,181** | |
| | | | குறிப்பு 21 | கடன் பெறுகைகள் – இலங்கை அரசு | | 60,122,869,388 | |
| | | | குறிப்பு 22 | கடன் பெறுகைகள் – நிதி நிறுவனங்கள் | | 12,916,198,794 | |
| | | | | | | **73,039,068,182** | |

ஹம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்திக்காக பெற்றுக்கொண்ட கடன் மற்றும் ஹம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணப்பணிக்காக பெற்றுக்கொண்ட கடனை மீழச்செலுத்துதல் திறைசேரியினால் 2017-07-25 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரத்துக்கு ஏற்ப பொறுப்பேற்றுள்ளது. ஆதனால் இது தொடர்பாக இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு எதுவித பொறுப்புமில்லை.


மொத்த வருமானம்
20,000
18,000
16,000
14,000
12,000
10,000
8,000
6,000
4,000
2,000
-
2017
2016
கப்பலோட்டம்
கப்பல் சுமை
வாப்பு
கையாளல்
துறைமுக
வசதிகள்
ஏனையவை


சேவைகளிலிருந்து கிடைக்கப்பெற்ற வருமானம் 2017 இ.து.அச
3%
23%
12%
15%
47%
கப்பலோட்டம்
கப்பல் சுமை
வாப்பு கையாளல்
துறைமுக வசதிகள்
ஏனையவை



இயக்க மற்றும் ஏனைய செலவினம்
ரூபா மில்லியன்
50,000
40,000
30,000
20,000
10,000
0
-10,000
-20,000
வேதனங்கள், சம்பளங்கள், கொடுப்பனவுகள்
மேலதிகநேரம்
எரிபொருள், மின்சாரம்,நீர்
சொத்துக்களின் பராமரிப்பு
ஏனையவை
வெளிநாட்டு கடன் மீதான வட்டி
அந்நிய செலாவணி பரிமாற்றம்
தேய்மானம்
வரிக்கு முன்னரான மொத்த செலவினம்
2017 செலவினம் ரூபா மில்லியன்
2016 செலவினம் ரூபா மில்லியன்
அதிகரிப்பு/ (குறைவு)
%
செலவினம்

சகல துறைமுகங்களிலும்






பீஓஎஸ்/ஏ/எஸ்எல்பீஏ/1/2017/03 2018 நவம்பர் 14

**தலைவர்,**
**இலங்கை துறைமுக அதிகாரசபை**

**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையினதும் அதன் துணைக் கம்பணிகளினதும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14 (2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையினதும் அதன் துணைக்கம்பனிகளதும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1979 இன் 51 ஆம் இலக்க இலங்கை துறைமுகங்கள் தொடர்பான அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 33 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14 (2) (சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக் கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானது என முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 -1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வை நான் மேற்கொண்டேன்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத விடயங்கள் தொடர்பாகவும் நிதி நிலைமைக் கூற்று, வருமானக் கூற்று, உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பவற்றை தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

## 1.5. துணைக்கம்பனிகளும் இணைந்த கம்பனிகளும்

இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் இரண்டு துணைக் கம்பணிகளாக வரையறுக்கப்பட்ட ஜய கொள்கலன் இறங்குதுறை கம்பனியும் வரையறுக்கப்பட்ட மாகம்புற துறைமுக முகாமைத்துவ சேவை (தனியார்) கம்பனியும் இணைந்த கம்பனிகளாக வரையறுத்த துறைமுக முகாமைத்துவ மற்றும் ஆலோசனை சேவை கம்பனியும் காணப்படுகின்றன. இணைக்கம்பனிகளின் உரிமையாண்மை 100சதவீதமாகவும் இணைந்த கம்பனியின் உரிமையாண்மை 39.97 சதவீதமாகவும் இருந்ததுடன் இம்மூன்று கம்பனிகளின் கணக்காய்வானது பிரசித்த கணக்காளர் தொழிலில் ஈடுபட்டுள்ள மூன்று கம்பனிகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

### 2.1.1 மறுப்பு அபிப்பிராயம் - தொகுதி

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந் நிதிக் கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

### 2.1.2 மறுப்பு அபிப்பிராயம் - அதிகார சபை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்கள இந்நிதிக் கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள் - தொகுதி

துறைமுக அதிகாரசபையின் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது ஒரு துணைக்கம்பனியின் வரைவு நிதிக் கூற்றுக்களின் அடிப்படையில் ஒருங்கிணைந்த கணக்குகள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அதிகாரசபைக்குச் சொந்தமான அடுத்த துணைக்கம்பனியின் கணக்குகள் 2018 மே மாதம் இறுதி வரையிலும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் தொகுதியின் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது இரண்டு துணைக் கம்பனிகளினதும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள் - அதிகாரசபை

#### 2.2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணத்திற்காக பெறப்பட்டிருந்த வெளிநாட்டுக் கடன்களில் 2017 நவம்பர் 31 இல் அதிகாரசபையின் கணக்குகளில் எஞ்சியதாக காணப்பட்ட ரூபா 147,746 மில்லியன் தொகையான கடன் மீதி திறைசேரியின் இணக்கப்பாட்டுடனோ அல்லது அமைச்சரவையின் தீர்மானமோ இன்றி அதிகாரசபையினால் நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக அரசாங்கத்தின் எந்தவொரு கணக்கிலும் அந்தக் கடன் பணம் உள்ளடக்கப்படடிருக்கவில்லை. எனினும், இந்தக் கடன் தொகை எந்தக் கணக்கில் உள்ளடக்கப்பட வேண்டியிருந்தது என குறித்துரைக்கப்படவில்லை. மேலும், இந்தக் கடன்

கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டமையால் அதிகாரசபையின் நிதிக் கூற்றுக்களிலும் கீழே குறிப்பிடப்பட்ட தாக்கங்கள் ஏற்பட்டிருந்தன.

(i) வெளிநாட்டுக் கடன் மீதி ரூபா 147,746 மில்லியனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டமை.

(ii) கடன் பெறுமதியை உள்நாட்டு பணத்திற்கு மாற்றும் போது 2016 திசெம்பர் 31 ஆம் திகதி வரை இனங்காணப்பட்ட ரூபா 27,458.93 மில்லியன் தொகையான அந்நிய செலாவணி நாணயமாற்று நட்டம் 2017 ஆம் ஆண்டில் உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் ஆரம்பத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்பு மீதியில் சீராக்கப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட நிறுத்தி வைத்தல் உழைப்பு மீதி அப்பெறுமானத்தால் மிகைக் கணப்பீடு செய்யப்பட்டிருந்தமை.

(iii) 2017 சனவரி 01 ஆந் திகதி முதல் 2017 நவம்பர் 30 ஆந் திகதி வரை இணங்காணப்பட்ட கடன் தொகைக்குரிய அந்திய செலாவணி நாணயமாற்று நட்டமான ரூபா 4,086 மில்லியன் தொகை விரிவான வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படாமையின் காணமாக மேற்கூறிய பெறுமதியில் மீளாய்வாண்டின் தேறிய இலாபம் மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தமை.

(iv) 2017 திசெம்பர் 01 முதல் திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்காக கடன் பணத்தின் அந்நிய செலாவணி நாணய மாற்று இலாபம் ரூபா 339 மில்லியனான இருந்ததுடன் இந்த அளவு மீளாய்வாண்டின் விரிவான வருமானக் கூற்று தயாரிக்கும் போது கவனத்தில் கொள்ளப்பட்டிராமை

**2.2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கப்பல் முகவர் நிறுவனத்தால் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய மீதி ரூபா 986.08 மில்லியனாக இருந்ததுடன் கப்பல் முகவர் நிறுவனம் வழங்கிய மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் அந்த மீதி ரூபா 728.14 மில்லியன் ஆனமையால் ரூபா 257.94 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன் அந்த வேறுபாட்டிற்கான காரணத்தைக் காண்பித்து இணைக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3. பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) துறைமுகங்கள் அதிகாரசபையின் நிதி நடைமுறைக் கோவையின் 9.1.3 ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டிய பணத்தை அறவீடு செய்தல் சம்பந்தமாக நேரடியாக அல்லது மறைமுகமாக பொறுப்புக் கூறக்கூடிய உத்தியோகத்தர்களை அனுப்பி நிலுவைப் பணம் ஏற்படாதவாறு கவனித்துக் கொள்வதற்காக தேவையான அனைத்து முயற்சிகளும் எடுத்தல் வேண்டும். எவ்வாறாயினும் துறைமுகங்கள் அதிகாரசபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 2,788 மில்லியன் மொத்த வியாபாரக் கடன்பட்டோர் மீதிகளில், கொழும்பு துறைமுகத்தின் வர்த்தக கப்பல் முகவர் கடன்பட்டோர் மீதிகளின் மொத்தம் ரூபா 63 மில்லியன் தொகையும் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாது காணப்பட்டது.

(ஆ) கடன் அடிப்படையில் சேவை வழங்கப்பட்டமையின் காரணமாக கொழும்பு, திருகோணமலை மற்றும் காலி போன்ற துறைமுகங்களில் சேவைகளைப் பெற்ற அரசாங்க நிறுவனம் மற்றும் கப்பல் முகவர் கடன்பட்டோருக்கு 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ரூபா 423,14 மில்லியன் கூட்டுத்தொகைக்காக முழுமையாக ஐயக்கடன் மற்றும் அறவிட முடியாக் கடனுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) பெறவேண்டிய கணக்கு மீதிகளில் உள்ளடக்கப்பட்ட கொழும்பு, திருகோணமலை துறைமுகங்களில் வியாபார ரீதியற்ற கடன்பட்டோரின் கீழ் காணப்படுகின்ற ஆதனங்கள், நலன்புரி மற்றும் சிற்றுண்டிச்சாலை என்பவற்றை நடாத்திச் செல்வதற்காக வழங்கப்பட்ட இடங்கள், இடத்தின் வாடகை மற்றும் மின்சாரப் பாவனைக்காக அதிகாரசபையினால் செலவிடப்பட்ட மின்சாரச் செலவினம் என்பன உரியமுறையில் அறவிடப்படாமையின் காரணமாக ஆண்டில் விஞ்சி இருந்த அந்த மீதிகளின் பெறுமதி ரூபா 65 மில்லியனாக இருந்ததுடன் ரூபா 63.68 மில்லியனுக்காக ஐயக் கடன் மற்றும் அறவிடமுடியாத கடனுக்காக ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரச்சினைகளுடன்/பிணக்குகளுடன் காணப்பட்ட கடன்பட்டோர் மீதி (Dispute Debtors) ரூபா 46.83 மில்லியன் மற்றும் மீளத் தீர்ப்பதற்காக அனுப்பப்பட்ட தீர்க்கப்படாதிருந்த கடன்பட்டோர் மீதி ரூபா 14.70 மில்லியனாக இருந்தது. மேற்கூறப்பட்ட மீதியில் உள்ளடக்கப்பட்ட ஒரு வருடத்தை விஞ்சிய தீர்க்கப்படாதிருந்த கடன்பட்டோர் மீதியில் ரூபா 3.18 மில்லியன் மற்றும் மீளத் தீர்ப்பதற்காக அனுப்பப்பட்ட தீர்க்கப்படாத கடன்பட்டோர் மீதியில் (Re-Dispute) ரூபா 4.78 மில்லியன் தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இறுதி முடிவுகளுக்கு உடன்பட்டிருக்கவில்லை.

(உ) கப்பல் முகவர் நிறுவனத்திலிருந்து இதுவரை அறவிடப்படாது காணப்பட்ட 30 நாட்களை விஞ்சிய குதக் கட்டணம் மற்றும் கப்பலை அங்குமிங்கும் கொண்டு செல்வதற்கான ரூபா 113.19 மில்லியன் தொகையான பட்டியல்களுக்காக கட்டண சலுகையொன்றை பெற்றுக்கொள்வதற்காக (கட்டணத்தை பதிவழிப்பதற்கு) பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியிருந்த போதிலும் பொதுத் திறைசேரியினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. எனினும் 2018 மே 16 ஆந் திகதி ரூபா 112.86 மில்லியன் தொகை அறவிடமுடியாக் கடனாகப் பதிவழிக்கப்பட்டிருந்தது.

### 2.3. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள்,விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1979 இன் 51 ஆம் இலக்க இலங்கை துறைமுகங்கள் தொடர்பான அதிகாரச்சட்டத்தின் 6 (ஏ) ஆம் பிரிவு | அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பொது ஒதுக்கத்தைத் தோற்றுவிப்பதற்கு 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. . |
| (ஆ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம்<br>(i) 11 ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 ஆம் பிரிவு | 2017 ஆம் ஆண்டின் போது அதிகாரசபையின் நிலையான வைப்புக்கள் மற்றும் குறுங்கால வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 12,674 மில்லியனுக்காக நிதி அமைச்சரின் சம்மதம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ii) 10 (5) ஆம் பிரிவு | அரசாங்க கூட்டுத்தாபனம் ஒன்றில் ஏதாவது ஆண்டொன்றில் மிகையொன்று காணப்படுமாயின் அதிகாரச்சட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ள கழித்தல்களின் பின்னர் சேமிப்பு திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். எனினும் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது அதிகாரசபை முறையே ரூபா 1,035.73 மில்லியன் மற்றும் ரூபா 13,324.14 மில்லியன் தொகையான தேறிய இலாபமொன்றை பெற்றிருந்த போதிலும் அந்த இலாபம் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மேற்கூறப்பட்ட இலாபத்தில் கொழும்பு துறைமுகத்தின் 02 இறங்குதுறைகளின் செயற்பாடுகளில் தொடர்ந்து ஈடுபட்டிருக்கின்ற இரண்டு தனியார் கம்பனிகளிலிருந்து அதிகாரசபையினால் வருடாந்த வாடகையாக அறவிடப்பட்ட ரூபா 1,993.47 மில்லியன் தொகையும் அரசிறையாக அறவிடப்பட்ட ரூபா 2,489.28 தொகையும் உள்ளடங்கி இருந்தது. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 387 மற்றும் 156 | காசோலை மூலம் மேற்கொள்ளப்படுகின்ற சகல கொடுப்பணவுகளுக்காகவும் தமது வங்கி மீதி போதியளவான உள்ளது என செலுத்தும் உத்தியோகத்தரினால் எப்போதும் ஆராய்ந்து பார்க்க வேண்டிய போதிலும் அதிகாரசபையினால் சம்பளம் செலுத்தும் போது 484.171 மில்லியன் வங்கி மேலதிகப்பற்று ஏற்பட்டமையின் காரணமாக ரூபா 0.286 மில்லியன் தொகையான வங்கி மேலதிகப்பற்று வட்டி செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. |
| (ஈ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை<br>(1) 4.2.3 ஆம் பிரிவு | துணைக் கம்பனிகளின் செயலாற்றல்கள் தொடர்பாக உரிய கால ரீதியான அறிக்கை பணிப்பாளர் சபையினால் மீளாய்வு செய்ய வேண்டிய போதிலும் அதிகாரசபைக்குரிய ஒரு துணைக்கம்பனியின் செயலாற்றல் அறிக்கை மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (II) 5.1.2. ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் போது அதிகார சபையின் 23 பிரிவுகளுக்குரிய பிரதான செயலாற்றல் குறிகாட்டிகள் (Key Performance Indicators) இனங்காணப்பட்டிருந்த போதிலும் எதிர்பார்க்கப்பட்டவாறு உள்ளபடியான செயலாற்றல் அடையப்பட்டமையை குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு செயலாற்றலை மதிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. . |
| (III) 9.3.1 (iv) ஆம் பிரிவு | புதிய பதவியொன்றைத் தோற்றுவிப்பதற்கோ அல்லது ஊழியர் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கோ முன்னர் சரியான முறையில் தொழில் மதிப்பீடு மற்றும் ஆய்வொன்றை நடாத்த வேண்டும் எனக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமல் அதிகார சபையின் 06 பிரிவுகளின் பணிப் பொறுப்புக்களுக்கு ஈடாக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை விஞ்சி ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (IV) 9.3.1 இன் (vi) மற்றும் (vii) ஆம் பிரிவுகள் | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு முரணாக அதிகாரசபையினால் மீளாய்வாண்டின் போது 35 உத்தியோகத்தர்கள் 03 மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக பதிற்கடமை ஆற்றும் அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தனர. |

| | |
|---|---|
| (உ) 2015 மே 25 ஆம் திகதிய பீஈடீ 1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.3 மற்றும் 3.1 ஆம் பிரிவுகள் | (i) சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக மாதாந்த எரிபொருள் படிகளுக்கு தகைமை பெற்றிருக்காத 86 உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் சனவரி மாதத்தின் போது எரிபொருள் 8370 லீட்டர் வழங்கப்பட்டிருந்தது<br><br>(ii) சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக அதிகாரசபையின் 35 உத்தியோகத்தர்களுக்கு மாதாந்த எரிபொருள் எல்லை நிர்ணயிக்கப்பட்டிருந்ததுடன் தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் பிரகாரம் 2017 சனவரி மாதத்தின் போது மாத்திரம் எரிபொருள் 1,459 லீட்டர்கள் மேலதிகமாக வழங்கப்பட்டிருந்தது. |
| (ஊ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரசட்டத்தின் XIV ஆம் பிரிவு மற்றும் 2016 ஏப்ரல் 29 ஆந் திகதிய பீஈடீ/03/2016 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | உழைக்கும் போதே செலுத்தும் வரி தனிப்பட்ட சம்பளங்களிலிருந்து கழிக்கப்பட்டு செலுத்தப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையின் உத்தியோகத்தர்களுக்காக அந்தப் பணம் அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டிற்காக அவ்வாறு செலுத்தப்பட்ட ரூபா 479.94 மில்லியனையும் உள்ளடக்கி 2011/2012 மதிப்பீட்டு ஆண்டு முதல் 2017 திசெம்பர் மாதம் வரை கூட்டுமொத்தமாக ரூபா 2,361.62 மில்லியன் உழைக்கும் போதே செலுத்தும் வரி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அதிகார சபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| (எ)2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் உழைக்கும் போதே வரி செலுத்தும் அட்டவணை இலக்கம் 03 இன் 2 ஆம் பிரிவு மற்றும் 03 இன் 2 ஆம் பிரிவு மற்றும் 2011 மார்ச் 07 ஆந் திகதிய ஐஆர்டீ/பீஏவைஈ/ஆர்ஈஜிபி/01 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தால் வழங்கப்பட்ட கடிதம். | அரசாங்க நிறுவனங்களின் ஊழியர்களுக்கு செலுத்தும் பணிக் கொடையிலிருந்து உழைக்கும் போதே செலுத்தும் வரி கழிக்கப்பட வேண்டுமென காண்பிக்கப்பட்டிருந்த போதும் அதிகாரசபையினால் பணிக்கொடை செலுத்தும் போது அறவிடப்பட வேண்டிய 10 சதவீதமான அந்த வரி நிறுத்தி வைக்கப்படாமல் பணிக்கொடை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஏ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டம் மற்றும் 2011 மார்ச் 07 ஆந் திகதிய உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்ட 2015 யூலை 06 ஆந் திகதிய எஸ்ஈசீ/2015/05 ஆம் இலக்க சுற்றறிக்கை | அரசாங்க நிறுவனங்களின் ஊழியர்களுக்கு மிகையூதியப் பணம் செலுத்தும் போது அதன் அடிப்படையில் உழைக்கும் போது செலுத்தும் வரி கழிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த வரி உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படாமல் அதிகார சபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஐ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ /2002/2 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | அதிகாரசபைக்கு சொந்தமான ரூபா 369.15 மில்லியன் தொகையான கணனி, துணைப்பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக தனிப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.அவ்வாறே மேற்கூறிய கணனிப் பதிவேட்டை பராமரித்தல் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு மேற்பார்வை செய்ய வேண்டியிருந்த போதிலும் அந்த தேவைகளும் நிறைவேற்றப்படவில்லை. |

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக தொகுதியின் இலாபம் ரூபா 13,384 மில்லியனாகவும் அதிகாரசபையின் இலாபம் ரூபா 13,324 மில்லியனாகவும் இருந்தன.முன்னைய ஆண்டிற்கான தொகுதியினதும் அதிகாரசபையினதும் இலாபம் முறையே ரூபா 583 மில்லியன் மற்றும் ரூபா 1,036 மில்லியன் ஆக இருந்ததனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் தொகுதியினதும் அதிகாரசபையினதும் நிதி விளைவுகள் முறையே ரூபா 12,801 மில்லியனாலும் ரூபா 12,288 மில்லியனாலும் முன்னேற்றமடைந்திருந்தது.முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்காக பெறப்பட்ட கடன் தொகை புத்தகங்களிலிருந்து அகற்றப்பட்டதுடன் அகற்றப்பட்ட வெளிநாட்டு நாணயமாற்று நட்டம் ரூபா 4,086 மில்லியனையும்

உள்ளடக்கிய அதிகாரசபையின் தேறிய வெளிநாட்டு நாணயமாற்று செம்மையாக்கல் நட்டம் ரூபா 7,832 மில்லியனால் குறைவடைந்தமை, அரசிறை வருமானம் ரூபா 505 மில்லியனால் உயர்வடைந்தமை, வைப்பின் அடிப்படையிலான வட்டி வருமானம் ரூபா 575 மில்லியனால் அதிகரித்துச் சென்றமை என்பன மேற்கூறிய நிதி விளைவுகளின் முன்னேற்றம் தொடர்பாக பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளுக்கான அதிகாரசபையின் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2015 ஆம் ஆண்டை தவிர்த்து ஏனைய ஆண்டுகளின் போது இலாபம் அடைந்திருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம், அரசாங்கத்திற்கு செலுத்தப்பட்ட வரி மற்றும் பெறுமானத் தேய்வு என்பவற்றை மீண்டும் செம்மையாக்கும் போது அதிகாரசபையின் பங்களிப்பு தொடர்ச்சியாக சாதகமான மீதியைக் கொண்டிருந்ததுடன் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 24,052 மில்லியன் தொகையான பங்களிப்பு மீளாய்வாண்டின் போது ரூபா 37,839 மில்லியன் வரை அதிகரித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய நான்கு ஆண்டுகளுக்குமான பொருண்மையான கணக்கீட்டு விகிதங்களில் சில கீழே தரப்படுகின்றன.

| | | 2017 | 2016 | 2015 | 2014 | 2013 |
|---|---|---|---|---|---|---|
| **(i)** | மொத்த இலாப விகிதம் சதவீதத்தில் | 46 | 45 | 35 | 39 | 33.39 |
| **(ii)** | மொத்த வருமானத்திற்கான செயற்பாட்டு இலாபம்/ (நட்டம்) சதவீதத்தில் | 36.19 | 33.34 | 22.86 | 27.93 | 13 |
| **(iii)** | தேறிய இலாபம்/ (நட்டம்) விகிதம் சதவீதத்தில் | 29 | 2.35 | (35) | 23.73 | 4.52 |
| **(iv)** | உரிமை மூலதனத்திற்கான நீண்டகாலக் கடன் | 1:0.20 | 1:2.89 | 1:2.92 | 1:2.30 | 1:2.27 |
| **(v)** | நடைமுறை விகிதம் | 1.22:1 | 1.27:1 | 1.52:1 | 2.16:1 | 2.51:1 |
| **(vi)** | விரைவு விகிதம் | 1.19:1 | 1.19:1 | 1.41:1 | 2.05:1 | 2.42:1 |
| **(vii)** | ஒரு ஊழியருக்கான கிரயம் ரூபா மில்லியன் | 1.78 | 1.66 | 1.73 | 1.42 | 1.38 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஹம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணத்திற்காக பெறப்பட்ட கடன்கள் புத்தகங்களிலிருந்து அகற்றப்பட்டமையின் காரணமாக 2013 ஆம் ஆண்டில் 1:2.27 ஆகக் காணப்பட்ட அதிகாரசபையின் உரிமை மூலதனத்திற்கான திரண்ட கால கடன் விகிதம் 2017 ஆண்டளவில் 1:0.20 வரை குறைவடைந்திருந்தது.

(ஆ) மொத்த வருமானத்திற்கு ஒப்பீடாக 2013 ஆம் ஆண்டில் 13 சதவீதமான செயற்பாட்டு இலாப விகிதம் 2017 ஆண்டளவில் 36.19 சதவீதம் வரை அதிகரித்திருந்ததுடன் 2013 ஆம் ஆண்டின் போது 4.52 சதவீதமாகக் காணப்பட்ட வரிக்குப் பின்னரான தேறிய இலாப விகிதம் 2017 ஆம் ஆண்டின் போது 29 சதவீதம் வரை அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டில் அந்நிய செலாவணி நாணயமாற்று நட்டத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 7,832 மில்லியனாக குறைவடைந்தமை மற்றும் கடன் வட்டிச் செலவினம் ரூபா 2,219 மில்லியனால் குறைவடைந்தமை என்பன செயற்பாட்டு இலாபம் மற்றும் தேறிய இலாப விகிதம் என்பன உயர்வடைந்தமைக்கான பிரதான காரணமாக இருந்தது.

(இ) 2013 ஆண்டின் நடைமுறை விகிதமும் விரைவுச் சொத்து விகிதமும் முறையே 2.51:1 மற்றும் 2.42:1 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அது

முறையே 1.22:1 மற்றும் 1.19:1 வரை படிப்படியாக வீழ்ச்சியடைந்திருந்தது. அட்டுறு செலவினங்களுக்கான ஒதுக்கீடுகள் உயர்வடைந்து சென்றமை இதற்கான காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1979 இன் 51 இலக்க இலங்கை துறைமுகங்கள் தொடர்பான அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் ஆக்கபூர்வமாகவும் தொடர்ச்சியாகவும் துறைமுகங்களின் செயற்பாடுகளை வழங்குதலும், பாதுகாப்புச் சேவைகளை வழங்குதலும், நுழைவு வழிகளில் கப்பல்ககள் நுழைவதனை முறைமைப்படுத்தலும் கட்டுப்படுத்தலும், துறைமுகங்களை மேம்படுத்தலும் அபிவிருத்தி செய்தலும், துறைமுக நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்தலும் முறைமைப்படுத்துதலும் என்பன அதிகாரசபையின் பிரதான குறிக்கோள்களாகும். இந்த குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### 4.1.1. திட்டமிடல்

#### 4.1.1.1. கூட்டிணைந்த திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையினால் 2013 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அந்தத் திட்டத்தின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டு வரையில் சிறப்பான கடல்சார் சேவைகளை வழங்கும் நிலையமாக கொண்டு வருதல், 200 மில்லியன் தொன் கப்பல் பொருட்களைக் கையாளல், ஐக்கிய அமெரிக்க டொலர் ஒரு பில்லியன் வருமானமொன்றை உழைத்தல், ஐக்கிய அமெரிக்க டொலர் 10 பில்லியன் முதலீட்டைக் கைப்பற்றல் (துறைமுகங்களுக்கிடையில்) தேசியப் பொருளாதாரத்திற்கு முன்னுரிமை வழங்கும் துறையாகக் கொண்டு வருதல் மற்றும் சுற்றாடலுக்குச் சாதகமான பசுமை துறைமுக செயற்பாடாகக் கொண்டு வருதல் போன்ற பிரதான இலக்குகளை அடைந்து கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் அந்த இலக்குகள் எவ்வளவு தூரம் அடையப்பட்டிருந்தது என வருடாந்தம் மீளாய்விற்கு உட்படுத்தாதிருந்ததுடன் பிரதான இலக்கை அடைந்து கொள்ளும் முறையைக் காண்பிக்கின்ற வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கும் போது நிறுவனத்தில் தாபிக்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக துறைமுகத்தில் தந்திரோபாயங்கள் (Strategies), பலவீனங்கள் (Weakness) மற்றும் வியாபார சூழலில் காணப்படுகின்ற சந்தர்ப்பங்கள் (Opportunities) மற்றும் அச்சுறுத்தல் (Threats) தொடர்பான மதிப்பீட்டிற்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அதிகாரசபையின் கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் 1200 மீற்றர் நீளமான கிழக்கு கொள்கலன் இறங்கு துறையில் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டு அதில் வருடாந்தம் 2.4 மில்லியன் கொள்கலன்களை கையாளுவதற்கு இலக்கிடப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டின் போது இறங்குதுறையின் 600 மீற்றர் நீளம் நிர்மாணிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் அதில் கொள்கலன் கையாளல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டமையின் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் இலக்கினை அடைந்து கொள்ள முடியாதிருந்தது.

**4.1.2 செயற்படுநிலையும் மீளாய்வும்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**4.1.2.1செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பணிகளின் செயன்முன்னேற்றம்**

2017 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் ஆற்றப்பட வேண்டிய வேலை அறிக்கையின் பிரகாரம், மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 3,079.1 மில்லியன் தொகையான பிரதான வேலை விடயங்கள் மற்றும் 39 செயற்திட்டங்கள் ( மொத்த செயற்பாடுகள் 131) என்பனவற்றை அமுல்படுத்துவதற்காக இணங்காணப்பட்டிருந்தது.எனினும் செய்யயப்பட்ட வேலை அறிக்கையின் பிரகாரம்,மீளாய்வாண்டில் ரூபா 1,195 மில்லியன் தொகையான 09 செயற்திட்டங்கள் மாத்திரம் (34 செயற்பாடுகள்) முழுமையாகப் பூர்த்தி செய்யப்படடிருந்ததுடன் அது மொத்த செயற்திட்டங்களில் 23 சதவீதமாக இருந்தது.2017 ஆம் ஆண்டின் போது மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 1,884.1 மில்லியன் கிரயமான 30 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படடிருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 250 மில்லியன் தொகையான துறைமுகம் மற்றும் கடற்படை வியாபார நிலையம் (Port and Shipping Business Center) நிர்மாணங்களில் 40 சதவீதம் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதும் 15 சதவீதம் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

(ஆ) திருகோணமலை துறைமுக அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் துறைமுகத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக ரூப 100 மில்லியன் செலவில் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அது 2017 மார்ச் மாதத்தின் இறுதியில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 40 சதவீதம் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

(இ) 2017 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது பூர்த்தி செய்யப்பட வேண்டிய ரூபா 795 மில்லியன் பெறுமதியுடைய 09 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் இறுதிவரையில் பூர்த்தி செய்யப்படவில்லை.

(ஈ) காணியைப் பயன்படுத்தும் பிரதான செயற்திட்டம் ( Land Use Master Plan ) 2017 யூன் மாதம் அளவில் தயாரித்து பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அந்த பணிகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) தேசிய துறைமுகத்தின் கூட்டிணைந்த திட்டம்( National Port Master Plan) தயாரிப்பதற்காக ரூபா 15 மில்லியன் ஒதுக்கப்படடிருந்ததுடன் அந்த திட்டத்துக்குரிய National Port Policy direction,Hinterland Connectivity Project,Port Access Elevated Highway Phase போன்ற செயற்பாடுகள் 2017 ஆம் ஆண்டு முடிவடைவதற்குள் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் உரிய பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**4.1.2.2 கொழும்பு துறைமுகத்தினதும் அதிகார சபையினதும் கொள்கலன் கையாளல் (Container Handling ) செயற்பாடுகள்**

மீளாய்வாண்டின் இறுதியளவில் கொழும்பு துறைமுகத்தினுள் கொள்கலன்களை ஏற்றி இறக்கக்கூடியதாக 04 இறங்குதுறைகள் காணப்பட்டதுடன் அவற்றில் ஜய கொள்கலன் இறங்குதுறை மற்றும் சமகி கொள்கலன் இறங்குதுறை முழுமையாக துறைமுக அதிகாரசபைக்கு சொந்தமாக இருந்தது. ஏனைய இறங்குதுறைகளான கொழும்பு சர்வதேச இறங்குதுறை (C.I.C.T) மற்றும் தெற்காசிய நுழைவு இறங்குதுறை (S.A.G.T) என்பன இரண்டு தனியார் நிறுவனங்களுக்கு 85 சதவீத உரிமையின் அடிப்படையில் 35 ஆண்டுகளுக்கு நிர்மாணித்தல், செயற்படுத்தல் மற்றும் ஒப்படைத்தல் (Built,Operation and Transfer) என்ற அடிப்படையின் கீழ் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன.

**2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது கொள்கலன்களை ஏற்றி இறக்கல் (Container Handling) தொடர்பான தகவல்கள் பின்வருமாறாகும்.**

| | இ.து.அ (SLPA) | | தே.ஆ.நு.இ (SAGT) | | கொ.ச.கொ.இ (CICT) | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | அலகு 2016 | -2017 | அலகு 2016 | -2017 | அலகு 2016 | -2017 | அலகு 2016 | -2017 |
| மீள்கப்பலேற்றம். (Transshipments) | 1,607,729 | 1,609,114 | 1,294,631 | 1,406,265 | 1,452,838 | 1,726,203 | 4,355,261 | 4,741,582 |
| உள்நாடு (Domestic) | 483,109 | 388,282 | 317,707 | 375,944 | 499,034 | 619,325 | 1,299,850 | 1,383,551 |
| மீள் ஏற்றுமதி (Re- Stowing) | 9,216 | 13,306 | 19,869 | 27,626 | 50,727 | 43,003 | 79,812 | 83,935 |
| | 2,100,117 | 2,010,702 | 1,632,207 | 1,809,835 | 2,002,599 | 2,388,531 | 5,734,923 | 6,209,068 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒட்டுமொத்தமாக எடுத்துக்கொள்கையில் 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது கொழும்பு துறைமுகத்தில் கொள்கலன்களை ஏற்றி இறக்குதல் 8 சதவீதத்தால் முன்னேற்றமடைந்திருந்தும் இலங்கை துறைமுக அதிகார சபையின் கொள்கலன் செயற்பாட்டு நடவடிக்கைகள் 4 சதவீதத்ததால் குறைவடைந்திருந்தது.2017 ஆம் ஆண்டின் போது இலங்கை துறைமுக அதிகார சபை மற்றும் கப்பல் முகவர் நிறுவனத்துடன் செய்து கொள்ளப்பட்ட இறங்குதுறைச் சேவை உடன்படிக்கைகளின் (Terminal Service Agreements) பிரகாரம் அதிகாரசபைக்குச் சொந்தமான இறங்குதுறைக்கு வருகை தரவுள்ள சில கப்பல்கள் பின்வரும் காரணங்களின் அடிப்படையில் இரண்டு தனியார் இறங்குதுறைகளுக்கு எடுத்துச் செல்லப்படுதல் அதற்கான பிரதான காரணமாக இருந்தன.

(ஆ) நிகழ்காலத்தில் பொருட்களை எடுத்துச் செல்வதில் கப்பல் முகவர் நிறுவனங்கள் மிகச் சிக்கனமாக பாரிய கப்பல்களை பெற்றுக்கொள்ளும் நோக்கில் ( Economic Scale) பயன்படுத்துவதற்கு அதிக விருப்பத்தைக் காட்டி வருகின்றது. அவ்வாறே கொள்கலன் கப்பல் கம்பனிகளை ஒருங்கிணைத்தல் மற்றும் மத்தியப்படுத்தலின் அடிப்படையில் ஆசிய ஐரோப்பிய வியாபார வழிகளில் கொள்கலன்களின் 95 சதவீதமானவை கூட்டுச் சேர்ந்த சில கப்பல் கம்பனிகளால் கட்டுப்படுத்தப்படுகின்றது.இது துறைமுக சேவைகளை பெற்றுக்கொள்வதில் அதிக போட்டி ஏற்படுவதற்கு காரணமாக இருந்தது.இவ்வாறான நிலைமையின் கீழ் அதிகார சபை தமது சந்தைப் பங்கினை பாதுகாத்துக் கொள்வதற்கும் அதிகரித்துக் கொள்வதற்குமாக பொருத்தமான போட்டி வழிகளை உள்ளடக்கிய சந்தைப்படுத்தல் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை அவ்வாறான திட்டம் மற்றும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கொழும்பு துறைமுகத்தில் தற்பொழுது கொள்கலன்களை ஏற்றி இறக்குவதற்காக செயற்படுத்தப்படும் இறங்குதுறைகளுக்கு மத்தியில் 14.25 மீட்டர்களை விட அதிக ஆழமான ( Draft ) கப்பல்கள் வருகைதரக்கூடிய ஒரேயொரு இறங்குதுறையாக கொழும்பு சர்வதேச கொள்கலன் இறங்குதுறை (CICT) காணப்பட்டதுடன் அதன் கொள்ளளவு ஒரு ஆண்டிற்கு 2.4 மில்லியன் இருபது சம அலகுகளாக கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.2017 ஆம் ஆண்டின் போது அந்த இறங்கு துறைக்கு 14.25 மீட்டர்களுக்கு மேற்பட்ட ஆழமான 294 கப்பல்கள் வருகை தந்திருந்ததுடன் 2

மில்லியனுக்கு மேற்பட்ட எண்ணிக்கையான கொள்கலன்கள் செயற்படுத்தப்பட்டிருந்தன.அதற்கிணங்க 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கொள்கலன்களை ஏற்றி இறக்கல் 16 சதவீதத்தால் முன்னேற்றமடைந்ததுடன் அந்த முன்னேற்றம் 2018 ஆம் ஆண்டின் போதும் அதே அடிப்படையில் காணப்படுமாக இருந்தால் அதன் உச்ச கொள்ளளவை அடைவதனை தவிர்க்க முடியாததாக இருந்திருக்கும் என்பது அவதானிக்கப்பட்டது.எனினும் இலங்கை துறைமுக அதிகார சபைக்கு சொந்தமான இறங்கு துறைகளின் உச்ச ஆழமும் ( Draft) கென்சி பாரம்தூக்கிகளின் அகலமும் உயரமும் ( Air Draft ) முறையே 14.25 மீற்றர் மற்றும் 18 மீட்டர்களாக இருந்ததனால் 14.25 மீட்டர்களுக்கு மேற்பட்ட ஆழமான( Draft) கப்பல்கள் வருகை தரக்கூடிய இறங்குதுறை மற்றும் கையாளல் உபகரணங்கள் தேவையாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.எனினும் துறைமுகத்தின் இறங்குதுறைக்கு வருகைதரக் கூடிய Nemo,CLG,Fax மற்றும் Wax என்ற கம்பனிகளுக்குரிய கப்பல்கள் மீளாய்வாண்டின் போது தெற்காசிய நுழைவு இறங்குதுறைக்கு (SAGT) அனுப்பப்பட்டிருந்ததுடன் அதனைத் தடுப்பதற்காக போட்டியாளர் சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்கள் அதிகார சபையால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கொழும்பு துறைமுகத்தை விரிவுபடுத்தும் செயற்திட்டம் தொடர்பாக இலங்கை அரசாங்கத்திற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட கடன் உடன்படிக்கையின் தேவைப்பாடு மற்றும் 2011 ஆகஸ்ட் மாதத்தில் வரையறுக்கப்பட்ட யூஆர்எஸ் ஸ்கொட் வில்சன் கம்பனியினால் தயாரிக்கப்பட்ட அபிவிருத்தி மாற்று வழி தந்திரோபாய மீளாய்வு என்பனவற்றின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டின் போது கிழக்கு கொள்கலன் இறங்கு துறையின் முதலாவது கட்ட செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.1,200,000 அலகு கொள்கலன்களின் வருடாந்த கொள்ளளவுடனான ரூபா 11,168 மில்லியன் தொகையான 18 மீட்டர் ஆழமான மற்றும் 600 மிட்டர் நீளமான கிழக்கு கொள்கலன் இறஙகுதுறையின் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன எனக் குறிப்பிட்டு 2016 ஏப்ரல் மாதத்தில் இறுதி பூர்த்தியாக்கல் சான்றிதழ் (Final Completion Certificate) வழங்கப்பட்டிருந்தும் கப்பற் சரக்குகளைக் கையாள்வதற்கு தேவையான கிரேன்ட் பாரம்தூக்கிகளை உள்ளடக்கிய உபகரணங்களை வழங்கும் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு 2018 செப்தெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) அதிகார சபைக்குரிய ஜய கொள்கலன் இறங்குதுறையும் சமகி கொள்கலன் இறங்குதுறையும் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- மேற்கூறப்பட்ட இறங்குதுறைகளில் உபகரணங்களை தாபிக்கும் திட்டம் 2017 ஆம் ஆண்டின் போது தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அந்த திட்டத்தின் பிரகாரம் காணப்படுகின்ற உபகரணங்கள் 19 வருடங்கள் முதல் 31 வருடங்கள் வரை பழையதாக இருந்தமையின் காரணமாக அவற்றின் வினைத்திறன் குறைவடைந்திருந்தது.அதன் பிரகாரம் 2017 ஆம் ஆண்டின் போது 8 கிரேன்ட் பாரம்தூக்கிகளை அகற்றுவதற்கும் 6 தள பாரம்தூக்கிகளை அகற்றுவதற்கும் புதிதாக பாரியளவான 03 பாரம்தூக்கிகளை (Post Panamo வகையின்) கொள்வனவு செய்வதற்கும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு சிபாரிசு செய்திருந்தது. அதன் பிரகாரம் ஜய கொள்கலன் இறங்கு துறையின் இயலளவை அபிவிருத்தி செய்வதற்காக கப்பலுடன் உள்ள சிவில் செயற்பாடுகளுக்காக அமெரிக்க டொலர் 25 மில்லியனை விஞ்சிய 03 பாரம்தூக்கிகளும், ஐ.அ.டொலர் 30 மில்லியன் பெறுமதியான கொள்கலன் கையாளல் உபகரணங்களை கொள்வனவு செய்து நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு பெறுகைகள் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு என்பனவற்றை நியமிப்பதற்குமான அமைச்சரவை அங்கீகாரம் 2017 யூலை 18 ஆம் திகதி கிடைத்திருந்தது. அந்த அங்கீகாரத்தின் மூலம் இந்தப்பணிகளை துரிதப்படுத்தல் அத்தியாவசியமானதாகக்

காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2018 மே மாத இறுதி வரையிலும் முன்மொழிவுகளைக் கோருதல் மாத்திரம் இடம்பெற்றிருந்தது.

- ஜய கொள்கலன் இறங்கு துறையின் வினைத்திறன் மற்றும் செயற்றிறன் என்பனவற்றை மேலோங்கச் செய்வதற்காக 21 வருடங்களை விட பழைய 34 டெர்மினால் டெக்டருக்குப் பதிலாக புதிய 14 டெர்மினல் டெக்டர்கள் 2017 ஆம் ஆண்டின் மூலதன நிதிஏற்பாட்டின் மூலம் கொள்வனவு செய்வதற்காக 2017 யூலை 13 ஆந் திகதிய பீஏஎம்/148/2017 ஆம் இலக்க பணிப்பாளர் சபை தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.காணப்படுகின்ற உபகரணங்கள் பழையதாக இருந்தமையின் காரணமாக புதிய உபகரணங்களை கொள்வனவு செய்தல் துரிதமாக இடம்பெற வேண்டிய போதிலும் 2018 மே மாதம் வரை பொருத்தமான வழங்குநரைத் தெரிவு செய்து கொள்வனவை மேற்கொள்வதற்கு தவறியிருந்தது.

  மேற்கூறப்பட்ட பிரகாரம் நீண்ட காலமாக செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற தொழில்நுட்ப ரீதியில் காலாவதியாகியிருந்த உபகரணங்களின் வினைத்திறன் வீழ்ச்சியடைந்தமை, அடிக்கடி பழுதுபார்த்தல் மற்றும் தற்போது துறைமுகத்திற்கு வருகை தருகின்ற கப்பல்களின் இயலளவிற்கு ஈடுகொடுக்கின்ற உபகரணங்கள் காணப்படாமை போன்ற காரணங்களின் அடிப்படையில் கொள்கலன் செயற்பாடுகளில் தடங்கல்கள் ஏற்பட்டிருந்தன.அதன் பிரகாரம் இந்த இறங்கு துறைகளின் செயற்திறன் குறைவடைந்து செல்லும் ஆபத்தினை புறந்தள்ள முடியாதிருந்ததுடன் செயற்பாடுகளின் வினைத்திறன் குறைவடைந்தமை மற்றும் நன்மதிப்பிற்கு பாதிப்பு ஏற்பட்டிருந்தமை என்பன கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.மேலும் 600 மீட்டர் நீளமும் 14.25 மீட்டர் ஆழமான ஜய கொள்கலன் இறங்குதுறையில் 330 மீட்டர் நீளமான இரண்டு கப்பல்களை ஒரே தடவையில் கையாளல் நடவடிக்கைகளுக்காக நிறுத்தி வைப்பதற்கு முடியாதமையின் காரணமாக அதிகாரசபைக்கு வியாபாரச் சந்தர்ப்பங்கள் இழக்கப்பட்டிருந்தது.

**4.1.2.3 கப்பல்களின் காலப்பகுப்பாய்வு**

(அ) 2017 ஆம் ஆண்டில் சகல துறைமுகங்களுக்கும் வருகை தந்த கப்பல்களின் எண்ணிக்கை பின்வருமாறு இருந்தது.

| | 2017 | 2016 | 2015 | 2014 | 2013 |
|---|---|---|---|---|---|
| கொழும்பு | 4,329 | 4,405 | 4,197 | 3,742 | 3,667 |
| திருகோணமலை | 233 | 216 | 164 | 127 | 134 |
| காலி | 87 | 96 | 72 | 60 | 36 |
| காங்கேசன்துறை | 63 | 25 | 32 | 34 | 48 |
| ஹம்பாந்தோட்டை | 230 | 281 | 295 | 335 | 139 |
| | 4,942 | 5,023 | 4,760 | 4,298 | 4,024 |

மேற்கூறப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2017 ஆம் ஆண்டில் கொழும்பு காலி மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகங்களுக்கு வருகை தந்த கப்பல்களின் குறைவொன்றைக் காணக்கூடியதாக இருந்தது.

(ஆ) கொள்கலன்களை கொண்ட கப்பல்களின் வருகை தொடர்பாக 2013 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரையுமான தகவல்கள் பின்வருமாறாகும்.

| | 2017 | 2016 | 2015 | 2014 | 2013 |
|---|---|---|---|---|---|
| ஆண்டு | கப்பல்களின் எண்ணிக்கை க | கப்பல்களின் எண்ணிக்கை க | கப்பல்களின் எண்ணிக்கை க | கப்பல்களின் எண்ணிக்கை க | கப்பல்களின் எண்ணிக்கை க |
| துறைமுக அதிகாரசபை | 1,352 | 1,460 | 1,616 | 1,926 | 2,084 |
| எஸ்.ஏ.ஜீ.ரீ | 1,073 | 1,087 | 1,026 | 855 | 1,011 |
| சீ.ஐ.சீ.ரீ | 1,258 | 1,257 | 1,001 | 458 | 47 |
| | 3,683 | 3,804 | 3,643 | 3,239 | 3,142 |

மேற்கூறிய தகவல்களின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2016 ஆம் ஆண்டில் கொழும்பு துறைமுகத்திற்கு கொள்கலன்களுடனான கப்பல்களின் வருகை 04 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் 2016 ஆம் ஆண்டை 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது குறைவடைந்திருந்தது. எனினும் அதிகாரசபைக்கு வருகை தருகின்ற கொள்கலன்களைக் கொண்ட கப்பல்களின் எண்ணிக்கை மீளாய்வாண்டின் போது 10 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.எனினும் C.I.C.T இற்கு வருகை தருகின்ற கப்பலகளின் எண்ணிக்கையும் கவனத்தில் கொள்ளக் கூடிய அதிகரிப்பு ஏற்படாதிருந்ததுடன் கொழும்பு துறைமுகத்திற்கு கொள்கலன் கப்பல்களின் வருகையில் குறைவொன்று அவதானிக்கப்பட்டது.கப்பல் கம்பனிகளை ஒன்றிணைத்தமையால் ஆழம் கூடிய கப்பல்கள் மூலம் கொள்கலன் கொண்டு வரப்படுகின்றமை இதற்கான காரணமாக இருந்தது.

**4.1.2.4 கொள்கலன் செயற்பாடுகளின் காலப்பகுப்பாய்வு**

(அ) 2013 ஆம் அண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை கொழும்பு துறைமுகத்தில் சகல இறங்குதுறைகளிலும் உள்நாட்டு மற்றும் மீள்ஏற்றுமதியான கொள்கலன் செயற்பாடுகள் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன.

| **S.L.P.A** | **2016** | | **2016** | | **2015** | | **2014** | | **2013** | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **அலகு** | % | **அலகு** | % | **அலகு** | % | **அலகு** | % | **அலகு** | % |
| உள்நாடு | 388,282 | | 483,109 | | 541,152 | | 643,317 | | 676,937 | |
| மீள்ஏற்றுமதி | 1,609,114 | | 1,607,792 | | 1,691,267 | | 1,882,057 | | 1,779,882 | |
| ஏனையவை | 13,306 | | 9,216 | | 19,904 | | 33,965 | | 45,044 | |
| **மொத்தம்** | **2,010,702** | **32** | **2,100,117** | **37** | **2,252,323** | **43** | **2,559,339** | **52** | **2,501,863** | **58** |
| | | | | | | | | | | |
| **S.A.G.T** | | | | | | | | | | |
| உள்நாடு | 375,944 | | 317,707 | | 327,750 | | 337,354 | | 341,510 | |
| மீள்ஏற்றுமதி | 1,406,265 | | 1,294,631 | | 1,028,538 | | 1,298,434 | | 1,385,552 | |
| ஏனையவை | 27,626 | | 19,869 | | 14,957 | | 26,152 | | 19,740 | |
| **மொத்தம்** | **1,809,835** | **29** | **1,632,207** | **28** | **1,371,245** | **27** | **1,661,940** | **34** | **1,746,802** | **41** |
| | | | | | | | | | | |
| **C.I.C.T** | | | | | | | | | | |
| உள்நாடு | 619,325 | | 499,034 | | 349,069 | | 146,314 | | 13,530 | |
| மீள்ஏற்றுமதி | 1,726,203 | | 1,452,838 | | 1,168,516 | | 519,219 | | 42,683 | |
| ஏனையவை | 43,003 | | 50,727 | | 44,314 | | 21,103 | | 1,328 | |
| **மொத்தம்** | **2,388,539** | **39** | **2,002,599** | **35** | **1,561,899** | **30** | **686,636** | **14** | **57,541** | **1** |
| **முழு மொத்தம்** | **6,209,068** | **100** | **5,734,923** | **100** | **5,185,467** | **100** | **4,907,915** | **100** | **4,306,206** | **100** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(I) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் கொழும்பு துறைமுகத்தில் கொள்கலன் செயற்பாடுகளில் முன்னேற்றத்தைப் போல மீள்கப்பலேற்றல் மற்றும் மீள் கையாளலிலும் முன்னேற்றம் காணப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் இறுதியில் துறைமுகங்கள் அதிகாரசபையின் கொள்கலன் செயற்பாடுகளின் எண்ணிக்கையானது முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது 2,100,117 இருந்து 2,010,702 வரை அதாவது 4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. எவ்வாறாயினும் கொழும்பு சர்வதேச கொள்கலன் இறங்குதுறை கம்பனி (C.I.C.T) விரைவாக கொள்கலன்களை கையாள்வதன் மூலம் தனது சந்தைப்பங்கினை முன்னேற்றமடையச் செய்திருந்தது.

(II) மீளாய்வாண்டின் போது ஒட்டுமொத்த கொள்கலன் கையாளலின் மூலம் அதிகாரசபை 32 சதவீதத்தையும், தெற்காசிய நுழைவாயில் இறங்குதுறை (S.A.G.T) 29 சதவீதத்தையும், கொழும்பு சர்வதேச கொள்கலன் இறங்குதுறைக் கம்பனி (C.I.C.T) 39 சதவீதத்தையும் ஆக சந்தைப் பங்களிப்பை உரிமையாக்கிக் கொண்டிருந்தன.கொழும்பு சர்வதேச இறங்குதுறை கம்பனியானது (C.I.C.T) 03 ஆண்டு காலம் முதல் உயர்தரப் பங்களிப்பை உரித்தாக்கிக் கொண்டிருந்ததுடன் தற்போது துறைமுகத்தில் அமைக்கப்பட்டுள்ள 14.25 மீற்றர் இற்கு மேற்பட்ட கப்பல் வரக்கூடிய ஒரேயொரு இறங்குதுறையாக அந்த இறங்குதுறை இருந்தமை அதற்கான காரணமாக இருந்தது.

(III) அதிகாரசபையின் கொள்கலன் செயற்பாட்டு நடவடிக்கை சம்பந்தமான இறங்குதுறை பயன்பாட்டு விகிதத்தை ( Terminal Occuptancy Ratio) கவனத்தில் எடுத்துக் கொள்கையில் 2015 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆண்டு வரை அது முறையே 68 சதவீதம், 63 சதவீதம் மற்றும் 60 சதவீதமாக இருந்தன. அதற்கிணங்க அதிகாரசபையின் இறங்குதுறைப் பயன்பாட்டு விகிதமானது 2015 ஆம் ஆண்டு முதல் படிப்படியாக குறைவடைகின்றமை அவதானிக்கப்பட்டது.

**(ஆ) கொழும்பு துறைமுகத்தில் அதிகாரசபைக்கு சொந்தமான இறங்குதுறைகளின் மூலம் கையாளப்பட்ட கொள்கலன்களின் காலப்பகுப்பாய்வு.**

| | 2017 அலகுகள் | 2016 அலகுகள் | 2015 அலகுகள் | 2014 அலகுகள் | 2013 அலகுகள |
|---|---|---|---|---|---|
| ஜய கொள்கலன் இறங்குதுறை | | | | | |
| JCT-1 | 338,434 | 364,749 | 405,555 | 469,831 | 414,596 |
| JCT-2 | 361,561 | 383,759 | 369,317 | 415,781 | 417,388 |
| JCT-3 | 537,963 | 617,553 | 568,259 | 585,145 | 607,669 |
| JCT-4 | 613,447 | 579,645 | 580,956 | 616,228 | 623,030 |
| JCT-CBN | - | - | - | - | - |
| JCT-CBS | 97,332 | 22,112 | 185,204 | 246,363 | 237,662 |
| JCT-NFB | - | 33,994 | 28,716 | 60,251 | 45,218 |
| | 1,948,737 | 2,001,812 | 2,138,007 | 2,393,599 | 2,345,563 |
| சமகி கொள்கலன் இறங்குதுறை | | | | | |
| UCT -1 | 2,986 | 5,449 | 12,817 | 27,617 | 64,687 |
| UCT -2 | 58,903 | 92,852 | 101,494 | 138,119 | 91,604 |
| | 61,889 | 98,301 | 114,311 | 165,736 | 156,291 |
| Conventional Quays | 76 | 04 | 05 | 04 | 09 |
| | 2,010,702 | 2,100,117 | 2,252,323 | 2,559,339 | 2,501,863 |

மேற்கூறப்பட்ட தகவல்களின் பிரகாரம் ஜய கொள்கலன் இறங்குதுறையினதும் சமகி கொள்கலன் இறங்கு துறையினதும் கொள்கலன் கையாளல்கள் 2015 ஆண்டு முதல் தொடர்ச்சியாக குறைவடைந்து கொண்டு செல்கின்றமை அவதானிக்கப்பட்டது.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 ஆம் ஆண்டின் போது அம்பாந்தோட்டை துறைமுகத்தின் முதலாவது கட்ட நிர்மாணம் பூர்த்தி செய்யப்படடிருந்ததுடன் II கட்டம் நிர்மாணிக்கப்பட்டிருந்த போது துறைமுகத்தில் கையாளல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. 2018 யூலை 31 ஆந் திகதி வரையில் துறைமுகத்தின் I ஆம் II ஆம் கட்ட நிர்மாணங்களுக்காக உள்நாட்டுக்கடன், வெளிநாட்டுக்கடன், துறைமுக அதிகாரசபைபயின் நேரடி பங்களிப்பு மற்றும் நடைமுறைக் கிரயம் என்பவற்றை உள்ளடக்கிய ஒட்டுமொத்த செலவினம் கீழே குறிப்பிடப்பட்ட பிரகாரம் ஐக்கிய அமெரிக்க டொலர் 1,541 மில்லியனாக இருந்தது.

| | ஐ.அ. டொலர் மில்லியன் |
|---|---|
| | .................. |
| வெளிநாட்டுக் கடன், உள்நாட்டுக் கடன் மற்றும் துறைமுக அதிகார சபையின் நேரடி பங்களிப்பு | 1,302 |
| உபகரணங்களுக்காக மேலும் செலுத்தவுள்ள தொகை | 60 |
| காணி கைப்பற்றல், உள்நாட்டு வரி செலுத்துதல், செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு செலவினங்கள் போன்ற ஏனைய செலவினம். | 179 |
| | …….. |
| | 1,541 |
| | …… |

2009 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலத்தில் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் கையாளல் நடவடிக்கைகள் மாகம்புற துறைமுக முகாமைத்துவக் கம்பனியால், மேற்கொள்ளப்படடிருந்ததுடன் அதிகாரசபையின் நிதி அறிக்கையின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை துறைமுகத்தின் செயற்பாட்டு நட்டம் ரூபா 21,904 மில்லியனாகக் காணப்பட்டது.அரசாங்கத்தின் கொள்கை ரீதியான தீர்மானத்தின் பிரகாரம் 2016 திசெம்பர் 16 ஆந் திகதிய அமப/2592/752/033 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் துறைமுகத்துக்குரிய சொத்துக்கள் 2017 ஆம் ஆண்டின் போது அரசாங்க தனியார் கூட்டு முயற்சியுடன் இரண்டு தனியார் கம்பனிகளுக்கு ஐ.அ.டொலர் 1,400 மில்லியன் தொகைக்கு 99 வருட காலத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் 2017 ஆகஸ்ட் 04 ஆந் திகதிய அமப/17/1580/737/018/ ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அந்த முதலீடுகள் கீழே குறிப்பிடப்பட்ட பிரகாரம் உள்ளடங்கியிருந்தது.




| இரண்டு கம்பனிகளினதும் மொத்த பங்குரிமை | ஐ.அ.டொலர் (மில்லியன்) | பங்குரிமை (%) |
|---|---|---|
| சைனா மேர்ச்சன்ட் போர்ட் கம்பனி | 973.658 | 69.55 |
| இலங்கை துறைமுக அதிகாரசபை | 426,.342 | 30.45 |
| | 1400.000 | 100.000 |

மேற்கூறப்பட்ட கொடுக்கல் வாங்கலின் கீழ் வரையறுக்கப்பட்ட சைனா மேர்ச்சன்ட் ஹோல்டின் கம்பனியால் தமது பங்குகளைக் கொள்வனவு செய்வதற்காக ஐ.அ. டொலர் 973.658 மில்லியன் தொகை அதிகாரசபைக்கு 2018 யூன் 30 இல் உள்ளவாறு மூன்று தவணைகளில் செலுத்தப்பட்டிருந்ததுடன் அதிகாரசபை அத்தொகையை பொதுத் திறைசேரிக்கு வழங்கியிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(I) ஏற்றுக்கொள்ளப்பட்ட மதிப்பீட்டாளர் ஒருவர் மூலம் துறைமுகத்தின் ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அதன் பெறுமதி அடிப்படையில் முதலீட்டுப் பெறுமதி தீர்மானிக்கப்படாதிருந்ததுடன் ஐ.அ.டொலர் 1,400 மில்லியன் தொகையான முதலீட்டுப் பெறுமதி கணிப்பிடல் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. கையளிக்கப்பட்ட 1103 ஹெக்டேயர் காணிக்காக 99 வருட காலத்திற்கு அறவிட வேண்டிய வரிப்பெறுமதி முதலீட்டுப் பெறுமதி

தீர்மானிக்கும் போது கவனத்தில் கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(II) துறைமுக கையாளல் நடவடிக்கைகள் 2017 திசெம்பர் 09 ஆந் திகதி முதல் புதிய கம்பனிக்கு கையளிக்கப்பட்டுள்ளது.எனினும் மாகம்புற துறைமுக முகாமைத்துவ கம்பனியின் ஊழியர்களில் அதிகமானோருக்கு இழப்பீடு செலுத்தி சேவையிலிருந்து அகற்றப்பட்டிருந்த போதிலும் இந்த அறிக்கை திகதி வரையிலும், கம்பனியின் நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்கு திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் ஏழு ஊழியர்கள் தொடர்ந்தும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(ஆ) 2011 ஆம் ஆண்டின் போது இலங்கை சுங்கத்திற்கு அறிவிக்காமல் இறக்குமதி செய்யப்பட்டிருந்த 27 பாரம்தூக்கிகள் தொடர்பாக சுங்கத்தால் விதிக்கப்பட்ட ரூபா 1,580.00 மில்லியன் தொகையான சுங்கத் தண்டப்பணத்தை இலகுபடுத்துவதற்காக சுங்க கட்டளைச் சட்டத்தின் 165 ஆம் பிரிவின் பிரகாரம் சுங்க புலனாய்வின் தீர்வு கிடைத்து ஒரு மாத காலத்தில் நிதி அமைச்சருக்கு முறைப்பாடொன்று செய்ய முடியுமாக இருந்த போதிலும், அதிகாரசபையினால் அமைச்சருக்கு அவ்வாறானதொரு முறைப்பாடு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.எனினும் இது தொடர்பாக கணக்குகளில் ரூபா 1,577.70 மில்லியன் தொகையான நிகழத்தக்க பொறுப்பு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கொன்று விசாரணையில் காணப்பட்டது.

(இ) அதிகாரசபைக்குச் சொந்தமான 27 காணிக் கூறுகள தொடர்பாக தனியார் தரப்பினருடன் கைச்சாத்திடப்பட்ட குத்தகை உடன்படிக்கைளில் ( Leasing Agreement) காலம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த உடன்படிக்கையின் காலத்தை மீளப்புதுப்பிப்பதற்கு (renew) தேவையான நடவடிக்கைகள் அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.இதன் காரணமாக நாளதுவரையாக்கப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை வருமானம் அறவிடப்படாமையினால் அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டிய வருமானம் குறைவாகக் கிடைத்தமை மற்றும் செல்லுபடியான உடன்படிக்கை காணப்படாமையின் காரணமாக சட்டரீதியான பிரச்சினைகள் ஏற்படும் என்ற அபாயத்தை புறந்தள்ள முடியாதிருந்தது.

(ஈ) 2017 திசெம்பர் இல் உள்ளவாறு அதிகாரசபையினால் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனையின் பிரகாரம் 2017 செப்தெம்பர் 21 ஆந் திகதி விநியோகிக்கப்பட்ட உள்ளகச் சுற்றறிக்கை இலக்கம் 26/2017 இன் பிரகாரம் 5 வருடங்களில் வெளியேற்ற வேண்டும். எனினும், 06 வருடங்களை விஞ்சிய பின்னரும் உத்தியோகபூர்வ இல்லங்களிலிருந்து அகற்றப்படாத மற்றும் மீண்டும் கோரப்படாத நிலையில் உத்தியோகத்தர்கள் உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியிருந்து வருகின்ற 359 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

(உ) ஒலுவில் துறைமுகத்தை நிர்மாணிக்கும் போது இலங்கை துறைமுக அதிகாரசபையினால் கைப்பற்றப்பட்ட காணிகளை பணன்பாட்டிற்கு எடுக்காமல் எஞ்சியிருந்த 13 ஏக்கர் அளவிலான காணியை பகிரங்க ஏலம் கோரி விற்பனை செய்வதற்கு 2016 சனவரி 26 ஆந் திகதிய அமப/16/0087/737/007 ஆம் இலக்கத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைக் குறிப்பிற்காக அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும் 2017 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் உரிய விற்பனை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.எனினும் இழப்பீட்டுப் பணத்திற்குப் பதிலாக காணியைப் பெற்றுக்கொள்வதற்கு இழப்பீட்டாளர்களால் விருப்பம் தெரிவித்திருந்ததாக தலைவர் கணக்காய்விற்கு அறிவித்திருந்தார்.

(ஊ) 2016 சனவரி 05 ஆந் திகதிய பீஏ/எச்டீ/32 ஆம் இலக்க பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் துறைமுக அதிகாரசபையினால் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகளில் காணப்படுகின்ற குறைபாடுகள் காரணமாக எதிர்காலத்தில்

துறைமுக அதிகாரசபைக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படுகின்ற நட்டம் மற்றும் கஷ்டங்களை மாற்றியமைக்கும் எதிர்பார்ப்பில் சட்டப்பிரிவிற்கு ஒப்பந்த முகாமைத்துவ அலகொன்றைத் (Contract Management Unit) தாபிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.எனினும் 2018 மே மாதம் வரையிலும் உரிய ஒப்பந்த முகாமைத்துவ அலகைத் தாபிப்பதற்கு அதிகாரசபையினால் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) அதிகாரசபையின் மஹபொல சமுத்திரங்கள்சார கல்லூரியின் கீழ் பாதுகாப்பு பயிற்சிப் பிரிவை தாபிப்பதற்கு 2017 மே 17 ஆந் திகதிய பீஏ/எச்டீ/26 ஆம் இலக்க பணிப்பாளர் சபை தீர்மானத்தின் கீழ் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது உரிய தீர்மானங்களை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) வரைபட இலக்கம் சீஓஎல்/சீஎல்/2012/1047 என்ற கொழும்பு டீ.ஆர். விஜேவர்தன மாவத்தையில் அமைந்துள்ள 1.1372 ஹெக்டேயர் பரப்பளவான காணி மற்றும் வரைபட இலக்கம் எஸ்/எம்ஐஎஸ்/344 என்ற கொழும்பு 01 பிரதான வீதியிலும், ஒல்கொட் மாவத்தை எல்லையில் உள்ள 02 ஏக்கர் காணி என்பன முறையே தாமரைக் கோபுரத்தை நிர்மாணிப்பதற்காகவும், சுங்கத்திணைக்களத்திற்கு கட்டடமொன்றை நிர்மாணிப்பதற்காகவும் வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த சொத்துக்கள் தொடர்ந்தும் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் கையளித்தல் தொடர்பாக இருதரப்பினர்களுக்கும் இடையில் இறுதி இணக்கப்பாட்டிற்கு வந்திருக்கவில்லை.

(ஐ) ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் செயற்பாடுகள் இரண்டு கம்பனிகளால் கைப்பற்றப்பட்டதன் காரணமாக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் துணைக்கம்பனியான மாகம்புற துறைமுக முகாமைத்துவ சேவைகள் (தனியார்) கம்பனியின் கையாளல் நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டிருந்தது.எனினும் கப்பல் எண்ணெய் இருப்பு (Bunkering Oil) கொள்வனவு செய்வதற்காக பெறப்பட்ட அ.அடாலர் 24 மில்லியன் கடன் தொகை அந்தக் கம்பனியால் தீர்த்து வைக்கப்படாதிருந்ததுடன், இவவறிக்கை திகதி வரையிலும் கடனை தீர்ப்பதற்காக கம்பனிக்குச் சொந்தமாக போதியளவான பணம் காணப்படவில்லை.எனினும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் செலுத்த வேண்டிய கடன் மீதி ரூபா 3,151 மில்லியன் ஆக இருந்ததுடன் இந்தக் கடனுக்காக அதிகாரசபை பிணையாளராகவிருந்தது.

(ஒ) இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்காக சூரியவெவ சர்வதேச கிரிக்கெட் விளையாட்டரங்கை வடிவமைத்தல் மற்றும் நிர்மாண நடவடிக்கைகளை கையாளல் அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.இந்த நிர்மாணங்கள் ஒப்பந்தக்காரர்களுக்கும் அதிகாரசபைக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை நிர்மாணிக்கும் முரண் கட்டளைகளின் (Variation Order) கீழ் நிர்மாணிக்கப்பட்ட மேற்கூறப்பட்ட நிர்மாணங்களுக்காக அதிகாரசபையின் புத்தகங்களின் பிரகாரம் துறைமுக அதிகாரசபையினால் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 2,881 மில்லியன் தொகையான வட்டியுடன் கூட்டுமொத்தமாக ரூபா 5,838 மில்லியன் தொகை 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்தது.சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் ஒப்பந்தத்திற்கான நிர்மாணச் செலவினம் ரூபா 2,957 மில்லியன் மற்றும் குறித்த திகதியில் ஒப்பந்தக்காரருக்கு பணம் செலுத்தாமையினால் வட்டியாக ரூபா 993.8 மில்லியன் என கூட்டுமொத்தமாக ரூபா 3,950.8 மில்லியன் செலுத்துவதற்கு 2017 திசெம்பர் 29 ஆந் திகதி இருதரப்பினருக்குமிடையே உடன்பாடு காணப்பட்டிருந்தது.இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்காக விளையாட்டரங்கு நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நிறுவனத்துடன் முறையான உடன்படிக்கையில் கைச்சாத்திடப்படாமையின் காரணமாக மேற்கூறிய நிர்மாணக்கிரயம் மற்றம் வட்டி என்பனவற்றை இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் செலுத்துவதற்கு இணங்காமையினால் அந்தப் பணம் பொதுத்திறைசேரியினால் செலுத்துவதற்கு உடன்பட்டிருந்தது.

(ஓ) 1979 இன் 51 ஆம் இலக்க துறைமுகங்கள் அதிகாரசபைச்சட்டத்தின் 37(1) ஆம் பிரிவின் கீழ் 2017 ஆம் ஆண்டிற்குரியதாகத் தயாரிக்கப்பட்ட அறவிடல் பதிவேட்டில் நிதி ஏற்பாட்டுப் பிரிவு முறையாக திருத்தப்படாமல் காணப்பட்ட அறிவிடல் பதிவேட்டிற்கு முரணாக இலங்கை துறைமுக அதிகாரசபையினால் மீள்ஏற்றுமதி மற்றும் ஏனைய கொள்கலன் கையாளல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற கப்பல் முகவர் நிறவனங்களுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக ரூபா 196.266 மில்லியன் தொகையான நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ஔ) அதிகாரசபைக்குச் சொந்தமான கூறு இலக்கம் 8, இலக்கம் 484 ஆம் இலக்க தோட்டம் மற்றும் 486 ஆம் இலக்க தோட்டம் என்பனவற்றில் அமைந்துள்ள வீடமைப்புத் தொகுதிகள் நகர அபிவிருத்தி அதிகாரசபை உடைத்து அகற்றி அந்தக் காணியைக் கைப்பற்றியிருந்ததுடன் அதற்கு பதிலாக அவ்வதிகாரசபையினால் 117 வீடுகளை உள்ளடக்கிய மாடிவீடொன்று அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அதிகாரசபைக்கு சொந்தமான காணியை நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளித்தல் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை அதிகாரசபைக்குக் கையளித்தல் என்பன சட்டரீதியாக இடம் பெற்றிருக்கவில்லை.

(க) ரூபா 667.31 மில்லியன் கூட்டுத்தொகையான பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய மீதிகளுக்காக மீதி உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

அதிகாரசபைக்கு சொந்தமான துணைக் கம்பனி ஒன்றினால் தனியார் நிறுவனமொன்றுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கைகள் பின்னர் முடிவுறுத்தப்பட்டதன் காரணமாக அந்த தனியார் நிறுவனத்தால் துணைக்கம்பனிக்கு எதிராக தொடரப்பட்டிருந்த வழக்கிற்குரியதாக செய்யப்பட வேண்டி ஏற்படக் கூடிய இழப்பீடுத் தொகைக்காக அதிகார சபையினால் நிதிக்கூற்றுக்களில் ரூபா 75.4 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது.

### 4.4 விளைவற்ற மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) அதிகாரசபைக்குச் சொந்தமான கொழும்பு துறைமுகத்தில் அமைந்துள்ள 6,400 மெட்ரிக் தொன் இயலளவை உடைய பழைய 10 எண்ணெய்த் தாங்கிகள் தனியார் கம்பனிக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன் உரிய குத்தகைக் காலம் 2012 / 2013 ஆம் ஆண்டுகளின் போது முடிவடைந்திருந்தது.அதிலிருந்து அவ்வப்போது நாளாந்த அடிப்படையில் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் இந்த எண்ணெய்த் தாங்கி குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்தொன்றாக காணப்பட்டது.

(ஆ) 2014 நவம்பர் மாதத்தின் போது ஆரம்பிக்கப்பட்ட கொழும்பு துறைமுகத்தின் புதிய சமையலறைக்காக ரூபா 6.98 மில்லியன் பெறுமதியான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் சமையலறையின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு பல வருடங்கள் கடந்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த உபகரணங்கள் உணவுப் பரிமாற்ற செயற்பாடுகளில் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

(இ) இலங்கை துறைமுக அதிகாரசபைக்குரிய கொழும்பு துறைமுகத்தின் நிலையான சொத்துப் பதிவேட்டில் காணப்பட்ட காணிகளில் ரூபா 3,399.11 மில்லியன் பெறுமதியுடைய 6.79 ஹெக்டேயர் காணி 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் எந்தவித பயன்பாட்டிற்கும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.5 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்களுக்கு மேலதிகமாக மனித வலுவை வழங்கும் கம்பனியான வரையறுக்கப்பட்ட துறைமுக முகாமைத்துவ மற்றும் ஆலோசனை கம்பனி ஊடாக ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட 121 ஊழியர்கள் மற்றும் 27 பதவிகளுக்காக அங்கீகரிக்கபப்பட்ட ஊழியர் எண்ணிக்கையை விஞ்சி 420 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். மேலும் அதிகாரசபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக ( Operation) நேரடியாகத் தொடர்பினைக் காண்பிக்கின்ற பிரிவில் 308 ஊழியர்களின் பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன் அந்த பற்றாக்குறையை நிரப்பாமல் அதிகாரசபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக நேரடியான தொடர்பினைக் கொண்டிராத 12 பிரிவுகளில் 398 ஊழியர்களின் மிகையொன்று காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.அவ்வாறே அந்த மிகை காணப்பட்ட பிரிவிற்காக 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 533 மில்லியன் மேலதிக நேரப் படியாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1 ஆம் பிரிவின் பிரகாரம் ஆட்சேர்ப்பு நடைமுறையொன்றைத் தயாரித்து 2011 யூலை 19 ஆந் திகதி அங்கீகாரத்துக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2018 ஆகஸ்ட் 10 ஆம் திகதி வரையும் அதற்கான அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை.அவ்வாறே சுற்றறிக்கையின் பிரகாரம் ஆட்சேர்ப்பு நடைமுறையில் பதவிகளுக்கு ஆட்சேர்க்கும் முறை காண்பிக்கபட்டிருக்கவில்லை.

(இ) 2017 ஆம் ஆண்டின் போது முறையான திட்டமின்றி 9 பதவிகளுக்காக 110 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டதுடன் அமைச்சருக்கு பொதுமக்கள் தினத்தின் போது கிடைத்த விண்ணப்பங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆட்சேர்ப்புக்கள் இடம்பெற்றதாக முகாமைத்துவத்தால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.அதன் பிரகாரம் பதவிநிலையற்ற பதவிகளுக்காக உத்தியோகத்தர்கள் சேர்த்தல் வெளிப்படையாக மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) அதிகாரசபையில் தற்போது பயன்படுத்தப்படுகின்ற நிர்வாக பணி ஒழுங்கமைப்பு கோவை, பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரத்துக்காக 2014 திசெம்பர் 12 ஆம் திகதி அனுப்பப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அதற்கான அங்கீகாரம் கிடைக்காதிருந்ததுடன் அதன் காரணமாக அதன் செல்லுபடித் தன்மை தொடர்பாக பிரச்சினையுடனான நிலைமை காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

**(உ) ஒரு ஊழியருக்கான சராசரி மாதாந்த சம்பளம் மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவு**

| | 2017 | 2016 | 2015 | 2014 | 2013 |
|---|---|---|---|---|---|
| சம்பளம், வேதனம் மற்றும் படிகள் (ரூபா) | 111,814 | 103,205 | 107,345 | 85,315 | 84,310 |
| மேலதிக நேரப் படிகள் (ரூபா) | 33,835 | 32,574 | 33,244 | 29,283 | 27,297 |
| மொத்தம் (ரூபா) | 145,649 | 135,779 | 140,589 | 114,598 | 111,607 |

2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது அதிகாரசபையின் மேலதிக நேரப் படிகள் சீராக அதிகரிக்கின்றமை அவதானிக்கப்பட்டது.

(ஊ ) **மொத்த பதவியணியினர் கிரயம்**

| | 2017 | 2016 | 2015 | 2014 | 2013 |
|---|---|---|---|---|---|
| புதவியணியினர கிரயம் (ரூபா.மில்லியன்) | 16,389 | 15,725 | 16,112 | 13,196 | 13,114 |
| மொத்த செலவினத்தில் பதவியணியினர் கிரயம் | 51% | 36% | 47% | 47% | 40% |

❖ மொத்தச் செலவினத்தை கணிப்பிடும் போது அந்நிய செலாவணி நாணயமாற்று இலாப/நட்டம் கவனத்தில் கொள்ளப்படவில்லை. 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது பதவியணியின் கிரயம் மொத்தச் செலவினத்தின் சதவீதமாக எடுபபோமாயின் சீராக அதிகரிக்கின்றமை அவதானிக்கப்பட்டது.

4.6 **சந்தைப் பங்கு**

2017 ஆம் ஆண்டிற்கான உலக துறைமுக செயற்பாடு தொடர்பாக வழங்கப்பட்ட அல்பா லயினர் அறிக்கையின் (Alpha liner Report) பிரகாரம் கொழும்பு துறைமுகம் 6,209,068 இருபது சம அலகான ( Twenty Equivalent Unit) செயற்பாடுகளை மேற்கொண்டு உலகத்தில் 23 ஆவது இடத்தில் இருப்பதுடன் 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 8.27 சதவீத முன்னேற்றத்தை அடைந்திருந்தது.எவ்வாறாயினும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் கொள்கலன்கள் கையாளலானது 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017 ஆம் ஆண்டில் 4 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

கொழும்பு துறைமுகத்திலுள்ள அதிகாரசபையின் கொள்கலன் செயற்பாட்டின் இயலளவு 2001 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரையான காலத்தில் 81 சதவீதத்திலிருந்து 32 சதவீதம் வரை தீவிரமாக வீழ்ச்சியடைந்திருந்தது.எவ்வாறாயினும் கொழும்பு துறைமுகத்தில் போட்டியாகச் செயற்படுகின்ற தனியார் கம்பனியாகிய S.A.G.T நிறுவனம் அக்காலத்தில் 19 சதவீதத்திலிருந்து 29 சதவீதம் வரையும் மற்றும் C.I.C.T நிறுவனம் 01 சதவீதத்திலிருந்து 39 சதவீதம் வரையும் துரிதமாக முன்னேற்றமடைந்திருந்தன.விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| ஆண்டு | S.L.P.A | | S.A.G.T | | C.I.C.T | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | கொள்கலன்களின் எண்ணிக்கை | சதவீதம் | கொள்கலன்களின் எண்ணிக்கை | சதவீதம் | கொள்கலன்களின் எண்ணிக்கை | சதவீதம் | கொள்கலன்களின் எண்ணிக்கை |
| 2001 | 1,396,946 | 81 | 229,670 | 19 | | | 1,726,616 |
| 2002 | 1,206,694 | 68 | 558,025 | 32 | | | 1,764,717 |
| 2003 | 1,334,900 | 68 | 624,439 | 32 | | | 1,959,339 |
| 2004 | 1,320,845 | 59 | 899,720 | 41 | | | 2,220,565 |
| 2005 | 1,523,794 | 62 | 931,526 | 38 | | | 2,455,300 |
| 2006 | 1,743,669 | 57 | 1,335,411 | 43 | | | 3,079,078 |
| 2007 | 1,834,734 | 54 | 1,546,497 | 46 | | | 3,381,231 |
| 2008 | 1,747,670 | 53 | 1,739,668 | 47 | | | 3,687,338 |
| 2009 | 1,714,488 | 49 | 1,749,809 | 51 | | | 3,464,297 |
| 2010 | 2,167,173 | 52 | 1,970,268 | 48 | | | 4,137,441 |
| 2011 | 2,299,446 | 54 | 1,963,441 | 46 | | | 4,262,887 |
| 2012 | 2,316,849 | 55 | 1,870,271 | 45 | | | 4,187,120 |
| 2013 | 2,501,863 | 58 | 1,746,802 | 41 | 57,541 | 1 | 4,306,206 |
| 2014 | 2,559,339 | 52 | 1,661,940 | 34 | 686,636 | 14 | 4,907,915 |
| 2015 | 2,252,323 | 44 | 1,371,245 | 26 | 1,561,899 | 30 | 5,185,467 |
| 2016 | 2,100,117 | 37 | 1,632,207 | 28 | 2,002,599 | 35 | 5,734,923 |
| 2017 | 2,010,702 | 32 | 1,809,835 | 29 | 2,388,531 | 39 | 6,209,068 |

அதற்கிணங்க துறைமுகத்தின் பிரதான நடவடிக்கையாகிய கொள்கலன் செயற்பாடு நடவடிக்கைகள் அதிகாரசபையிடமிருந்து படிப்படியாக விலகி அது தனியார் நிறுவனத்தால் படிப்படியாக சொந்தமாக்கி கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 4.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

துறைமுக அதிகாரசபையின் சுகாதார சேவைகள், உடைந்த பொருட்களை விற்பனை செய்தல் போன்ற மேலதிக சேவைகளை நேரடியாக நிறைவேற்றுவதற்குப் பதிலாக துணைக் கம்பனி ஊடாக நிறைவேற்றுவதற்காக மீளாய்வாண்டின் போது தரகுப் பணமாக 57.9 மில்லியன் மேலதிக செலவினமொன்று செய்யப்பட்டிருந்தது.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ / எஸ்பீ /எஸ்டீஜீ / 17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரால் விநியோகிக்கப்பட்ட கடிதம் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் ஆண்டு “2030 இன் நிகழ்ச்சி நிரல்” இன் பிரகாரம் சகல அரசாங்க நிறுவனங்களாலும் செயற்பட வேண்டியிருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரியதாக சபையினால் தமது விடயப்பரப்பின் கீழ் கொண்டுவரப்பட்ட பணிகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டியுள்ளது என்பன தொடர்பாக அறிவிக்காமையின் காரணமாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்கை அடைந்து கொள்ள வேண்டிய முறைகள், இலக்குகள் என்பனவற்றை அளவிடுவதற்கான குறிகாட்டிகளும் அறிமுகப்படுத்தப்படவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த நடைமுறைகள்

#### 6.1.1 பெறுகைகள்

2006 இன் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் பெறுகைகள் கால அட்டவணைகளுடன் விரிவான பெறுகைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 6.1.2 தாமதமடைந்த செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தென் பிராந்தியத்தை அபிவிருத்தி செய்யும் குறிக்கோளுடன் காலி துறைமுகத்தில் பலசெயற்பாட்டு இறங்கு துறையை நிர்மாணிப்பதற்காக 2006 மார்ச் 28 ஆந் திகதி இலங்கை அரசாங்கத்திற்கும் சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் வங்கிக்குமிடையே (JBIC) செய்து கொள்ளப்பட்ட SL-P-85 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் யென் 14,495 மில்லியன் தொகையை இலங்கை அரசாங்கத்திற்கு வழங்குவதற்கு இணங்கியிருந்தது.உடன்படிக்கையின் பிரகாரம் 2014 யூன் மாதமளவில் இச்செயற்திட்டத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது.எவ்வாறாயினும் விபரமான திட்டத்தை தோற்றுவித்தல், கேள்விகளில் தொழில்நுட்ப மற்றும் நிதி மதிப்பாய்வுகளை உள்ளடக்கி செயற்திட்டம் தொடர்பாக நிர்மாணத்திற்கு முன்னைய கட்டம் வரை அனைத்து சேவைகளையும் பூர்த்தி செய்வதற்காக தனிப்பட்ட ஆலோசனைக் கம்பனிக்கு யென் 458.85 மில்லியனுக்கு சமமான ரூபா 549.03 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன் கடன் வட்டியாக 2017 திசெம்பர் 31 ஆந் திகதி யென் 1.33 மில்லியனுக்குச் சமமான ரூபா 1.81 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது.இச்செயற்திட்டம் அரசாங்கத்தின் துரித செயற்திட்டமாக இனங்காணப்பட்டிருந்தும் உலக மரபுரிமை என பெயரிடப்பட்டுள்ள காலி கோட்டையின் யுனெஸ்கோ (UNESCO) அமைப்பின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன் அதற்காக 03 வருடங்களுக்கு

மேற்பட்ட காலம் எடுத்திருந்தது.எனினும் கடன் வழங்குபவர்களினால் கடன் கால எல்லை நீடிக்கப்படாமையின் காரணமாக இந்த செயற்திட்டத்தை கைவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் மேற்கூறப்பட்ட பிரகாரம் வழங்கப்பட்ட ஆலோசனைச் செலவினம் சிக்கனமற்ற செலவினமாகியிருந்தது.

(ஆ) 2017 செப்தெம்பர் 26 ஆம் திகதிய எம்பீஎன்ட்எஸ்/ 2017/ 43 ஆம் இலக்க அமைச்சரவைக் குறிப்பின் பிரகாரம் குழாத்தில் பயன்படுத்தப்படுகின்ற டக் கப்பல்களை விட கூடிய இழுத்தல் இயலளவுடைய டக் கப்பல் அதிகாரசபையினால் ஈடுபடத்த வேண்டியிருந்தமை, அதிகாரசபை தற்போது பயன்படுத்துகின்ற மூன்று டக் கப்பல்கள் ஹமபாந்தோட்டை துறைமுகத்தின் செயற்பாடுகளை மேற்கொள்கின்ற மீண்டும் கையளிக்க வேண்டியிருந்தமை போன்ற காரணங்களை அடிப்படையாகக் கொண்டு மூன்று வருட காலப்பகுதிக்காக துறைமுகத்தில் ஈடுபடுத்துவதற்காக 03 டக் கப்பல்களை வாடகைக்கு பெறுவதற்காக உத்தேசிக்கப்பட்டிருந்தது.அதன் பிரகாரம், அதற்குரிய பெறுகை நடைமுறைகளை நிறைவேற்றுவதற்கும், அதற்கான சிபாரிசுகளை அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கும் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கலந்துரையாடல் குழுவையும், செயற்திட்டக்குழுவையும் நியமிப்பதற்கு 2017 ஒக்தோபர் 17 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டிருந்தது.நிதி அமைச்சின் அவதானிப்புகளின் பிரகாரம் துரித பெறுகை நடைமுறையின் கீழ் இந்தக் கப்பல்களை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்காக உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும், 2018 மே 11 ஆந் திகதி வரையிலும் பெறுகை குழு அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டடிருந்தது.

### 6.2 கணக்காய்வுக் குழு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ / 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வுக் குழு ஆகக் குறைந்தது 03 மாதங்களுக்கு ஒரு தடவை கூட்டப்பட்டு வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டம், நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை, உள்ளகக் கணக்காய்வு அறிக்கை மற்றும் புறக் கணக்காய்வு அறிக்கை போன்றவற்றை மீளாய்வு செய்ய வேண்டியுள்ளது. எனினும் 2017 அம் ஆண்டின் போது புறக் கணக்காய்வு அறிக்கை மீளாய்வு செய்யப்பட்டிருந்த போதும் அந்த ஆண்டின் போது அதிகாரசபையின் 42 உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளில் 40 அறிக்கைகள் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 யூலை 26 ஆந் திகதிய டீஎம்ஏ / 2010 (05) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வெளிநாட்டுதவி அல்லது உள்நாட்டு நிதியத்தின் அடிப்படையில் அமுல்படுத்தப்படுகின்ற செயற்திட்டம் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் துறைமுக அதிகாரசபையின் கீழ் அமுல்படுத்தப்பட்ட வெளிநாட்டுதவி செயற்திட்டம் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அரச வளங்கள் செயற்திறனாகவும், வினைத்திறனாகவும் மற்றும் சிக்கனமாகவும் பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்வதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக இந்த சுற்றறிக்கை விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படாமையின் காரணமாக எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### 6.3 சுற்றாடல் மற்றும் சமூக பொறுப்புக்களை நிறைவேற்றுதல்

அதிகாரசபையினால் பாவனையிலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்ட டயர்கள் மழையில் நனைந்து நீண்டகாலமாக அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையின் காரணமாக அதிக மழை பெய்யும் காலங்களில் டயர்களில் நீர் தேங்கியிருந்து நுளம்பு பெருகுவதனால் டெங்கு நோய் பரவும் ஆபத்து காணப்படுகின்றமை

அவதானிக்கப்பட்டது.அவ்வாறே 2017 ஆம் ஆண்டில் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட 153 டயர்களும் கணக்காய்வு திகதி வரை துறைமுக சுற்றாடலில் முறையற்ற வகையில் குவித்து வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 6.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்நாட்டுக் கொள்வனவுகளுக்காக ரூபா 533.43 மில்லியன் தொகை பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 48 மில்லியன் பெறுமதியான கொள்வனவுகள் மாத்திரம் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் 28 விடயங்களை வெளிநாட்டில் கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,150.70 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 88.31 மில்லியன் தொகையான 05 விடயங்கள் மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.அவ்வாறே பாதீட்டுப் பெறுமதி ரூபா 231.70 மில்லியன் பெறுமதியான 11 விடயங்களின் கொள்வனவு இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 571 மில்லியன் பெறுமதியான 08 விடயங்களுக்குரிய கொள்வனவு நடவடிக்கைகள் ஆரம்பக் கட்டத்தில் காணப்பட்டது. மேலும் பாதீட்டுப் பெறுமதி ரூபா 216 மில்லியன் தொகையான 04 விடயங்களுக்குரிய கொள்வனவு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதியுயர் பாதுகாப்பு வலயமாக பெயர் குறிப்பிடப்பட்ட துறைமுக வளவின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் 2017 ஆம் ஆண்டில் மூலதன பாதீட்டின் மூலம் சகல வாயிற் கதவுகளிலும் இணைக்கப்பட்ட களஞ்சியங்களுக்காகவும் ரூபா 60 மில்லியன் செலவில் CCTV கெமரா முறையொன்றைப் பொருத்துதல், தகவல் தொழில்நுட்ப பிரிவிற்காக ரூபா 400 மில்லியன் செலவில் கொள்கலன் இறங்குதுறை முகாமைத்துவ முறையை அமுல்படுத்தல் ரூபா 50 மில்லியன் செலவில் நுழைவு வாயிலை சுய செயற்பாட்டு முறைமை (RFID) தயாரித்தல் மற்றும் மின்சார, பொறியியல் பிரிவுகளினால் ரூபா 20 மில்லியன் செலவில் சகல பிரிவுகளுக்குமான ஒலி தொடர்பாடல் முறைமையைத் தயாரிப்பதற்கு மீளாய்வாண்டில் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் உரிய பணிகள் எதுவும் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன.பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | | அவதானிப்புக்கள் | |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | (I) | சில கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மைகள் காணப்பட்டமை |
| | | (II) | சகல பொறுப்புக்களும் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்படாமை |
| (ஆ) | கடன்பட்டோர் கட்டுப்பாடு | (I) | நீண்ட காலமாக அறவிடப்படாத கடன் மீதிகள் காணப்பட்டமை |
| | | (II) | நிதி ஏற்பாடு வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட முறையான வேலைத்திட்டமொன்று காணப்படாமை |
| | | (III) | கடன் மீதிகளைப் பதிவழித்தல் முறையான அங்கீகாரத்தின் கீழ் இடம்பெறாமை |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ஆளணி முகாமைத்துவம் | (I) | ஆட்சேர்ப்பு நடைமுறைகள் அங்கீகரிக்கப்படாமை |
| | | (II) | மிகையான ஆட்சேர்ப்பு இடம்பெற்றமை |
| | | (III) | மிகை ஊழியர்கள் இருக்கின்ற பிரிவுகளின் ஊழியர்களுக்கு மேலதிக நேரப் படி செலுத்தியமை |
| | | (IV) | சில சுற்றறிக்கைகளுக்கு இணங்காமைகள் காணப்பட்டமை |
| (ஈ) | பெறுகைகள் | | முறையான கால அட்டவணையின் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் நிறைவேற்றப்படாமை |
| (உ) | செயலாற்றல் | | அதிகார சபையின் சகல பணிகளும் நடவடிக்கைத்திட்டத்தில் உள்ளடக்கி இலக்குகள் நிர்ணயிக்கப்படாமை மற்றும் இலக்கு அடையப்படாமை |



**எச்.எம்.காமினி விஜேசிங்ஹ**
**கணக்காய்வாளர் தலைமை அதிபதி**

# அமைப்பு விதி தொடர்பான தகவல்கள்

**பெயர்**

இலங்கை துறைமுக அதிகாரசபை

**நிறுவனத்தின் நிலைமை**

1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டவிதிகளின் பிரகாரம் கொழும்பு துறைமுக ஆணைக்குழு துறைமுக கப்பல் சரக்கு கூட்டுச்சபை துறைமுக ஒத்துப்பார்த்தல் மற்றும் பாதுகாப்பு சேவைகள் கூட்டுத்தாபனம் என்பவற்றினை ஒன்றிணைத்து 1079 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01 ஆம் திகதி துறைமுக அதிகாரசபை நிறுவப்பட்டது.

**அமைப்பு விதியிலுள்ள அம்சங்கள்**

தேசிய பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்பினை வழங்கும் நிறுவனமாக இலங்கை துறைமுக அதிகாரசபை விளங்குகின்றது. வருமானத்தினை ஈட்டிக்கொள்ளல் மற்றும் சேவைகளை வழங்குதல் போன்ற செயல்பாடுகளில் முதன்மை நிலையிலுள்ள நிறுவனம் என்ற வகையில் அதிகாரசபை ஆற்றும் பணியின் மூலமாக உயர்நிலை சேவையில் பூரணமாக தனது பங்களிப்பினை அது செலுத்துகின்றது. பல்வேறு வகைகளில் அதனுடன் பங்களிப்புச் செய்யும் நிறுவனங்கள் மற்றும் துறைமுக பாவனையாளர்களுடன் காணப்படுகின்ற முனைப்பான தொடர்பு அதன் இயக்க வளர்ச்சிக்கு முக்கிய காரணியாக அமைகின்றது. இலங்கை துறைமுக அதிகாரசபைக்குரிய தொழிற்பாட்டு அம்சங்கள் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

- நிலைத்திருக்கும் தன்மை
- காலத்திற்கேற்றதும் பிழைகளற்றதும்
- சாதனைக்குரிய உத்தரவாதம்
- குழு உணர்வு
- அர்ப்பணிப்பு
- உற்பத்தித்திறனை அடையாளங் காணுதல்
- பூரணமான செயலாற்றுகை

மேற்குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்கள் அதிகாரசபையின் அனைத்து ஊழியர்கள் தொடர்பிலும் பராமரித்துச் செல்லல் பிரதான நிறைவேற்றுநராக முகாமைத்துவப் பணிப்பாளரினதும் சிரேட்ட முகாமைத்துவ ஆளணியினரினதும் பொறுப்பாகும்.

**தலைமை அலுவலகம்**

**கொழும்பு துறைமுகம்**

இல : 19, சைத்திய வீதி
கொழும்பு - 01
தொ.பே.இல : (+94 11) 2421201, 2421231
தொ . நகல் : (+94 11) 2440651

**காலி துறைமுகம்**

கிலொசன்பார்க் இறங்குதுறை
மாகாலி
காலி
தொ.பே.இல (+94 91) 2232213, 2234936

**திருகோணமலை துறைமுகம்**

புதிய நிர்வாக கட்டடம்
சீனக் குடா
திருகோணமலை
தொ.பே.இல : (+94 26) 2222460

**வங்கியாளர்கள்**

இலங்கை வங்கி (பிரதான வங்கி)
மக்கள் வங்கி
ஹற்றன் நஷனல் வங்கி

**கணக்காய்வாளர்**

கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்,
இல:306/72, பொல்துவ வீதி,
பத்தரமுல்லை.

**இணையத்தளம்**

**www.slpa.lk**